www.padippakam.com

# சிந்தனை

தொகுதி VI இதழ் III

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நவம்பர், 1994
(வெளியீடு: 1997)

படிப்பகம்

www.padippakam.com

**CINTANAI** The Journal of the Faculty of Arts, University of Jaffna is published in March, July and November every year.

Cintanai is a refereed Journal, Its referees come from University scholars and the national scholarly community.

Editor: RAJARATNAM SIVACHANDRAN
B. A. Hons (Cey), M. A. (Jaffna)
Department of Geography

Managing Editor: K, K. ARULVEL
B. Com. Hons., M. A (Jaffna)
Department of Commerce

Editorial Board

A. Sanmugadas, Professor, B.A Hons (Cey), M.A, Ph.D (Edin)
S. Sathiaseelan, B. A. Hons (Cey), M. A. (Jaffna)
S. Arulanantham, B Sc.Hons. M. A., Dip in Ed. (Jaffna)
S. Sivalingarajah, B. A. Hons. M.A. Ph. D (Jaffna)
M. Vedanathan, B. A. Hons, M. A, (Jaffna)

Editorial Communications should be addressed to the Editor.

Business Communications should be addressed to the Managing Editor.

Books for review should be sent to the Editor.

Annual Subscription: Local Rs. 300. 00 Foreign: £ 14 or $ 20

Published by: The Faculty of Arts, University of Jaffna, Jaffna. Sri Lanka.

Printed at: BOSECO Nallur, Jaffna.

படிப்பகம்

www.padippakam.com

நவம்பர், 1994

தொகுதி VI இதழ் III

# சிந்தனை

*ஆசிரியர் :*

இராசரத்தினம் சிவசந்திரன்

கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
வெளியீடு: 1997

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# சிந்தனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் ஆய்விதழாகும். இவ் இதழ் ஆண்டுக்கு மும்முறை மார்ச், ஜுலை, நவம்பர் மாதங்களில் வெளியிடப் படுகின்றது. பிரசுரிக்கப்படும் கட்டுரைகள்; பொருளியல், புவியியல், அரசியல், வரலாறு, தொல்லியல், சமூகவியல், கல்வியியல், மானிடவியல், மெய்யியல், மொழியியல், தமிழ், வடமொழி, சமயம், நாகரிகம் முதலிய துறைகளில் உள்ள பொருட் கூறுகள் பற்றியனவாக அமையும்.

- சிந்தனையில் வெளியாகும் கட்டுரைகளின் தகுதி; ஆசிரியராலும் பல்கலைக்கழக சிரேஷ்ட ஆய்வாளர்களாலும் இலங்கையின் ஏனைய சிரேஷ்ட ஆய்வாளர்களாலும் நிர்ணயிக்கப்படுகிறது.

- சிந்தனையில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட விரும்புவோர் கட்டுரையின் இரு பிரதிகளைத் தட்டச்சில் பதிப்பித்து ஆசிரியருக்கு அனுப்புதல் வேண்டும். அடிக் குறிப்புகள், உசாத்துணை விபரங்கள் ஆகியன கட்டுரையின் இறுதியில் அமைதல் வேண்டும்.

உசாத்துணை விபரங்கள் பின்வரும் ஒழுங்குமுறையில் தரப்படுதல் வேண்டும். கட்டுரை எனில்; ஆசிரியர் பெயர்; முதலெழுத்துகள், அடைப்புக்குறியினுள் வெளியிடப்பட்ட ஆண்டு, கட்டுரைத் தலைப்பு, சஞ்சிகையின் பெயர், தொகுதி இலக்கம், கட்டுரை இடம்பெற்றுள்ள பக்கங்கள்.

நூல் எனில்; ஆசிரியர் பெயர்; முதலெழுத்துகள், அடைப்புக் குறியினுள் வெளியிடப்பட்ட ஆண்டு, நூலின் தலைப்பு, பதிப்பு விபரம், வெளியிட்ட இடம் வெளியிட்டோர் விபரம்.

- கட்டுரை அனுப்புவோர் தங்கள் பெயர், பட்டங்கள். பதவிகள், அலுவலக முகவரி, ஆகிய விபரங்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் தனித் தாளில் குறித்து அனுப்பு தல் வேண்டும். கட்டுரையின் தலைப்பினையும் ஆங்கிலத்தில் குறிப்பிடுக. அனுப் பப்படும் கட்டுரைகள் ஆய்வு வளர்ச்சிக்கு வழங்கும் பங்களிப்பினைச் சுருக்கமாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

- சந்தா கொடுப்பனவுகள் சிந்தனையின் நிர்வாக ஆசிரியருக்கு இலங்கையில் காசுக் கட்டளை, தபாற்கட்டளை, காசோலை மூலமும் பிறநாடுகளிலிருந்து வங்கிக் கட்டளைகள் மூலமும் அனுப்பப்பட வேண்டும். மாற்றிதழாக சிந்தனையினைப் பெற விரும்புவோர் நிர்வாக ஆசிரியருடன் தொடர்புகொள்க.

- ஆண்டுச் சந்தா விபரம்: உள்ளூர் ரூபா 300.00, வெளியூர்: £ 14 அல்லது $ 20

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி vi இதழ் iii - 1994

# பொருளடக்கம்

1. சிறுவர்களும் அசைவுகளுக்கூடான கல்வியும் 01
சபா. ஜெயராசா

2. அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளை இனங்காணலும், வகைப்படுத்தலும், மதிப்பிடலும் 09
அ. வே. மணிவாசகர்

3. செங்கை ஆழியானின் நாவல்களில் வரும் உரையாடல்களின் மொழி பற்றிய சில குறிப்புகள் 25
ம. இரகுநாதன்

4. சமகால இந்திய மெய்யியல் – ஒரு நோக்கு 33
கே. சிவானந்தமூர்த்தி

5. தலித்தியமும் அதன் கலை இலக்கியப் பார்வைகளும்: ஓர் அறிமுகம் 44
நா. சுப்பிரமணியன்

6. யாழ்ப்பாண இராச்சியமும் 1591 ஆம் ஆண்டில் இடம்பெற்ற நல்லூர் உடன்படிக்கையும் 53
சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்

7. இலங்கைப் பாடசாலைகளில் ஆரம்பமட்ட விஞ்ஞான பாடமும் அதில் உயிரியல் தொடர்பான அம்சங்களும் 61
சுசீலா அருளானந்தம்

8. அறிவும் உணர்வும் அரசியலும்: பௌத்தம் துரோகம் செய்தது? 72
என். சண்முகலிங்கன்

9. சோழர்காலத் தமிழகத்தில் சமூக ஒன்றுகூடல் மையங்களின் முகாமைத்துவம். சாசனச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு 77
செல்லையா கிருஷ்ணராசா

10. சூழல்பேண் புதிய பொருளாதார ஒழுங்கும் இயற்கை வேளாண்மையும் 93
இரா. சிவசந்திரன்

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்

[illegible]

படிப்பகம்

www.padippakam.com

## கட்டுரை ஆசிரியர்கள்

1. சபா. ஜெயராசா
B. Ed. (Cey),
M. A., Ph. D (Jaffna)
- சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I
கல்வித்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

2. அ. வே. மணிவாசகர்
B. A. Hons (Cey),
M. A., Ph. D (Banaras)
- சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II
பொருளியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

3. ம. இரகுநாதன்
B. A. Hons, M.A. (Jaffna)
- சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

4. கே. சிவானந்தமூர்த்தி
B. A. Hons (Cey), M.A. (Jaffna)
- சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II,
மெய்யியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

5. நா. சுப்பிரமணியன்
B. A. Hons (Cey),
M. A. (Pera.) Ph. D (Jaffna)
- இணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

6. சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்
B. A. Hons, M. A. (Jaffna)
- சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I,
வரலாற்றுத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

7. சுசிலாதேவி அருளானந்தம்
B. Sc. Hons,
M. A. Dip. in Ed. (Jaffna)
- சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I,
கல்வித்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

8. என். சண்முகலிங்கன்
B. A. (Cey), M. A, Ph.D (Jaffna)
- சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I,
பொருளியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

9. செல்லையா கிருஷ்ணராசா
B.A.Hons, (Jaffna) M.A. (Mysore)
- சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I,
வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

10. இரா. சிவசந்திரன்
B. A. Hons (Cey), M. A. (Jaffna)
- சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I,
புவியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி Vi இதழ் iii - 1994

# சிறுவர்களும் அசைவுகளுக்கூடான கல்வியும்

சபா. ஜெயராசா

## முன்னுரை

அறிகையாற்றல், எழுச்சியாற்றல், உடலியக்க ஆற்றல், என்ற முப்பெரும் ஆட்சித்துறைகளுடன் இணைந்து நிற்கும் சிறுவர்க்கான அசைவுக் கல்விபற்றிய நோக்கு அண்மைக்காலத்தைய கலைத்திட்டங்களிலே பெரிதும் மீளவலியுறுத்தப்பட்டு வருகின்றது. சிறுவர்களின் அறிகையாட்சிச் செயற்பாடுகள் நேரடியானதாயும், அருவமற்றதாயும், புலன் வழிப்பட்டதாயும், இருக்கின்றன. அவர்களின் அறிவுக் கோலங்களும் அசைவுக் கோலங்களும் நேருக்குநேர் இணைப்புக்களைக் கொண்டிருப்பதனால், சிறுவர்களை விளங்கிக் கொள்வதற்கு அசைவுகளை விளங்கிக் கொள்ளவேண்டியுள்ளது. இந்நிலையில் அசைவுக் கல்வி தொடர்பான ஆய்வுகளை முன்னெடுத்தல் கற்பித்தலியலை வளம்படுத்துவதற்கு உதவுவதாயும், ஆசிரிய அறிவு வீச்சு மேம்பாட்டின் வழியான வாண்மை விருத்திக்குத் துணைசெய்வதாகவும் அமைகின்றது.

## 1

சிறுவர்களைப் பொறுத்தவரை சூழலை அறிய முற்படும் பொழுதும், இசைவாக்கம் செய்யும் பொழுதும் அசைவுகள் தவிர்க்க முடியாதவையாகின்றன. சூழலோடு இடைவினை கொள்வதன் வாயிலாக அவர்கள் உலகுபற்றிய காட்சிகளை அறிகை அமைப்பாக்கம் செய்து கொள்ளுகின்றார்கள். அவர்களால் மேற்கொள்ளப்படும் அசைவுகள் நேரடியானதாயும் உட்கிளர்மியமாயும் (Spontaneous) அகத்தை மத்தியாகக் கொண்டதாயும், அமையும். புலன்கள் வழியாகத் தம்மைச் சூழ்ந்துள்ள உலகை அவர்கள் கண்டறிய முயலும் பொழுது, தாமாகவே கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்திக் கொள்ளுகின்றார்கள் என்பதை ஆய்வுகள் தெளிவு படுத்துகின்றன.[1] சூழலை அறிந்து கொள்ளல் வளரவளர, அது வெளியிடுகைத்திறனிலும், தொடர்பாடல் திறனிலும் நேரடியான செல்வாக்கைச் செலுத்துகின்றது.

அசைவுகளும் கட்டுப்பாடுகளும் தனியாள் வேறுபாடுகளைக் கொண்டிருத்தல் போன்று அவை அகநிலையானதும், புறநிலையானதுமான முரண்பாடுகளையும் வருவிக்கின்றன. விரும்பியபடி உடலசைவுகளை மேற்கொள்ளும் பொழுது, முட்டலும் மோதலும் எழுதல் தவிர்க்கப் படவேண்டியுள்ளது. அந்நிலையில், அசைவுகளை ஒழுங்குபடுத்துதல், சீர்ப்படுத்துதல், செம்மையான வடிவமைப்புக்கள் கொண்டு வருதல் என்ற அனைத்தையும் '' கட்டுப்

www.padippakam.com

பாடு '' என்பது கொண்டிருக்கும். புற உலகை அறிவதற்கான அசைவு முனைப்பு ஒருபுறமும், கட்டுப்படுத்த வேண்டிய முனைப்பு மறுபுறமுமாக இயங்குதல் முரண்பாடாக (Contradiction) இருக்கின்றது. இந்த முரண்பாட்டினை அறிகை அமைப்பின் மேம்பாடும், புலன்உணர்திறன் செம்மையாக்கலும் தீர்த்து வைப்பதுடன், அசைவுக்கும் கட்டுப்பாட்டுக்குமிடையேயுள்ள தொடர்புகளை உள்ளார்ந்த நிலையில் புலப்படவைக்கின்றன.

அசைவுக் கல்வியை வலு (Energy) என்ற கண்ணோட்டத்தில் ஆராய்ந்த கல்வியியலாளரும் உளர். [2] சிறுவர்கள் தமக்குரிய செயற்பணிகளை நிறைவேற்றுவதற்குரிய உடல் உளவலுவை வெளியிடவேண்டியுள்ளது. இது வெளிப்பாயும் வலு எனப்படும். வலுவின் வெளிப்பாய்ச்சலும் வலுவின் உட்பாய்ச்சலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. அசைவுகளின் வழியாக அனுபவங்களை உள்வாங்குதல் உட்பாயும் வலுவுக்கு எடுத்துக்காட்டாகும். அறிவாற்றலில் ஏற்படும் மேம்பாடானது, உள்ளார்ந்த வலுவில் நிகழும் மேம்பாடாக அமைகின்றது. பல்வேறுபட்ட அசைவுகளும், புலன்சார் அனுபவங்களும், அனுபவங்களின் திரட்சியையும் அறிகை அமைப்பினையும் வளம்படுத்துகின்றது.

சிறுவர்களைப் பொறுத்தவரை அசைவுகள் கருத்தை நோக்கிய தேடலாக (The Search For Meaning) அமையும். தேடலின் பொழுது அகத்தை மத்தியாகக் கொள்ளல், தன்னுணர்வு பெறல், தொழிற்படும் விழிப்புக் கொள்ளல், என்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. சிறுவர்களின் வளர்ச்சியின் போது பிறப்பிலிருந்து மூன்று வயதை எட்டும் பருவத்தில் பொதுவாக வளர்ந்த நிலை உயரத்தில் பருமட்டாக அரைப் பங்கினை எட்டிவிடுகின்றார்கள் என்றும், மூளை வளர்ச்சியானது உடல் வளர்ச்சியிலும் மேலும் வேகமாக முன்னேறுகின்றதென்றும் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். [3] இந்த வளர்ச்சியினூடே உடல் இயக்க அசைவுகள் மேலும் நுட்பமாக முன்னெடுக்கப்படுதலும், அறிகை அமைப்புக்கள் மேம்பாடு அடைதலும், கருத்தை நோக்கிய தேடலும், வளர்ச்சியடையும்.

கருப்பையில் இருக்கும் பொழுதே ஒருவருக்குரிய அசைவுகள் ஆரம்பித்துவிடுகின்றன என்பதும், படிப்படியாக சிறுவர்கள் வளரும் பொழுது கண்கள், கைகள் என்பவற்றுக்கிடையிலான இயக்க இணைப்புக்கள் விருத்தியடைகின்றன என்பதும், மூன்று வயதுக்கும் ஏழு வயதுக்கும் இடைப்பட்ட காலத்தில் முன்னைய உடலியக்க அனுபவங்களை மேலும் சிக்கலாகப் பிரயோகிக்கின்றனர் என்பதும் ஆய்வுகளிலே புலப்படுத்தப்படுகின்றன. [4]

அசைவுக் கல்வியின் முக்கியத்துவம் கற்பித்தலியல் வரலாற்றில் உணரப்பட்டு வந்துள்ளவேளை அசைவுக் கல்விக்கும், நுண்மதியாற்றல் திறன்களுக்கும், கல்வியடைவு மேம்பாடுகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகளும் வற்புறுத்தப்பட்டு வந்துள்ளன. சிறுவர்களின் எண்ணக்கரு விருத்தியில் அசைவுகள் நேரடியான பங்களிப்பைச் செலுத்துதல் கண்டறியப்பட்டுள்ளது. தமது நடத்தைகளைவிளங்கிக் கொள்ளல், தற்படிமங்களை உருவாக்குதல், தன்நம்பிக்கையை வளர்த்தல், தொழிற்பாடுகளுக்கான தயார் நிலையினை வளர்த்தல் முதலிய செயற்பாடுகள் அனைத்தும் அசைவுக் கல்வியுடன் தொடர்புடையன. அனுபவங்களைத் 'தன்மயமாக்கல்', 'தன்னமைவாக்கல்' வழியாக எண்ணக்கருவாக்கத்தினைத் திருத்தமாக அமைத்தல் என்பன அவற்றின் வழியாக முன்னெடுக்கப்படுகின்றன.

சிறுவர்களின் வளர்ச்சிக் கோலங்களில் பின்வரும் இயக்கப் பண்புகளைக் குறிப்பிடவேண்டியுள்ளது. முதலாவதாக உடலியக்க வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் இனங்காணத்தக்க ஒரு தொடரியம் (Sequence) இடம்பெறும். உதாரணமாக தவழ்தல்.



படிப்பகம்

நடத்தல், ஓடுதல் என்பன ஒரு தொடரிய மாக இயங்கும். இரண்டாவதாக சிறுவர்களுக்குரிய தனியாள் வேறுபாடுகளும் மேற்குறித்த செயல்முறையில் காணப்படும். அதாவது ஒவ்வொரு சிறுவரும் தமது இயல்புகளுக்குரிய இயக்க அட்டவணைகளைக் கொண்டிருப்பர் மேற்கூறிய இயக்க அட்டவணையானது கல்வியாலும், பயிற்சியாலும் மேம்படுத்தப்படலாம் உடற்பண்புகள் பொருத்தமான தயார் நிலையில் இருக்கும் பொழுது மட்டுமே பயிற்சிகள் பயனுடையதாக இருக்கும். மேலும் உரிய காலத்திலே இயக்கத் திறன்கள் கற்பிக்கப்படாதவிடத்து. சிறுவர்கள் வளர்ந்த நிலையிலும் பின்னடைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

சிறுவர்களுக்குரிய அசைவுக் கல்வியில் மூன்று வகையான நிலைகள் குறித்துரைக்கப்படுகின்றன. அவையாவன:

(1) வினைத்திறன்மிக்க உடல்முகாமைத்துவத்தின் வழியாக இயங்கும் நெறிப்பாடு கொண்ட அசைவுகள்: ஏறுதல், தாவுதல், சமநிலைபெய்தல் முதலியவற்றை இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம் இவை பிற்காலத்தில் உடலியம் சார்வகை (Gymnas -tictype) ஆற்றல்களாக வளரும்.

(2) பலமும், வேகமும், விசையும் கொண்ட அசைவுகளைக் கூட்டுறவு நிலையிலும், போட்டி நிலையிலும் தரமேம்பாட்டுடன் பயன்படுத்துதல்: இவை பிற்காலத்தில் மெய்வல்லுனர் சார் திறன்களாகவும், விளையாடல் சார் ஆற்றல்களாகவும் வளரும்.

(3) கருத்து வெளிப்பாட்டுக்குரிய அசைவுகள்: எண், எழுதுதல், வரைதல், இணக்குதல், நடித்தல், ஆடுதல், முதலியவை இப்பிரிவில் இடம் பெறும்: அறிகை எழுச்சி வெளிப்பாட்டு ஆற்றல் மேம்பாடுகளாக இவை பிற்காலத்தில் வளரும்.

மேற்கூறிய ஒவ்வொரு பிரிவுக்குமுரிய அசைவுகளை சிறுவர்க்கான கல்வியில் நன்கு திட்டமிட்டு அமைக்க வேண்டியுள்ளது.

சிறுவர்களின் அசைவுகள் கலைத்திட்டத்தில் நன்கு பகுத்தாராயப்படல் வேண்டும். இவ்வாறான ஆய்வுக்குரிய விரிவான பரந்த கட்டமைப்புச் சட்டத்தை றுடோல்லபன் வழங்கியுள்ளார். 5 சிறுவர் கல்வியிற் பங்குபெறும் ஆசிரியர்கள் பின்வரும்சில அடிப்படை வினாக்களை எழுப்பி அசைவுகளைப் பகுத்து நோக்குதல் பொருத்தமுடையது.

1) அசைவின் போது உடலிலே சிறப்பாகப் பங்கேற்கும் உறுப்புக்கள் யாவை?

2) அசைவுகள் எவ்விடத்தில் நிகழ்கின்றன?

3) அசைவு எவ்வாறு நிகழ்த்தப்பட்டுள்ளது?

4) மேற்கொள்ளப்பட்ட அசைவுகளுக்கும் பிற பொருள்களுக்குமிடையேயுள்ள தொடர்புகள் யாவை?

முதலாவது வினாவுக்குரிய விடையை நன்கு விரிவாக நோக்குதல் வேண்டும். அசைவில் உடல் முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றதா, உடலின் பகுதிகள் மட்டும் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றனவா, அசைவின்போது உடல் சமச்சீர் நிலையில் இயங்கியதா, சமச்சீர் நிலை குன்றியுள்ளதா, உடற்பழுவை கூடுதலாகத் தாங்கும் உறுப்பு யாது என்றவாறு விரிவாக நோக்குதல் பொருத்தமுடையது.

இரண்டாவது வினாவுக்குரிய விடையில் அசைவு வெளி (Space) பற்றிய பகுப்பாய்வு சிறப்பிடம் பெறுகின்றது. சிறுவருக்குரிய அசைவுவெளி அவருக்கே சொந்தமானதா அல்லது பிறரும் ஈடுபடும் வெளியைக் கொண்டதா என்பது ஆராயப்படும். அத்துடன் அசைவின் திசை, அசைவின்

www.padippakam.com

மட்டம், அசைவின் வழிநிலை முதலியவை வெளிபற்றிய பகுப்பாய்வில் இடம்பெறும்.

மூன்றாவது வினாவாகிய அசைவு எவ்வாறு நிகழ்த்தப்பட்டுள்ளது என்ற பிரிவில் முயற்சி, நேரம், விரைவு, தாமதம், இங்கிதநிலை, இங்கிதமின்மை நிலை, முதலியவை விரிவாக நோக்கப்படும்.

நான்காவது வினாவாகிய அசைவுக்கும் பிற பொருள்களுக்குமிடையே உள்ள தொடர்புகள் பற்றி ஆராயும் பொழுது, பிறருடன் மேற்கொள்ளும் இடைவினைகள், பிறபொருள்களுடன் மேற்கொள்ளும் இடைவினைகள் தாக்கங்கள் முதலியவை ஆராயப்படும்.

அசைவு என்பது வாழ்க்கையின் முதலாவது சமிக்ஞைகளுள் ஒன்றாகும். கேட்டல், எழுதுதல், வாசித்தல் என்ற அடிப்படையான கல்வித்திறன்கள் அனைத்தும் பொருத்தமான அசைவுகளுடன் தொடர்புடையவை. எழுந்தமான அசைவுகளை இலக்கு நோக்கிய அசைவுகளாக நெறிப்படுத்துதல் கற்பித்தலிலே சிறப்பிடம் பெறுகின்றது. வளர்ந்தோரின் செயல்களைச் சிறுவர்கள் 'பாவனை அசைவுகள்' செய்வதன் வாயிலாகத் திறம்படக்கற்றுக்கொள்ளுகின்றார்கள். சமூக இடைவினைகளின் வாயிலாக பொருத்தமான அசைவுகளும் பொருத்தமற்ற அசைவுகளும் அறிந்து கொள்ளப்படுகின்றன. இந்நிலையில் சிறுவர்க்கான கல்வியில் அசைவுகள் நுணுக்குக் காட்டி (Microscope) நிலையில் மிக நுண்ணியதாக நோக்கப்படுகின்றன.

விலங்கு உளவியலாளரும் நொன்மவியலாளரும் மனிதருக்கும், மனிதக் குரங்குகளுக்குமுள்ள தொடர்புகளை விளக்கிப் பல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்ட பொழுது மனிதக் குரங்குகள் உடலசைவுகள் சார்ந்த விளையாட்டுக்களால் கற்றுக் கொள்கின்றன என்றும் பொருத்தமான ஒலிகளினாலும், உடற் சமிக்ஞைகளினாலும் தொடர்பு கொள்ளுகின்றன என்றும், ஆனால் மனிதரின் தொடர்பு கொள்ளும் முறைமை ஒரு தொடர்ச்சியானதாகவும் இருக்கின்றதென்றும் குறிப்பிடப்படுகின்றது. 6

அசைவுகளைப் பொருண்மை கொண்ட செயல்களாக மாற்றுதலும், தொடர்பாடலுக்குரிய தொடர்ச்சியான சாதனங்களாக மாற்றுதலும் மனிதருக்குரிய சிறப்பியல்புகளாகும்.

அசைவுக் கல்வியிலே முன்வைக்கப்படும் பிறிதோர் எண்ணக்கரு 'ஆக்கவெளிப்பாட்டு அசைவு' (Expressive Movement) என்பதாகும் செயற்கூவல்களுக்கு விடையளித்தலும், ஆக்க வெளிப்பாட்டு விளைவுகளைக் கட்டியெழுப்புதலும், கருத்துக்களை அசைவுகளால் அமைத்தலும் ஆக்க வெளிப்பாட்டு அசைவு என்று குறிப்பிடப்படும். 7

சூழலின் தூண்டிகளுக்குப் பொருத்தமான வகையிலே துலங்குவதற்கும், சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு இசைவாக்கம் செய்து கொள்வதற்கும் ஆக்க வெளிப்பாட்டு அசைவுகள் துணைசெய்யும் என்பதைக் குறிப்பிடும பொழுது, உடலை வெளிப்பாட்டுக்குரிய கருவியாக வைத்திருப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் முக்கியமானதாகும்.

அசைவுக் கல்வியைத் தனித்த ஒரு பாடமாகக் கருதாது, முழுமையான கல்வி அனுபவங்களுடன் ஒன்றிணைந்த இயக்கமாகக் கருதுதலே பொருத்தமானது ஏனெனில் அனைத்துப் பாடத்துறைகளிலும் அசைவுகள் ஊடுருவி நிற்கின்றன. அசைவுகள் மகிழ்ச்சியைக் கொடுப்பதுடன் ஆரம்பத்தில் அசைவுகளை மேற்கொள்பவருக்கே அவை பொருண்மை கொண்டவையாக விளங்குகின்றன. சிறுவர் வளர்ச்சியடையத் தொடங்கும் பொழுது அந்த அசைவுகளின் வழியான உணர்வு புலப்படுத்தல் உருவாக்கப்படுகின்றது. தனக்காக மட்டுமன்றிப் பிறருக்காகவும் அசைவுகளை உண்டாக்கவேண்டிய தேவையினைச் சிறுவர்கள் உணர்ந்து கொள்ளுகின்றார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

பேச்சுமொழி எழுத்து மொழி என்பவற்றின் விருத்திக்குச் சொற்களஞ்சியம் எவ்வாறு அவசியமோ, அவ்வாறே உடல் நிலைப்பட்ட கருத்து வெளிப்பாட்டுத் திறன்களுக்குரிய அசைவுக் களஞ்சியம் (Vocabulary of Movement) முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. அடவுகள், அபிநயங்கள், முத்திரைகள் என்றவாறு எமது கூத்துப் பாரம்பரியத்தில் அசைவுக் களஞ்சிய அலகுகள் குறிப்பிடப்படுகின்றன.

தட்டடவு, நாட்டடவு, தாதெய்தெய்த அடவு, குதித்து மெட்டடவு, தெய்யா தெய்யி அடவு, தத்தெய்தாம் அடவு, மண்டியடவு, தெய்தெய்தத்த அடவு, தத்தெய் தாஹா அடவு, தித்தெய்ந்த தாதெய்த அடவு, தெய்தெய் திதி தெய்தா அடவு, ததிங்கிணதொம் அடவு, தெய் தெய் திதிதெய் அடவு, திதிதெய் அடவு, உத்சங்க அடவு, கத்தி அடவு, சறுக்கலடவு, காத்தரி அடவு, மெய்யடவு, தட்டுமெட்டு அடவு என்றவாறு அடவுகளின் பெரும் பிரிவுகள் இடம்பெறுகின்றன. மேற்குறித்த ஒவ்வோர் அடவும் மேலும் பல சிறு பிரிவுகளாகக் கிளைபரப்பிச் செல்லும்.

ஒற்றைக்கை முத்திரை, இரட்டைக்கை முத்திரை என்று முத்திரைகள் பாகுபடுத்தப்படும்: அவை ஒவ்வொன்றும் இருபத்தைந்துக்கு மேற்பட்ட அடிப்படைக் கருத்துப் புலப்பாடுகளைக் கொண்டிருக்கும். ஆங்கிகம், வாச்சிகம், ஆகார்யம், சாத்விகம் என்ற நான்கு பெரும் பிரிவுகளையும் அவற்றின் உள்ளமைந்த சிறு சிறு பிரிவுகளையும் கொண்டதாக அபிநயங்கள் அமையும். இவ்வகை அசைவுகளின் கலைக்கோலமான வெளிப்பாடாகப் பரதக்கூத்து அல்லது பரதநாட்டியம் அமைகின்றது.

வடமோடி, தென்மோடி ஆகிய கூத்துக்கள் ஒவ்வொன்றும் ஐம்பதுக்கு மேற்பட்ட பிரதான அசைவுகளையும், அவற்றோடிணைந்த துணையசைவுகளையும் கொண்டுள்ளன. தமிழருக்குரிய நாட்டார் மரபுகளில் அசைவு வாயிலான கற்பித்தல் பல கோணங்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது. சில எடுத்துக்காட்டுக்கள் வருமாறு:

'கூத்துக்கூத்து குமரப்பா'
'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு'
'கைவீசம்மா கைவீசு'
'தொங்கல் போட்டுத் தேடையா'
'கண்ணைச் சுழட்டிப் பாரையா காத்திலாடும் குரும்பையா'
'பூனை வீடு கட்டையா புகுந்து உள்ளே பாரையா'
'வெண்டிக்காய் வெண்டிக்காய் விரலை நீட்டு வெண்டிக்காய்'
'மாஞ்சுள்ளி பொறுக்கு மாவடித் திறப்பு'
'கெந்திப்பிடி கெந்திப்பிடி குறுக்கை வந்து கெந்திப்பிடி'
'எவடம் எவடம் புளியடி புளியடி'

மேலும் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களிலே குறிப்பிடப்படும் செங்கீரைப்பருவம் ஒலியுடன் கூடிய அசைவு அனுபவங்கள் (இசையும் அசைவும்) சிறுவர்க்கு வழங்கப்பட்டமையைச் சுட்டிக்காட்டுகின்றது. (கீர் – ஒலி).



படிப்பகம்

www.padippakam.com

அசைவுகள் எவ்வாறு ஏனைய பாடங்களுடனும், அனுபவங்களுடனும் ஒன்றிணைந்து வளப்படுத்துகின்றன என்பதை நோக்குதல் வேண்டும். அசைவுடன் இணைந்த கற்றலானது, ஒத்தசைவு, பேச்சு, உரைநடை, கவிதை, எழுத்து. ஓவியம் கணிதம், விஞ்ஞானம் என்ற பிற துறைகளை வளம்படுத்துவதற்குத் துணை செய்கின்றது.[8] சொற்கள் ஒவ்வொரு மொழிக்கும் உரிய ஒத்திசைவுக் கோலங்களால் அமைக்கப்படுகின்றன. வாசித்தல் பேசுதல் முதலியவை ஒத்திசைவு அசைவுடன் இணைந்த உடல் உள்ளச் செயல்களால் ஆக்கப்படுகின்றன.

அசைவுடன் இணைந்ததான உருவம் (Shape) பற்றிய அறிவும் ஏனைய பாடங்களுடன் ஒன்றிணைகின்றது. இயற்கை உருவங்கள். மனிதனால் ஆக்கப்படும்உருவங்கள் என்பவற்றிலே பொதிந்துள்ள சமநிலை, வலுக்காப்பு நிலை முதலியவை பற்றிய எளிதானதும் ஆரம்பநிலைப்பட்டதுமான விஞ்ஞான அறிவை விருத்தி செய்யக்கூடியதாகவுள்ளது. சில்லு, கோளம் என்பவை அசைவை எத்துணை எளிதாக்குகின்றன என்பதுடன் இணைந்த கணித, விஞ்ஞான அறிவானது செயல்கள் வழியாகக் கட்டியெழுப்பப்பட்டு அனுபவம் பலப்படுத்தப்படுகின்றது. தண்ணீரை அள்ளி மேல்நோக்கி வீசும் பொழுது அவை ஏன் கோளவடிவை எடுக்கின்றன என்ற வினாவை எழுப்புதலும், விடையினை அறிதலும் அசைவு நிலைப்பட்ட விஞ்ஞான அனுபவங்களை வழங்குவதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

அசைவுகளின் பொழுது, பழு அல்லது எடையின் முக்கியத்துவம், அடர்த்தியின் பங்கு, பருமனின் பங்கு என்பவை மாத்திரமன்றி 'உராய்வு' பற்றிய எண்ணக்கருவையும் இலகுவாக மாணவரிடத்துப் பதிவு செய்ய முடியும்.

அசைவுகள் வழியாகக் கணித பாடத்தில் நேர்கோடு, வளைகோடு, முறிவுகள், கோணங்கள், திறந்த உருவங்கள், மூடிய உருவங்கள், சமாந்தரங்கள், திண்மங்களின் இயல்புகள், திரவங்களின் இயல்புகள், சுற்றோட்டம் போன்ற எண்ணக்கருக்களை மாணவர்களுக்கு எளிதிலே புலப்படுத்த முடியும். மேலும் உயர்ந்தநிலையில், ஒலி அசைவுகள், கதிர் அசைவுகள், பண்பாட்டு அசைவுகள், தொடர்பாடல் நிலைப்பட்ட அசைவுகள், கருத்து நிலைப்பட்ட அசைவுகள், பொருளாதாரப் பங்கீடு முதலியவற்றை (மாணவர்கள் அருவநிலையான கற்கும் பருவத்தை அடையும் பொழுது) எளிதிலே அறிந்துகொள்வர்.

அசைவு என்பது மனோநிலை அல்லது உளமியத்துடன் (Mood) தொடர்புடையது. உளமியத்தை வெளிப்படுத்துவதே அசைவு என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.[9] உதாரணமாக கோபம் மகிழ்ச்சி என்ற வேறுபட்ட உளமியத்துக்கேற்றவாறு பாய்ச்சலின் இயல்புகள் வேறுபடுவதை ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. முன்னோக்கிச் சரியும் உடலசைவுகள் துன்பம், நெருக்கீடு ஆகியவற்றின் வெளிப்பாடுகள் என்றும் மேல்நோக்கிய உடலசைவுகள் பெருமிதம், இங்கிதம் முதலியவற்றின் வெளிப்பாடுகள் என்றும் குறிப்பிடப்படுகின்றன.

உளமியத்துக்கும் அசைவுகளுக்குமுள்ள தொடர்புகளை ஆராயும் பொழுது பிறிதொரு கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. அதாவது, அசைவுகள் உளமியத்தில் மாற்றங்களை வருவிக்க வல்லவை என்பதாகும். சிறுவரைத் துள்ளல் நிலைக்கு உள்ளாக்கிய பொழுது அவர்களிடத்தே காணப்பெற்ற உளச்சோர்வுநிலை நீங்கி ஒருவித வெளிப்பும், பிரகாசமும் தோன்றுதல் கண்டறியப்பட்டுள்ளது. உடற்றொழிலியலடிப்படையில் குருதிச் சுற்றோட்டத்தின் வழியான உடல்நிலை உற்சாகமூட்டலாக மட்டுமன்றி, உளவியல் நிலைப்பட்ட உற்சாகத்தையும் உயிர்ப்புமானத்தையும் (Liveliness) துள்ளல்வாயிலான ஆட்சியானது உளமியத்திலே ஏற்படுத்துகின்றது.



படிப்பகம்

இசை, நடனம், கவிதை, உரைநடை என்பவற்றில் உளமியம் எவ்வாறு உணர்த் தப்படுகின்றது என்பதையும் பாத்திரங் களின் உளஇயல்புகள் எவவாறு வெளியிடப் படுகின்றன என்பவற்றையும் மாணவர்கள் கற்றுக் கொள்வதற்கு அசைவுகளுக்கும் உளமியத்துக்குமுள்ள தொடர்புகள் துணை செய்கின்றன. ஒலியின் சேர்மானம், ஒலி யின் வலுச்செறிவு வேறுபாடுகள், சொற் களின் தெரிவு, சொற்களின் உச்சரிப்பு வேறுபாடுகள், மனவெழுச்சி வேறுபாடு களுடன் எவ்வாறு இணைந்து கொள்கின் றன என்பவற்றையும் மாணவர்களுக்கு இலகுவாக உணர்த்த முடியும்.

ஓர் ஊடகத்தின் வழியாக உணரப் படும் உளமியம் பிறிதோர் ஊடகத்தின் வழியாக உணர்த்தப்பட முடியும் 'என்ற அறிகையையும் மாணவர் பெறுகின்றனர். உதாரணமாக உற்சாகமூட்டும் துள்ளல் இசையைக் கேட்டதன் பின்னர் மாணவர் கள் எழுதிய பாடல்களில் அந்த இசை உருவாக்கிய மனவெழுச்சிகளின் சாயல்கள் நிறைந்திருந்தன. 10

மொழி கற்பித்தலில் 'முழுநிலை உடற் கூற்றுத்துலங்கல்' (Total Physical Respo -nse) என்ற முறையியல் அறிமுகம் செய்யப் பட்டுள்ளது. உடல் சார்ந்த தொழிற்பாடு கள் வாயிலாக மொழிகற்பிக்கும் செயற் பாட்டை இது விளக்குகின்றது. விருத்தி சார் உளவியல், கற்றற் கோட்பாடு, மானுடக் கோட்பாட்டுக் கற்பித்தலியல், மொழியியற் கோட்பாடு என்பவற்றை உள்ளடக்கிய அகல்விரி பண்புகொண்ட தாக இக்கற்பித்தற் கோட்பாடு உருவாக் கப்பட்டுள்ளது. 11 உடலியக்கத்துடன் கற் பிக்கப்படுபவை உள்ளத்தில் ஆழ்ந்து பதியும் என்றும், இலகுவாக அவற்றை மீட்டெடுக்க முடியும், என்றும் இம் முறையியலிற் கருதப் படுகின்றது.

ஆரம்ப நிலையில் குழந்தையானது மொழிசார்ந்த கட்டளைகளுக்கு உடல் சார்ந்த துலங்கலையே வழங்குகின்றது. சொல்சார்ந்த துலங்கல் அதன் பின்னரே வளர்ச்சி பெறுகின்றது. மானுடக் கோட் பாட்டுக் கற்பித்தலியலானது மொழிகற்ற லில் மனவெழுச்சிகளினதும் உளமியத்தின தும் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின் றது. கற்பவர் உளநெருக்குவாரங்களற்ற நிலையில் இருக்கும் பொழுதுதான் கற்றல் வினைத்திறன் பெறுகின்றது.

முழுநிலை உடற்கூற்றுத் துலங்கல் வாயிலாகக் கற்றல் ஓர் இயற்கையான முறையியலாகக் கருதப்படுகின்றது. மனித மூளையானது வல அரைக்கோளம், இட அரைக்கோளம் எனப் பாகுபடுத்தப்படு கின்றது என்றும், பொதுவான கற்பித்தல் நடவடிக்கைகள் இட அரைக்கோள மூளை யையே பயன்படுத்தி வளம்படுத்துகின்ற தென்றும். ஆனால் உடற்கூற்று அசைவு களுடன் கூடிய கற்றல் வல அரைக்கோள மூளையை வளம்படுத்த வல்லதாக இருக் கின்றதென்றும் குறிப்பிடப்படுகின்றது. 12 முழுநிலை உடற்கூற்றுத் துலங்கல் கற்பித் தலில் நடிபங்கு ஏற்று நடித்தலும் ஒன்றி ணைக்கப்படுகின்றது. நடிபங்கும் நாளாந்த வாழ்க்கையுடன் இணைந்த சந்தர்ப்பங் களை ஒட்டியதாக அமைக்கப்படுகின்றது.

இவ்வகைக் கற்றலில் கற்பவரே கேட் பவராகவும் ஆற்றுகை செய்பவராகவும் ஆக்கப்படுகின்றனர். தனியாகவும் கூட்டா கவும் உடல்சார் துலங்கலை ஏற்படுத்தி மாணவர் கற்றுக்கொள்வர். அசைவுகள் தெளிந்த உட்கிரகித்தலையும் மாணவர் களிடத்தே விளைவிக்கின்றன. ஏனைய கற்றல் கற்பித்தல் முறையியல்களை வளப் படுத்துவதற்கும் மீள வலியுறுத்துவதற்கும் இது துணை செய்கின்றது.

www.padippakam.com

# நிறைவுரை

அசைவுகளுக்கூடானகல்வி பற்றிய உணர்வு ஆசிரியர்கள், பெற்றோர்கள், வழிகாட்டிகள் முதலியோரிடத்து வேரூன்றாமை ஒருபுறமிருக்க, பாரம்பரியமான கற்றல் கற்பித்தலுக்கு இவை எதிர்மறையானவை என்ற கருத்தானது கலைத் திட்டச் செயற்பாடுகளுக்குச் சவாலாக அமைகின்றது. அசைவுக் கல்வியின் வெற்றி அதன் பண்பு நிலைப்பட்ட ஒழுங்கமைப்பு முயற்சிகளிலே தங்கியுள்ளது. அசைவுகளால் மாணவர் பெறும் உளநிறைவும் அதனைக் கண்டு வளர்ந்தோர் பெறும் அதிருத்தியும் முரண்பாடுகள் கொள்ளும் வேளை, மாணவரின் அறிகை அமைப்பை அடிப்படையாகக் கொண்டே முடிவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அசைவுகள், சூழலோடு இசைவாக்கம் செய்யவும், சூழலை மாற்றியமைக்கவும் வல்ல செயலின் அடிப்படை அலகுகளாக இருப்பதால், கற்றலிலும். கலையாக்கத்திலும் அவை ஆற்றல் மிக்க மூலவளங்களாகக் கருதப்பட வேண்டும். அசைவுக் கல்வியில் பின்வரும் நான்கு நிலைகளை நடைமுறையிற் கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

1) பொருத்தமான உற்சாகம் வழங்கும் நிலை.

2) பொருத்தமற்ற உற்சாகம் வழங்கும் நிலை.

3) உற்சாகம் வழங்காமையின் பொருத்தமான நிலை.

4) உற்சாகம் வழங்காமையின் பொருத்தமற்ற நிலை.

அசைவுகளை சமூக மனவெழுச்சிக் கவிநிலையின் சுட்டிகளாக (Socioemotio-nal Climate Index) கருதுதல் கூடிய பொருத்தப்பாடு கொண்டதாக இருக்கும்.

அடிக்குறிப்புகள்

1. Margaret Donaldson, Children's Minds, Collins Publications Kent, 1978, p.111.
2. Keith Gentle'' Children and Art Teaching; Groom Helm London, 1985 pp. 6-7.
3. Ibid., p. 17.
4. David Fontana, (ed.) The Education of the Young Child Basil Blackwell, New York, 1985, p. 216.
5. Rudolph Laban, The Mastery of Movement, Macdonald and Evans. London, 1960.
6. David Fontand (ed) Op.cit., p. 256.
7. Elizabeth B. Murdoch, Expressive Movement, W & R Chambers, London, 1979, p. 10.
8. Ibid, p. 89. 9. Ibid., p. 90 10. Ibid., p. 92
11. Jack C. Richards and Theodore S Rodgers, Approaches and Methods in LanguageTeaching, Cambridge University Press, Cambridge, 1988 p.7,
12. Ibid, p. 91



படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி vi இதழ் iii – 1994

# அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளை இனங்காணலும், வகைப்படுத்தலும், மதிப்பிடலும்

அ. வே. மணிவாசகர்

## அறிமுகம்

'பாட்டயர்' (Partitire) என்ற பிரெஞ்சு மொழிப் பதத்திலிருந்து தோன்றிய 'கட்சி' (Party) என்ற ஆங்கிலப்பதமானது மூலப் பதத்தின் பிரகாரம் 'பிரிப்பது' (to divide) என்ற பொருளைப் பெறுகிறது அதேசமயம் 'பாட்டோஜர்' (Partoger) என்ற பிரேஞ்சுப் பதத்துடனும் தொடர்புபட்டு கட்சி என்பது (அரசியல்) 'பங்குகொள்ளல்' (Partaking) என்ற பொருளையும் தருகிறது (அஷ்ரப்பும் சர்மாவும், 1992:96) இருப்பினும், பொதுவாகக் கட்சிகள் என்பவை சமூகத்தைப் பிரித்து தேசமுன்னேற்றத்தைத் தடுக்கும் சக்திகள் என்ற அபிப்பிராயமே நீண்ட காலமாக நிலைத்திருந்தது. ஆரம்பங்களில் குறுகிய நோக்கங்களுடன் இயங்கி வந்த சமூகக் குழுக்களே பெரும்பாலும் கட்சிகளாகப் பின்னர் பரிணாம வளர்ச்சி பெற்றமையும், கட்சிகள் பல்வேறு சமூகக் குழுக்களுடனும் தொடர்புகளைப் பேணி வந்தமையும் இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். சொறொவ், (1964 : 57), எப்ஸ்ரின் (1967 : அத் - 1,9) கிங் (1969 : 111 - 41), கீவ்ப் (1972 : 1 –6) போன்ற சமகால அறிஞர்கள்கூடக் கட்சிகள் பற்றிய எதிர்மறையான அபிப்பிராயங்களை முழுமையாகக் கைவிட்டுவிடவில்லை.

ஏகபோக முடியாட்சியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தவும், சர்வசன வாக்குரிமையை விஸ்தரிக்கவும் மேற்குலகில் தோன்றிய பல இயக்கங்கள் அரசியல் யாப்பு வளர்ச்சிக்கும், பிரதிநிதித்துவ ஜனநாயகத்துக்கும் வழிதிறந்துவிட்ட போது அவற்றுடன் இணைந்த அம்சமாக அரசியல் கட்சிகளும் அறிமுகமாயின. 18ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதிகளில் அமெரிக்காவிலும், 19ம் நூற்றாண்டின் மத்திய பகுதிகளில் ஐரோப்பாவில் இங்கிலாந்திலும், பிரான்சிலும், ஆசியாவில் ஜப்பானிலும் கணிசமான அளவுக்குக் கட்சிகளின் அடிப்படைகள் வளர்ச்சியடைந்து காணப்பட்டன (பலொம்பராவும், வெயினரும் 1966). இருப்பினும் கட்சிகளின் நவீன வளர்ச்சியும் முக்கியத்துவமும் 20ம் நூற்றாண்டிலேயே என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது என்பது உண்மையாகும். அதற்கு இணையாக இந்நூற்றாண்டில் பொஸ்கோ (1939), ஸ்கதீச்நெய்டர் (1942), மிச்சல்ஸ் (1949), டுவேஜர் (1954), நியூமன் (1956), பரட்டோ (1963), ஒஸ்ட்றோ கொர்ஸ்கி

www.padippakam.com

(1964) கீ (1964), சாட்டோரி (1976) போன்ற பல்வேறு நாட்டு அறிஞர்கள் பல்வேறு கோணங்களிலிருந்து அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளின் பங்கைச் சிறப்பாக ஆய்வு செய்துள்ளனர். இன்று அரசாங்க இயக்கத்தின் உயிரோட்டமாகக் காணப்படும் கட்சிகளைப் பற்றிய ஆய்வுகள் அரசறிவியலின் நவீன பாடப்பரப்புக்களான ஒப்பீட்டு அரசியலிலும், அரசியல் சமூகவியலிலும் பிரபலம் அடைந்துள்ளன.

அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளை இனங்காணல்

கட்சிகள் என்பவை இன்று சகல அரசியல் முறைகளுக்கும் பொதுவான அம்சமாகக் காணப்படுகிறது. ஐரோப்பிய - அமெரிக்க ஜனநாயக முறைகளிலும் சரி, இரு உலகப்போர்களுக்கிடைப்பட்ட காலத்தில் காணப்பட்ட பாசிச இத்தாலியிலும், நாஜிச ஜேர்மனியிலும் சரி. முன்னைய சோவியத் கம்யுனிச முறையிலும், இன்றைய சீனக் கம்யுனிச முறையிலும், ஏனைய சோசலிச முறைகளிலும் சரி, ஜனநாயகமோ அல்லது இராணுவ சர்வாதிகாரமோ நிலவும் பெரும்பாலான ஆசிய - ஆபிரிக்க - லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் சரி கட்சிகள் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன. கட்சிகள் இல்லாமல் நவீன அரசியல் முறைகள் எதனையும் நினைத்துப் பார்க்கமுடியாத நிலையே காணப்படுகிறது.

வெவ்வேறுபட்ட அரசியல் முறைகளில், வெவ்வேறுபட்ட சூழ்நிலைகளில், வெவ்வேறுபட்ட நோக்கங்களையும், தொழிற்பாடுகளையும் கொண்டிருக்கும் கட்சிகளிடையே பொதுவான பண்புகளை இனம் காண்பது அரிது, குறிப்பிட்ட அரசியல் முறைகளை மையமாகக் கொண்டு கட்சிகள் பற்றிய ஆய்வுகள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளன இப்பிரச்சினைகள் முக்கியமாகக் கட்சிகள் பற்றிய வரைவிலக்கணங்கள், ஒழுங்கமைப்புக்கள் செயற்பாடுகள் என்ற மூன்று அடிப்படைகளில் எழுகின்றன. (Ranney 1968;143-62)

வரைவிலக்கணச் சிக்கல்கள்.

அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளை இனம் காணும் போக்கில் பல வரைவிலக்கண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் கட்சிகளை வரைவிலக்கணப்படுத்துவது இலகுவானதாக இருக்கவில்லை. கட்சிகளை ஏனைய சமூகக் குழுக்களிலிருந்தும் அரசியல் குழுக்களிலிருந்தும் வேறுபடுத்துவதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன (மக்டொனால்ட், 1955 : அத். 1 ; கீ, 1964:163 - 65).

ஆரம்பங்களில் ஆங்கில அறிஞரான பேர்க் கட்சிகளைக் கோட்பாட்டு அடிப்படையில் இனங்கண்டு வரைவிலக்கணப்படுத்த முற்பட்டார். பேர்க்கின் படி 'அரசியல் கட்சி என்பது தேசிய நலனைப் பேணக்கூடிய ஒரு கொள்கையின் அடிப்படையில் இணங்கிக் கொண்ட மக்கள் குழு' ஆகும். மற்றோரிடத்தில் 'கட்சி என்பது தமது இணைந்த நடவடிக்கைகள் மூலம் பொதுநலனை முன்னெடுக்க முடியும் என்ற நோக்கில் சில கோட்பாடுகளில் யாவரினதும் சம்மதத்தைக் கண்ட ஒரு மக்கள் தொகுதி' என்கிறார் (பைனர், 1963 : 240).

ஆனால், பின்வந்த அறிஞர்கள் பேர்க்கின் வரைவிலக்கணத்துடன் ஒத்துப் போகவில்லை கோட்பாட்டு ரீதியான ஒற்றுமை, இணக்கம் என்பவை போலியானவை என்றும், தற்காலிகமானவை என்றும் வலியுறுத்திய பிரான்சிய அறிஞரான டுவேஜர் 'அரசியல் கட்சிகள் என்பவை அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதையும், செயற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு ஒரு அரசியல் முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களாகும்' என்றார். மேலும் தனது வரைவிலக்கணம் ஜனநாயகத் தேர்தல் மூலமோ அல்லது புரட்சி மூலமோ அதிகாரத்தைக் கைப்பற்ற முற்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் யாவற்றையும் உள்ளடக்குவதாகக் கூறினார் (டுவேஜர், 1954:24-25). இதே போன்று ஷ்கம்பீற்றரும் 'அரசியல் கட்சி என்பது அதிகாரத்தைக்



படிப்பகம்

www.padippakam.com

கைப்பற்றும் போட்டித் தன்மையான போராட்டத்தில் ஒத்துச் செயற்படும் நோக்கம் கொண்ட அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு குழு' என்கிறார் (ஸ்கம்பீற்றர், 1950:22). நியூமனின்படி அரசியல் கட்சியானது சமூகத்தின் அரசியல் முகவர்களில் துலாம்பரமானதும் அரசியல் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துபவர்களுடன் தொடர்புடையதும், வெகுஜன ஆதரவுக்காக மற்றைய குழுக்களுடன் அல்லது மாறுபட்ட அபிப்பிராயம் கொண்ட குழுக்களுடன் போட்டியிடுகின்றதுமான ஒன்றாகும் (நியூமன், 1963 : 351).

ஆனால் தனித்துக் கோட்பாட்டின் அடிப்படையிலான வரைவிலக்கணங்கள் பூரணமில்லாதது போலவே, தனித்து அதிகாரத்தின் அடிப்படையிலான வரைவிலக்கணங்களும் கட்சிகளை விளக்கப் போதவில்லை. இதனால் கோட்பாடும், அதிகாரமும் கலந்த வரைவிலக்கணத்தின் அவசியம் உணரப்பட்டது. ஏனெனில் அதிகாரமும், கோட்பாடும் கட்சிகளின் இரு முக்கிய ஆயுதங்களாக இருப்பதுடன் ஒன்று மற்றொன்றைப் பலப்படுத்திப் பாதுகாக்கவும் பயன்படுத்தப்படுகிறது. பிரிக்கமுடியாத இவ்விரு அம்சங்களையும் மையமாக வைத்து வரைவிலக்கணங்கள் எழுந்தன. இவ்வகையில் ஹென்னஸ்ஸி என்பவர் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் கோட்பாட்டு ரீதியாக இணைந்து செயற்படும் குழுவே கட்சியென்று சுருக்கமாகவும் பொருத்தமாகவும் விளக்குகின்றார் (ஹென்னஸ்ஸி, 1968 : 1)

ஒழுங்கமைப்புச் சிக்கல்கள்,

ஒழுங்கமைப்புத் தன்மைகளும் கட்சிகள் பற்றிய ஆய்வில் பொதுமைப்பாட்டை தடுக்கின்றன. வெவ்வேறான அரசியல் முறைகளில் காணப்படும் கட்சி ஒழுங்கமைப்புக்களை ஆராயும் போது எழும் சிக்கல்களைக் குறைத்துக் கொள்வதற்காக நாம் பின்வரும் எடுகோள்களை அடிப்படையாகக் கொள்ளவேண்டும் (Ball 1971:84).

1. ஒழுங்கமைப்பில் கட்சித் தலைமைத்துவத்தின் பங்கும் அது தேர்ந்தெடுக்கப்படும் முறையும்;

2. ஒழுங்கமைப்பில் மத்திய மயமாக்கத்தின் அளவு;

3. ஒழுங்கமைப்பில் தலைமைத்துவத்துக்கும் ஏனைய மட்டங்களுக்கும் இடையிலான உறவுகளும், ஒழுக்காற்று நடவடிக்கைகளும், ஜனநாயகப் பங்கு பற்றலும்;

4. கட்சிப் பணித்துறை ஆட்சியின் கட்டுப்படுத்தும் தன்மை.

5. கட்சியின் பாராளுமன்றப் பிரிவுக்கும் ஏனைய பிரிவுகளுக்கும் இடையிலான உறவுகள்;

6 கட்சி அங்கத்துவத்தின் இயல்பும் அளவும்.

மேற்கூறிய எடுகோள்களின் அடிப்படையில் நாம் ஜனநாயகக் கட்சி ஒழுங்கமைப்புக்களையும், கம்யுனிச, பாசிசக் கட்சி ஒழுங்கமைப்புக்களையும் ஓரளவு வேறுபடுத்தி அறியலாம். ஜனநாயகக்கட்சி ஒழுங்கமைப்புக்கள் திறந்தவையாகவும், பன்முகப்படுத்தப்பட்டவையாகவும் இருக்கையில், கம்யுனிச, பாசிசக்கட்சி ஒழுங்கமைப்புக்கள் மூடப்பட்டவையாகவும் மத்திய மயப்படுத்தப்பட்டவையாகவும் இருக்கின்றன.

ஜனநாயகக் கட்சிகளில் சிறிய தொகைப் பணத்தை வருடச்சந்தாவரகச் செலுத்தி நேரடி அங்கத்துவம் பெற முடியும். சில ஜனநாயகக்கட்சிகள் மறைமுக அங்கத்தவர்களையும் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, பிரித்தானிய தொழிற்கட்சிக்கு ஆதரவான தொழிற் சங்கங்களில் அங்கம்வகிப்போர் தொழிற் கட்சியின் அங்கத்தவர்களாகவும் கருதப் படுகின்றார்கள். இப்பண்புகளைப் பெரும்



படிப்பகம்

www.padippakam.com

பாவும் ஐரோப்பிய சோசலிசக் கட்சிகளிலும், கத்தோலிக்க மதச்சார்புடைய கட்சிகளிலும் காணமுடிகிறது. சில சமயங்களிலும் கட்சியின் உள்வாரியான ஒழுங்கமைப்புக்கும், வெளிவாரியான ஒழுங்கமைப்புக்கும் இடையில் அபிப்பிராய பேதங்களும், முறுகல் நிலைமைகளும் தோன்றுதல் உண்டு.

ஜனநாயகக்கட்சி ஒழுங்கமைப்பில் கட்சியின் சகல அமைப்புக்களும் பங்குபற்றும் வருடாந்த மகாநாடு முக்கியமானது. இம்மகாநாட்டிலேயே கட்சியின் கொள்கை உருவாக்கமும், தீர்மானங்களும், நிர்வாகக் குழு உறுப்பினர் தெரிவும் இடம் பெறுகின்றன. ஆனால் கட்சி மகாநாடுகள் வருடாந்த சம்பிரதாய நிகழ்ச்சிகள் என்றும் கட்சியின் பாராளுமன்றப் பிரிவே ஒழுங்கமைப்பின் சகல விடயங்களிலும் செல்வாக்குச் செலுத்துவதாகச் சிலரால் சுட்டிக் காட்டப்படுகிறது. ஜனநாயக முறைகளில் ஒப்பீட்டுரீதியில் மிகவும் தளர்ச்சியான ஒழுங்கமைப்பை அமெரிக்கக் கட்சிகள் கொண்டுள்ளன.

ஜனநாயகக் கட்சிகளைப் பொறுத்த வரையில் தமது கட்சிப் பரிபாலனத்துக்கும், தேர்தல் செலவுகளுக்கும் சமூகத்தின் பொருளாதார - வர்த்தக அமைப்புக்கள் வழங்கும் நிதியையே நம்பியுள்ளன. மேற்கு ஜேர்மனியிலும், இந்தியாவிலும் தமது தேர்தல் செலவுகளைத் தாங்கவும், கட்சி நிதிக்கு தாராளமாக வழங்கவும் வல்லவர்களுக்கே அபேட்சகர் நியமனங்களில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. இத்தகைய பணபலத்தின் தீமைகளை மட்டுப்படுத்தும் சில நடவடிக்கைகளும் மேற் கொள்ளப் பட்டுள்ளன. பிரித்தானியாவிலும், அண்மையில் இந்தியாவிலும் அபேட்சகர்கள் தேர்தலுக்குச் செலவிடும் பணம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஜப்பான், இஸ்ரேல், பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் கட்சி பெறும் நிதியுதவிகள் திட்டவட்டமான வழிமுறைகள் மூலம் நெறிப்படுத்தப்படுகின்றன. மேற்கு ஜேர்மனி, ஸ்பெயின், சுவீடன் போன்ற நாடுகளில் கட்சிகளின் தேர்தல் தொகுதி பலத்துக்கமைய அரசாங்கம் மானியம் வழங்குகிறது (அலெக்சாந்தர், 1972; றோஸ்ஸும் ஹைடன்ஹெய்மரும், 1963).

'பாட்டாளிகளின் முன்னணிப் படை' என்று வர்ணிக்கப்படும் கம்யுனிசக்கட்சி மிகவும் இறுக்கமான அரசியல் - இராணுவ ஒழுங்கமைப்பைக் கொண்டுள்ளது. புரட்சி நோக்கம் கொண்ட கம்யுனிஸ்டுக்கள் ஒழுங்கமைப்பில் அங்கத்துவத்தை மட்டுப்படுத்திக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க விழைகின்றனர். லெனினின் ஜனநாயக மத்திய வர்க்கம் (Democratic Centralism) என்ற தத்துவத்தின் அடிப்படையிலேயே கம்யுனிஸ்டுக்கள் கட்சியை ஒழுங்கமைக்கின்றனர். ஒரே சமயத்தில் ஒன்றுக்கொன்று முரணான ஜனநாயகத்தையும், மத்திய மயமாக்கத்தையும் வலியுறுத்தும் இந்த விசித்திரமான தத்துவத்தின் நடைமுறையைப் பார்க்கும்போது ஜனநாயகம் என்பது பெயரளவில் இருக்க மத்திய மயமாக்கம் என்பதே முனைப்படைந்து காணப்படுகிறது. மத்திய குழுவின் செல்வாக்கு மிக்க சில அங்கத்தவர்களை உள்ளடக்கிய 'பொலிற்பீரோ' (Poltitlurau) என்ற அமைப்பே கம்யூனிசக் கட்சி ஒழுங்கமைப்பில் மிகவும் சக்தி வாய்ந்த அமைப்பாகும். (பிறைட்றிச்சும் பிர்ஷேஷின்ஸ்கியும், 1965: அத், 3)

அதிதீவிர தேசியவாதிகளாகவும், ஆக்கிரமிப்புத்தன்மை கொண்ட ஏகாதிபத்திய வாதிகளாகவும் காணப்படும், பாசிசவாதிகளின் கட்சி ஒழுங்கமைப்பு, கம்யூனிசக் கட்சியைவிட மேலும் இறுக்கமானதாகவும், முற்றிலும் இராணுவ பாணியிலானதாகவும், அமைகிறது. இராணுவ சீருடையின் நிறத்தின் அடிப்படையில் முசோலினியின் பாசிசக்கட்சி அங்கத்தவர்கள் 'கருஞ்சட்டையினர்' (Black Shirts) என்றும் ஹிட்லரின் நாஜிசக்கட்சி அங்கத்தவர்கள் 'மாநிறச்சட்டையினர்' (Brown Shirts) என்றும் அழைக்கப்பட்டனர். (இறிகர் 1969) சாதாரண மக்களை நடைப்பிணங்களாகக் கருதும் பாசிசம், உயர்குழாம் ஒழுங்கமைப்பில் நம்பிக்கை கொண்டது.



படிப்பகம்

www.padippakam.com

செயற்பாட்டுச் சிக்கல்கள்:

அரசியல் முறைகளின் அபிவிருத்திகளுக்கேற்ப கட்சிகளின் தொழிற்பாடுகளிலும் தரரீதியான வேறுபாடுகள் காணப்படுகின்றன. அபிவிருத்தியடைந்த நாடுகளின் கட்சிகளின் தொழிற்பாடும் ஒன்றாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அவ்வாறே ஜனநாயக அரசியல் முறைகளில் கட்சிகளின் தொழிற்பாடானது கம்யூனிச, பாசிச அரசியல் முறைகளில் உள்ள கட்சிகளின் தொழிற்பாட்டிலிருந்து வேறுபட்டிருக்கும். ஒரே அரசியல் முறையில் கூட சகல கட்சிகளும் ஒரே விதமான தொழிற்பாட்டைக் கொண்டிருக்கும் என்று கூறமுடியாது. தேசியக் கட்சிகளும், பிரதேச ரீதியான கட்சிகளும், குழு நலன் பேணும் கட்சிகளும், கிளர்ச்சி நோக்கம் கொண்ட கட்சிகளும் தொழிற்பாட்டு ரீதியில் வேறுபட்டிருக்கும்.

ஜனநாயக அரசியல் முறைகளில் கட்சிகளின் தொழிற்பாட்டு விரிவுகளை விளக்கும் நியூமன் அவை "அபிப்பிராய முகவர்களாகவும், கோட்பாட்டை ஒழுங்குபடுத்தியும் தெளிவுபடுத்தியும் தொடர்ச்சியாக வெளிப்படுத்துபவையாகவும், சமூகக் குழுக்களைப் பிரதிநிதித்துவம் செய்பவையாகவும், சமூகத்தையும் தனிமனிதனையும் பிரிக்கும் இடைவெளியைக் குறைப்பவையாகவும், வாக்காளரின் அரசியல் அறிவை விருத்தி செய்பவையாகவும், அவர்களின் சுதந்திரமான விருப்பத் தெரிவைக் கூர்மைப்படுத்துபவையாகவும் உள்ளன" என்கிறார். (நியூமன் 1956:396).

ஹெனிங், பைன்டர் என்போரின் படி ஜனநாயகக் கட்சிகள் பொதுவாக அரசாங்கத்துக்கும், குறிப்பாக, சட்ட - நிர்வாகத் துறைகளுக்கு ஆட்சேர்ப்புக்கும், சேர்க்கப்பட்ட அங்கத்தவர்களை நிச்சயமான கோட்பாடுகளின் அடிப்படையில் ஒருங்கிணைப்பதற்கும், அரசாங்கத்துக்கும், பொதுசன அபிப்பிராயத்துக்கும் இடையில் தொடர்பாளராக இயங்குவதற்கும், இன, மத, மொழி, பிரதேச ரீதியான உணர்வுகளைக் கடந்து சமூக நலன்களை ஒன்றுபடுத்தி வெளிப்படுத்தவும் உதவுகின்றன (ஹெனிங்கும் பைண்டரும், 1969:15 - 18).

பூரணமான கம்யூனிச அரசியல் முறையில் கம்யூனிசக்கட்சி மாத்திரமே இயங்குவதாலும், இறுக்கமான ஒழுங்கமைப்பையும் உறுதியான கோட்பாட்டையும் அது கொண்டிருப்பதாலும் அதன் தொழிற்பாடுகள் தெளிவானவையாகவும் திட்டவட்டமானவையாகவும் உள்ளன. பாட்டாளிப் புரட்சியை முன்னெடுத்துச் சோசலிச சமூகத்தை நிர்மாணித்த பின் அரசில்லாத கம்யூனிச சமூகத்தை நோக்கிய பயணத்திற்குக் களம் அமைக்கும் கம்யூனிசக்கட்சி வரலாற்று ரீதியான உன்னதமான பணியை ஆற்றுவதாக விளக்கம் அளிக்கப்படுகிறது. கம்யூனிசக் கட்சியின் ஐக்கியமும், பலமும் உளவுப் படையின் செயற்பாடுகள் மூலமும் பேணப்படுகின்றன. கம்யூனிசக் கட்சியைத் தூய்மைப்படுத்தும் நோக்கில் தலைமைத்துவம் அவ்வப்போது களையெடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது. ஆனால் பல கட்சி முறைகளில் தொழிற்படும் கம்யூனிசக் கட்சிகள் பல ஜனநாயகப் பண்புகளை உள்வாங்கியுள்ளன.

பாசிசக்கட்சியின் தொழிற்பாட்டை 'பயங்கரவாதம்' என்ற ஒரு சொல்லில் அடக்கிவிடலாம். உள்நாட்டில் எதிர்ப்புக்களை முறியடிக்கத் தாராளமாகப் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிடும் பாசிசவாதிகள், அர்த்தமில்லாத யுத்தங்களை ஆரம்பித்து வெளிநாடுகளுக்கும் பயங்கரவாதத்தை ஏற்றுமதி செய்கின்றனர். மக்கள் குரலை நசுக்கியும், ஆயுத உற்பத்திக்கு முக்கியம் வழங்கியும், ஆயுதப் படைகளைப் பலப்படுத்தியும், பிரச்சார சாதனங்களை முடுக்கிவிட்டும், தலைமைத்துவப் புகழ் பாடியும் பாசிசக் கட்சியின் தொழிற்பாடுகளுக்கு உத்வேகம் வழங்கப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளை வகைப்படுத்தல்:

பல்வேறு அரசியல் முறைகளிலும் காணப்படும் கட்சிகளை வகைப்படுத்த முன்னர், கட்சிகள் இல்லாத அரசியல் முறைகள் பற்றியும் குறிப்பிடல் வேண்டும். கட்சிகள் இல்லாத அரசியல் முறைகள் பாரம்பரிய முடியாட்சிகளிலும், இராணுவ சர்வாதிகாரங்களிலும் காணப்படுகின்றன. விளண்டல் என்ற அறிஞரின் படி 1960 களில் இத்தகைய கட்சிகள் இல்லாத 14 முடியாட்சிகளும், 17 இராணுவ சர்வாதிகாரங்களும் காணப்பட்டன (விளண்டல், 1969: 141) இவற்றில் பெரும்பாலானவை மத்திய கிழக்கிலும், ஆபிரிக்காவிலும், தென்சகாரா, தென் கிழக்கு ஆசியா போன்ற பிரதேசங்களிலும் உள்ள சிறிய, முக்கியத்துவம் குறைந்த அரசுகளாகும் பாரம்பரிய முடியாட்சிகளில் கட்சி வளர்ச்சிக்கான சூழ்நிலைகள் இல்லை. பெரும்பாலான இராணுவ சர்வாதிகாரங்களில் கட்சிகள் திட்டமிட்டு அழிக்கப்பட்டன.

அரசியல் கட்சிகளை மரபுரீதியான ஒரு கட்சிமுறை, இருகட்சி முறை, பல கட்சி முறை என்று மூன்றாக வகைப்படுத்தல் இன்று பொருத்தமற்றதாகக் கருதப்படுகிறது ஒரு கட்சிமுறை, ஒரு கட்சிக்கு மேற்பட்ட முறை என்ற இரு பிரதான பிரிவுகளில் பல உப பிரிவுகளை உள்ளடக்கி நவீன அபிவிருத்திகளை விளக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு கட்சி முறை: (One Party System)

20ம் நூற்றாண்டில் பலம் வாய்ந்த ஒரு கட்சி முறையை இடதுசாரி அல்லது வலதுசாரிச் சர்வாதிகாரங்களில் காணலாம் ஆனால் பலவீனமான ஒரு கட்சி முறைப் போக்கினை ஏனைய முறைகளிலும் காணமுடிகிறது. போலந்து நாட்டின் சமகால அரசறிவியலாளரான உவெய்ற்றர் என்பவர் ஒரு கட்சி முறையை தனிக் கட்சிமுறை, தலைமைக் கட்சி முறை, ஆதிக்கக் கட்சிமுறை என்ற மூன்று பிரிவாக வகைப்படுத்துகிறார். (Wiater, 1964: 281 - 90)

தனிக் கட்சி முறை (Monoparty System)

ஒரு அரசியல் முறையானது தனியொரு கட்சியை மாத்திரம் இயங்க அனுமதிக்குமானால் அது தனிக்கட்சிமுறை எனப்படுகிறது. இரு உலக யுத்தங்களுக்கிடைப்பட்ட காலத்தில் ஜேர்மனியில் காணப்பட்ட ஹிட்லரின் நாஜிசக் கட்சியும், இத்தாலியில் காணப்பட்ட முசோலினியின் பாசிசக்கட்சியும், சீன, (முன்னைய) சோவியத் கம்யூனிசக் கட்சிகளும் தனிக் கட்சிமுறைக்குச் சிறந்த உதாரணங்களாகும். தாம் வரித்துக்கொண்ட தீவிர சித்தாந்தங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்த தனியொரு கட்சியே உகந்தது என்றும். பல கட்சிகளின் இயக்கம் குழப்பத்துக்கும், திறமையின்மைக்கும், சமூகச் சீரழிவுக்கும் வழிவகுத்துவிடும் என்றும் பாசிசவாதிகளும், தீவிர கம்யுனிசவாதிகளும் கருதுகின்றனர். இதனால் மாற்றுக் கட்சிகளை அவர்கள் மதிப்பதோ அல்லது சகிப்பதோ கிடையாது. தனிக்கட்சி முறையானது படிப்படியாகப் பலம் இழந்து மறைந்து வருவதை வரலாறு காட்டுகிறது.

தலைமைக் கட்சி முறை: (Hegemonic Party System)

தலைமைக் கட்சிமுறை என்பது பல கட்சிகள் காணப்படினும் அவை செல்வாக்குமிக்க கட்சியின் தலைமைத்துவத்தையேற்றுக்கொண்டு அதனுடன் இணைந்து கூட்டாகத் தேர்தலில் போட்டியிடுவதாகும். சமீபகாலம்வரை சோவியத் யூனியனின் கட்டுப்பாட்டில் இருந்த கிழக்கு ஐரோப்பிய கம்யுனிச நாடுகளில் தலைமைக்கட்சிமுறை நிலவியது. தலைமைக்கட்சி முறைக்குச் சிறந்த உதாரணமாக உவெய்ற்றர் என்ற அறிஞர் போலந்



படிப்பகம்

www.padippakam.com

தைச் சுட்டிக்காட்டுகிறார் அங்கு சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மூன்று கட்சிகளாக போலந்தின் ஐக்கிய தொழிலாளர் (கம்யுனிச) கட்சியும், ஐக்கிய விவசாயிகள் கட்சியும், ஜனநாயகக் கட்சியும் உள்ளன. இதில் முதல் குறிப்பிட்ட செல்வாக்கு மிக்க கட்சியின் தலைமையை ஏற்றுக் கொண்டு பின்னர் குறிப்பிட்ட இரு கட்சிகளும் அதனுடன் நிரந்தரமாக மக்கள் முன்னணி ஒன்றில் இணைந்து கூட்டாக அபேட்சகர் பட்டியலைத் தயாரித்துத் தேர்தல்களில் போட்டியிட்டு வந்தன. ஆனால் தனிக்கட்சி முறைக்கும் தலைமைக்கட்சிக்கும் இடையில் அதிக வேறுபாடுகளை மேற்கு நாட்டு ஆய்வாளர்கள் காண்பதில்லை.

### ஆதிக்கக் கட்சி முறை: (Dominant Party System)

கீ என்ற அறிஞர் அமெரிக்காவின் தென் மாநிலங்களில் ஜனநாயகக் கட்சியின் ஆதிக்கத்தைக் குறிப்பதற்கு ஆதிக்கக் கட்சி என்ற பதத்தை முதலில் பயன்படுத்தினார் (கீ, 1949: 298 - 311). பின்னர் டுவேஜரினால் அது மேலும் விரிவுபடுத்தப்பட்டது. டுவேஜரின்படி ஒரு ஆதிக்கக் கட்சி இரு கட்சி முறையில் அல்லது பல கட்சி முறையில் பின்வரும் இரு பிரதான இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும். முதலாவதாக, அது போட்டிக் கட்சிகளை நீண்ட காலத்திற்குத் தேர்தலில் ஓரம் கட்டியிருக்க வேண்டும். இரண்டாவதாக, அது தனது கோட்பாடுகள், அமைப்பு, இயக்கம் போன்றவற்றால் தன்னை முழு நாட்டுடனும் இனம் காணக்கூடியதாக இருக்க வேண்டும் (டுவேஜர், 1972:36) பிரான்சின் மூன்றாம் குடியரசில் இடம் பெற்ற தீவிரவாதக் கட்சியும் ஸ்கன்டிநேவியாவின் சமூக ஜனநாயகக் கட்சியும் டுவேஜரினால் ஆதிக்கக் கட்சி முறைக்கு உதாரணமாகக் காட்டப்பட்டது. பின்னர் இம்முறை காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கம் காணப்பட்ட இந்தியாவுக்கும், மெக்ஸிக்கோ, மலேஷியா, உறவொன் போன்ற நாடுகளுக்கும் பிரயோகிக்கப்பட்டது.

### ஒரு கட்சிக்கு மேற்பட்ட முறை (System of more than one party)

உலகில் சுமார் 2/5 பங்குக்கு மேற்பட்ட அரசியல் முறைகள் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளைக் கொண்டுள்ளன. (பூசன் 1988: 116). ஒரு கட்சிக்கு மேற்பட்ட கட்சி முறையில் இரு கட்சி முறை, இரண்டரைக் கட்சிமுறை, பல கட்சி முறை கச்சோல் கட்சிமுறை என்ற நான்கு பிரிவுகளைக் காணலாம்.

### இரு கட்சி முறை (Bi - Party System)

இரு கட்சி முறையில் ஏறக்குறைய சமமான பலம் கொண்ட இரு பெரும் கட்சிகள் ஒன்றுமாறி ஒன்றாக ஆளுங் கட்சியாகவோ அல்லது எதிர்க்கட்சியாகவோ அரசியல் அதிகாரத்தைப் பெற்றிருப்பதைக் காணலாம். வேறு கட்சிகள் இருந்தாலும் அவை மிகவும் சிறியவையாகவும், முக்கியத்துவம் குறைந்தவையாகவுமே இருக்கும்.

ஜனநாயக ஆட்சிக்கு மிகவும் ஆரோக்கியமானதாகக் கருதப்படும் இருகட்சி முறை அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் சிறப்பாக அபிவிருத்தியடைந்துள்ளது அவுஸ்திரேலியா, நியூசிலாந்து என்பவையும் இம்முறையில் நிலைத்துள்ளன. ஆரம்பக் கட்சிமுறையின் தொடர்ச்சியும், பிரதம நிர்வாகி மக்களினால் நேரடியாகத் தெரியப்படலும், மக்களின் சில முக்கிய அரசியல் நம்பிக்கைகளும், மனப்போக்குகளும், அடிப்படை விடயங்களில் மக்களின் சம்மதம் போன்ற காரணிகளும் அமெரிக்காவில் இரு கட்சி முறை பலம்பெற உதவியுள்ளன. (கீ, 1958: 227 - 30). இங்கிலாந்தில் இரு கட்சி முறையின் வளர்ச்சிக்கு ஓரினத்தன்மையான மக்களும், 19 ம் நூற்றாண்டின் இறுதி வாக்கில் ஸ்திரம் பெற்ற வர்க்க ஒழுங்கும், தேசிய அம்சங்களும், கட்சிமுறை வளர்ச்சியின் இயல்புகளும், தனி அங்கத்தவர் தேர்தல் தொகுதிகளும் எளிய பெரும்பான்மைத் தேர்தல் முறையும் வழி சமைத்துள்ளன (அஷ்ரப்பும் சர்மாவும், 1992: 99).



படிப்பகம்

www.padippakam.com

### இரண்டரைக் கட்சி முறை
### Two and a Half Party System

இரண்டரைக் கட்சிமுறை என்பது பலம் வாய்ந்த இரு பெரிய கட்சிகளுடன், சிறியதாக இருப்பினும் மூன்றாம் கட்சி யொன்று அதிகாரப் போட்டியிலோ அல்லது அரசாங்கத்தை நிர்வகிப்பதிலோ முக்கிய பங்கை வகிப்பதாகும். இந்த மூன்றாவது கட்சியே அரைக்கட்சியாகக் கணிக்கப்பட்டு முழு முறையும் இரண்டரைக்கட்சி என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய கட்சிமுறைப் போக்குகளை லெசோதோ, குவாட்டமாலா, எல்சல்வடோர், குயானா, பாபடோஸ் போன்ற நாடுகளில் அவ்வப்போது காணக்கூடியதாக உள்ளது 1986 தேர்தலின் பின்னர் ஸ்பெயினிலும் இப்போக்குக் காணப்படுகிறது.

### பல கட்சிமுறை: (Multi Party System)

டுவேஜரின் படி பல கட்சிமுறை என்பது மூன்று முதல் அதற்கு மேற்பட்ட கட்சிகளைக் கொண்டதாகும். (டுவேஜர், 1954 : 228). விளண்டலும், வலன்ரைனும் 4 அல்லது 5 கட்சிகள் பெருமளவுக்கு சமமான பலத்துடன் காணப்படுதலைப் பல கட்சிமுறை என்கின்றனர் (விளண்டலும், வலன்ரைனும், 1972 : 65). கேட்டிஸ்ஸின் படி பல கட்சி முறை என்பது எந்த ஒரு கட்சியும் தனித்து அறுதிப் பெரும்பான்மைப்பலம் பெறமுடியாதபடி பல கட்சிகளின் பெருக்கம் காணப்படுதலாகும். (பூசன், 1988 : 120). சமூகத்தில் காணப்படும் பிளவுகளும், குழு முறை அடிப்படையிலான அரசியலும். உயர்குழாத்தினரின் பிரித்தாளும் தந்திரங்களும், கட்சிகளின் நிலையூன்றிய நலன்களும், விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறையும், தேர்தல் விதிகள் போன்றவையும் பல கட்சி முறையைத் தூண்டிவிடுகின்றன. பூசன் (1988:121).

பொதுவாகப் பலகட்சி முறையானது அரசியல் ஸ்திரம், ஜனநாயக வளர்ச்சி, சமூக பொருளாதார முன்னேற்றம் போன்றவற்றைப் பெரிதும் பாதிப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் பல கட்சி முறையில் உறுதியான பல கட்சிமுறை, உறுதியற்ற பல கட்சி முறை என இரண்டு பிரிவுகளாக மேலும் விளக்கப்படுகிறது உறுதியான பல கட்சி முறைக்கு உதாரணமாக சுவிற்சர்லாந்து, ஸ்கன்டிநேவியன் நாடுகள், நெதர்லாந்து, இஸ்ரேல், ஜப்பான் போன்றவை உள்ளன. 1958 ல் 5 ம் குடியரசு உருவாகுவதற்கு முந்திய பிரான்ஸ். இன்றைய இத்தாலி, இந்தியா போன்றவை உறுதியற்ற பல கட்சி முறைக்கு உதாரணமாகும்.

### கச்சோல் கட்சி முறை
### (Catchall Party System)

''கச்சோல்'' என்ற பதம் (Catch all) ''சகலதையும் பிடித்தல்'' என்று பொருள்படுகிறது. ஜேர்மனிய கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் பின்னணியில் இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிந்திய ஐரோப்பிய அரசியல் கட்சிகளின் அபிவிருத்திகளை ஆராயும் கிர்ச்ஹெய்மர் (1966) அவற்றைச் சகலதையும் பிடிக்கும் கட்சிகளாக, அதாவது சகல சமூகப் பிரிவினரதும் ஆதரவைப் பெறுகின்ற கட்சிகளாக விளக்குகின்றார். இரண்டாம் உலக யுத்தத்துக்கு முன்னர் ஐரோப்பாவில் மார்க்சிசக் கட்சிகள் தொழிலாள வர்க்கத்துடனும், விவசாயிகளின் கட்சிகள் விவசாய வர்க்கத்துடனும். பழமை பேணும் கட்சிகள் உயர் - மத்திய வர்க்கங்களுடனும் கத்தோலிக்க மதச்சார்பான கட்சிகள் கத்தோலிக்க மக்களுடனும் கட்டுண்டு காணப்பட்டன. ஆனால் உலகப் போரின்பின் உருவாகிய புதிய நிலைமைகளும், தேவைகளும் இக்கட்சிகள் தமது மரபுரீதியான வரம்புகளை மீறி முற்போக்காகச் சிந்திக்கவும், முழுச் சமூகத்தின் நலன்பற்றி அக்கறை கொள்ளவும் தூண்டின. பிரித்தானிய, கனடிய பழமை பேணும் கட்சிகள், ஸ்பானிய, பிரெஞ்சு சோசலிசக் கட்சிகள், இத்தாலிய ஜேர்மனிய கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சிகள்



படிப்பகம்

www.padippakam.com

கள், ஜப்பானிய தாராண்மைவாதக் கட்சி என்பவை அடிப்படையில் வர்க்க நோக்கை கொண்டிருந்தாலும் இன்று சமூகம் முழுவதற்கும் குரல் கொடுக்கப் பின்னிற்பதில்லை. கச்சோல் கட்சிமுறைப் பண்புகள் ஐரோப்பாவுக்கு வெளியில் உலகின் ஏனைய அரசியல் முறைகளின் கட்சிகளிலும் அவதானிக்கத்தக்க ஒரு முற்போக்கான மாற்றமாகும்.

கோட்பாட்டுரீதியான வகைப்படுத்தல்:

கட்சிகளின் கோட்பாட்டுரீதியான இறுக்கம் தளர்ந்துவருகின்றபோதிலும் அவற்றை சில முனைப்பான கோட்பாட்டு அம்சங்களின் அடிப்படையிலும் வகைப்படுத்தும் முறையும் உண்டு. அவ்வகையில் 7 விதமான கோட்பாடுகளுடன் கட்சிகளை அடையாளம் காணமுடியும்.

கம்யூனிசம் (Communism)

கம்யூனிசக் கோட்பாடானது முக்கியமாக மார்க்சிச - லெனினிசத்தை அல்லது மார்க்சிச - லெனினிச - மாவோயிசத்தை உள்ளடக்குகிறது. (முன்னைய) சோவியத் கம்யூனிசக் கட்சியும், சீனக்கம்யூனிசக் கட்சியும், இரு பிரபலமான கம்யூனிசக் கட்சிகளாகும் இவற்றின் தலைமையை ஏற்றுக்கொண்டு இயங்கும் கம்யூனிசக் கட்சிகளையும் பல நாடுகளில் காணலாம்.

ஜனநாயக சோசலிசம் (Democratic Socialism)

வலதுசாரிப் போக்குடைய கம்யூனிசவாதிகள் ஜனநாயக சோசலிசக் கட்சியில் இடம்பெறுகின்றனர். கம்யூனிசமல்லாத சோசலிசத்தை நடைமுறைப்படுத்த இவர்கள் விரும்புகிறார்கள். உலகின் எல்லா ஜனநாயக முறைகளும் இத்தகைய கட்சிகளைக் கொண்டுள்ளன. இவற்றில் முக்கியமானவையாக அமெரிக்க சோசலிசத் தொழிலாளர் கட்சி, அவுஸ்திரேலியா சோசலிசக் கட்சி, நோர்வே தொழிலாளர் கட்சி, பிரான்சிய, பெல்ஜிய சோசலிசக் கட்சிகள், சுவீடன், டென்மார்க், பின்லாந்து, மேற்கு ஜேர்மனி என்பவற்றில் உள்ள சமூக ஜனநாயகக் கட்சிகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கிறிஸ்தவ ஜனநாயகம் (Christian Democratic)

சமூகத்தின் இலௌகிக முன்னேற்றங்களை விடுத்து ஆன்மீகத் தூய்மையையும், விடுதலையையும் விரும்பும் கிறிஸ்தவ ஜனநாயகவாதிகள் முதலாளித்துவம் சோசலிசம் என்ற இரண்டிலும் உள்ள தீமைகளைக் களையவிரும்புகின்றனர் மிதமிஞ்சிய செல்வம், மிதமிஞ்சிய வறுமை என்பவற்றை ஒழிப்பதற்கும், சமமான செல்வப் பகிர்வுக்கும் முற்படும் இவர்கள் அதன் பொருட்டு முதலாளிகளையும் தொழிலாளர்களையும் கொண்ட கூட்டுறவான அமைப்பொழுங்கு ஒன்று உருவாக வேண்டும் என்கின்றனர். முதலாளிகளும், தொழிலாளர்களும் இறைவனின் குழந்தைகளே என்பது இவர்களது நிலைப்பாடாகும். பிரான்ஸ், பெல்ஜியம், மேற்கு ஜேர்மனி போன்ற கத்தோலிக்க மக்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகளில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சிகள் காணப்படுகின்றன.

தாராண்மை வாதம் (Liberalism)

இருபதாம் நூற்றாண்டுத் தாராண்மைவாதிகள் சோசலிசத்துக்கும், முதலாளித்துவத்துக்கும் இடையிலான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். மேற்கு நாடுகளில் முக்கியமான 4 அல்லது 5 கட்சிகளில் ஒன்றாக தாராண்மைவாதக் கட்சி காணப்படுகிறது. பிரான்சின் தீவிரவாதக்கட்சி, சுவிற்சர்லாந்தின் தீவிர ஜனநாயகக்கட்சி, மேற்கு ஜேர்மனியின் சுதந்திர ஜனநாயகக்கட்சி, பெல்ஜியத்தின் உரிமைக்கும் முன்னேற்றத்துக்குமான கட்சி போன்றவை முக்கிய தாராண்மை வாதக்கட்சிகளாகும்.



படிப்பகம்

www.padippakam.com

### ஜனநாயகப் பழமைவாதம் (Democratic Conservation)

ஜனநாயகப் பழமைவாதம் சில ஐரோப்பிய வலதுசாரிக் கட்சிகளின் கோட்பாடாகும் இவர்கள் ஜனநாயக முறையிலான அரசாங்கத்தை ஏற்றுக்கொண்டு அதைப் பாதுகாக்க விரும்பும் அதே வேளையில், சோசலிசத்தையும், நலன்புரி அரசையும் நோக்காகக் கொண்ட போக்கையும், மற்றும் மரபுரீதியான சமூக பொருளாதார முறைகளில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களையும் கடுமையாக எதிர்ப்பதோடு, பழைய நிலைக்கு மீளவும் வேண்டும் என்கின்றனர். முக்கிய உதாரணங்களாகப் பிரான்சின் சுதந்திரக் கட்சி, ஸ்கன்டிநேவியாவின் பழமை பேணும் கட்சிகள், ஐரோப்பிய விவசாயிகளின் கட்சிகள் போன்றவற்றைக் கூறலாம்.

### ஜனநாயக எதிர்ப்புப் பழமைவாதம் (Antidemacratic Conservatism)

சில ஐரோப்பிய இடதுசாரிக் கட்சிகள் பண்டைய சமூக பொருளாதார முறைகளுக்கு திரும்பும் நோக்கோடு தீவிரமான மீட்சி நடவடிக்கைகளுக்கான வழிகளை முன்வைப்போராகவும், பெரும்பான்மை ஜனநாயக முறையை நீக்க விரும்புவோராகவும் காணப்படுகின்றனர். ஆனால் இவை சமாதானமான வழிமுறைகள் மூலமே சாத்தியப்படவேண்டும் என்கின்றனர். அவுஸ்திரேலிய சுதந்திரவாதிகளினதும், இத்தாலிய முடியாட்சிவாதிகளினதும் கட்சிகளை சில உதாரணங்களாகக் கூறலாம்.

### ஜனநாயக எதிர்ப்புத் தீவிரவாதம் (Antidemacratic Radicalism)

சில தீவிர வலதுசாரிகள் ஜனநாயகத்தை விரோதிப்போராகவும், அதை எவ்வழியிலேனும் அழித்துவிட முற்படுவோராகவும் உள்ளனர். ஹிட்லர், முசோலினியின் வரிசையில் நவபாசிசவாதிகளாக இனம் காணப்படும் ஜனநாயக எதிர்ப்புத் தீவிரவாதிகளின் கட்சிகளை இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் காணலாம்.

### அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளை மதிப்பிடல்

நவீன வரலாற்றில் நிலப்பரப்பிலும், மக்கள் தொகையிலும் பிரமாண்டமான தேசிய அரசுகள் தோன்றிய போதும், அவற்றுடன் இணைந்து மறைமுக ஜனநாயகம் வளர்ந்து வந்த போதும், அரசாங்கத்துக்கும் மக்களுக்குமிடையே தரகர்களாகக் கட்சிகள் தோன்றுவது தவிர்க்க முடியாததாகியது. ஸ்திரமடைந்து வந்த மக்களாட்சி யுகத்தில் நலன்புரி அரசுகளின் வளர்ச்சியானது, அரசாங்க இயந்திரத்தின் அச்சாக விளங்கிய அரசியல் கட்சிகளின் அந்தஸ்து, செல்வாக்கு, அதிகாரம், முக்கியத்துவம் என்பவை மேலும் அதிகரிக்கக் காரணமாகியது. அதேசமயம், கட்சி அரசியல் கடுமையான விமர்சனங்களையும் சந்தித்து வந்துள்ளமை உண்மையாகும். கட்சி அரசியல் குழுமனப்பான்மையை வளர்த்துச் சமூகத்தைத் தூண்டித் தேசிய முன்னேற்றத்தைத் தடுப்பதாகவும், பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்குப் பதிலாகக் கட்சி அபிப்பிராயத்தை மக்கள் மீது திணிப்பதாகவும், தேசிய நோக்கையும், தேசிய நலனையும் புறக்கணித்து கட்சி நோக்கையும், கட்சி நலனையும் பேணமுற்படுவதாகவும், நாணயமானவர்களையும், நேர்மையானவர்களையும் அரசியலில் ஒதுக்கி சுயநலக்காரர்களையும், சூழ்ச்சிக்காரர்களையும் வளர்ப்பதாகவும், மக்களின் சுதந்திரமான சிந்தனையையும், செயலையும் தடுத்து மந்தைக் கூட்டங்களாக மாற்றுவதாகவும் கட்சி பற்றிய விமர்சனப்பட்டியல் பலவழிகளில் நீண்டு செல்கிறது.

சமூகவியலாளர்களான மொஸ்கா (1939), மிச்சல்ஸ் (1949), பரட்டோ (1969) போன்றோர் கட்சிகளை உயர்



படிப்பகம்

www.padippakam.com

குழாத்தினரின் நலன்களும், அபிலாசைகளும் பாதுகாத்து வளர்க்கும் அமைப்புக்களாகவே தெளிவுபடுத்தினார்கள். ரசலின் அபிப்பிராயத்தில் 'மிகவும் வெற்றிகரமான ஜனநாயக அரசியல்வாதி யாரெனில் ஜனநாயகத்தை அழித்துச் சர்வாதிகாரியாக வருவதில் வெற்றி பெற்றவரே ஆவார்' (ரசல், 1936:106). மார்க்கிச வாதிகளின்படி கட்சிமுறை ஜனநாயகம் என்பது சாமானிய மக்களை ஏமாற்றும் செப்பிடு வித்தையாகும் (லெனின் 1972 : 43) பேற்மன் (1956), அரண்ட் (1979), ஹொப்மார்ஸ் (1984) ஆகியோரின் ஆக்கங்கள் ஜனநாயகத்தின் மத்தியமயமாக்கப் பண்புகளைக் கடுமையாகச்சாடி உண்மையான மக்கள் பங்குபற்றலுக்கான அவசியத்தை வலியுறுத்துகின்றன.

கட்சிகள் பற்றிய பாதகமான அம்சங்கள் இருப்பது போல சாதகமான அம்சங்களும் சமமாக இருக்கின்றன சமூகத்தின் முரண்பட்ட குழுக்களை இணைப்பதிலும், சமூக நலன்களை இனங்கண்டு வெளிப்படுத்துவதிலும், சமூக நலன் பேணும் கொள்கைத் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துவதிலும், மக்களின் அரசியல் அறிவையும், அரசியல் பங்குபற்றலையும் அதிகரிக்க வைப்பதிலும், அரசாங்கக் கட்சியாகவோ அல்லது எதிர்க்கட்சியாகவோ இயங்கி ஜனநாயகத்துக்கு வலுவூட்டுவதிலும், நவீனத்துவம், அபிவிருத்தி, நாட்டு நிர்மாணம் போன்றவற்றுக்கான வாகனமாகவும் விளங்கியும் ஜனநாயகத்தில் கட்சிகள் ஆற்றும் பணியை மறுக்க முடியாது. குடியேற்றவாதத்துக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் கட்சிகளின் வரலாற்று ரீதியான பங்களிப்பை யாவரும் அறிவர்.

கட்சிகளின் சிறப்புக்கு உள்வாரியான காரணிகளைப் போல வெளிவாரியான காரணிகளும் அவசியமானவை என்பது உணரப்பட வேண்டியதாகும். நீண்ட ஜனநாயகப் பாரம்பரியமும், அபிவிருத்தியடைந்த பொருளாதாரமும், அரசியல் அறிவும், விழிப்புணர்வும் கொண்ட வாக்காளரும், சுதந்திரமான வெகுஜனச் சாதனங்களும், நல்ல அரசியல் யாப்பு, தேர்தல்விதிகள் போன்ற வெளிவாரியான அம்சங்களும் கட்சிகளைப் பண்படுத்தி வளர்க்கமுடியும். இப்பண்புகளைப் அல்லது இப்பண்புகளில் பெரும்பாலானவற்றைக் கொண்ட ஜனநாயக முறைகள் மேற்கு நாடுகளில் வெற்றி பெற்றிருப்பதைக் காணலாம்.

மூன்றாம் உலகநாடுகளில் கட்சிமுறை ஜனநாயகம் தேக்கம் அடைவதற்கு சில பொதுவான, வெளிப்படையான வரலாற்றுக் காரணங்கள் உண்டு. சுதந்திரத்தின் முன் பெரும்பாலான நாடுகளில் கட்சிகளின் வளர்ச்சி ஆரம்பக் கட்டத்திலேயே இருந்தது. சுதந்திரத்தையடுத்து வந்த தேர்தல்களைச் சந்திப்பதற்காக இந்நாடுகளில் உயர் குழாத்தினர் மேற்கு நாடுகளின் பாணியில் அவசரமாகக் கட்சிகளை உருவாக்கித் தமது சொந்த அமைப்புக்கள் போலவே நடத்தி வந்தனர். இத்தகைய செயற்கையான கட்சி அடிப்படை சனத்தொகையில் பெரும்பான்மையான கிராமப்புறமக்களை அரசியலில் அந்நியப்படுத்தி விட்டது. அத்துடன் உயர்குழாத்தினர் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்திப் பாதுகாக்கும் நோக்கில் சாமானிய மக்களை ஏமாற்றும் தந்திரோபாயங்களைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தபோது ஜனநாயக அரசியல் மேலும் சீரழியலாயிற்று.

சிலர் கட்சிகள் பற்றிய பொதுவான பல குறைபாடுகள் தனிக்கட்சி முறையில் மிக அரிது என்றும், ஒழுங்கு, கட்டுப்பாடு, திறமை, முன்னேற்றம் போன்றவை ஒப்பீட்டு ரீதியாகத் தனிக்கட்சி முறையில் அதிகம் என்றும் வாதிடுவர். (ஹன்ரிங்ரனும் மூரும், 1970) ஆனால், நாகரிக வளர்ச்சிக்கும், ஜனநாயக யுகத்துக்கும் மாறான தனிக்கட்சிமுறை நீண்ட ஓட்டத்தில் நிலைக்கக் கூடியதோ அல்லது நன்மையானதோ அன்று. இங்கு ஸ்கற்ச்நெய்டர்



படிப்பகம்

என்ற புகழ்பெற்ற அறிஞரின் கட்சி அரசாங்கம் என்ற நூலின் தொடக்கக் குறிப்பு நோக்கத்தக்கது (ஸ்கற்ச்நெய்டர், 1942: 1).

கட்சிகள் உருவாக்கிய நவீன
ஜனநாயகம் கட்சிகள் இல்லாமல்
இயங்க முடியாத ஒன்றாகும்.
... ... ... உண்மையில் எந்த
ஒரு அரசின் தாரதம்மியத்தையும்
சிறப்பாக வெளிப்படுத்துபவையாகக்
கட்சிகள் காணப்படுகின்றன. நவீன
அரசியல் கோட்பாட்டில் வேறுபட்
டமையும் ஜனநாயகத்துக்கும்,
சர்வாதிகாரத்துக்குமிடையிலான
பிரிதளத்தைக்
கட்சி அரசியலின் அடிப்படை
யில்தான் காணமுடியும் ஆகவே
கட்சிகள் என்பவை நவீன அரசாங்கங்களின்
உப அங்கமாகவன்றி
அதன் மையமாகவும், தீர்க்கமானதும்
ஆக்கபூர்வமானதுமான பங்கை
வகிப்பவையாகவும் உள்ளன.

அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளைப் பற்றிய மதிப்பீட்டைப் பூர்த்தி செய்ய முன்னர் தனிப்பட்ட முறையில் ஒரு சிறந்த ஜனநாயகக் கட்சிக்கு இருக்க வேண்டிய பண்புகளையும் கோடிட்டுக்காட்ட வேண்டும். அவை பின்வருமாறு :

(1) கட்சிக் கோட்பாடுகள் சுயநலமற்றவையாகவும், முற்போக்கானவையாகவும், தூரநோக்குடையவையாகவும் இருக்க வேண்டும்; தேசிய நலன் தொடர்பான அடிப்படை விடயங்களில் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை காணப்படல் வேண்டும்-

(2) ஜனநாயக முறையில் ஏற்படும் அமைதியான ஆட்சி மாற்றத்தில் கட்சிகள் உறுதியான நம்பிக்கை கொள்ளவேண்டும். வாக்குச் சீட்டை விட வலிமையானது ஜனநாயகத்தில் வேறு எதுவும் இல்லை.

(3) கீழிருந்து மேலாகவும், மேலிருந்து கீழாகவும் இருவழித் தொடர்பாடலும், சகல மட்டங்களிலும் மக்கள் பங்கு பற்றலும் கட்சி அமைப்பில் வலிமை பெறல் வேண்டும்; உட்கட்சி ஜனநாயகம் இல்லாமல் வெளிக்கட்சி ஜனநாயகம் சாத்தியப்படுவதில்லை.

(4) கட்சிக்காகத் தலைவர்களே அன்றித் தலைவர்களுக்காகக் கட்சிகள் என்ற நிலை தோன்ற இடமளிக்கக்கூடாது. தனிநபர் ஆளுமை வலுப்படுதல் கட்சியைத் தவறான வழியில் திசை திருப்பிவிடும்,

(5) அர்த்தமுள்ளதும் ஆக்கபூர்வமானதுமான கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைப்பதன் மூலம் உண்மையான பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கவும், பின்னர் அதை மதிக்கவும் கட்சிகள் முற்படல் வேண்டும்; ஆரோக்கியமான ஜனநாயகத்துக்கு அவசியமான அறிவுபூர்வமாகச் சிந்தித்துத் தொழிற்பட வல்ல பிரசைகளை உருவாக்கும் பணியில் கட்சிகள் ஓயக்கூடாது.

(6) கட்சி விவகாரங்கள் அளவுக்கு மீறியும், அநாவசியமாகவும் அந்தரங்கமாக இருக்கக்கூடாது; தமது உண்மையான முகத்தைக் காட்டப் பின்னிற்கும் அல்லது மறுக்கும் அல்லது பயப்படும் கட்சிகளை மக்கள் மதிப்பதில்லை.

(7) நாட்டின் அரசியல் திட்டமும், தேர்தல் விதிகளும், நீதித்துறையும் கட்சிகளைக் கட்டுப்படுத்திக் கண்காணித்து நெறிப்படுத்தும் பாங்கினைப் பெற்றிருத்தல் வேண்டும். உள்வாரியான அம்சங்கள் போல வெளிவாரியரன சில அம்சங்களும் கட்சிமுறை ஜனநாயகத்துக்குப் பங்களிப்புச் செய்ய முடியும்.

www.padippakam.com

(8) இலட்சிய ஜனநாயகத்துக்கு இருகட்சி முறையின் வளர்ச்சி இன்றியமையாதது; பல கட்சி முறை காணப்பட்டாலும் கட்சிகளின் கூட்டமைப்பும், மக்களின் வாக்களிப்பு முறையும் இரு கட்சிமுறைப் போக்கை ஏற்படுத்தல் வேண்டும்.

கட்சிமுறை ஜனநாயகத்தின் குறைபாடுகளைப் பெருமளவுக்குக் களைந்த ஒரு முன்னுதாரணமான நாடாகச் சுவிற்சர்லாந்து விளங்குகிறது. சுவிற்சர்லாந்து பன்மைச் சமூக அமைப்பையும், பல கட்சி முறையையும் பெற்றிருப்பினும் கட்சிகளுக்கிடையிலான வேறுபாடுகளும், முழுநேர அரசியல் வாதிகளும் அருகிக் காணப்படுதலும்; சிறிய தேர்தல் தொகுதிகள் கல்வியறிவுமிக்க சுவிஸ் பிரசைகள் கட்சியடிப்படையில் அன்றித் திறமையடிப்படையில் அபேட்சகர்களைத் தெரிய வாய்ப்பளிப்பதும்; நிர்வாகத்துறையில் அமைப்பும் இயக்கமும் தேசிய நலனைப் பேணும் விதத்தில் காணப்படுதலும்; யாவற்றுக்கும் மேலாக நேரடி ஜனநாயக வழிமுறைகள் மூலம் மக்களின் அரசியல் பங்குபற்றல் இபரிமிதமாக அதிகரித்துள்ளமையும் சுவிற்சர்லாந்தின் ஜனநாயகத்தைத் தனித்துவமும், சிறப்பும் மிக்கதாக மாறியுள்ளன ( Giord, 1964 ).

## முடிவுரை

இதுகாறும் அரசியல் அபிவிருத்தியில் கட்சிகளை இனங்கண்டு, வகைப்படுத்தி, மதிப்பிட்ட நாம் முடிவாகச் சில பொதுவுண்மைகளைச் சுருக்கமாக முன்வைக்கலாம் அரசியல் கட்சிகளும், அவை தொடர்பான ஆய்வுகளும் பெருமளவுக்கு 20-ம் நூற்றாண்டின் பிரத்தியட்சங்களேயாகும் கட்சிகள் பற்றிய வரைவிலக்கணங்களும், எடுகோள்களும், எண்ணக்கருக்களும், கோட்பாடுகளும் பல்கிப் பெருகிக் காணப்படினும் அவை பூரணமற்றவையாகவும், சர்ச்சைக்குரியவையாகவுமே உள்ளன. இருப்பினும், நவீன அரசியல் முறைகளுடன் இரண்டறக் கலந்துள்ள கட்சிகள் பற்றிய ஆய்வானது அரசியல் முறைகளைத் துல்லியமாக விளங்கவும், அரசியல் யதார்த்தங்கள் பலவற்றை வெளிக்கொணரவும் வாய்ப்பளிக்கிறது. எல்லா அரசியல் முறைகளிலும் கட்சிகள் காணப்படினும் ஜனநாயக அரசியல் முறைகளிலேயே அவை பெருமளவுக்கு மக்கள் அமைப்புக்களாக வளர்ந்துள்ளன. அதிலும் குறிப்பாக, இருகட்சிகளை அல்லது இருகட்சிப் போக்கைக் கொண்ட அரசியல் முறைகளிலேயே ஜனநாயகம் வளப்பம் பெற்றுள்ளது. கட்சிகளின் ஆரம்ப காலவர்க்க அடிப்படைகள் காலவோட்டத்தில் பலவீனமடைந்தோ அல்லது மறைந்தோ தேசிய அடிப்படைகள் உறுதிபெற்று வந்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

கட்சிகளால் சில சமூகச் சீரழிவுகள் ஏற்படினும் நவீன அரசாங்கங்களின் சுழல் மையமாகக் கட்சிகளே உள்ளன என்பது வெளிப்படையான உண்மையாகும் இதனால் கட்சிகளை ஒட்டுமொத்தமாக நிராகரிக்காமல் அவற்றை நியாயப்படுத்த முற்படுவதே பொருத்தமாகத் தெரிகிறது. தனிநபர் உரிமைகளுக்கும், சுதந்திரங்களுக்கும் அதிக முக்கியத்துவம் வழங்கும் தாராண்மைவாத சிந்தனையாளர்கள் அரசினை ஒரு அவசியமான தீங்காகவே கருதுகின்றனர். அவ்வாறாயின், அவ்வரசின் நடைமுறை அம்சமாகிய அரசாங்கத்தின் அடிப்படையாக விளங்கும் கட்சிகளையும் ஒரு அவசியமான தீங்காகவே கருத வேண்டியுள்ளது. ஆகக்குறைந்த தீங்குகள் கொண்டதாகக் கருதப்படும் ஜனநாயக அரசாங்கமுறைக்கு, மாற்று வழிகள் இல்லாத நிலையில், அவசியமான ஒரு தீங்காகக் கட்சிகளும் அமைகின்றன எனலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# உசாத்துணை:


Alexander Herbert (1972), Money in Politics Washington, D. C. Public Affairs Press.

Arendt Hannah (1979). On Revolution. London: Penguin Books.

Ashraf Ali and Sharma L. N, (1992), Political Sociology; A New Grammar of Politics, Hyderabad: Universities Press.

Ranney Austin (1968), "The Concept of Party" in Garceau Olivered. Political Research and Political Theory, Cambridge Mass Havard University Press.

Ball, Alan R. (1969), Modern Politics and Government, London: Macmillan Press Ltd.

Bushan Vidya (1988), Comparative Politics, New Delhi: Atlantic Publishers.

Blondel Jean and Herman Valentine (1969), An Introduction to Comparative Government London: Weiden Feld and Nicolson.

……… ………… (1972), Workbook for Comparative Politics, Ibid.

Curtis Michael (1968), Comparative Government and Politics, New York: Harper and Row Publishers.

Duverger Maurice (1954). Political Parties Their Organization and Activities in the Modern State, trans., New York: John Wiley and Sons.

……… ………… (1972) Party Politics and Pressure Groups trans., London: Nelson and Sons.

Epstein, Leon D. (1967), Political Parties in Western Democracies, New York: Frederick A. Praeger Inc.,

Finer Herman (1963), The Theory and Practice of Modern Government, London: Methuen and Company Ltd.

Friedrich, Carl. J. and Brzezinski, Zbigniew K. (1965), Totalitarian Dictatorship and Autocracy, Cambridge Mass Harvard University Press.




படிப்பகம்

www.padippakam.com

Girod Roger (1964) ''Switzerland'' in Allardt Erik and Littunen Yrjo eds , Changes, Ideologies and Party Systems, Turku Westermarck Society.

Gregor, James A. (1969), The Ideology of Fascism, New York : The Free Press.

Hennessy Bernard (1968), ''On the Study of Party Organization'' in Croty William D. ed., Approaches to the Study of Party Organization, Boston : Bacon Press.

Henning Stanely and Pinder Jon (1969), ed., European Political Parties, London: George Allen and Unwin Ltd.

Herbamas J. (1984) The Theory of Communicative Action, VOL. 1, trans , Boston: Bacon Press.

Huntington, Samuel P. and Moore, Clement H. (1970), Authoritarian Politics in Modern Society: The Dynamics of One Party Systems, ed., New York: Basic Books, Inc.

Keefe, William J. (1972), Parties Politics and Public Policy in America, New York : Holt, Rinehart and Winston Inc.

Key, V. O. (1949). Southern Politicsin State and Nation, New York: Alfred A. Knopf.

......... ... ... .. (1964) Political Parties and Pressure Groups, 5th edition, New York: Thomas Y. Crowell Company.

King Anthony ( 1969 ) 'Political Parties in Western Democracies: Some Sceptical Reflections'', Polity, 1.

Kirchheimer Otto (1966) ''Germany: The Vanishing Opposition'' in Political Oppositions in Western Democracies, Dahl, Robert. A. ed., New Haven : Yale University Press.

Lenin, V. I. The State and Revolution (1972), Moscow: Progress Publishers.

McDonald, Neil A. (1955), The Study of Political Parties, New York: Random House, Inc.

Michels Robert ( 1949 ), Political Parties: A Sociological Study of Oligarchical Tendencies, trans., first published in 1915, Illinois : Free Press.



படிப்பகம்

www.padippakam.com

Mosca Gatetano (1939). The Ruling Class trans., New York: MacGraw Hill

Neumand Sigmund (1956). Modern Political Parties ed., Chicago: Chicago University Press.

Ostrogorski M. Y. (1964), Democracy and the Organization of Political Parties 2 VOLS. Chicago: Quadrangle.

Palombara, Joseph La and Weiner Myron (1966). Political Parties and Political Development, eds., Princeton, New Jersy: Princeton University Press.

Pareto Vilfredo (1963). The Mind and Society: A Treatise on General Sociology, trans., New York: Harcourt, Brace and Company.

Pateman Carole (1970). Participation and Democratic Theory, Cambridge University Press.

Rose Richard and Heidenheimer, Arnold J. (1963), eds., Journal of Politics, 25.

Russell Betrand (1938), Power: A New Social Analysis, London: Allen and Unwin

Sartori Giovanni (1954). Parties and Party System: A Framework for Anaiysis, VOL 1, New York: Cambridge University Press.

... ... ... ... (1965) Democratic, Theory, New York: Frederick A. Praeger, Inc.

Schattschneider E. E. (1942) Party Government, New York: Holt, Rinehart and Winston

Schumpeter I. A (1950), Capitalism Socialism and Democracy, New York: Harper and Row Publishers.

Wiatr Jerzy J. (1964) "One Party Systems: The Concept and Issue for Comparative Studies" in Allarclt Erik and Littunen Yrjo eds., Changes, Ideologies and Party Systems, Turku: Westermarck Society

... ... ... (1969). "The Hegemonic Party System in Poland" in Allardt Erik and Rokkan Stein eds., Studies in Political Sociology New York: The Free Press



படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி vi இதழ் iii – 1994

# செங்கை ஆழியானின் நாவல்களில் வரும் உரையாடல்களின் மொழி பற்றிய சில குறிப்புகள்

ம. இரகுநாதன்

ஆக்க இலக்கியமொன்றின் மொழி நடை பற்றி ஆய்வு செய்யும் போது ஆசிரியரின் கூற்றாக வருகின்ற மொழிநடை, பாத்திரங்களின் கூற்றாக வருகின்ற மொழிநடை எனப் பகுத்து ஆய்வு செய்வதே முறையாகும். இங்கு பாத்திரங்களின் உரையாடற் பகுதிகளில் அமைந்துள்ள மொழிநடையே ஆய்வு செய்யப்படுகின்றது.

ஈழத்துத் தமிழ் நாவலுலகில் பலராலும் அறியப்பட்டவரும் ஈழத்து நாவலாசிரியர்களுள் எண்ணிக்கை அடிப்படையில் அதிக நாவல்களை எழுதியவர்களில் ஒருவரும், ஈழத்தில் ஒரு தலைசிறந்த நாவலை எழுதக்கூடியவர் என்று பலரும் எதிர் பார்க்குமளவுக்கு முயற்சியும் திறமையும் உடையவரும் கந்தையா குணராசா என்ற இயற்பெயருடைய செங்கை ஆழியானே என்றால் அது மிகையாகாது. அத்தகைய படைப்பாளியொருவரின் வாடைக்காற்று, காட்டாறு ஆகிய இரு நாவல்கள் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

இவ்விரு நாவல்களையும் தெரிவுசெய்வதற்கு முக்கியமான சில காரணங்களைக் கூறிக்கொள்ளலாம். தனக்கு மிகவும் திருப்தியானதும் தனது பெயரை நிலை பெறவைத்ததும் வாடைக்காற்று நாவல் தான் என்று கூறும் செங்கை ஆழியான் ''ஈழத்து நாவலிலக்கிய வரலாற்றில் வாடைக்காற்றைப் போலப் பரபரப்பையும் பல்வேறு தர விமர்சனங்களையும் பெற்ற நாவல் வேறு எதுவும் இல்லை'' என்றும் கூறுகின்றார்.[1] எனவே வாடைக் காற்றினை விடுத்து செங்கை ஆழியானை ஆய்வு செய்வது பொருந்தாது. இவ்வாறே செங்கை ஆழியானின் படைப்புக்களில் காட்டாறும் முக்கியமானது. அவரின் வார்த்தைகளில் சொன்னால் ''ஈழத்திலேயே மிகப் பெரிய பரிசினைப் பெற்ற நாவல் இது''[2] எனவே காட்டாற்றினை விடுத்துச் செங்கை ஆழியானின் நாவல்களை ஆய்வு செய்வதும் பொருத்தமாக இருக்காது இத்தகைய காரணங்களே இச் சிறிய ஆய்வில் வாடைக் காற்றினையும் காட்டாற்றினையும் தெரிவு செய்ய ஏதுக்களாக அமைந்தன.

நெடுந்தீவுக் கடற்கரைக்கு, வாடைக் காற்றின் சாதகநிலையைப் பயன்படுத்தி இடம்பெயர்ந்து வந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோரின் வாழ்க்கையை எடுத்துக் காட்டுவது வாடைக்காற்று. காடு



படிப்பகம்

www.padippakam.com

களைக் கழனிகளாக்கி வனவிலங்குகளோடு போராடி வளம் பெருக்கும் விவசாயக் கிராமமொன்றைச் சித்திரிப்பது காட்டாறு. விவசாயக் கிராம மக்கள் வனவிலங்கு களோடு போராடுவதால் மட்டுமன்றி முதலாளி வர்க்கத்தால் சுரண்டப்படுவ தாலும் துன்பப்படுவது இதில் எடுத்துக் காட்டப்படுகிறது.

இவ்விரு நாவல்களும் இருவேறுபட்ட களங்களை மையமாகக் கொண்டுள்ளன. பாத்திரங்களும் அவர்களது பிரச்சினை களும் வெவ்வேறானவை. பாத்திரங்களின் மொழி, அவர்கள் வாழும் பிரதேசம், சமூகநிலை, கல்விநிலை, பதவிநிலை முதலிய பல காரணங்களால் தீர்மானிக்கப் படலாம். குறிப்பாக வன்னிப்பிரதேசத் திலே வாழுகின்ற சாதாரண விவசாயி அல்லது கூலித்தொழிலாளி பேசுகின்ற மொழி அப்பிரதேச மொழியாகவே இருக்க வேண்டும். இதேபாத்திரம் யாழ்ப்பாண மத்தியதர வர்க்கப் பாத்திரத்தின் மொழி யில் பேசுவது இயல்புக்கு மாறானதாகி விடும். இவ்வாறே பேச்சு மொழியில் ஒரு சீர்மை காணப்படுவதும் அவசியமாகும். ஒரே பாத்திரம் ஒரு சொல்லையே வெவ் வேறு விதமாகப் பேசுவது ஆசிரியரின் குறையினையே எடுத்துக் காட்டும். அடுத்து, நாம் எழுதுவது போலப் பேசுவ தில்லை; இவ்வாறே பேசுவது போல எழுதுவதுமில்லை இதனாலேயே எம்மிடம் எழுத்து வழக்கு, பேச்சுவழக்கு என இரு வகை வழக்குகள் காணப்படுகின்றன. எனவே பேச்சு மொழியில் எழுத்துமொழி வந்து கலப்பது பற்றி மிகவும் அவதான மாக இருக்க வேண்டும். பேசுவது, குறித்த ஒரு பாத்திரம் என்பதை ஆசிரியர் எந்த ஒரு நிமிடத்திலும் மறந்துவிடக்கூடாது.

இச்சிறிய விளக்கத்தோடு நாம் ஆய் வுக்கு எடுத்துக்கொண்ட வாடைக்காற்று, காட்டாறு ஆகிய இரு நாவல்களையும் நோக்குவோம்.

பேச்சு வழக்கிலே சில இடங்களில் ன்ற் என்ற மெய்ம்மயக்கம் ண்ட் என மாறிவருவதுண்டு. நாவலில் பாத்திரங்கள் இத்தகைய சொற்களை இருவிதமாகவும் பேசுகின்றன. எடுத்துக்காட்டாகச் சில:

'' வேறை எப்படி அம்மா இருக்கிறது? இந்த வீட்டில இருந்து
என்றைக்கு வெளியில போனனோ அன்றைக்கே நான் மூன்றாம்
மனிசியாயிட்டன்... இண்டைக்கு மூன்றுபேர் அப்புக்குப் பாரமா இருக்கிறம்
சாகலாம் என்றால்கூட மனம் வரவில்லையே அம்மா''

(காட்டாறு: ப. 29)

இது காட்டாறு நாவலில் வரும் வீரசிங்கத்தின் மனைவி செங்கமலம் தனது தாய்க்குக் கூறியது. செங்கமலத்தின் பேச் சில் என்றைக்கு, அன்றைக்கே, மூன்றாம், என்றால் என்ற இடங்களிலெல்லாம் வந்த னகரமெய் இண்டைக்கு, என்னும்போது ணகர மெய்யாகி பேச்சுமொழியின் இயல்பைக் காட்டிவிடுகின்றது. ஏனையவை எழுத்து மொழியின் தன்மையைக் காட்டி ஆசிரியரின் கவனக் குறைவை வெளிப் படுத்திவிடுகின்றன. இவ்வாறே,

'' நல்ல மருந்துகளை ஓடலி எடுத்து வித்திடுவான் எண்டு மேசை
லாச்சிக்குள்ளை பூட்டி வைச்சு காசுக்கு இலவச வைத்தியம்
செய்கிறவர்......தமிழ்ப் பகுதியெண்டு நல்ல திறமான
மருந்துகள் தட்டுப்பாடில்லாமல் வாறதில்லை என்று முதலைக்
கண்ணீர் வடிக்கிற அந்த அப்போதிக்கரி வாற மருந்துகளையெல்லாம்
சேகரித்து வைச்சிருக்கிறார்.....

(காட்டாறு: ப. 105)



படிப்பகம்

www.padippakam.com

கூலித் தொழிலாளியாக வேலை செய்யும் ஓரளவு படித்த இளைஞனான சந்தனத்தின் மேற்படி பேச்சில் வித்திடு வான் எண்டு, தமிழ்ப்பகுதியெண்டு எனும் போது வந்த ண்ட் என்ற மெய்கள் வாறதில்லை என்று, எனும்பேரது ன்ற் ஆகி எழுத்து மொழியின் இயல்பைக் காட்டிவிடுகிறது.

இவ்வாறான பல உதாரணங்களை இந்த நாவலிலே காணலாம். இத்தகைய தன்மையை வாடைக்காற்று நாவலிலும் காணலாம்.

''நீ ஒண்டும் செய்யாதை ..'' - பொன்னுக் கிழவர்
(வாடைக்காற்று: ப. 4)

''நீ ஒன்றையும் மனதிலே வைத்து கவலைப்படாதை'' – நாகம்மா
(வாடைக்காற்று: ப. 7)

''இண்டைக்கு அப்புவிடம் ஏச்சுத்தான் கேட்கவேண்டும்'' - நாகம்மா
(வாடைக்காற்று: ப. 5)

'' ...இவனுக்கு இன்றைக்கும் பெரிய தோல்விதான்'' - விருத்தாசலம்
(வாடைக்காற்று: ப. 44)

பொன்னுக்கிழவரிடம் ஒண்டும் என்பதில் வந்த ண்ட் மெய்ம்மயக்கம், நாகம்மா ஒன்றையும் என்னும்போது ன்ற் ஆக மாறி விடுகின்றது. இவ்வாறே நாகம்மாவிடம் இண்டைக்கு என்பதில் வந்த ண்ட் மெய்ம் மயக்கம் விருத்தாசலம் இன்றைக்கும் எனும் போது ன்ற் ஆகமாறிவிடுகின்றது இதனால் பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் கலந்து மொழியில் சீர்மை கெட்டுவிடுகின்றது.

பார் என்ற வினையடியிலுள்ள ரகர மெய் வல்லினம் வந்து புணரும்போது பேச்சு வழக்கில் கெட்டு வருவதும் உண்டு. இவ்வாறு ரகரமெய் கெட்டு வருகின்ற சொற்கள் இருவிதமாகவும் பயன்படுத்தப் படுகின்றன. எடுத்துக்காட்டாக:

'' அங்கை பார்த்தியே ... '' - கணபதி (காட்டாறு: ப. 2)

'' அதுதான் நானும் பார்க்கிறன்'' - கணபதி (காட்டாறு: ப. 4)

'' எளியபிறப்பு நீ அடிச்சிட்டாய் ... ஒன்னைப் பார்த்துக்சொள்ளுறன் .....
நீங்கள் இருக்கிற கடுப்பையும் பாத்திடுறன். சந்தனத்தின்ர காட்டில
வேலைக்குப் போற கடுப்பு அதையும் பாக்கிறன்'' - சியாமன்
(காட்டாறு: ப. 100)

கணபதியிடம் பார்த்தியே, பார்க்கிறன் என ரகரமெய் கெடாமல் வந்து வழங்கு வதைக் காணமுடிகிறது. ஆனால் சியா மனின் பேச்சில் பார்த்துக் கொள்ளுறன் எனும்போது வந்த ரகரமெய் பாத்திடுறன் பாக்கிறன் எனும்போது ஓடிஒளித்து பேச்சு மொழியாகி விடுகின்றது.

வாடைக்காற்றில் மரியதாசின் கூற்றில்,

'' ...நான் பாத்துக்கொண்டிருக்க மாட்டேன்'' (ப. 37)

எனவந்த பேச்சுமொழி பேதுருவிடம்,

''அதையும் தான் பார்ப்போம்'' (ப. 37)

எனும்போது மாறிவிடுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

பேச்சுமொழியிலே இறுதியில் வருகின்ற ஐகாரம் சில இடங்களில் கெடுவதுண்டு. உதாரணமாக: என்ரை எனும் பேச்சு மொழி ஐகாரம் கெட்டு என்ர எனவும் எங்கடை என்பது எங்கட எனவும் வருவதுண்டு. இவ்வாறு ஐகாரம் கெட்டு வரும் மொழியும் கெடாதுவரும் மொழியும் பேச்சு வழக்கிலே கலந்து வரும்போது மொழியில் சீர்மை கெட்டுவிடுகிறது. எடுத்துக் காட்டாக;

''...அங்கை பார்த்தியே, ஆத்துக்கு இறங்கிற வழியை'' - கணபதி
(காட்டாறு: ப. 2)

''அங்க பார்த்தியே அதின்ர கூடு '' - தாமரைக்கண்டு
(காட்டாறு: ப. 25)

''கணபதி... அங்கை இருந்து வெடி வைச்சுக் குறி தப்பியிருந்தால் இரண்டுபேரும் செத்திருப்பம்... இங்க என்டால் நீ மட்டுமாவது தப்பியிருப்பாய் '' - தாமரைக்கண்டு (காட்டாறு: ப. 9)

இவற்றில் கணபதியிடம் அங்கை என்பதில் வந்த ஐகாரம் தாமரைக்கண்டுவிடம் அங்க, அதின்ர, இங்க என்பவற்றில் கெட்டுவிடுகிறது. தாமரைக்கண்டு ஒரே தடைவையிலேயே அங்கை, இங்க என்று ஐகாரம் சேர்த்தும் சேராமலும் பேசுகின்றார். இது ஆசிரியரின் கவனக் குறைவையே எடுத்துக்காட்டுகிறது.

வாடைக்காற்றில்,

''ஐயோ .. என்ர மகனைப் பிடிக்கிறான்களே '' (ப.111)

என்று ஒப்பாரி வைத்த திரேசம்மாமறுகணம்,

''ஐயோ .. என்ரை பிள்ளை சோலி சுரட்டுக்குப் போகாதது விதானையார்''
(ப. 111)

எனும்போது என்ரை என ஐகாரம் சேர்ந்துவிடுகிறது. இத்தகைய குழப்பங்களை நாவலில் பல இடங்களில் காணமுடிகிறது.

வாடைக்காற்றில் சில இடங்களில் ஐகாரத்திற்குப் பதிலாக ஏகாரம் சேர்த்தும் பயன்படுத்தப்படுகின்றது.

''மச்சானா? அது எங்கேயாவது காட்டிலே முயலைத் தேடித் திரியும் .. ''
- நாகம்மா (ப. 18

''இங்கேயும் ஆட்கள் பிடிக்க வேண்டும்'' - மரியதாஸ் (ப. 20)

''அதை சும்மா அங்கே வைதம்பி'' - சண்முகம் (ப. 23)

இங்கு எங்கேயாவது, காட்டிலே, இங்கேயும், அங்கே என்பவற்றில் ஏகாரம் வருகிறது. இது பேச்சு வழக்கிற்கு உடன்பாடானதாக இல்லை. இதே பாத்திரங்கள் ஏகாரமின்றி ஐகாரத்துடனும் பேசுகின்றன.

'' அவர் நெடுங்காலம் இங்கை பழகினதாலே இங்கை இருக்கிறவங்கள் அவரோடை வேலைக்குப் போகத்தான் விரும்புவினம்'' - பொன்னுக்கிழவன்

(வாடைக்காற்று: ப. 20)



படிப்பகம்

இங்கு இங்கை என்பதில் வரும் ஐகாரம் பழகினதாலே எனும்போது ஏகாரமாகி விடுகிறது.

'' அங்க பார்த்தியே .. அதின்ர கூடு '' - தாமரைக்கண்டு
(காட்டாறு: ப. 25)

எனும்போது அங்க என வந்து பேச்சு வழக்காகிறது. எனவே இங்கும் மொழியில் சீர்மை பேணப்படவில்லை. இவ்வாறே,

''செமியோன்தான் வழமையாக இதில வாடி போடுறதாம்... ''
- இராமசாமி (வாடைக்காற்று: ப. 13)

'மரியதாஸ் இதிலே கரைவலை போடட்டும்.....
பிழைக்க வந்த இடத்தில் வீண் சண்டை வேண்டாம்'
- யூசப் சம்மாட்டியார் (வாடைக்காற்று: ப. 38)

மேற்படி உரையாடல்களில் இதில, இதிலே, இடத்தில் என லகரமெய் உயிருடனும் னித்தும் வருகின்றது. காட்டாற்றிலும் இத்தன்மையைக் காணலாம்.

' ராத்திரி இதில யானையள் நின்றிருக்குது .'
— தாமரைக்கண்டு (காட்டாறு: ப. 2)

' நீ வெட்டின புலவுகளுக்கு இன்னமும் பேமிற் தரவில்லை.
கொலனியில உனக்குக் காணி தரவில்லை'
– கணபதி (காட்டாறு: ப. 199)

' அப்ப ராத்திரி சிறாம்பியில் இருந்துகொண்டு வைச்ச வெடி தப்பிவிட்டதே''
– கணபதி (காட்டாறு: ப. 18)

மேற்படி உரையாடல் பகுதிகளில் இதில, தரவில்லை, கொலனியில், தரவில்ல, சிறாம்பியில் ஆகிய இடங்களில் லகரம் மெய்யாகவும், உயிர்மெய்யாகவும் வருகின்றது. ஒரே பாத்திரமே தரவில்லை, தரவில்ல என இருவகையாகவும் பேசுவதைக் காண முடிகிறது.

அடுத்து, அவங்கள், இவங்கள் முதலிய சொற்களை அவன்கள் இவன்கள் என்றும் வழங்குகின்றார். இவை இருவிதமாகவும் வருவது குழப்பமாக உள்ளது.

' அவங்கள் பண்க்காரர் தாங்களே பங்கிட்டுக் கொள்வாங்கள்
தலைமைப் பதவிகள் எல்லாம் அவங்களுக்குத்தானே .. இப்ப புதிதா
ஏதோ விவசாய சேவை நிலையம் என்று திறந்திருக்கிறான்களே'
- தாமரைக்கண்டு ( காட்டாறு : ப. 4)

தாமரைக்கண்டுவின் மேற்படி பேச்சில் அவங்கள், கொள்வாங்களே, அவங்களுக்கு எனும்போது வந்த ஙகரமெய் திறந்திருக்கிறான்கள் எனும்போது னகர மெய்யாகி விடுகிறது.

' ஊரைக் கெடுக்கிறான்கள் ..' (காட்டாறு : ப. 116)

என்ற விதானையார் அதே மூச்சில்,

' இவங்கள் பதுக்கி வைச்சிருக்கிறான்கள்' (ப. 166)

எனும்போது ஙகரமெய்யும் னகரமெய்யும் கலந்து வந்து குழப்பத்தை ஏற்படுத்துகின்றன.

வாடைக்காற்றில்,

'' ஐயோ, என்ர மகனைப் பிடிக்கிறான்களே '' (ப. 111)

'' ஆரும் பார்க்க மாட்டான்கள் '' (ப. 122)

எனவரும் உரையாடல்களில் வந்த னகர மெய்,

'' அவங்கள் இப்பதான் கரைவலையை வலிக்கத் தொடங்கி இருக்காங்கள் '' (ப. 106)

எனும்போது ஙகரமெய்யாகி விடுகிறது.

அடுத்து, ஒன்று, இரண்டு, மூன்று, ஐந்து ஆகிய எண்ணுப் பெயர்கள் பேச்சு மொழியில் முறையே ஒண்டு, ரெண்டு, மூண்டு, அஞ்சு என வருவதே வழக்கம். ஆனால் இந்நாவல்களில் இத்தகைய சொற்கள் இருவிதமாகவும் கையாளப்படுகின்றன.

'' நீர் எனக்கு முயல் ஒன்று பிடித்துக் கறிக்குத் தாறேன் என்று சொல்லி எத்தனை நாளாகுது '' - சண்முகம் (வாடைக்காற்று: ப. 23)

'' ஒன்றுக்கும் கவலைப்படாதே பிலோ '' - நாகம்மா (வாடைக்காற்று: ப. 30)

'' நீ ஒண்டும் செய்யாதை '' – பொன்னுக்கிழவர் (வாடைக்காற்று: ப. 4)

'' அவங்கள் ரெண்டு பேரும் உழைக்கிறதெல்லாவத்தையும் சாராயம் குடித்து அழிக்கிறாங்கள் '' - திரேசம்மா (வாடைக்காற்று: ப. 27)

'' இன்னும் இரண்டு மூன்று நாளைக்குத்தானே இந்தக் கஷ்டம் '' - பிலோமினா (வாடைக்காற்று: ப. 27)

'' ஒவ்வொருவருக்கும் நாள் கூலியாக ஐந்து ரூபா தருவேன் '' - மரியதாஸ் (வாடைக்காற்று: ப. 20)

'' ஐஞ்சு வரியத்துக்கு முந்தி... '' – தாமரைக்கண்டு (காட்டாறு: ப.19)

'' ரெண்டு மாதத்துக்கு முந்தி '' - தாமரைக்கண்டு (காட்டாறு: ப. 3)

'' இரண்டு பேரும் செத்திருப்பம் '' - தாமரைக்கண்டு (காட்டாறு: ப. 9)

'' மூன்று மாதத்தில தந்திடுவன் '' - இரத்தினம் (காட்டாறு: ப. 62)

'' மூண்டு வரியம்தான் இருக்குது .. '' - ஸ்ரீவரதசுந்தரர் (காட்டாறு: ப. 113)

'' பனை நின்ற மடுவிலிருந்து கடலாஞ்சி ஐந்து கட்டைதான் '' - தாமரைக்கண்டு (காட்டாறு: ப.57)

'' விவசாயப் பெருக்கக் குழுவிற்கு ஒப்பந்தப்படி ஐஞ்சு வீதம் நேற்றே கட்டிட்டனே ? '' – கந்தசாமி (காட்டாறு: ப. 96)

மேற்படி உரையாடல் பகுதிகளில் சாதாரண கூலித்தொழிலாளி, கடற்தொழிலாளி, படிக்காத சாதாரண பெண்கள், ஓரளவு படித்த விதானையார் முதலிய அனைத்துப் பாத்திரங்களும் எழுதுவதுபோலவும் பேசுவது போலவுமே உரையாடுகின்றன. இதனால் உரையாடல்களில் பேச்சு மொழி குழம்பிவிடுகின்றது.

இவ்வாறே மேலும் பல சொற்களில் இத்தகைய இருவேறுபட்ட நிலையைக் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக:

www.padippakam.com

| | | |
|---|---|---|
| ஆட்கள் | — | வாடைக்காற்று ப: 2, 12, 20, 31 |
| கையாட்கள் | — | காட்டாறு: ப. 38 |
| ஆக்கள் | — | வாடைக்காற்று: ப. 35, 45, 75<br>காட்டாறு: ப. 4, 124 |
| யோசனை | — | காட்டாறு: ப. 36 |
| யோசினை | - | காட்டாறு: ப. 24 |
| நியாயம் | — | காட்டாறு: ப. 38, 173 |
| ஞாயம் | — | காட்டாறு: ப. 3, 156<br>வாடைக்காற்று: ப. 37 |
| வேளாண்மை | — | காட்டாறு: ப. 180, 182 |
| வெள்ளாண்மை | — | காட்டாறு: ப. 3, 5, 181 |
| பன்றி | — | காட்டாறு: ப. 8, 9 |
| பண்டி | — | காட்டாறு: ப. 182 |
| ஆனை | — | காட்டாறு: ப. 117, 204 |
| யானை | — | காட்டாறு: ப. 2, 39, 182 |
| பற்றை | — | காட்டாறு: ப. 2, 3 |
| பத்தை | — | காட்டாறு: ப. 165 |

தொகுத்து நோக்கும்போது பாத்திரங்களின் உரையாடல்களை அமைத்தபோது பிரதேச வழக்கினையோ பாத்திரங்களின் சமூக கல்வித் தரத்தினையோ தனிக் கவனத்திற்கொண்டு மொழி நடையை அமைத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. பேச்சுமொழி எழுத்துமொழியுடன் கலந்து வருவதால் மொழியில் சீர்மை பேணப் படவில்லை. இந்த நிலை நாவலில் சமூக மெய்ம்மையைச் சரியாக இனங்கண்டு கொள்வதற்குத் தடையாக உள்ளது. பாத்திரங்கள் தமது சொந்த மொழியிலே பேசுவதே சிறந்ததாகும். நுணுக்கமான பிரதேச வேறுபாடுகளை நீக்கினாலும் எழுத்து மொழியுடன் கலந்து குழப்பத்தை ஏற்படுத்தக்கூடாது. இத்தகைய மொழிக் குழப்பங்களை ஆசிரியரின் நாவல்களில் பரவலாகக் காணலாம். இங்கு எடுத்துக் காட்டாக ஒருசிலவற்றையே காட்டினோம். இந்த நிலை மாறும்போது பாத்திரங்களின் பேச்சிலே யதார்த்த நிலை பேணப் படும். இதனால் பாத்திரங்களைப் பாத்திரங்களாகவே தரிசிக்கலாம். இரு வேறு பட்ட நிலையில் பாதி பாத்திரமும் பாதி ஆசிரியருமாகவே காணமுடியும். இத்தகைய நிலை நாவலுக்குச் சிறப்பைத் தராது

இங்கு நாம் செங்கை ஆழியானை ஆதாரமாகக்கொண்டு சிலகருத்துக்களைக் கூறியிருந்தாலும், இங்கு காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் பொதுவாகவே ஈழத்துத் தமிழ் நாவலாசிரியர்கள் பலரிடமும் காணப்படுவனவே.[3] செங்கை ஆழியானை வகைமாதிரிக்காக எடுத்துக்காட்டினோமே தவிர அவரின் நாவல்களைக் குறைகூறும் நோக்கோடு இக்கட்டுரை எழுதப்பட்ட தல்ல என்பதையும் மனங்கொள்ளவது அவசியம்.



படிப்பகம்

www.padippakam.com

## அடிக்குறிப்புகள்:

1. செங்கை ஆழியான் — காட்டாறு (முதற்பதிப்பு) வீரகேசரி வெளியீடு, கொழும்பு. பெப்ரவரி 1977, ஆசிரியர் முன்னுரை
2. ——————— மேற்படி
3. இவ்வாறு ஈழத்து நாவலாசிரியாகள் பலரிடமும் மொழியைக் கையாளுவதில் காணப்படும் குறைபாடுகளை ஏற்கெனவே கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்களும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பார்க்க; அ. சண்முகதாஸ் ''ஆக்க இலக்கியமும் மொழியியலும்'' ஆக்க இலக்கியமும் அறிவியலும் (முதற்பதிப்பு) பதிப்பாசரியர்: சண்முகதாஸ் அ. இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாக வெளியீடு, யாழ்ப்பாணம். 1977.

## துணை நூல்கள்:


1. செங்கை ஆழியான் — வாடைக்காற்று (முதற்பதிப்பு) வீரகேசரி வெளியீடு, கொழும்பு. பெப்ரவரி 1977.
2. ——————— காட்டாறு, (முதற்பதிப்பு) வீரகேசரி வெளியீடு, கொழும்பு. பெப்ரவரி 1977.
3. நீதிவாணன், ஜெ. நடையியல், (முதற்பதிப்பு) மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.




படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி, vi இதழ், iii - 1994

# சமகால இந்திய மெய்யியல் - ஒரு நோக்கு

கே. சிவானந்தமூர்த்தி

சமகால இந்திய மெய்யியலின் தோற்றம், அதன் எண்ணக்கருக்கள், அவற்றின் இயல்பு என்பன குறித்து அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இந்திய மெய்யியலின் அடிப்படையாய் உள்ள கருத்துக்களையும், அவற்றின் இயல்பையும் புரிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. இந்திய மெய்யியல் நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியத்தையுடையது என்பதும் முழுமையானது என்பதும், கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் பொருந்துவது என்பதும் வெளிப்படையானது.

நீண்ட கால ஓட்டத்தை ஜீரணித்தவாறு என்றும் இந்திய மெய்யியல் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இதன் பாரம்பரியத்தில் 'நவீனத்துவம்' 'புதிய போக்கு' எந்த அடிப்படையில் எழுகின்றது என்பதை புரிவதன் வழியாகச் சமகால இந்திய சிந்தனையின் போக்கினை சரியானபடி இனம் காணலாம். சமகாலத்தவரான இராதாகிருஸ்ணரின் கருத்துப்படி வரலாற்று ஓட்டத்தில் நலிவுற்ற, தேய்வுற்ற பகுதியென்றோ அல்லது சீர்செய்ய வேண்டிய தேவையுடைய பகுதி என்றோ பாம்பரிய இந்திய மெய்யியலில் எதுவுமில்லை.

தாஸ்குப்தா குறிப்பிடுகையில் 'சமகால மெய்யியலாய்வாளர்கள் மூத்த ஆசிரியர்களின் விளக்கவுரைகளுடன் முரண்பாடு கொள்ளாதவர்களாக - இசைவாகச் செயற்பட்டார்கள்' என்கிறார்.[2] சிறீனிவாசறாய் இந்திய மெய்யியல் பாரம்பரியத்தில் எந்தவொரு மெய்யியலாளனும் புதுக்கருத்தொன்றை தான் வெளியிட்டதாக அல்லது ஒன்றை புதிதாக கண்டுபிடித்ததாக உரிமை பாராட்டிக் கொள்ளவில்லை என்றும் ஏற்கனவேயுள்ள தர்சன நூல்களுக்கும் அவற்றின் வியாக்கியானங்களுக்கும் மேலும் விளக்கங்களை நல்கியது தான் தங்கள் பணியெனக் கருதினர். என குறிப்பிடுகின்றார்.[3] இதை தவிர மேலும் சிலபல தேவைகள் சமகால இந்திய மெய்யியலின் பிறப்பிற்கும் அதன் செயற்பாடுகளுக்கும் கால்கோலாக அமைந்தன.

இந்திய மண்ணின் தத்துவமாகவும், சமயமாகவும், கலாசாரமாகவும் போற்றப்பட்ட 'இந்திய சிந்தனைகள் விதேசப் படையெடுப்புக்களாலும், அரசியல் மாற்றங்களாலும் தன்னிலையில் சிறிது தாழ்ந்ததால் உடனடியான கவனிப்புக்குரியதொன்றாகியது. இன்றியமையா மாற்றங்களுக்காகவும் மீள்வலியுறுத்தலுக்காகவும், சமகால இந்திய மெய்யியலாளர்களது கரங்



படிப்பகம்

www.padippakam.com

களில் தன்னை ஒப்படைக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டது.

சமகால உலகின் புரிந்து கொள்ள லுக்கு ஏற்ற முறையில் - புத்திபூர்வ நோக்கிற்கு ஏற்புடையதாக, பாரம்பரிய மெய்யியலின் போக்குகளை சிந்தித்துப் பார்க்க இந்திய மெய்யியலாளர்கள் தலைப் பட்டனர். அறிகை முறையின் உயரளவை யாகக் கொள்ளப்படும் உள்ளுணர்வுக்குப் பின்னடைவு ஏற்படாவண்ணம் இராதாக் கிருஸ்ணன் குறிப்பிடுவது போல, 'உள் ளுணர்வு நியாயித்தலுக்கு அப்பாற்பட்ட தாயினும் அது நியாயித்தலுக்கு எதிரானது அல்லவென்றவாறாக' சமகால மெய்யிய லாளர்கள் தமது ஆய்வுகளை மேற்கொண் டார்கள்.[4] தர்சன நூல்களிலும் அதன் வியர்க்கியானங்களிலும் உயர் மானிட விழுமியங்களாக குறிப்பிடப்பட்டிருந்த எண்ணக்கருக்களை தற்கால இந்திய மெய் யியலானது விளக்குகிற கடப்பாட்டையும் கொண்டிருக்கின்றது. இந்தியர்கள் மெய் யியலை ஒரு வாழ்க்கை முறையாகக் கருதிய தால் - சுவாசித்தலிலேயே அவை சங்க மித்துவிடும் என்ற நம்பிக்கையால், தனித் தனியாக கூறுபோட்டு காட்டவேண்டிய தேவை இருந்திருக்கவில்லை. உலகப் பார்வைக்கு உவப்பாக இந்திய மெய்யியற் சிந்தனைகளில் காணப்பெற்ற மானிடம் சார்ந்த பண்புகளை முதன்மைப்படுத்தி நோக்குகிற பணியினையும் சமகால சிந்தனையாளர்கள் மேற்கொண்டார்கள். வரலாற்று நோக்கோடு மேற்குறித்த பணி களைப் பார்க்கிறபொழுது சமகால இந்திய மெய்யியலாளர்களது சாதனைகள் தெளி வாகிறது. இன்று இந்திய மெய்யியல் என்றவாறாக வழங்கப்படும் சிந்தனைகள் அன்று தர்சனங்கள் என்றவாறு வழங்கப் பெற்றன. இந்திய சிந்தனை வரலாற்றில் மெய்யியல் என்கிற சொற் பிரயோகம் பாரம்பரியமான தொன்றல்ல, பன்னாட் டுத் தத்துவங்களின் வருகையின் பின்னரே பரீட்சயமானது மெய்யியல் என்கிற சொல் சிந்தனை மரபில் பொதுவாகவும், இந்திய சிந்தனை மரபில் சிறப்பாகவும் பொருள் கொள்ளப்படும். முறை குறித்து சர்மா குறிப்பிடுகையில் மெய்யியல் என்கிற சொல் அறிவு வேட்கை அல்லது விருப்பு என நேரடியாகப் பொருள்கொண்டு ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் அச்சொல்லானது மனிதன் தன்னைப் பற்றியும், தான் வாழும் உலகைப்பற்றியும் அறிந்து கொள் ளும் தாகத்தை உள்ளீடாகக் கொண்டது. இந்தியாவைப் பொறுத்த வரையில் மெய் யியல் என்பது அடிப்படையில் ஆன்மீக வயமானது. உண்மை குறித்த அனுஸ்டான அல்லது நடைமுறை உணர்வினைக் கொண்டது.[5]

ஆன்மீகவயமான உணர்வையே இந்திய சிந்தனை 'தர்சனம்' எனக் குறிப்பிட்டது. ஆன்மீக உணர்வுகளை, மனிதன் வளர்ப் பதற்கு வழிகாட்டும் ஆவணங்களே தர்சன சாஸ்திரங்கள் தர்சனம் இரு வழிபட்ட செயற்பாட்டைக் கொண்டது. ஒன்று உணர்தல் மற்றையது அறிதல். அறிதலை வற்புறுத்துவதன் மூலமாக அது ஒரு மெய் யியலாகவும், உணர்வதை வற்புறுத்து வதன் மூலம் ஒரு சமயமாகவும் புரிந்து கொள்ளலாம்.

சமகால இந்திய மெய்யியலாளர்கள் வரலாற்று நோக்கின் அடிப்படையிலேயே தனது சிந்தனையை விளக்கி வெளியிட்டுக் கொள்வதனால் இவ் ஆய்வின் முறையிய லும் வரலாற்று நோக்கிலேயே செல்கிறது. ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த மெய்யிய லாளர் எரிக் பெலர் இந்திய மெய்யியலை காலத்தை முதன்மையாக்கிக் கொண்டு பின்வருமாறு பாகுபடுத்தினார். இதன் பிரகாரம் வேதகாலத்துடன் தொடங்கும் முதற்பகுதி கி.மு 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. சைவ, வைஷ்ணவ சமயங் களின் எழுச்சி நிலைகளைக் கொண்ட பகுதி இரண்டாவது பகுதியாகும். மூன்றா வது பகுதியாக ஐரோப்பிய சிந்தனை சாயல்களைக் கொண்ட சுதேசிகளது கவனத்தைப் பெற்ற பகுதியைக் குறிப் பிட்டார்.[6] குறித்த முதல் இரு காலப்



படிப்பகம்

பகுதிகளை உள்ளடக்கிய சிந்தனைகள் செவிவழிச் செய்திகளாகவும் (குருசீட பரம்பரைமுறை) சுவடி எழுத்துவடிவச் செய்திகளாகவும் கல்வெட்டுக் குறிப்புகளாகவும் காணப்படுகிறன.

இந்திய மெய்யியல் நீண்ட பாரம்பரியத்தையும், நிறைவு நாட்டப் போக்கினையும் கொண்டதாயினும்; தொடர்ச்சியான மெய்யியல் விசாரணைகளுக்கு இடம் கொடுக்கும் பண்புடையதாகவும், அறிவு பூர்வமான அணுகல்களுக்கு முதன்மை கொடுத்தும் - யாவற்றுக்கும் மேலாக, கருத்து வேறுபாடுகளை - கண்டனங்களை, நீண்ட பொறையுடன் ஏற்றுக் கொள்ளும் பாங்குடையதாய் காணப்படுகிறது. எதிர் மறையான சிந்தனைப் போக்குகளை வரவேற்றும் கண்டனங்களை ஏற்றும், கண்டனங்களுக்கு கண்டனம் தெரிவித்தும், தெளிவை நோக்கிச் செயற்படும் மெய்யியல் போக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. மெய்யியல் விசாரணைகள் தொடர்ந்து நிகழ்நது கொண்டிருக்கும் காரணத்தால் இன்றும் அது உயிர்ப்பாய் விளங்குகிறது.

சமகால இந்திய மெய்யியலின் தோற்றத்திற்குப் பல காரணங்கள் கூறப்பட்டாலும், இயல்பான புதுமைகளை வரவேற்கின்ற பாங்கினையும், விசாரணைகளை வரவேற்கின்ற பாங்கினையும் இங்கு சுட்டிக் காட்டாது விடமுடியாது. முதற்பொருளாகக் கொள்ளப்படும் இறைவன் பற்றிய விளக்கமும் அதற்குச் சான்றாகும்.[7] இறைவன் பழமைக்குப் பழமையானவனாகவும் புதுமைக்குப் புதுமையானவனாகவும் இந்திய வைதீக மரபு குறிப்பிடுகிறது. புதிய சிந்தனைகளை வரவேற்பதுடன், அறிவை ஆராய்ந்து காணவேண்டும் என்கிற இலக்கையும் தர்சன நூல்கள் வெளிப்படுத்துகின்றன. எதிர்காலத்திலும் மெய்யியல் விசாரணைகள் இடம்பெற வேண்டும், அது கடந்தகாலத்தின் 'பழுதிலாத்திறன்' என்று கண்டவற்றுக்கு ஏற்ப இருத்தல் வேண்டுமென தர்சன நூல்களுள் ஒன்றான பெரியபுராணம் குறிப்பிடுகிறது.[8]

கீர்த்திமிகு சமயங்களினதும் மெய்யியல்களினதும் செல்வாக்குகள், அரசியல் மாற்றங்கள், ஆட்சி மாற்றங்கள், இந்திய மண்ணில் காலூன்ற ஆரம்பித்த காரணத்தால் பழமை மிகுந்த பாரம்பரிய சிந்தனைகளினதும், சமயங்களினதும் தத்துவார்த்த நிறைவுடைமைத் தன்மைகளில். அதனை முடிவுகளில், சித்தாந்தங்களில், சலசலப்புகள் ஏற்பட்டது இந்திய மெய்யியலின் நிறைவுடைமை குறித்து பலவகைப்பட்ட விமர்சனங்களும் வியாக்கியானங்களும் சாதக பாதக மனப்பாங்குகளோடு இந்தியாவினுள் இருந்தும் மேற்கு நாடுகளிலிருந்தும் எழலாயின. உதாரணமாக டேல்றைப் தனது இந்திய மெய்யியல் குறித்த அவதானிப்பை பின்வருமாறு வெளியிட்டார், 'இந்திய அறிவுசார் மெய்யியலைப் பரீட்சித்துப் பார்க்கும்போது பெருமளவிலான பிரக்ஞையற்ற செயற்பாடுகளையும். அச்செயற்பாடுகளுக்கு இருப்பில் இல்லாதவற்றுடன் அறிவுசார் இணைப்புகளுமாக (அர்த்தமற்றுக்) காணப்படுகிறது. இந்திய மெய்யியலானது கலப்பற்றது, ஆன்மீகமானது, ஆன்மீக வழிபாட்டின் மூலமாய் நேரடி இறையனுபவத்தினைக் கொண்டதெனச் சொல்வதை விடவும் வேறெந்த பாரிய தவறும் இருக்க முடியாது.[9]

இதற்கு ஒத்ததான கருத்தொன்றையே மாற்றியல் ஒப் சேவரும் இந்திய மெய்யியல் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்தியமெய்யியல் துர்அதிஸ்டவசமாக சில மாந்தீரீக சமயக் கூட்டமைப்பாகவும், ஒரே வித கொள்கையுடையதாகவும்; அற்புதம், ஆன்மீகம் ஆகிய கலப்புக்களைக் கொண்டதாகவும் காணப்படுகிறதேயொழிய; ஆன்மீக விடுதலைக்கான மிகச்சராசரியான வழிகள் எதனையும் கொண்டதல்லஎன்றார்.[10]. மேற்குறித்த விமர்சனங்கள் பாதகமான மனப்பாங்குடன் வெளியிடப்பட்டவை போலத்

தோன்றுகின்றன. இதற்கு மறுதலையான கருத்துக்களும் காணப்படுகின்றன. உதாரணமாக சின்காவின் கருத்துப்படி இந்திய மெய்யியல் விஞ்ஞான ரீதியாக, அறிவு பூர்வமான பரிசோதனைக்குரிய விளக்கங்களாக அணுகப்படவேண்டிய தேவையுடையதாயினும் அவ்வாறாக ஆராய்வதற்கு பலதடைகள் உண்டென்று குறிப்பிட்டார். அவ்வாறான தடைகள் பின்வருமாறு:

1. பரலோகம் பற்றிய சிந்தனைகள்,

2. சுதந்திரத்துக்குப் பின்னான ஆட்சியாளர்கள் சமய, மெய்யியல் சிந்தனைகளுக்கு வழங்கும் அதீதமான முக்கியத்துவம்,

3. விஞ்ஞானத்தைச் சுரண்டல் மனப்பாங்கென, இனம் காட்டி நிற்கும் இந்திய இங்கிலாந்துச் சிந்தனைப் போக்குகள்[1].

டி. பி. முகர்ஜியின் கருத்துப்படி; இந்திய மெய்யியலானது மதசார்பின்மை தேசியவாதம், தனியாள் வாதம், தனிமனித சிறப்புக் குறித்த மேன்மை நோக்கு, மறுமலர்ச்சிபோன்ற ஆய்வுகளால் வளர்க்கப்பட வேண்டும் என்றார்[12]. டாஸ்குப்தா குறிப்பிடும்போது இந்திய மெய்யியல் தொடர்ச்சியான தலைமுறை வழியாகத் திறனாய்வுக்குட்பட்டதாய், அறிவியல் நுட்பம் நிறைந்ததாய் வளர்ந்து வந்துள்ளதென்றும் குறிப்பிட்டார்,[13]

மேற்குறித்த கருத்துகள் இந்திய மெய்யியல் இப்போதிருக்கும் பாங்கிலேயே தொடர்ந்திருக்க வேண்டுமா அல்லது 'புதுமையும்' 'நவீனத்துவமும்' கொண்டதாய் வளர்த்து செல்லப்பட வேண்டியதா எனத் தீர்மானிக்க உதவும்.

விடுதலையை வேண்டிநின்ற அரசியற் போராட்டகாலத்தில். மக்களின் எண்ணங்களில் சுதந்திர தாகத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை அன்றைய இந்திய மெய்யியலுக்கு இருந்தது. சுதந்திரத்தைப் பெறுவதற்கு முன்னேற்பாடாக சுதேச மட்டத்தில் நிலவிய சமூகப்பூசல்கள், சாதிப் பூசல்கள் போன்றவற்றைக் களைந்தெடுக்க வேண்டிய தேவையிருந்தது. அதற்கு வாய்ப்பாக சகல சிந்தனை வளங்களிலும், பண்பாட்டுப் பின்னணிகளிலும் காணப்பெற்ற ஒவ்வாமைகளைக் களைய வேண்டிய தேவையிருந்தது. அதுமட்டுமல்ல உலகச் சிந்தனைகளுக்கு உடன்பாடாகத் தனது சிந்தனைப் போக்குக்களையும் சரிசெய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கைத்தொழில் வளர்ச்சி காரணமாக விஞ்ஞானத்துக்கு இந்தியா வழிவிட வேண்டிய தேவை ஏற்பட்டது. மாற்றங்களிற்குட்பட்ட மக்கள்கூட்டத்தை வழிநடாத்தும் பொறுப்பு இந்திய சிந்தனைப் போக்கிற்கு ஏற்பட்டமையால் சமகால இந்திய மெய்யியல் 'நவீனத்துவத்தையும், புதுமையையும் பெறவேண்டிய இன்றியமையா நிலைப்பாட்டிற்குள்ளாகியதெனலாம்'. இராதாகிருஸ்ணன் குறிப்பிடுவதைப்போல 'இந்திய தேசத்தை இளமைபெயரச் செய்வதற்காக மட்டுமன்றி, முழுமனித குலமும் மீள்தெளிவாய் உணரப்பட்ட உறவுகளை வெளிக்கொணர்வதற்காகவும் அன்று இந்திய அறிவு வேண்டப்பட்டது[13]. இதனைச் செயலாக்கும் வகையில் சமகால இந்திய மெய்யியலாளர்கள் பலவழிகளில் முயன்றனர். இம்முயற்சிகள் அனைத்தையும் பின்வரும் அடிப்படைகளில் பிரித்துப் பார்க்கலாம். 1. பாரம்பரிய இந்திய மெய்யியலை வியாக்கியானம் செய்வதன்மூலம் அதனை நவீனத்துவப் பாங்குடன் சமகால உலகிற்கு முன்வைப்பது. 2. இந்திய மெய்யியலை விமர்சன அணுகுமுறை அடிப்படையில் அணுகி சமகாலத்துக்கு ஏற்புடைய வகையில் விளக்கங்களை முன்வைப்பது. 3. சமூக சீர்திருத்தம் மனிதாய விழுமியம் என்பன குறித்த கருத்துக்களை மையப்படுத்திய அதனைச் சமகால சமூகத்தின்முன் வைப்பது.

பாரம்பரிய இந்திய மெய்யியலுக்கு வியாக்கியானம் செய்வதன் மூலமாக, அதன் நிறைவுடைத் தன்மையை எளிய

www.padippakam.com

வியாக்கியானம் விளக்கங்கள் வாயிலாக நவீன உலகிற்கு முன்வைப்பதே வியாக்கியானகாரர்களது முதன்மைப் பணியாக அமைகிறது. தர்சன நூல்களின் கருத்துக்களை பொருள் காண முயலும் வழிமுறைகளில் ஏற்படும் பிரச்சனைகளுக்கும், மொழிவாயிலாக வரும் பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண முயற்சிக்கப்பட்டது அடிப்படைத் தத்துவங்களிலும், அவை குறித்த தத்துவார்த்த நிலைப்பாடுகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழவில்லையாயினும் காலத்திற்கேற்ப சொற்களுக்குப் பொருள்கொள் முறையில் மாற்றங்கள் பெற்றதை உணரக்கூடியதாயுள்ளது. புதிய வியாக்கியானங்கள் காலவழக்கையும், மொழி வழக்கையும் தழுவியே வருவதால் அவற்றின் ஏற்புடமை பற்றிய ஐயங்கள் எழுவது இயல்பே. பிரம்ம சூத்திரம் பிரம–ஆன்மத் தொடர்பிற்கு பொருள்கொள்ளும் முறைமையில் அத்துவிதமாக, விசிட்டாத்துவிதமாக, துவிதமாக விளக்கப்படுகிறது. இவை எண்ணக்கருக்களிற்குப் பொருள் கொள்ளும் முறமையில் ஏற்பட்ட விளைவுகளே, வழுவினால் வந்தவையல்ல, குறிப்பானும் குறியீடும் அதாவது சொல்லும் அர்த்தமும் காலத்திலும் - வெளியிலும் வெவ்வேறு தளங்களில் நகர்ந்து கொண்டிருப்பதையே இது உணர்த்துகிறது. வியாக்கியானகாரர்களது பணி, வியாக்கியானம் செய்வதோடு மட்டும் நின்றுவிடாது, மேற்கத்தய சிந்தனைகளோடும் அதனது போக்குகளோடும் ஒப்பிடுவதாய் இருந்தது. இத்தகைய அணுகுமுறை மேற்குலகம் இந்திய மெய்யியல் குறித்து கொண்டிருந்த தவறான கற்பிதங்களைப் போக்கிக்கொள்வதற்குப் பெரிதும் உதவின. இவ்வகையில் இராதாகிருஸ்ணன், விவேகானந்தர் போன்றவர்களது வியாக்கியானங்கள் உலகளாவிய ரீதியில் இந்திய மெய்யியலுக்குச் சிறப்பினைத் தேடித்தந்தன. டாஸ்குப்தா இராஜேந்திர பிரசாத், பாண்டே போன்றவர்களது வியாக்கியானப் பங்களிப்புகளும் இவ்வகையில் விதந்து போற்றுதற்குரியன.

இந்திய மெய்யியலை விமர்சனரீதியில் அணுகியவர்கள் ஒவ்வோர் தர்சனப் பிரிவையும் அதன் பிரச்சினைகளையும் மறுமதிப்பீடு செய்தனர். பகுப்பாய்வு செய்வதன் மூலம் தாம் ஆய்விற்கெடுத்துக் கொண்ட மரபுசுட்டும் கருத்தை தெளிவுபடுத்தினர். இவர்களது விமர்சன அணுகுமுறை தருக்க அடிப்படைகளை ஆதாரமாகக் கொண்டது. இவ்வகையில் சமகால ஆய்வாளர்களான டாட்டா, சடோபாத்தியாய, சர்மா, மதிலால், ஜெயத்திலக்கா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சமூக சீர்திருத்தங்களையும் மானிட விழுமியங்களையும் மையப்படுத்தி, சமகால தேவைக்குத் தகுந்தவாறாக இந்திய மெய்யியலை அணுகியவர்களும் உளர். இவர்கள் மெய்யியற் சிந்தனைகளை சமூகமயப்படுத்துவதன் மூலமாக அவற்றிற்கு உயிர்ப்பைக் கொடுக்கலாமென நம்பினர். ராஜ் மோகன் ராய், விவேகானந்தர், காந்திஜீ, தயானந்த சரஸ்வதி ஆகியோர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள்.

சமகால இந்திய மெய்யியல் மேற்குறித்த திசைகளில் பயணித்த பொழுதும் விதிவிலக்காக வேறுசில முனைப்புகளையும் அவதானிக்க கூடியதாயுளது. இவ்வகையில் அர்த்தசாஸ்திரம், தனுர்வேதம், காந்தர்வ வேதம் என்பனவும் மனு யாகஞவல்கியர், வாத்சாயனர் ஆகியோரின் அரசியற் சிந்தனைகளும், வானசாஸ்திரம் தொடர்பாக ஆரியபட்டர், பிரமகுப்தர், வராக மிஷ்ரர் ஆகியோர்களின் கண்டுபிடிப்புக்களும் வெளிக்கொண்டு வரப்படுகின்றன. இந்தவகையில் உளவியல் குறித்த கருத்துக்கள் யருநாத்சிங்க, குப்புசாமி போன்றோராலும், அழகியற் கருத்துக்கள் ஏ. கே. ஆனந்தக்குமாரசாமி, தாகூர் ஆகியோராலும், சடத்தை முதன்மைப் படுத்திய கருத்துக்கள் டேவி பிரசாத் போன்றோராலும் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**II.** இந்திய சிந்தனை சமகால மெய்யியலாளர்களது பார்வையில் வாழ்க்கை குறித்த ஒரு நோக்கோ அல்லது ஒரு



படிப்பகம்

www.padippakam.com

வாழ்க்கை முறையோ என விளக்கிக் கொள்ள முடியாத புதிராக குறிப்பிடப் படுகிறது.[15] இந்தியாவில் சமயம் வாழ்க்கை முறையாகவும் பரிணமித்து விளக்குகின்றது.[16]

ஒழுக்க நெறிகளைப் பின்பற்றும்போது இம்மையில் சிறந்த வாழ்வையும், மறுமையில் பிறப்பில்லாப் பெருவாழ்வையும் பெற்றுத் தரும் என்கிற நம்பிக்கை அன்றிலிருந்து இன்றைவரை இந்திய மரபில் இழையோடிக் காணப்படுகிறது. மனிதாயப் பண்புகள் வாழ்க்கையின் தளமாக அமைவது பற்றிய சிந்தனைகளும் இந்திய மரபில் சித்தரிக்கப்பட்டுள்ளன. நிலைமை இவ்வாறிருக்க, நினியன் ஸ்மாட் இந்திய மெய்யியலை பௌதிகவதீதமாகவும், சமய எண்ணங்களின் ஆதிக்கத்திற்குட்பட்ட தொன்றாகவும் வாதிடுகின்றார்.[17]

அது பெரிதும் மோட்சத்துடன் தொடர்புடையதென கால் பொட்டர் குறிப்பிடுகின்றார்.[18] இந்திய மெய்யியல் பற்றிய இவர்களின் புரிந்துணர்வு பெரிதும் ஒரு பக்கச் சார்பானது. மோட்சம் எந்த அளவிற்கு இந்தியருக்கு முதன்மை பெற்ற பிரச்சினையாக இருந்ததோ, அதேயளவான முக்கியத்துவம் போகத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வுலகவாழ்க்கை இந்திய மரபில் ஒருபோதும் கண்டிக்கப் பட்டதில்லை. காமசூத்திரம், ஆயுர்வேதம், அர்த்தசாஸ்திரம், சோதிடம் என்பன இவ்வுலக வாழ்க்கையை முதன்மைப் பொருளாகக் கொண்டதென்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவைப் பொறுத்தவரை மனித வாழ்க்கை முதன்மை பெற்றது. தற்கொலை எச்சந்தர்பத்திலும் ஆதரிக்கப்பட்டதில்லை. அத்துடன் அது மனிதனை மட்டும் மையமாகக் கொண்டதல்ல. உயிரினம் முழுவதையும் தழுவிய தாய், அவற்றின் வாழ்க்கையோட்டத்தை அங்கீகரித்ததாய் காணப்படுகிறது. போகத்தின் பின்பே மோட்சம் என்ற நிலைப்பாடே வைதீக தரிசனங்களின் முதன்மைச் சிந்தனையாயிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய மெய்யியற் போக்கினை ஆராய்ந்த கஜமி நாகமூரா அது பிரபஞ்ச மறுப்பை நிராகரிப்பதையும், தனியான்ம வாதம் குறித்த நிலைப்பாடுகளை மறுதலிப்பதையும், பொருட்களுக்கிடையேயான பொதுமையையும், பிரபஞ்ச விபாபகத்தின் தன்மையையும், ஆளுமையின் விளக்கத்தையும், கூடவே பிரபஞ்ச ஆன்மாவின் முக்கியத்துவத்தினையும், அது சடப்பிரபஞ்சத்திலிருந்து எவ்வாறு வேறுபட்டிருக்கிறதென்பதையும், அதற்கான பௌதிகவதீத அடிப்படைகளையும், சகிப்புத் தன்மையையும் கொண்டு விளக்குகின்றதென்றார்.[19] இந்திய மெய்யியல் மானிடம் குறித்தும், பிரபஞ்சம் குறித்தும், மானிட உறவுகள் குறித்தும் மரணத்தின் பின் மனிதன் நிலைகுறித்தும், ஆராய்கின்ற நிறைவுடைத் தத்துவம் என்பது புலனாகிறது.

III. இந்திய மெய்யியல் நீரோட்டத்தில் 14ம் நூற்றாண்டில் இஸ்லாமியர் வருகையால் ஏற்பட்ட சமூக அரசியல் மாற்றங்களே சமய மெய்யியற் சிந்தனைகளை முதலில் தாக்கியது. இந்திய மெய்யியல் நிறைவற்றது. சமயம் சார்ந்தது. அறிவியல் நோக்கிற்கு உவப்பற்றது, என்கிற கருத்தமைவுகள் 18ம் நூற்றாண்டில் பிரித்தானியரது வருகையின் பின்னரே தோன்றின. அரசியலதிகாரம் பெற்ற அன்னிய சமய மெய்யியற் சிந்தனை சுதேசச் சமயச் சிந்தனைகளுடன் கைகோர்த்தமை சலசலப்புக்களை ஏற்படுத்தியது.

கபீர்தாஸர் (1440 - 1518) போன்ற இஸ்லாமியச் சிந்தனையாளர்கள் இந்து தத்துவத்திற்கும் இஸ்லாமிய தத்துவத்திற்குமிடையில் சமரச சமத்துவம் காண முயன்றனர். சீக்கியரான குருநானக் இந்து இஸ்லாமிய தத்துவங்களை இணைத்து அதன்வழியாக சீக்கிய மதத்தினை உருவாக்கினார். ஐரோப்பியர் கிறீஸ்து மதத்தையும், தத்துவங்களையும் சுதேசிகள் மீது ''மனிதாபிமானக் கல்வி'' என்கிற போர்வையில் ஆங்கிலக் கல்வி அரச உத்தியோகத்தை வழங்குமென ஆசையூட்டினர்.



படிப்பகம்

www.padippakam.com

பாரம்பரிய சமய மெய்யியல் தத்துவங்களை வெற்றுத் தத்துவம் எனவும் பேசத் தலைப்பட்டனர். இத்தகையதொரு பின்னணியில் நிலைகுலைந்துகொண்டிருந்த சுதேசச் சிந்தனைகளை கால - தேச வர்த்தமானச் சூழலுக்கு இசைவாகவும், நிறைவுடைப் பண்புகள் குலைந்துபோகாது பாதுகாத்தும், சருகலாகக் காணப்பட்ட பகுதிகளைச் சீர் செய்தும், தற்கால மெய்யியலாளர்கள் தம் முயற்சிகளை மேற்கொண்டனர்.

சமகால வளர்ச்சிப் போக்கு ராஜ்ராம் மோகன்ராயினுடைய பிரம்ம சமாஜ அங்குராப்பணத்துடன் ஆரம்பமாயிற்று.[20] ஈஸ்வர வித்தியாசாகர், மைக்கேல் மதிசூதன தத்தர் போன்யோர் இச் சமாயத்துடன் ஈடுபாடு கொண்டவர்களாகக் காணப்பெற்றனர். தாகூர் தனது கட்டுரையொன்றில் ''1816-ம் ஆண்டு தான் பிறந்த ஆண்டாகையால் முக்கியமுடையதன்று, இவ்வாண்டிலே மூன்று சமாஜங்கள் தோன்றி இந்திய மெய்மியற் சிந்தனைகளை வளர்க்க முற்பட்டதால் முக்கிய ஆண்டானது''[21] என்றார். ராஜ் ராம் மோகன் ராய் சமயம், வரலாறு, மெய்யியல் பன்னாட்டு மொழிகள், இஸ்லாம், பௌத்தம், கிறீஸ்தவம் ஆகியனவற்றில் நன்கு தேறியவர். ஐரோப்பிய மெய்யியலாளர்களதும் சமூகவியலாளர்களதும் பங்களிப்பினை நன்கு தெரிந்துகொண்டவர். பேக்கன், பெந்தாம் போன்ற மெய்யியலாளர்களது சிந்தனைகளில் அதிக ஈடுபாடு கொண்டவர்[22] இவரைக் குறித்து றோமன் றோலன்ட் குறிப்பிடுகையில் இராட்சத ஆளுமையுடையவர் என்றும், இந்திய மண்ணில் வலிமையுடன் ஆழமாக உழவு செய்தவர் என்றும் குறிப்பிடுகிறார். மேலும் இமாலய அற்புதங்களாகக் கொள்ளப்பட்டனவற்றை, நவீன ஐரோப்பிய விஞ்ஞானங்களின் முறையியலினுள் கொண்டுவந்தாரென குறிப்பிடுகிறார்.[23] மோகன் ராய் மேலானதொரு பரம்பொருள் கொள்கையை வேத உபநிடதங்களைச் சான்றாகக்கொண்டு வெளிப்படுத்தினார். பிரமத்தின் இருப்பை ஏற்றுக்கொண்ட இவர், சங்கரரது வேதாந்தக் கருத்துக்களில் காட்டிக்கொண்ட ஈடுபாட்டினை விடவும், ராமானுஜரது வேதாந்தத்தில் காட்டிக்கொண்ட ஈடுபாடே கூடுதலாகப்படுகின்றது சங்கரர் உலகக்காட்சி பழுதைப் பாம்பாகக் கருதுகிற மாயை போன்றது என்கிறார். இதனை மோகன் ராய் பழுதும் உட்பொருளே அதற்கும் இருப்பு உண்டெனப் பொருள் கொண்டு, இந்த உலகம் பாம்பைப் பார்ப்பதுபோல ஒரு சுயாதீன இருப்பினைக் கொண்டிருக்காவிட்டாலும், தனது இருப்பைப் பிரமத்திலிருந்து பெறுகிறதென்றார், பிரமம் என்கிற தத்துவத்தை முன்வைத்ததன் மூலம் வேதப் பொருளை மெய்யியலுடன் இணைத்து நோக்கும் மரபை உருவாக்கினார்.

ஐரோப்பாவில் உள்ளது போன்ற சமயசார்பற்ற கல்வியையும் இயற்கை விஞ்ஞானங்கள் குறித்த கல்வியையும் இந்தியாவில் கற்பிக்க வேண்டும் எனச் செயற்பட்டார். மேற்கத்தேய சிந்தனைகள் விதந்து பேசும் மனிதநேயச் சிந்தனைகளைத் தர்சன சாஸ்திரங்களிலிருந்து வெளிக்கொணர்ந்து விமர்சித்தார். தர்சன சாஸ்திரங்களை பிற மொழிகளில் மொழி பெயர்த்து அச்சேற்றினர். இந்த வகையில் சமகால இந்திய மெய்யியலின் தோற்றத்திற்கு வித்திட்டவர் இவர் எனக் கூறலாம். எனினும் இவரால் முன்வைக்கப்பட்ட சமய சமத்துவ நோக்கையும் உருவ வழிபாட்டு மறுப்பையும் இந்தியமண் ஜீரணித்துக் கொள்ளவில்லை.

காலப் போக்கில் ராஜ் ராம் மோகன் ராய் தோற்றுவித்த பிரம்ம சமாஜத்தில் எழுந்த கொள்கை வேறுபாடு ஆதிப் பிரம சமாஜம், இந்திய பிரமசமாஜம், சாதாரண பிரம சமாஜம், எனப் பிரிபடக்காலாயிற்று. இந்திய மெய்யியலின் எழுச்சியையும், தேவையறிந்து கருத்துக்களை ஊன்றிச் செல்லும் திறனையும் ராயும், அவரது சமாஜத்திலிருந்து பிரிந்து சென்றவர்களும் வெளிப்படுத்தினாலும், இந்திய சமயச் சிந்தனையில் முக்கியத்துவம் பெற்ற



படிப்பகம்

www.padippakam.com

உருவ வழிபாட்டு முறைமைகளை புறக்கணித்தமை பிற சமய தத்துவங்களுடன் சமரசம், சமத்துவம் கண்டமை காரணமாக பாரம்பரிய வரலாற்றுக் கலாசாரத்தைக் கொண்ட இந்திய மக்கள் இவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்வாறே தயானந்த சரஸ்வதியினால் தோற்றிவிக்கப்பட்டதும் 'வேதத்திற்குத் திரும்புங்கள் என்கிற கோஷத்தினை உயிர்ப்பாய்க் கொண்டிருந்த இயக்கமும், அன்ரி பேசன்ட் அம்மையார் உள்ளிட்ட விதேசிகள் பங்கு கொண்ட பிரம சமாஜமும் வெற்றி பெற வில்லை. முன்னையது எத்துணை தூரம் வேதக் கருத்துக்களில் இறுக்கமான அடித்தளத்தைக் கொண்டிருந்தாலும் உருவவழிபாட்டையும், சமயங்களின் இருப்பையும் ஏற்க மறுத்தமையால் தோல்வி கண்டது. பின்னையது விதேசிகள் சுதேச அமைப்புக்கள் எதனை உருவாக்கினாலும் சுய இலாபங்களுக்காக அவற்றைப் பாவித்தமையால் வலியிழந்தது.

தட்சணேஸ்வரத்தில் கோயில் புரோகிதராகப் பணிபுரிந்து, முறைசார்ந்த கல்வி எதனையுமே பெற்றுக் கொள்ளாமல் உள்ளுணர்வின் மூலம் உண்மைப் பொருளை உணர்ந்த இராமகிருஸ்ணனின் சமய மெய்யியற் பணிகளோடேயே சமகால இந்திய மெய்யியலின் பொற்காலம் ஆரம்பமாகிறதெனலாம். முப்பது கோடி மக்களின் ஈராயிரமாண்டு கால ஆன்ம ஞான அனுபவத்தின் வெளிப்பாடு[24] என ரோமன் ரோலண்டினால் விதைந்துரைக்கப்பட்டவரும், உலகை நோக்கி இந்திய மெய்யியலை, இந்திய சமயத் தத்துவங்களை எடுத்துச்சென்ற விவேகானந்தரைச் சீடராகக் கொண்டவருமான இராமகிருஸ்ணனின் மெய்யியல் பங்களிப்புக்கள் பாரம்பரிய மெய்யியலின் வலிமையை எடுத்துக்காட்டும் அதேவேளையில், இந்திய தத்துவத்தின் உள்ளார்ந்த கருத்துப் பூசல்களுக்கும் ஆறுதல் தருவனவாயின் அத்வைதக் கருத்துக்களுக்கு முதன்மை வழங்குகின்ற அதே வேளையில் துவைதம், விசிட்டாத்வைதம், அத்வைதம் அனைத்தும் இறுதிப் பொருளை நோக்கிச் செல்வதற்கான அறுதியான பாதைகள் என எடுத்துச் சொன்னார். துறந்தோர்க்காய் மட்டுமல்ல இல்வாழ்வோருக்குமாகவே தத்துவம் உள்ளதென்றும், இல்வாழ்வில் ஈடுபட்டிருப்போருக்கு அந்நிலையில் நின்றவாறே இறைவனைப் பற்ற துவிதம், விசிட்டாத்வைதம் துணை புரியும் என்றார். சமயங்களுக்கிடையே ஒற்றுமைப்பாட்டை வலியுறுத்தி வரவேற்றார்.

எந்தவொரு சமயமும் எத்தகைய கருத்தைக் கொண்டிருந்தாலும், அதைச் சார்ந்திருக்கும் சமயி தன்னை இறைவனுக்காய் அர்ப்பணித்துக் கொண்டும், தன் அயலவன்மேல் அன்பு செலுத்தியும் உதவி செய்தும் செயல்படுவானானால் அவன் சார்ந்திருக்கும் சமயம் உண்மைச் சமயமாகும் என்றார்.[25]

ராய் போன்றவர்கள் விட்ட தவறினை இராமகிருஸ்ணர் சமயங்களின் இருப்பையும் உருவவழிபாட்டின் முதன்மையையும் வலியுறுத்துவதன் மூலமாய் சீர்செய்தார். எனக்கு இந்துமதம் எவ்வாறாக அருமை பெருமை வாய்ந்ததாகக் காணப்படுகின்றதுவோ அவ்வாறே ஏனைய சமயங்களும் எனக்குக் காட்சியளிக்கின்றது. என காந்தி குறிப்பிடுவதன் மூலம், மேற்குறித்த கருத்தை மீள வலியுறுத்தினார். இராமகிருஸ்ணர் உருவவழிபாட்டு முறையின் அவசியத்தை வலியுறுத்தும் நோக்கோடு 'தந்தையின் புகைப்படம் எப்படி உன் தந்தையை நினைவுக்குக் கொண்டு வருகின்றதோ அதேபோல நீ தொடர்ந்து வழிபட்டு வந்தால் இறைவனை அடைவாய்[62] என்றார். அயலவனில் அன்புகாட்ட வேண்டும். அவனுக்குச் சேவை செய்ய வேண்டும் பிற மதங்களை மதித்து நடக்க வேண்டும் என்று கூறுவதன் மூலம் மனிதாயப் பண்புகளை ஊக்குவிக்கின்ற பாங்கினை வெளிப்படுத்துகிறார். இது போன்ற கருத்தினைக் காந்தியும் 'வரையறை கடந்த தத்துவமான கடவுள் அதாவது சத்தியத்தை உணர்ந்து கொள்வதன் மூலமும் பிரதியுப



படிப்பகம்

www.padippakam.com

காரம் கருதாத அன்பை ஒருவர் நல்குவதன் மூலமாகவே மனித உறவுகளை சரியான படி அமைத்துக் கொள்ள முடியும் என்றார்.[27] இறைவனுடன் இணைந்துகொள்வ தெவ்வாறென கிறீஸ்தவனுக்கு கிறீஸ்து மதமும், இஸ்லாமியனுக்கு இஸ்லாமிய மதமும், இந்துவுக்கு இந்து மதமும் கூறி வைத்துள்ளது[28] என இராமகிருஸ்ணர் கூறுவதன் மூலம் சமயப்பொறையுணர்வை மட்டுமல்ல சிறந்த வாழ்வியலுக்கான ஒழுக்கக் கோவைகளையும் முன்வைக்கின்றார். இவரது பணிகளை இந்திய தத்துவ ஞானி யொருவரின் இந்திய தேசிய ஒருமைப் பாட்டிற்கான அறைகூவல் எனவும் சமகால இந்திய மெய்யியலின் நோக்கைப் பொருள் பொதிந்த தொன்றாக்குகின்ற முயற்சி அல்லது முனைப்பு எனவும் கூறலாம்.

இந்திய மெய்யியலின் பௌத்த தர்சனம் போன்ற ஏற்பாடுகள் கூடுதலாக துறவறக் கருத்துக்களை வற்புறுத்துகின்ற நியதியினாலும், தர்சன நூல்கள் வர்ணாச்ரம தர்மத்தை எடுத்துக் கூறுகின்ற பாங்கினாலும் இந்திய மெய்யியல் துறவிகளை உருவாக்க பிராயத்தனம் செய்கிற ஒரு ஏற்பாடு என்கிற எண்ணம் மேற்கத்தேய மெய்யியலாளர்களிடம் பரவலாகவும், கீழைத்தேய ஆய்வாளர்களிடம் சிதறலாகவும் காணப்படுகிறது. துறவு வாழ்வின் பேறாக ஆன்மவிடுதலையையிலகுவாக்கிக் கொள்ளலாம். மோட்ச நிலைகள் என்று கருதப்பட்டன வற்றுள் மேலான நிலையினை அடைந்து கொள்ளலாமென்ற சிந்தனைகள் பாரம்பரிய மெய்யியலில் காணப்படுகிறது. சமகால மெய்யியலாளர்களுள் ஒருவரான ரவீந்திரநாத்தாகூரின் மெய்யியற் பங்களிப்புக்கள் கணிசமான துறவையும், வாழ்வை வெறுக்கும் மனப்பாங்கையும் களைவதற்கான முயற்சியேயாகும்.[29] வாழ்க்கையில் பிடிப்பை ஏற்படுத்திக் கொண்டே விடுதலையை அடையலாமென சமகால மெய்யியலாளர்கள் பலர் கருத்துகளை வெளியிடுகின்றனர். பகவத்கீதையின் அறவியற் கருத்துக்களை தன்வாழ்வியலின் அறக்கட்டளைகளாக ஜீரணித்த விவேகானந்தர் ஆன்மன் பிரம்மன் அத்து விதப்படுத்தலுக்கு இராஜயோகம் மட்டும் சிறந்த வழியல்ல அன்பின் வழியாக கடமைகளை நிறைவேற்றி நிற்கும் கர்ம மார்க்கமும் சமவளவில் வலிதான வழியே என்றார்.[30] மனிதன் மற்றைய மனிதனுக்காய் பயன் கருதாது சேவையாற்ற வேண்டும் என்றார்.

உண்மையான சமயியானவன் எல்லா மனித உயிரிலும் சிறப்பாக நலிவுற்றோரில் இறைவனைக் காண்பவனாக விளங்க வேண்டும் என்றார். இங்கு மனித நேயம் அழுத்திக் கூறப்படுகிறது. இறைவனை சக மனிதனில் காண்பதன் மூலமும் பயன் கருதாத கடமைகளைச் செய்வதன் மூலமும் ஆன்ம - பிரம்ம சங்கமம் சாத்தியமாகும் என்றார். எனவே அதனை அடைவதற்கான பயிற்சிப்புலமாக சமூகத்தையும், பயிற்சி நெறியாக பயன்கருதா கடமையையும், பயனாக ஆன்ம இறைவன் சங்கமத்தினையும் வகுத்துக் கூறுகிறார்.

மனிதாயப் பண்புகளை நடைமுறைகளோடு ஒட்டியே சமகால இந்திய தத்துவம் முன்வைக்கிறது. இதற்கு விவேகானந்தருடைய மெய்யியல் பங்களிப்புகள் சிறந்த சான்றாகும். மனிதாய வர்க்கத்திற்கு செய்யும் சேவையின் மூலமாக கடவுளை நான் காண முயன்று வருகின்றேன் எனக் காந்தி[31] கூறுகின்ற கருத்து விவேகானந்தரது கருத்தை மீள வலியுறுத்துவதாக அமைகிறது.

அறவழிப்பட்ட வாழ்வு, அதாவது சத்தியம், மனிதநேயம், மனித சமத்துவம் பேணல் காந்தியின் மெய்யியலடிப்படையாகக் காணப்படுகிறது. சமுதாய சமத்துவம் பேணாத கருத்துக்கள் தர்சன நூல்களின் மூலமான வேதத்தில் இருந்தால் என்ன, வேறெங்கிலிருந்தாலென்ன அதனை மிக வன்மையாகச் சாட காந்தி தவறியதில்லை.

அழிக்க முடியாத களங்கம் ஒன்றை இந்துமதம் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. அநாதி காலம் தொட்டு அது நமக்கு



படிப்பகம்

www.padippakam.com

வந்திருப்பதாக நான் நம்பியதில்லை. நாம் மிக தாழ்ந்த நிலையில் இருந்த காலத்திலே தான் இந்த துக்கமான, கேவலமான அடிமைத்தனமான தீண்டாமையுணர்வை நாம் கைக்கொண்டிருக்க வேண்டுமென்பது எனது கருத்தென காந்தி கூறுவதன் மூலமாக – சமகால இந்திய மெய்யியற் சிந்தனையாளர்கள் சமூக அநீதிகளை சமுதாயச் சீர்கேடுகளை வன்மையாக எதிர்க்கிறார்களென்பது புலனாகிறது. □

## அடிக்குறிப்புகள்


1. Robert A Mcdermott ( *Editor* ) *Basic writings of S. Radhakrishnan*, Jaico publishing house, Bombay, 1970, P 102
2. Surendarnath Dasgupta, *A History of Indian Philosophy*, Vol I, Motilal Banarsiddass, Delhi, 1975, P 66
3. Srinivasa Roa, 'On modernising Indian Philosophy' *Indian Philosophical annual*, Vol. 18, University of Madras, 1985 - 1986, P. 127.
4. J. H. Muirhead (*Genaral Editor*) *Contemporary Indian philosophy* London George Allen & Unwin Ltd, 1936, P 269
5. Chandradhar Sharma, *A critical Survey of Indian Philosophy*, motilan Benarsidass, Delhi, 1976, P. 13.
6. Erich Frenwellor, *History of Indian Philosophy* U. M. Bedakar Motilal Banarsiddass, Delhi, 1973, P. 1.
7. மாணிக்கவாசகர், திருவாசகம், திருவெம்பாவை, 9
8. சேக்கிழார், பெரியபுராணம், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம், 159-
9. T. N. Ganapathy, ' The Indianess of Indian Philosophy - A critical Survey'', *Indian Philosophical annual*, Vol 18, University of Madras- 1985 - 1986, P. 199
10. Ibid 199
11. Dale Ripe, 'Indian Philosophy since Independence,' *Researeh*, Indian publications, Calcutta, 1979, P 102
12. Ibid, P. 73




படிப்பகம்

www.padippakam.com

13. Ibid P 28

14. Ibid P 34

15. V A. Devasenapathy, 'The Philosopher speaks for him self.' *Indian philossphical annual* Vol 17, University of Madras, 1983, P, IX

16. Sarasrati Channkesava, *Concept of Indian Philosophy*, Orient Longman Bombay, 1976, P. IX.

17. K. Saratchandran 'contemporary approches to Indian Philosophy' *Indian Philosophical annual*, 1985 - 1986, P 219

18. Ibid, P 219

19. Hagine Nakamura, *Ways of thinking of Eostern people*, Honolulu University of Hawai press, 1964, P. 41 - 168

20. Opcit, J. H. Muirhead, 1936, P 25

21. Ibid, P 25

22. V. Brodov, *Indian Philosophy in modern times*, progress publishers Moscow, 1984, P 14

23. Ibid, P 145

24. Roman Rolland *(Trans)* E. F. Malcoimamith, *The life of Rama krishna Advaita Ashr .ma*, Calcutta, 1977, P 13

25. கலாநிதி நா. சுப்பிரமணியம், இந்தியச் சிந்தனை மரபு, சவுத் ஏசியன் புக்ஸ், 1993, ப 110

26. மே. கு. நூ. ப. 141

27. R. Balasubramanium, C. S. Devadass *(Editor)*, *Gandhian throught*, University of Madras, 1981, P. 136.

28. Albert Schweitzer, *Indian thought and its development*, Adam & Charles black, London, 1957, P 218

29. Opcit, Robert A Mcdermott *(General Editor)*, 1970, P. 217

30. Opcit, Albert Schweitzer, 1951, P. 256

31. Opcit, R. Balasubramanium C. S. Devadas, 1981, P. 141



படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி vi இதழ் iii - 1994

# தலித்தியமும் அதன் கலை இலக்கியப் பார்வைகளும் - ஓர் அறிமுகம்

நா. சுப்பிரமணியன்

## 1. தோற்றுவாய்

இந்திய மண்ணின் இன்றைய எரியும் பிரச்சினைகளிலொன்றின் இயக்க வடிவம் 'தலித்தியம்'. 'தலித்' என்ற மகாராஷ்டிர மொழிச் சொல் உடைக்கப்பட்ட - ஒடுக்கப்பட்ட - மக்கள் எனப் பொருள் தருவது. இச் சொல்லுக்கு 'மண்ணோடியைந்த மக்கள்' என இன்னொரு பொருளும் வழங்குவதாகத் தெரிகிறது பல நூறு ஆண்டுகளாக 'சாதியம்' என்னும் ஒடுக்குமுறையால் ஒதுக்கப்பட்ட குறிப்பாகத் தீண்டத்தகாதவர்கள் எனக் கருதிப் புறக்கணிக்கப்பட்ட - மக்கட் சமூகத்தை இச் சொல் சுட்டி நிற்கிறது. இம் மக்கட்பரப்பில் ஒரு பெரும்பகுதியினர் தமது 'சுய'த்தை - பல நூறு ஆண்டுகளாகத் தாம் இழந்துவிட்டதாகக் கருதப்படும் இயல்பான பண்பாட்டு முகத்தை - இனங்காணும் நோக்கில் மேற்கொண்டுள்ள இயக்கநிலைச் செயற்பாட்டின் வடிவமே தலித்தியம்.

இவ்வியக்கம் முளைவிட்ட மண் (இந்தியாவின்) மகாராஷ்டிர மாநிலம். அங்கு மகாத்மா ஜோதிபா புலே (1828 - 1890), டாக்டர். பி. ஆர். அம்பேத்கார் (1891 - 1956) ஆகியோர் சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மேற்கொண்ட புரட்சிச் செயற்பாடுகளின் தொடர்ச்சியாகச் சமூக பண்பாட்டுத் தளத்தில் முகிழ்த்த இயக்கம் இது. கடந்த நூற்றாண்டிலே, இந்திய சமூகத்தின் பல்வேறு குறைபாடுகளையும் ஒழிக்கும் நோக்கில் ராஜாராம் மோகன் ராய் (1732 - 1883, தயாநந்த சரஸ்வதி (1824 - 1883), இராமகிருஷ்ண பரமஹம்ஸர் (1836 - 1886), விவேகாநந்தர் (1863 - 1902) முதலியோர் வட இந்திய மண்ணில் செயற்பட்டு நின்றமை அறிவோம். ஆயினும் அவர்களது சிந்தனை, செயன்முறை என்பன சமுதாயத்தின் அடிநிலை மாந்தரை - ஒடுக்கப்பட்ட மக்களை உரியவாறு சென்று அடையவில்லை. சமுதாயத்தின் மேல்மட்டத்தில்தான் அவை சில சிந்தனை மாற்றங்களை ஏற்படுத்தின. இத்தகு சூழலில் சமுதாயத்தின் அடிநிலை மாந்தரிடையே விழிப்புணர்வையும் எழுச்சியையும் ஏற்படுத்தும் நோக்கின் வெளிப்பாடாக ஜோதிபா புலே, அம்பேத்கார் ஆகியோரின் சிந்தனை, செயன்முறை என்பன அமைந்தன. இந்திய அரசியலமைப்பின் சிற்பிகளுள் ஒருவரான அம்பேத்கார் அவர்கள் இந்துமதத்தில் நிலவிய தீண்டாமைக்கு எதிராகத் தீவிரமாகப் போராடியவர்; இந்துமதம் தீண்டாமையை ஒழிக்கத் தயாராக இல்லை என உணர்ந்த போது தனது உடன் கூட்டத்தினர் பலருடன் பௌத்தமதத்துக்கு மாறியவர். இவ்வாறு அரசியல், சமூகம், சமயம் ஆகிய



படிப்பகம்

www.padippakam.com

பல தளங்களிலும் செயற்பட்டு நின்ற அம்பேத்காரின் சிந்தனைகளை அடித்தளமாகக் கொண்டு ஒடுக்கப்பட்ட மக்களின் 'சமூக - பண்பாட்டு' விழிப்புணர்வுக்கு வழிஅமைக்கும் நோக்கில் 1950 களில் மகாராஷ்டிர மண்ணில் முளைவிட்ட இயக்கமே தலித்தியம்.[1]

இவ்வியக்கம் மகாராஷ்டிரத்தில் வளர்ச்சியுற்ற நிலையில் அடுத்துள்ள மாநிலமான கர்நாடகாவில் பரவியது. அதனைத் தொடர்ந்து 1990 களில் தமிழ்நாட்டுக்கும் அறிமுகமாகியது. தமிழ்நாட்டில் 1990-91 காலப்பகுதியில் அம்பேத்கார் நூற்றாண்டு தொடர்பான நினைவலைகள் முனைப்பாக வெளிப்படத் தொடங்கிய சூழ்நிலை தலித்தியம் அம்மண்ணில் வேர்கொள்ள வகைசெய்தது. 1990 இல் மனுசங்க இதழ் தலித்திய வருகைக்கு கட்டியம் கூறியது. 1992 இல் தமிழ்நாட்டில் தோற்றுவிக்கப்பட்ட தலித் பண்பாட்டுப் பேரவை இவ்வகையிற் குறிப்பிடத்தக்க முதல் முயற்சியாகும். 1993 இல் புதுச்சேரியில் தலித்கலைவிழா நடைபெற்றது.[2] தொடர்ந்து, கலை இலக்கிய இதழ்கள், படைப்பாக்கங்கள், நாடக-அரங்கியற் செயற்பாடுகள், கருத்தரங்குகள், ஆய்வுநூல் வெளியீடுகள் முதலிய பல்வகைத் தொடர்புஊடகங்கள் மூலமாகவும் தலித்தியம் தமிழகத்தில் தன்னை ஒரு முக்கிய சமூகசக்தியாக இனங்காட்டி வருகின்றது.

மனுசங்க இதழைத் தொடர்ந்து கோடாங்கி, நிறப்பிரிகை முதலிய இதழ்கள் தலித்தியத் தளத்திலிருந்து வெளிவருகின்றன. இவற்றுள் நிறப்பிரிகை இதழ் சார்பிலும் 'விளிம்பு' என்ற நிறுவன சார்பிலும் தலித்தியம் தொடர்பான தலைப்புக்களில் கருத்தரங்குகள் - கலந்துரையாடல்கள் என்பன நிகழ்த்தப்படுகின்றன. இவை தொகுக்கப்பட்டு நூல்வடிவங்களை எய்துகின்றன. அ. மார்க்ஸ், பொ. வேல்சாமி, ரவிக்குமார், ராஜ்கௌதமன் முதலியவர்கள் தலித்தியம் தொடர்பான ஆய்வு முயற்சிகளில் தனிக்கவனம் செலுத்தி வருகின்றனர். டாக்டர் கே.ஏ. குணசேகரன் தலித் அரங்கியல் பற்றிய தேடலில் தனிஈடுபாடு காட்டி வருகிறார். சிவகாமி, பாமா, இமயம், விழி பா இதயவேந்தன், குருசு சாக்கிரடீஸ், மாற்கு முதலிய பலர் தலித்தியத் தளத்தில் படைப்பிலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். டாக்டர். வீ. அரசு, எஸ்.வி. ராஜதுரை, வ. கீதா, கருணா மனோகரன் முதலிய ஆய்வாளர்களின் எழுத்துக்களில் தலித்தியம் சார்பான அவர்களது மனப்பாங்கு தெளிவாகப் புலப்படுகின்றது.

கடந்த ஏழு ஆண்டுகளில் தமிழக தலித்தியம் தன்னை ஒரு சமூகசக்தியாக உருவாக்கிக்கொண்டு இனங்காட்டி நிற்கும் காட்சி இது. இவ்வாறு தலித்தியம் தமிழகத்துக்கு அறிமுகமாக முன்பே, தமிழகத் தாழ்த்தப்பட்டோர் மத்தியில் கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாகப் பல்வேறு தளங்களில் விழிப்புணர்வுகள் ஏற்படத் தொடங்கிவிட்டன என்ற வரலாற்று உண்மையை இங்கு கவனத்திற்கொள்வது அவசியம்.

## 2. தமிழ்மரபில் தாழ்த்தப்பட்டோர் உணர்வுநிலையும் எழுச்சியும்: தலித்தியம் அறிமுகமாகும் வரை.

பேணப்பட்டனவாக இன்று எமக்குக் கிடைக்கும் பண்டைத்தமிழ் இலக்கியங்கள் தமிழர் சமுதாய வரலாற்றில் மேலாண்மை பெற்றிருந்தவர்களின் உணர்வுத்தொகுதிகளாகவே கொள்ளத்தக்கன. சமுதாயத்தின் எல்லா மட்டங்களிலும் இலக்கியங்கள் பிறந்திருக்கும் என்பது உய்த்துணரக்கூடியது. ஆயினும் அவற்றை எழுத்திற் பதிவு செய்தல், தொகுத்துப் பேணுதல் என்பவற்றின் மூலம் அடுத்து வரும் தலைமுறைகளுக்கு வழங்கும் ஆற்றல் ஆளும்வர்க்கமாகத் திகழ்ந்த மேட்டுக்குடியினரிடயே



படிப்பகம்

www.padippakam.com

அமைந்திருந்தது என்பது வரலாறு தரும் செய்தி. தமிழிலக்கியப் பரப்பில் பதிவு பெற்றுள்ள நந்தனார் கதை (பெரியபுராணம்), பள்ளரின் வாழ்வியற் காட்சிகள் (பள்ளு இலக்கியங்கள்) முதலிய தாழ்த்தப்பட்ட சமூகங்களின் உணர்வு வெளிப்பாடுகள் சாதியமைப்பில் மேல் நிலையில் இருந்தோரின் கண்ணோட்டத்தில் வடிவமைக்கப்பட்டவை என்பது நாம் மனங்கொள்ள வேண்டிய வரலாற்றுண்மையாகும் ஏறத்தாழ 18, 19 ஆம் நூற்றாண்டுகள் வரையான தமிழிலக்கிய வரலாறு புலப்படுத்தி நிற்கும் பொதுவான காட்சி இதுதான்.

மேற்படி காலப்பகுதிகள் வரையான வரலாற்றிலே தாழ்த்தப்பட்டோர் உணர்வு நிலையில் நேரடி வெளிப்பாடுகள் எனக் கொள்ளத்தக்க வகையில் இரண்டு ஆக்கங்கள் மட்டுமே ஆய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஒன்று கபிலரகவல் (கி.பி 13-14 ஆம் நூற்றாண்டுகள்). இன்னொன்று உத்திரநல்லூர் நங்கை பாடல் (கி.பி 15 ஆம் நூற்றாண்டு). இரண்டுமே சாதிய வேறு பாட்டுணர்வை எதிர்த்துக் குரல் கொடுப்பன. பிராமணனாகிய பகவன் என்பானுக்கும் புலைச்சியாகிய ஆதிக்கும் பிறந்தவர் என அறியப்படும் கபிலர் திருவாரூரிலே பிராமணக்குடியிருப்பில் வளர்கிறார். அவருக்கு பூணூல் தரிப்பதற்கான கால கட்டம் வந்தபோது சூழலில் உள்ள பிராமணர்கள் அதனை எதிர்க்கின்றார்கள். அவர்களை எதிர்கொண்டு கபிலர் பாடியது கபிலரகவல். உத்திரநல்லூர் நங்கை என்பாள் பறையர் சாதியள். இவளுக்கும் பிராமண இளைஞன் ஒருவனுக்கும் ஏற்பட்ட உறவைப் பிராமண சமூகம் எதிர்க்கிறது. பறையர் குடியிருப்பை எரிக்க முனைகின்றது. அவ்வேளை அந்தப் பிராமண சமூகத்தினரை நோக்கி அப்பெண் எழுப்பும் வினா வடிவில் அமைந்தது உத்திரநல்லூர் நங்கை பாடல்.[3] சாதிய அமைப்பின் 'பகுத்தறிவுக்குப் பொருந்தாத நிலையையும் அதனுள் நிலவும் போலித் தன்மையையும் மேற்படி ஆக்கங்கள் தர்க்க ரீதியாக எடுத்துரைக்கின்றன.

இவ்வாறு இப்பாடல்கள் புலப்படுத்தி நிற்கும் உணர்வுகள் அவ்வக்காலப்பகுதியில் சமூகஇயக்க வடிவம் எய்தினவா என்பதை அறியச் சான்றுகள் இல. அக் காலப்பகுதிகளில் சமுதாய அமைப்புச் சூழல் அத்தகு இயக்கநிலைக்கு வாய்ப்பானதாக இருந்திருக்க முடியாது என்பது உய்த்துணரத்தக்கது. இவ்வகையில் சமூக இயக்கநிலையிலான உணர்வெழுச்சியை நாம் கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே தரிசிக்கிறோம். ஆங்கில ஆட்சிச் சூழலில், கல்வி வாய்ப்பு அனைத்து சமூகத்தினருக்கும் திறந்துவிடப்பட்ட வரலாற்றுக் கட்டத்திலிருந்தே இவ்வகை இயக்க நிலைச் செயற்பாடுகள் முகிழ்க்கலாயின.

கடந்த நூற்றாண்டிலே சாதியத்தின் கீழ்ப்படியிலிருந்து உருவான கல்வியாளர் சிலர் பகுத்தறிவு நோக்கில் மரபுசார் சிந்தனைகளை விமர்சிக்க முற்பட்டனர்; இச் செயற்பாட்டிற்கு முதற்படியாகத் தாழ்த்தப்பட்ட சமூகங்களுக்கு அறிவூட்டவும் இயக்கநிலையில் இணைக்கவும் முயற்சிகளை மேற்கொண்டனர். பண்டிதர் க. அயோத்திதாஸர் (1845 - 1914) இரட்டைமலை சீனிவாசனார் (1960 - 1945), திரு. எம்.சி. ராஜா, பூஞ்சோலை முத்துவீரநாவலர் முதலியவர்கள் இத்தகு செயற்பாடுகளில் முன்னின்றோரில் முக்கிய மானவர்கள்.

'ஆத்திராவிடர்தலைவர்' என அறியப்படும் பூஞ்சோலை முத்துவீரநாவலர் 1866 இல் மகாவிகடதூதன் என்ற இதழை வெளியிட்டார். திரு. எம்.சி. ராஜா அவர்களின் முயற்சியால் தாழ்த்தப்பட்டோருக்கு 'ஆதித்திராவிடர்' என்ற பெயர் சட்ட சம்மதமாக வழங்கத் தொடங்கியது. பண்டிதர் அயோத்திதாஸர் அவர்கள் ஆதித்திராவிடர் இயக்கம், பகுத்தறிவு இயக்கம், பிராமணரல்லாதார் இயக்கம் என்பவற்றுக்குச் சக்திவாய்ந்த ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார். இவர் 1885 இல் திராவிடபாண்டியன் என்ற இதழையும் 1907 இல் ஒருபைசாத்தமிழன் என்ற



படிப்பகம்

www.padippakam.com

இதழையும் வெளியிட்டார். ஒருபைசாத் தமிழன் 1908 இல் தமிழன் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

தாழ்த்தப்பட்டோர் சமூகத்தில் முதன் முதலில் பட்டப்படிப்பைப் பெற்றவர் என அறியப்படும் திரு இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் பறையர் மகாசபை (1891), சென்னை மாகாணத் தாழ்த்தப்பட்டோர் மகாசபை (1928) ஆகிய மக்களியக்கங்களை நிறுவியவர். 1893 இல் இவர் பறையன் என்ற இதழை வெளியிட்டார். மகாத்மாகாந்தி, டாக்டர் அம்பேத்கார் ஆகியவர்களுடன் இணைந்து செயற்பட்டவர் இவர்.

மேற்படி காலப்பகுதியில் தாழ்த்தப்பட்டோர் தளங்களிலிருந்து சூரியோதயம் (1869), பஞ்சமன் (1871) முதலிய வேறு சில இதழ்களும் வெளிவந்தன.[4]

இவ்வாறு கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து உருப்பெறத் தொடங்கிய தாழ்த்தப்பட்டோரின் இயக்கநிலைச் செயற்பாடுகள் ஆரம்பத்திலே பகுத்தறிவுப் பார்வையுடன் அமைந்தன. பின்னர் சில காலம் பௌத்தமதசார்பு இவற்றிற் புலப்படலாயிற்று. இந்துசமய – சமூக மரபின் மூலாதாரமாகக் கொள்ளப்படும் வேத இலக்கியத்தின் கருத்துநிலைகட்கு எதிராகக் கௌதமபுத்தர் (கி.மு. 563–483) முன்வைத்த விமர்சனங்கள் தாழ்த்தப்பட்டவரின் பகுத்தறிவுப் பார்வைக்கு உவப்பானவையாகும். எனவே தாழ்த்தப்பட்டோரை வழிநடத்த முற்பட்ட சிலர் பௌத்தம் சார்ந்தனர். குறிப்பாக, பண்டிதர் க. அயோத்திதாஸர் பௌத்த சிந்தனைகளை முன்வைத்து இயங்கியவர் என்பதும் 1902இல் தென்னிந்திய பௌத்த சங்கத்தை நிறுவியவர் என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியனவாகும்.[5] மகாராஷ்டிர மாநிலத்தில் தாழ்த்தப்பட்டோரை வழிநடத்திய டாக்டர் பி.ஆர். அம்பேத்காரும் பௌத்தசார்பினர் என்பது இத்தொடர்பில் நம் கவனத்துக்குரியதாகும்.

ஏறத்தாழ 1940-50 ஆம் ஆண்டுகளில் தாழ்த்தப்பட்டோர் இயக்கங்களில் மார்க்சியப்பார்வை படியத் தொடங்குகிறது. 1920 களில் இந்தியமண்ணில் கால்பதித்த மார்க்சியம் படிப்படியாகச் சமூக-பண்பாட்டுத் துறைகளில் கவனம்செலுத்த முற்பட்ட காலப்பகுதி இது. ஏறத்தாழ இதேகாலப் பகுதியில் (1940 - 50 களில்) ஈழத்திலும் இத்தகுநிலையே நிலவியது. மார்க்சியம் முன்வைத்த சமூக சமத்துவ நோக்கும் வர்க்க உணர்வும் சாதி, மத பேதங்களுக்கு அப்பாலான ஒருமையுணர்வை - ஒருங்கிணைப்பை-உருவாக்கியபோது தாழ்த்தப்பட்டோருட்பட, சமூகத்தின் பல்வேறு தனங்கள் சார்ந்தோரும் அதில் இணைந்தனர். இவ்விணைப்பு முற்போக்கு இயக்கங்களாக முகிழ்த்தது. முற்போக்கு இலக்கியம் என்ற பொது வரையறைக்குள் தாழ்த்தப்பட்டோர் பிரச்சினைகள், அவர்கள் மத்தியில் உருவாகிவந்த உணர்வெழுச்சி என்பன கவனத்தைப் பெறலாயின. மார்க்சிய சார்பான 'சமூக இயங்கியல்' பார்வையில் இவை அணுகப்பட்டன சாதி ஏற்றத்தாழ்வுட்பட அனைத்து வகைச் சுரண்டல்களுக்கும் எதிரான வர்க்க நிலைப்பட்ட எழுச்சியில் தாழ்த்தப்பட்டோர் உணர்வுகளும் ஒன்றிணைந்து இயங்குதல் என்பதே இவ்வாறான பார்வையின் தொனிப்பொருளாயிற்று.

தமிழகத்தில் டி. செல்வராஜ், கு. சின்னப்ப பாரதி, பூமணி முதலியோரும் ஈழத்தில் டொமினிக் ஜீவா, செ. கணேசலிங்கம், கே. டானியல் மற்றும கவிஞர் சுபத்திரன் முதலியோரும் மேற்படி தாழ்த்தப்பட்டோர் பிரச்சினைகள் தொடர்பான மார்க்சிய இயங்கியலின் பல்வேறு தளப் பரிமாணங்களைத் தம் எழுத்துக்களிற் புலப்படுத்திநின்றனர். டானியலின் பஞ்சமர், அடிமைகள், கானல் முதலிய நாவல்கள் இவ்வகையிற் குறிப்பிடத்தக்க படைப்புக்களாகக் கொள்ளப்படுவன. இவ்வகைப் படைப்புக்களைப் 'பஞ்சமர் இலக்கியம்' எனச் சுட்டும் வழக்கு ஈழத்தில் உருவாகியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

1990 களில் தலித்தியம் அறிமுகமாகும் வரை தமிழ்மரபில் தாழ்த்தப்பட்டோர் உணர்வெழுச்சியின் இயக்கநிலை வரலாறு இதுதான்.

## தலித்தியத்தின் நிலைப்பாடும் அதன் 'சமூக – பண்பாட்டு'ப் பார்வையும்.

தலித்தியத்தின் நிலைப்பாட்டைத் தெரிந்து கொள்வதற்கு அதனை மேலே நாம் நோக்கிய மார்க்சியத்தோடு ஒப்பு நோக்குவது பொருத்தமாக அமையும்.

மார்க்சியம் அனைத்துப் பிரச்சினை களையும் 'பொருளியல் - உறவுநிலை'யை மையப்படுத்தியே தரிசிக்கிறது. உடைமை யுணர்வுக்கு எதிரான வர்க்கநிலைப்பட்ட எழுச்சிபற்றியே அது பேசுகிறது. தலித்திய மானது 'பொருளியல் உறவுநிலை' என்ற பார்வைக்கு மேலாக 'மனித உணர்வு நிலை'ப் பிரச்சினை பற்றிப் பேசுகிறது. வர்க்கநிலையில் மாற்றம் நிகழ்ந்தாலும் அதாவது தாழ்த்தப்பட்ட ஒருவர் பொருளி யல் நிலையிலும் கல்வி, அதிகாரநிலை என்பவற்றில் உயர்நிலை எய்தினாலும் - சாதி ஏற்றத்தாழ்வுணர்வு, தீண்டாமை ஆகியவற்றின் பாதிப்பிலிருந்து விடுபட முடியாத நிலையையே தலித்தியம் அழுத்த மாகச் சுட்டிக்காட்டுகிறது. இந்திய மண்ணுக்கே சிறப்பாகவுரிய இந்த 'சாதி ஏற்றத்தாழ்வு' என்ற சமூக அம்சத்தை எதிர்கொள்வதற்கு ஒரு தனிநிலை இயக்கச் செயற்பாடு அவசியமாகிறது என்பதே தலித்தியத்தின் நிலைப்பாடாகும். இவ் வகையில் மார்க்சியம் கூறும் வர்க்கப் போராட்டத்துக்குப் முன்னர் நிகழ்ந்து முடியவேண்டிய ஒரு பண்பாட்டுச் செயற் பாட்டை முன்னெடுப்பதே தலித்தியரின் நோக்கு நிலையாகும். இப்பண்பாட்டுச் செயற்பாட்டை அவர்கள் 'கலகப்பண்பாடு' எனச் சுட்டுவர். இக் 'கலகப்பண்பாடு' என்பது பாரம்பரியமாக நிலவிவரும் பண் பாட்டு விழுமியங்களை முற்றுமுழுதாக எதிர்த்துநின்று, 'மாற்றுக்கலாசாரம்' தேடும் முயற்சியாகும். இதனை அவர்கள் 'எதிர் கலாசாரம்', 'அ கலாசாரம்' ஆகிய தொடர்களாலும் சுட்டுவர்.

தலித்தியர் இந்திய வரலாற்றை - குறிப் பாகத் தமிழக வரலாற்றைப் பிராமண ரின் கருத்தியல் மேலாண்மையால் பல வகைகளிலும் அடக்கியொடுக்கப்பட்ட சமூகங்களின் வரலாறாகவே காண்கின்ற னர். பிராமணர்களும் அவர்களது கருத் தியல்களை ஏற்றுக்கொண்ட மேட்டுக்குடித் தமிழரும் ( வேளாளரும் ) தமிழகத்தின் ஆதிக்குடிகளின் பண்பாட்டு அடிப்படை களின் மீது மேலாதிக்கம் செலுத்தி வந்துள் ளனர் என்பதே தலித்தியரின் வரலாற்றுப் பார்வை. இவ்வகையில் சைவம், வைணவம் முதலிய சமயப்பிரிவுகள் அவற்றுடன் தொடர்புடைய தத்துவப்பிரிவுகள் கலை- பண்பாட்டுக்கூறுகள் ஆகிய அனைத்தும் பிராமணீயம் – பார்ப்பனீயம் சார்ந்தவை என்றோ அல்லது அதன் கறைபடிந்தவை என்றோதான் தலித்தியர் கருதுவது தெரிகிறது.

தமிழ்நாட்டின் பல்வேறு பிரதேசங் களிலும் தமக்கேயுரிய இயல்பான பண் பாட்டுக் கோலங்களுடன் வாழ்ந்த ஆதித் தமிழர் மத்தியில் பிராமணர் செல்வாக்கு படிப்படியாகப் பரவத்தொடங்கியது என்ப தும் உடைமைச் சமுதாய உருவாக்கச் சூழலில் இப்படர்ச்சி வலுவடைந்தது என்பதும் இவர்களது கணிப்பாகும். உழைக் கும் மக்களாகத் திகழ்ந்த ஆதித்தமிழரின் மத்தியில் உடைமையால் மேலோங்கத் தொடங்கிய மேட்டுக்குடியினர் பிராமண ரின் செல்வாக்குக்குட்பட்டனர். இச் சூழலைப் பயன்படுத்திப் பிராமணர் முன் வைத்த விழுமியங்களின் பன்முகப் பரி மாணங்களே தமிழரின் சமயம், அறம், கலை இலக்கியம் என்பனவாக நம்முன் பேசப்படும் பண்பாட்டுத் தொகுதியாகும். இவை ஆதித்தமிழரின் பண்பாட்டுக்கூறுகள் தம் இயல்பான வரலாற்று வளர்ச்சியை



படிப்பகம்

www.padippakam.com

எய்தத் தடையாக அமைந்த ஆதிக்க நிலைச் செயற்பாடுகளாகும்.[6] இவற்றை எதிர்க்கவேண்டும் என்பதே தலித்தியரின் நிலைப்பாடாகும்.

" பெரும்பாலான உழைக்கும் மக்களைத் தலித்துக்களாக்கிய இந்த உடைமைப்பண்பாட்டை, இது பீத்துகின்ற அறம், ஒழுக்கம், நேர்மை, உண்மை முதலானவற்றை நார்நாராக உரிப்பதே தலித் கடமை "[7]

என்ற ராஜ்கௌதமனின் கூற்றில் இதனைத் தெளிந்து கொள்ளலாம். இதுவே தலித்தியர் கூறும் 'கலகப் பண்பாட்டு'க்கு அடிப்படையான உணர்வு நிலையாகும். இவ்வுணர்வினூடாகத் தமது 'சுய'த்தை - வரலாற்றில் தாம் இழந்துவிட்டதாகக் கருதும் பண்பாட்டுமுகத்தை - த் தேடும் முயற்சியாகவே 'அகலாசாரம்', 'எதிர் கலாசாரம்', 'மாற்றுக்கலாசாரம்' என்னும் தொடர்களாற் சுட்டப்படும் கருத்தோட்டம் அவர்களிடம் அமைகின்றது.

## 4. தலித்தியத்தின் கலைஇலக்கிய நோக்குநிலை:

தலித்தியத்தின் அடிநாதமான - தொனிப்பொருளான - அம்சம் தாழ்த்தப்பட்டோர் தமது 'சுய' முகத்தை இனங்காணல் என்பதை முன்னரே நோக்கியுள்ளோம் இதற்குத் தடையாகவுள்ளனவாகக் கருதப்படும் அனைத்தையும் உடைத்தெறியும் நோக்கிலேயே 'கலகப்பண்பாடு' என்ற எண்ணக்கரு முன்வைக்கப்பட்டுள்ளது, இதன் தளத்தில்தான் எதிர்கலாசாரம், மாற்றுகலாசாரம் என்ற பெயர்களிலான தேடல் நிகழ்கிறது. இந்தத் தேடலின் செயற்பாங்காக தலித்தியம் சமுதாயக் கட்டமைப்பின் மையத்தைப் புறக்கணித்து விளிம்பை நோக்கிச் செல்கிறது. 'உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டே' என வழங்கி வந்த சமுதாய மையநிலைச்சிந்தனையைப் புறக்கணித்து விளிம்புநிலை மக்களின் வாழ்வியலில் இதன் கலை இலக்கியத் தேடல் நடைபெறுகிறது. இதற்கு ஏற்பவே அதன் கலை இலக்கியம் தொடர்பான கொள்கைகள் உருப்பெறத் தொடங்கியுள்ளன. இத்தகு கொள்கைகளின் உருவாக்கத்துக்கு சமகாலத்தில் தமிழில் அறிமுகமாகி வரும் 'அமைப்பியல்', 'பின்- அமைப்பியல்', 'பின்-நவீனத்துவம்' ஆகிய கலை இலக்கியச் சிந்தனைகள் பெரிதும் துணை புரிவனவாய் உள்ளன. குறிப்பாக, பின் நவீனத்துவம் தலித்தியத்துக்கு மிகவும் துணைநிற்கும்சிந்தனைத்தளமாகக் கருதப்படுகிறது. இது தொடர்பாக ராஜ் கௌதமன் தரும் விளக்கம் இங்கு சுட்டத்தக்கது

'இந்தநோக்கத்திற்கு (தலித்திய நோக்கத்திற்கு) மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளன அமைப்பியல் மற்றும் அமைப்பியலுக்கு அடுத்து எழுந்த சிந்தனைகள். குறிப்பாக பின்-நவீனத்துவ சிந்தனைகள், ஒருபிரதி, மொழியாலும், கருத்தியலாலும், தன்னிலையாலும் (Subject) தீர்மானிக்கப்படுவதாக அறுதியிட்டுச் சொன்ன விசயங்கள். தலித்துக்களுக்குச் சாதகமாக இருப்பதை இக்கட்டுரைகள் பொய் + அபத்தம் = உண்மை (நூலிலமைந்த கட்டுரைகள்) புலப்படுத்தக்கூடும். மையம் இன்மை, அனைத்துக்குமான ஒற்றைத்தீர்வில்லை, பொது ஒழுங்குச் சட்டகம் என்பதே ஒடுக்குவது தான், எல்லாக் காலத்துக்கும், இடத்துக்கும் பொருந்தக்கூடிய ஒப்பற்ற ஒரே உண்மை என ஏதும் இல்லை, முறைமீறலேமுறை, துரோகம் புரிவதே விசுவாசமாக நடப்பது, ஒப்பீட்டுத் தன்மையே ஒப்பற்ற தன்மை, பொய்யை அபத்தமாக்கினால் கிடைப்பதே உண்மை முதலான கருத்துக்கள், விளிம்பு நிலைக்கு விலக்கப்பட்ட, வரலாற்றின் குப்பைகளாக எறியப்பட்ட மக்களுக்கு உற்சாகத்தை அளிக்கின்றன.'[8]

மரபு என்ற தளத்தை முற்றுமுழுதாக மறுதலித்துநிற்கும் பின்-நவீனத்துவம் மரபு எதிர்ப்பாளரான தலித்தியருக்கு மிகவும்



படிப்பகம்

www.padippakam.com

வாய்ப்பான - பொருத்தமான - சிந்தனைத் தளமாகக் கொள்ளப்படுகின்றமை இயல்பான ஒன்றேயாகும். தலித் அரங்கியல் பற்றிய தேடலில் ஈடுபட்டுள்ள டாக்டர் கே.ஏ. குணசேகரன்.

'' தலித் அரங்கு என்பதை இப்படித் தான் இருக்கவேண்டும் எனச் சட்டகம் போட்டுத்தரமுடியாது. இப்படியான அழகியற் கொள்கைகளைக் கொண்டிருக்க வேண்டும் என வரையறுத்துக் கூற இயலாது. '' 9

எனத் தந்துள்ள விளக்கமும் மேற்படி பின் - நவீனத்துவ உணர்வோட்டத்தின் அடியாக ஊற்றெடுத்ததேயாம்.

இவ்வாறன கலை இலக்கியப்பார்வையூடாகத் தலித்தியர் தமிழின் பண்டைய, சமகால மரபு முழுவதையும் விமர்சிக்க முற்பட்டுள்ளனர். ராஜ்கௌதமனின் தலித்நோக்கில் தமிழர் பண்பாடு, பொய் + அபத்தம் = உண்மை, ரவிக்குமார் தொகுத்த தலித்: கலை - இலக்கிய - அரசியல் முதலிய நூல்கள். மற்றும் நிறப்பிரிகை இதழின் கட்டுரைகள் முதலியவற்றில் இவ்வாறான விமர்சனங்களை நாம் நோக்கலாம். பண்டைய இலக்கண நூலான தொல்காப்பியம் முதல் சமகாலப் படைப்பான 'இமய'த்தின் கோவேறுகழுதைகள் நாவல் வரை இவர்களது விமர்சனப் பார்வை விரிந்து பரந்து செல்கின்றது. இந்நூல்களில் தாழ்த்தப்பட்டோருக்கு எதிராகப் புலப்பட்டு நிற்கும் 'நுண் அரசியற்' கூறுகளை இவர்கள் தனித்துநோக்கி இனங்காண முற்பட்டனர்.

## 5. நிறைவாக ....

தமிழக தலித்தியம் தனது சமகாலத்தில் முனைப்புப் பெற்றுவரும் மற்றொரு சிந்தனைப்போக்கான - பிரச்சினையான - 'பெண்ணிய'த்தையும் தன் கவனத்திற் கொண்டு தழுவிச்செல்கிறது. பின்-நவீனத்துவத்தளம் இந்த இரண்டின் இணைவுக்கும் துணைநிற்கிறது. தமிழகத்தில் திராவிட இயக்கம் என்ற மாபெரும் சமூகசக்தியை உருவாக்கியவரான ஈ. வெ. ராமசாமிப் பெரியாரின் சமூகப்பார்வைகளில் தமக்குச் சார்பானவற்றைத் தலித்தியர் பேணிக் கொள்ள முற்பட்டுள்ளனர். பெரியார் தாழ்த்தப்பட்டோர் என்ற நிலை மாற வேண்டும் என்பதற்கும் பெண்கள்மீதான ஆண்களின் ஒடுக்குமுறை நீங்கவேண்டும் என்பதற்கும் தீவிரமாகக் குரல்கொடுத்து நின்றவர் என்பது இங்கு நம் கவனத்துக்குரியது. இவ்வாறான சார்பான கூறுகளால் தலித்தியர் பெரியாரை விமர்சித்து ஏற்றுக்கொள்ள முற்பட்டுள்ளனர். அண்மையில் பெரியாரியம் என்ற தலைப்பில் அவர்கள் வெளியிட்ட நூல் இதனைத் தெளிவுறுத்தும்.

தலித் கலை இலக்கியம் தலித்துக்களால்தான் படைக்கப்படவேண்டும் என்றவொரு கருத்து சில காலத்திற்கு முன் எழுந்தது. ஆனால் இன்று அது ஓய்ந்துவிட்டது. 'தலித்' உணர்வுள்ள எவரும் அவற்றைப் படைக்கலாம் என்ற கருத்து பொதுவாக வலுப்பெற்றுவருகிறது.

தலித்தியத்திற்கு எதிராகத் தமிழகத்தில் எழும் விமர்சனக் குரல்களில் முக்கியமானவை மார்க்சியத்தளத்தினின்று முகிழ்ப்பவையாகும். அனைத்துச் சுரண்டல்களுக்கும் தீர்வுதரக்கூடிய வகையில் ஒப்பற்ற தத்துவமான மார்க்சியம் இருக்கையில் தலித்தியம் என்ற தனிநிலைச் சிந்தனை தேவைதானா? என்பது மார்க்சியரின் வினா. மேலும் மரபாகப் பேணப்பட்டு வரும் கலை இலக்கியக் கூறுகளை முற்று முழுதாக மறுதலிக்க வேண்டும் என்ற தலித்திய கருத்துநிலைக்கு மார்க்சியம் ஆதரவானதல்ல என்பது தெளிவு. அவற்றை வர்க்கப் போராட்ட உணர்வுக்கு ஊட்டம்தரும் வகையில் பேணிக்கொள்ள வேண்டும் என்பதே மார்க்சியரின் நிலைப்பாடு ஆகும். மேலும் 'தலித்தியரின் உலக நோக்கு யாது?' என்ற வினா - அதாவது 'மார்க்சியம் கூறாத எந்த முடிவைத் தலித்



படிப்பகம்

தியம் சொல்லப்போகிறது?' என்ற வினா மார்க்சியரால் எழுப்பப்படுகின்றது.

மார்க்சியம் பேசும் வர்க்கப் போராட்டத்தால் இந்திய மண்ணுக்கே சிறப்பாக வுரிய சமூக ஏற்றத்தாழ்வு - தீண்டாமை - உணர்வு தீர்வு நாடக்கூடிய ஒன்றல்ல. மார்க்சியம் சாதி ஏற்றத்தாழ்வு பற்றிப் பேசவில்லை. எனவே சாதி ஏற்றத்தாழ்வுணர்வுக்கு எதிராகப் போராட ஒரு தனி இயக்கநிலை அவசியம்தான். மேலும் 70 ஆண்டுகளுக்கு மேலான இந்திய மார்க்சியச் செயற்பாடுகள் தாழ்த்தப்பட்டோர் பிரச்சினையில் சாதனை எதையும் புரியவில்லை. எனவே தாழ்த்தப்பட்டோர் தம் பிரச்சினைகளைப் பேசத் தனிநிலையில் இயங்க வேண்டியது அவசியமான ஒன்றுதான். தலித்தியர் மார்க்சியருககு அளிக்கும் விடையின் தொனிப்பொருள் இவைதான்.

'' ஆதித்தமிழ் உழைக்கும் மக்கள்மீது ஆதிக்கப்பரவலாகப் படர்ந்த அந்நிய மரபுசார் கூறுகளை எதற்காகப் பேணிக் கொள்ள வேண்டும்? அவை ஆதிக்கக் குறியீடுகள் அல்லவா? நாம் நமக்கேயுரிய கலாசாரக் கூறுகளை மீட்டுருவாக்க முயல்வதில் என்ன தவறு?''

மார்க்சியரின் 'கலை இலக்கிய மரபு பேணும்' சிந்தனைத்தளத்துக்கு எதிராகத் தலித்தியர் புலப்படுத்தி நிற்கும் உணர்வு நிலை இதுதான்.

இவ்வாறு தலித்தியர் மார்க்சியருக்கு விடை கூறினாலும் தலித்தியர் தம்மை மார்க்கியரின் எதிரிகளாகக் காட்டிக் கொள்ள முற்படவில்லை என்பது நமது கவனத்துக்குரியது தலித்தியருட் பலர் மார்க்சியம் கற்றவர்கள், ரொமிலா தாப்பர் (Romila Thaper) முதலிய மார்க்சிய சார்பு வரலாற்றாய்வாளர்களை மேற்கோளாக எடுத்தாள்பவர்கள். மார்க்சியம் கூறும் இயங்கியல் வழியே வரலாறைப் புரிந்துகொள்ள முற்படுவர்கள். இவர்கள் தாம் முன்வைக்கும் கலகப் பண்பாட்டை, மார்க்சியத்தின் வர்க்கப் போராட்டத்துக்கு முன்னரே நிகழ்ந்து முடியவேண்டிய முதற்கட்டச் செயற்பாடாக முன்மொழிபவர்கள்.

'' தலித் கலகப் பண்பாட்டில் மேற்கொள்ளப்படும் தலைகீழ் மாற்ற நடவடிக்கைகள் உன்னதமான பண்பாட்டு நடவடிக்கைகளாகும் .. .. இச் செயற்பாடு தான் இரண்டாம் கட்டப்புரட்சிகரச் செயற்பாட்டிற்குத் தலித்துக்களைத் தயார் செய்கிறது. மார்க்சியம் முன்வைத்த சோசலிச பொதுவுடைமைச் சமூகத்தை நோக்கிய வர்க்கப் போராட்டம் என்கிற புரட்சிகரப் போராட்டத்திற்கு முன்தலித் கலகப் பண்பாட்டு எழுச்சி நடந்தே தீர வேண்டும். 10

என்ற ராஜ்கௌதமனின் கூற்று இதனைத் தெளிவுறுத்தும்.

எனவே மார்க்சியம் என்ற மகாநதியில் கலக்கப்போகும் ஒரு உபநதியாகவே தலித்தியம் கருதத்தக்கது. எனவே 'மார்க்சியம் எதிர் தலித்தியம்'' என்ற நிலைக்கு இடமில்லை.

ஆயினும் நடைமுறையில் பிரச்சினைகள் தோன்றும் என்பதும் மறுக்க முடியாததாகும். குறிப்பாக மார்க்சியர் வர்க்கப் போராட்டத்தை முன்னெடுக்கும் ஒரு சூழலில் தலித்தியர் அதில் இணைத்து கொள்வார்களா? அல்லது தமது கலகப் பண்பாட்டு நடவடிக்கைகள் நிறைவெய்தும் வரை விலகி நிற்பார்களா? அதேபோல் தலித் போராட்டம் தீவிரமாக உள்ள சூழலில் மார்க்சியர் எத்தகு அணுகுமுறையை மேற்கொள்வர்? தமிழகத்தின் அரசியல் சமூக - பண்பாட்டுத் தளங்களில் விவாதப் பொருளாகத் திகழும் வினாக்கள் இவை. □

www.padippakam.com

# அடிக்குறிப்புகள்

1. மேலதிக விளக்கங்கள், விபரங்கள் ஆகியவற்றுக்கு: பார்க்க:
டாங்ளே, அர்ஜுன். தலித் இலக்கியம் போக்கும் வரலாறும் மகாராஷ்டிர மொழி மூலத்திலிருந்து தமிழில் சதாசிவம், தி.சு. தாமரைச்செல்வி பதிப்பகம், சென்னை. 1992

2. உஞ்சைராசன், 'தலித் – ( தாழ்த்தப்பட்டோர் ) தமிழ் பண்பாடு' தலித்: கலை இலக்கியம் அரசியல்', தொகுப்பு: ரவிக்குமார், (தலித்கலை விழாக்குழு நெய்வேலி) அலைகள் அச்சகம், சென்னை 1996 ப. 41.

3. வேல்சாமி, பொ., மார்க்ஸ், அ. ''தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் சாதி எதிர்ப்புக் குரல் ஒரு மேலோட்டமான பார்வையில் தென்படும் சில குறிப்புகள்'' நிறப்பிரிகை இலக்கிய இணைப்பு, தொடர்பு முகவரி; அ. பெ. எண் 192 பாண்டிச்சேரி, ஜனவரி 1994, பக். 59 - 61.

4. மணி, பெ. சு. கார்ள்மார்க்சின் இலக்கிய இதயம், பூங்கொடிப்பதிப்பகம் சென்னை 1986, ப. 35, 263 - 64.

வேதசகாயகுமார், டாக்டர் எம். தற்கால இலக்கியம் வாசகப் பார்வை, ரோகிணி பிரிண்டர்ஸ் நாகர் கோவில் 1995 ப. 42.

5. மேற்படி:

6. விளக்கத்திற்கு: பார்க்க:

ராஜ்கௌதமன், தலித்பார்வையில் தமிழ்ப்பண்பாடு சங்ககாலம், கௌரி பதிப்பகம், புதுச்சேரி 1994.

7. ராஜ் கௌதமன் பொய் + அபத்தம் = உண்மை: விளிம்பு டிரஸ்ட் கோவை : 1995, ப. 4.

8. மேற்படி

9. குணசேகரன், முனைவர் கே. ஏ. தலித் அரங்கியல், கீழைக்காற்று வெளியீட்டகம் சென்னை 1995. ப. V

10. ராஜ் கௌதமன், தலித்பண்பாடு, கௌரிபதிப்பகம் புதுவை. 1993. ப. 27

(மேற்கோள்களில் அமைந்த தடிப்பு எழுத்துக்கள் கட்டுரையாசிரியரால் இடப்பட்டவை)



படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி vi இதழ் iii – 1994

# யாழ்ப்பாண இராச்சியமும் 1591 ஆம் ஆண்டில் இடம்பெற்ற நல்லூர் உடன்படிக்கையும்

சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்

ஐரோப்பிய ஆதிக்கப்படர்ச்சியின் தாக்கங்களை மிக ஆரம்பத்தில் இருந்தே எதிர்கொண்ட நாடுகளுள் ஒன்றாக இலங்கை அமைகின்றது. 1498 ஆம் ஆண்டில் இந்தியக் கரையை அடைந்த போர்த்துக்கேயர், பதினாறாம் நூற்றாண்டின் மிக ஆரம்பத்திலேயே இலங்கைக்கும் வந்தனர். அவ்வேளையில் இலங்கையில் மூன்று பிரதான இராச்சியங்களும் பல வன்னிச் சிற்றரசுகளும் இருந்தன. போர்த்துக்கேயரின் ஆரம்பகாலத் தொடர்புகளும், நடவடிக்கைகளும் கரையோர இராச்சியங்களான கோட்டை, யாழ்ப்பாணம் ஆகியவற்றுடனேயே ஏற்பட்டிருந்தன. காலப்போக்கில் இப்பகுதிகளில் போர்த்துக்கேயரின் ஆதிக்கம் படிப்படியாக வளர்ச்சிபெற்றுச் சென்று இறுதியில் நேரடி ஆட்சி நிறுவப்படுவதையும் காணலாம். இவ்விரு இராச்சியங்களினதும் அரசியல், பொருளாதார, சமூக, சமய நிலைகள் சில வழிகளில் ஒத்த போக்கினையும் சில வழிகளில் வேறுபட்ட பண்புகளையும் உள்ளடக்கியிருந்தன. இதனால் இவ்விரு பகுதிகளில் இடம்பெற்ற அரசியல் மாற்றங்களும் ஒத்த, வேறுபட்ட தன்மைகளைக் கொண்டிருந்தன. கோட்டை இராச்சியம் 1597 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரின் நேரடி ஆதிக்கத்தின் கீழ்ச்சென்றது. யாழ்ப்பாண இராச்சியம் 1619 ஆம் ஆண்டிலே போர்த்துக்கேயரின் நேரடி ஆட்சியின் கீழ்ச்சென்றது. இவ்விரு இராச்சியங்களிலும் போர்த்துக்கேயரின் ஆதிக்கம் கட்டம் கட்டமாகவே அபிவிருத்தி அடைந்தது. அந்தவகையில் போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாண இராச்சியத்திற்கும் இடையிலான தொடர்பிலும், யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசியல் வரலாற்றிலும் ஒரு முக்கிய கட்டத்தினைக் குறித்து நிற்பதாக 1591 ஆம் ஆண்டு நல்லூர் உடன்படிக்கை அமைகின்றது.

கோட்டை இராச்சியத்தில் கிடைக்கப்பெற்ற வாசனைத் திரவியங்கள், போர்த்துக்கேயர் அப்பகுதியின் மீது அதிக கவனம் செலுத்துவதற்கு ஏதுவாயமைந்தது. யாழ்ப்பாண இராச்சியத்தில் போர்த்துக்கேயரின் கவனத்தை ஈர்க்கக்கூடிய பொருட்கள் எதுவும் இருக்கவில்லை. அவர்கள் தம் கீழ்த்திசைப் பேரரசைப் பாதுகாக்கும் அவசியம் ஏற்பட்டபோதே இவ்வரசின்மீது கவனம் செலுத்தத் தொடங்கினர். இவ்வரசின் புவியியல் அமைவிடம், கேந்திர முக்கியத்துவம், தென்னிந்திய தொடர்புகள் என்பவை அவற்றுட் குறிப்பிடத்தக்கவை ஆகும். பிற்பட்ட காலத்திலேயே யாழ்ப்பாண அரசு பொருளாதார நோக்கிலும் புறக்கணிக்கக்கூடியதல்ல என்ற விடயம் உணரப்



படிப்பகம்

பட்டது. ( Abeysinghe, T,1980. p.2 ) யானை ஏற்றுமதியில் யாழ்ப்பாண அரசு சிறப்பிடம் வகித்தது.

மன்னாரர்ப்பகுதியில் வாழ்ந்த மக்களுக்கும் தென்னிந்திய கரையோரப் பகுதி மக்களுக்குமிடையில் இருந்த தொடர்புகள், அங்கு மதமாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிசெய்தது. அதற்கு எதிராக யாழ்ப்பாண அரசன் மேற்கொண்ட நடவடிக்கை போர்த்துக்கேய, கத்தோலிக்க செயற்பாடுகளுக்கு ஒரு சவாலாகவே அமைந்தது. இவற்றின் காரணமாக 1560 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசின் மீதான முதலாவது படையெடுப்பை மேற்கொண்டனர். அப்படையெடுப்பு, அக்காலத்தில் போர்த்துக்கேயரின் கீழ்த்திசைப் பேரரசுக்கான இராஜப் பிரதிநிதியாயிருந்த கொன்ஸ்தாந்தினோ த பிரகன்சா என்பவன் தலைமையில் இடம்பெற்றது. யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றி மன்னனைப் பதவி நீக்குவது என்ற நோக்கில் செய்யப்பட்ட இப்படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. ஆயினும் யாழ்ப்பாண அரசின் ஒரு பகுதியாக விளங்கிய மன்னாரைப் போர்த்துக்கேயரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் அது கொண்டுவந்தது. இதனால் அப்பிரதேசத்தின் முத்துக்குளிப்பு நடவடிக்கைகள் அவர்கள் வசம் சென்றது. யாழ்ப்பாண இராச்சியத்தின் கடல் வர்த்தகத்தின் மீதும் குறிப்பிடத்தக்களவு மேலாதிக்கம் பெறமுடிந்தது. அத்துடன் யாழ்ப்பாண அரசின் அரசியல் விடயங்களிலும் தலையீடுகள் செய்யமுடிந்தது.

இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலம் பற்றிய விடயங்களை இரண்டு சிங்கள வரலாற்றாசிரியர்கள், பல்வேறு போர்த்துக்கேய ஆதாரங்களையும் பயன்படுத்தி எழுதி உள்ளனர். பேராசிரியர் சந்திரா த சில்வா என்பவர் 'இலங்கையில் போர்த்துக்கேயர்' ( The Portuguese in Ceylon 1617 - 1638, Colombo, 1972. ) என்ற நூலையும், பேராசிரியர் ரிகிரி அபயசிங்க 'இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சி' (The Portuguese Rule in Ceylon (1594 - 1612 Colombo, 1966) போர்த்துக்கேயரின் கீழான யாழ்ப்பாணம் (Jaffna under the Portuguese Colombo 1986) ஆகிய நூல்களையும் எழுதினர். இவற்றில் 1591 இற்கு முன்பிருந்தே போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசர்களிடமிருந்து திறையாகக் குறிப்பிட்டளவு யானைகளை அல்லது அதன் பெறுமதிக்குச் சமமான பணத்தினைப் பெற்றுவந்தனர் என்பதைக் காட்டியுள்ளனர். பேராசிரியர் ரிகிரி அபயசிங்க அவர்கள், 'மன்னாரிலிருந்த போர்த்துக்கேயர்கள் வருடாந்தம் பத்து யானைகளை அல்லது அதற்குப் பெறுமதியான பணத்தினைத் திறையாகப் பெற்றார்கள். இது எப்பொழுது தொடக்கம் வழங்கப்பட்டது எனத் தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும் 1582இல் இருந்து வழங்கப்பட்டதென்பதை நிச்சயிக்க முடிகின்றது' எனக் கூறுகின்றார் (Abeysinghe, T.1986. p.2 ) பேராசிரியர் சந்திரா த சில்வா, 'யாழ்ப்பாண மன்னர்கள் 1580 களில் இருந்து வருடாந்தம் இரண்டு யானைகளைப் போர்த்துக்கேயருக்குத் திறையாக வழங்கி வந்தனர்.' ( de Silva, C.R 1972 p.202 ) எனக் கூறுகின்றார். எவ்வாறாயினும் யாழ்ப்பாண மன்னர்கள் 1591ற்கு முன்பிருந்தே போர்த்துக்கேயர்களுக்குத் திறையாகவோ அன்றிக் கொடுப்பனவாகவோ யானைகளை வழங்கி வந்தனர் எனக் கொள்ளலாம்.

1591ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம் மீதான இரண்டாம் படையெடுப்பை மேற்கொண்டனர். இவ்வேளையில் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாகப் புவிராஜபண்டாரம் பரராஜசேகரம் என்பவன் இருந்தான். இவன் முதலாம் சங்கிலியன் (1519 - 1560) பின் ஆட்சிக்கு வந்து 1561 – 1570 வரையிலும் ஆட்சி நடத்திய பின், போர்த்துக்கேயர் உதவியுடன் பெரியபிள்ளை என்பவன் ஆட்சியைப் பெற்றுக்கொண்டமை காரணமாகப் பதவி நீக்கப்பட்டவனாவான். மீண்டும் 1582 தொடக்கம் ஆட்சி நடத்தி இம் மன்னன் போர்த்துக்கேயருக்கும் கத்தோலிக்க மதத்

www.padippakam.com

திற்கும் எதிரான கடும்போக்கினைக் கடைப் பிடித்தான். போர்த்துக்கேயருக்கு எதிரான சக்திகளுடன் இணைந்து இம் முயற்சிகளில் ஈடுபட்டான்.

அவனது நடவடிக்கைகள் பற்றி திரினிடாடே சுவாமிகள் கூறுமிடத்து 'புவிராஜ ராஜு' என்ற மன்னன் தனது மக்களைச் சிறு காரணங்களுக்காவும் கொலைத் தண்டனைக்கு உட்படுத்தும் கொடியவனாக இருந்தான். போர்த்துக்கேயருக்கும், கிறிஸ்துவின் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் பெரும் எதிரியாக விளங்கியதோடு அவனது பகுதிகளில் எமது மதப்பணிகளை மேற்கொள்ளவும் அனுமதிக்காதிருந்தான். அத்துடன் எமது எதிரிகளுக்கு உதவி செய்தான் என்கிறார்.

(".This barbarous tyrant was so insolent that he had taken the name of Puni (Puvi) Raja Raju, which means King of Kings of earth He was so cruel that on the slightest pretext he put his vassals to death. He was so great an enemy of the Portuguese and of the Faith of Christ that he never allowed a Religious in his territories. Moreover he profited by every occasion to favour our enemies .. ")
(Trinidade; P ,1972. p.185.)

மற்றுமோர் முற்பட்ட போர்த்துக்கேய வரலாற்றுக் குறிப்பில் இருந்து, 'இக் குடா நாட்டின் ஆட்சியாளன் கண்டி, கொழும்பு ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு வழங்கியதன் காரணமாக அக்காலத்தில் போர்த்துக்கேய இராஜப் பிரதிநிதியான அல்புகூர்க்குகே, இம்மன்னனைத் தண்டிப்பதில் கவனம் செலுத்தினான். "... The ruler of this Peninsula, probably encouraged thereto by the troubles in which the Portuguese were involved in the Kandyan territories and in the vicinity of Colombo, rebelled against the suzerainty (actual or nominal) of the Portuguese, when therefore Mathias de Albuquerque returned to India in May 1591 as one of the first matters to engage his attention was the punishment of this rebel King. ."
(Couto – p. 393 - 4)

இவ்வாறு போர்த்துக்கேயருக்கு எதிரான தீவிரமான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட புவிராஜ பண்டாரம், மன்னாரில் இருந்து போர்த்துக்கேயரை விரட்டும் வகையில் தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டு வந்தான்.

1591 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் மீதான படை நடவடிக்கை அந்திரே பெற்றாடோ த மெடன்கா (Andre furtade de Mendonca) என்பவன் தலைமையில் நடத்தப்பட்டது. இவ்வேளையில் மன்னார் மீதான தாக்குதலில் புவிராஜ பண்டாரம் கள்ளிக்கோட்டை சமோரின் உதவியைப் பெற்றிருந்தான். படையெடுப்பாளர்கள் மன்னாரைப் பாதுகாத்ததுடன், யாழ்ப்பாணம் மீதான நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். இப்படை நடவடிக்கைகளில் தென்னிந்தியாவில் இருந்து மன்னாரில் வந்து குடியேறிய 5,000 கிறிஸ்தவர்களும் இணைந்திருந்தார்கள் எனக் கூட்டோ கூறுகின்றான். (" ...The combined Portuguese forces assislted by some five thousand christian paravas who hadfled to Mannar from the tyranny of the Nayak of Madura, Marched on Jaffna and completely defeated the King. ..")

போரில் மன்னனும் அவனது மகனும் படைத்தளபதியும் பல பிரதானிகளும் படுகொலை செய்யப்பட்டனர். போர் முடிவடைந்த பின்னர் மிகவும் வளம் பெற்றிருந்த அரண்மனை வெற்றியாளர்களால் சூறையாடப்பட்டது பணம், தங்க ஆபரணங்கள், கப்பல்கள் ஆகியவற்றுடன் அக்காலத்தில் போர்த்துக்கலில் உபயோகத்திலிருந்த புதிய இராணுவ உபகரணங்களும் அடங்கியிருந்தன. (Couto: p. 393 - 4.)

இதன் பின்னர் அரசின் முதலிமார்கள், பிறதலைவர்கள் ஆகியோரை அழைத்து,



படிப்பகம்

போர்த்துக்கல் மன்னனின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டு சத்தியம் செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். அவர்களும் அதற்கு இசைந்தனர். இதன் பின்னர் படைத்தளபதியும், மதகுருமார்களும் இணைந்து கூடிய சபையின் தீர்மானப்படி, சுதேச அரசகுமாரன் ஒருவனை ஆட்சியாளனாகப் பதவியில் அமர்த்தினர். இதன்படி போரின் போது போர்த்துக்கேயரிடம் அடைக்கலம் பெற்றவனும், 1570 - 1582 காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தில் போர்த்துக்கேய ஆதரவுடன் அரசு நடத்திய பெரிய பிள்ளையின் மகனுமாகிய எதிர்மன்னன் சிங்ககுமாரன் என்பவனைப் பதவியில் அமர்த்தினர். இவ்வாறு செய்வதற்குப் பல நல்ல காரணங்கள் இருப்பதாகவும் கருதினர். இதன் பின்னர் இராச்சியத்தின் துறைகளில் நின்ற கடற்கலங்கள் இரண்டினைத் தவிர மிகுதி யாவற்றினையும் அழித்தனர். தென்னிந்திய, முஸ்லீம் படைவீரர்கள் அழிக்கப்பட்டனர். மன்னனின் வேண்டுகோளின்படி 100 போர்த்துக்கேயரையும், 200 கூலிப்படையினரையும் உள்ளடக்கிய ஒரு படைப்பிரிவு, நிறுத்தி வைக்கப்பட்டது.

இவை 1591 ஆம் ஆண்டுப் படையெடுப்பின் பின் பெற்றாடோவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி கேய்ரோஸ் சுவாமிகள் தரும் விபரங்களாகும். இக்குறிப்பிட்ட காலப்பகுதி குறித்து நூல்களை எழுதிய, இந்நூற்றாண்டின் முற்பகுதி வரலாற்றாசிரியர் இங்கு இடம்பெற்ற நடவடிக்கைகளை ''நல்லூர் உடன்படிக்கை (Nallur Convention) என அழைத்துள்ளனர்.

இது குறித்த விடயங்களைக்கொண்ட ஆவணங்கள் போர்த்துக்கல் ஆவணச் சாலைகளில் உள்ளனவா எனத் தெரியவில்லை. ஆனால் போர்த்துக்கேயரின் இலங்கைத் தொடர்புகள் குறித்த மூல ஆவணங்களைப் பரிசோதிக்கும் வாய்ப்புப் பெற்ற பேராசிரியர் சந்திரா த சில்வா தரும் மறைமுகமான குறிப்பு அத்தகைய ஒரு ஆவணம் இருக்கக்கூடும் எனத் தீர்மானிக்க வைக்கின்றது. அஃதாவது 1591 ஆம் ஆண்டுத் தீர்வின்படி போர்த்துக்கேயர் 12 யானைகளையும், வலிகாமம், வடமராட்சி ஆகிய மாகாணங்களின் வருமானத்தையும் பெற்றனர். பின்னையதன் பெறுமதி 3000 செராபிம்ஸ்

By the terms of the settlement of 1591 the Portuguese obtained twelve elephants as well as the revenues of the proivinccs of Valikamam and Vadamarchi. The latter was worth over 3000 Xerafims '' (de Silva, C.R. 1972, p. 200 n)

மேற்படி ஆதாரங்களில் இருந்து 1591 ஆம் ஆண்டின் பின் யாழ்ப்பாண இராச்சியம் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்ட ஆட்சியாளரால் ஆளப்பட்டது எனக்கூறலாம். அவையாவன:

1. ''அவர்கள் வருடாந்தம் பன்னிரண்டு யானைகளையும் வலிகாமம், வடமராட்சி ஆகிய மாகாணங்களில் இருந்து கிடைக்கும் வருமானங்களையும் போர்த்துக்கேயருக்குத் திறையாக வழங்கவேண்டி இருந்தது

2. யாழ்ப்பாண அரசின் வெளிநாட்டுத் தொடர்புகள் முழுமையாகக் கட்டுபடுத்தப்பட்டன. போர்த்துக்கேயரின் எதிரிகள் அகற்றப்பட்டனர். மேற்கொண்டு எவரையும் அனுமதிக்கக் கூடாது.

3. இதன்மூலம் வருவாயில் பெருமளவு பங்கினைப் பெற்றிருந்த வெளிநாட்டு வர்த்தகம் கட்டுப்படுத்தப்பட்டது

4. நாட்டின் சகல பகுதிகளிலும் கட்டுப்பாடற்ற வகையில் கத்தோலிக்க மத நடவடிக்கைகள் நடைபெறுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

www.padippakam.com

5. போர்த்துக்கேயரால் அனுமதிக்கப் பட்ட ஒருவரே போர்த்துக்கேய முடியின் மேலாதிக்கத்தினை ஏற்றுக் கொண்டபின், யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆட்சியாளராகப் பதவி வகிக்க முடியும்.

இத்தீர்வின்படி யாழ்ப்பாண இராச்சியத்தின இறைமை போர்த்துக்கேயர் வசம் செல்வதை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் யாழ்ப்பாண இராச்சியத்தின் பொருளாதார பலமும், குறிப்பிடத்தக்க அளவு போர்த்துக்கேயரின் கைக்குச் சென்றது. இப்பிரதேசத்தில் கத்தோலிக்க மதத்திற்குத் தழுவிய ஒரு பிரிவினர் போர்த்துக்கேயருக்குச் சாதகமாக எழுச்சி பெறுவதையும் காணமுடிகின்றது.

சுருக்கமாகக் கூறுவதானால் அரசியல், பொருளாதார, சமய துறைகளில் மாற்றங்களைச் சுட்டி நிற்கும் இந்த அம்சங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தின் வீழ்ச்சியைக் குறிப்பதாக அல்லது இந்த இராச்சியத்தில் பின்னர் போர்த்துக்கேயர் நேரடி ஆட்சி பெறுவதற்கு வழி செய்வதாக அமைந்தது. Jaffna was one step nearer to direct control by the Portuguese '' Abeysinghe T. 1986, p.3)

இவ்வுடன்பாட்டின்படி எதிர் மன்ன சிங்ககுமாரன் ஆட்சியை நடத்திய ஒரு சிறிது காலத்திற்கு உள்ளாகவே இராச்சியத்திற்குள் ஒரு சதி முயற்சி இடம்பெற்றது. அரசின் முதலிமார்களும், பிற தலைவர்களும் இதில் ஈடுபட்டனர். தஞ்சாவூர், கண்டி ஆகிய அரசுகளிடம் இருந்து படையுதவி பெற்றனர். இராமேஸ்வரத்தில் இருந்து ஒரு இராசகுமாரனை அழைத்து ஆட்சியில் அமர்த்த முனைந்தனர். இதனை முன்கூட்டியே அறிந்த எதிர்மன்ன சிங்க குமாரன் மன்னாரில் இருந்த போர்த்துக் கேயருக்குத் தகவல் அனுப்பினான். உதவிக்கு வந்த போர்த்துக்கேயர் சதி முயற்சியை முறியடித்தனர். (Queyroz. p.454)

எதிர்மன்னசிங்க குமாரன் ஏப்ரல் 1761 வரை ஆட்சியை நடத்தினான். (de. Silva, C. R. 1972 p. 202) அவன் ஆட்சியின் ஆரம்பத்தில் போர்த்துக்கேயரின் விருப்பங்களை நிறைவேற்றி வந்தான். மத நடவடிக்கைகளுக்கு வேண்டிய உதவிகளை வழங்கினான். ஆனால் பிற்பட்ட காலத்தில் மறைமுகமாகப் போர்த்துக் கேயருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டான். கத்தோலிக்க மதத்திற்குச் சாதகமற்ற நடவடிக்கைகளுலும் செயற்பட்டான். போர்த்துக்கேய அலுவலர்களும் மதகுருமார்களும் மன்னனிடம் மீண்டும் மீண்டும் நிதியையும் நிலப்பகுதிகளையும் வழங்குமாறு தொல்லை கொடுத்து வந்தனர். மன்னனும் போர்த்துக்கேயரின் திகப்படியான கட்டுப்பாடுகளில் இருந்தும் கெடுபிடிகளில் இருந்தும் விடுபட்டுக் கொள்ள விரும்பியதோடு, உள்ளூர் மக்களின் விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அவர்களது அபிலாசைகளுக்கும் இயைந்து நடக்க விரும்பினான். இவற்றின் காரணமாக நேரடியாக அல்லாது போனாலும் மறைமுகமாகப் பல காரியங்களைச் செய்தான். பிறர் செய்வதற்கும் அனுமதித்தான். அந்த வகையில் மன்னார் அதிகாரிகள் திறை பெற்றுக்கொள்வதில் மேற்கொண்டுவந்த அத்துமீறல் செயல்கள் பற்றிக் கோவாவில் இருந்த இராஜப் பிரதிநிதிக்குப் பல தடவைகள் முறைப்பாடு செய்திருந்தான்.

கண்டி அரசில் ஆட்சியை நடத்தி வந்த விமலதர்ம சூரியனுக்கும் (1593 - 1604), அவனுக்குப்பின் ஆட்சி நடத்திய சேனரதனுக்கும் (1604 - 1635) தென்னிந்தியாவில் இருந்து படையுதவி, ஆயுத உதவி ஆகியவை கிடைப்பதற்கு உதவி செய்தான்.

எதிர்மன்னசிங்ககுமாரனின் செயற்பாடுகள் குறித்து 1595 ஆம் ஆண்டில் இருந்தே போர்த்துக்கேயர்கள் ஐயப்பாடு கொண்டிருந்தனர். குறிப்பாகக் கண்டி மன்னனுக்கு உதவும் விடயம் தெரிந்திருந்தது. 1614 ஆம் ஆண்டு போர்த்துக்கல்



படிப்பகம்

www.padippakam.com

மன்னன், கொழும்பில் உள்ள பிரதான தளபதிக்கு அனுப்பிய அறிவுறுத்தல் கடிதத்தில், எதிர்மன்னசிங்ககுமாரனைப் பதவியில் இருந்து நீக்குமாறு கூறியிருந்தான். (de. Silva, C. R. 1972, p. 11)

எதிர்மன்னசிங்ககுமாரன் கத்தோலிக்க மதத்திற்கு எதிராக உள்ளூர் மக்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் மறைமுகமாக ஆதரித்தான். (Queyroz 445) Abeysinghe, 1986, p. 3) இவ்வாறு பார்க்குமிடத்து, பெயரளவில் போர்த்துக்கேய மேலாண்மையை ஏற்றுக்கொண்ட எதிர்மன்னசிங்ககுமாரன் செயலளவில் தனது சுயாதீனத்தை இயலுமான அளவிற்குப் பேணியிருந்தான் எனக் கொள்ளமுடிகின்றது.

போர்த்துக்கேய ஆதிக்க விஸ்தரிப்பின் போது, சுதேச ஆட்சியாளர்கள் தம்மிடையேயான போட்டிகளை விட்டு, அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராக ஒருங்கிணைந்து செயற்பட்டமை இக்காலகட்டத்தில் இயல்பான ஒரு நிகழ்வாக இருந்தது. குறிப்பாகக் கண்டிக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையிலான உறவு இக்காலத்தில் நெருக்கமானதாக இருந்தது. சேனரதன் தன் புதல்வர்களுக்கு யாழ்ப்பாண அரசுக்குரிய இளவரசிகளைத் திருமணம் செய்தமையும் யாழ்ப்பாணம் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்டபின் சேனரதன் யாழ்ப்பாணத்தில் இருந்து போர்த்துக்கேயரை விரட்டுவதற்குப் படையெடுப்புக்களை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

போர்த்துக்கேயர் 1591 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய பின்னர் இத்தகைய ஆட்சிமுறையை ஏற்படுத்த விரும்பியமைக்கான காரணங்கள் யாவை என நோக்குவதும் அவசியமானதாகும். படைபலத்தின் மூலம் (சிறிதளவு உள்ளூர் ஆதரவும் இருந்திருக்கலாம்) வெற்றி பெற்ற போர்த்துக்கேயர் நேரடி ஆட்சியை ஏற்படுத்த விரும்பவில்லை. ஏனெனில் தாம் பெறக்கூடிய யாவற்றையும் தமது தயவில் தங்கியிருக்கும் ஒரு ஆட்சியாளன் வாயிலாகப் பெற்றுக்கொள்ளும் சாத்தியமிருந்தது; இவ்வாறு ஒரு முறையினைக் கையாளுமிடத்து, தாம் எதையும் இழந்து விடுவதாக இருக்கவில்லை. நேரடி ஆட்சியைப் பெறும் கொள்கை சற்றுப் பிற்பட்ட காலத்திலேயே போர்த்துக்கேயரால் கைக்கொள்ளப்படத் தொடங்கியது.

அத்துடன் நேரடி ஆட்சியை நிலைநாட்டி நிர்வாகம் செய்யக்கூடிய நிலைக்கு யாழ்ப்பாண இராச்சியம் தயார்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அதாவது கைப்பற்றுதல் போன்று, நிர்வாகம் செய்வதென்பது இலகுவானதல்ல. அதற்குக் குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்களின் ஒரு பகுதியினரது ஆதரவாயினும் அவசியமானதாகும். போர்த்துக்கேயரை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பிரிவினராயினும் யாழ்ப்பாண இராச்சியத்தில் வளர்க்கப்படவில்லை. 1591 இன் பின்னரே மதமாற்ற நடவடிக்கைகள் காரணமாக போர்த்துக்கேயரை ஆதரிக்கும் ஒரு பிரிவினர் உருவாகத் தொடங்கினர்.

1591 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண இராச்சியத்தில் செய்து கொள்ளப்பட்டது போன்ற உடன்பாடுகள், போர்த்துக்கேயரின் கடல்கடந்த நடவடிக்கையின்போது, பிற இடங்களிலும் செய்யப்பட்டிருந்தன. 1632 இல் கோவாவிலும், 1640 இல் பிறேசிலும் இத்தகு உடன்பாடுகள் செய்யப்பட்டன எனக்கூறப்படுகின்றது. கோட்டை அரசிலும் 1597 இல் ஒரு உடன்பாடு செய்யப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கேயர் கால இலங்கை வரலாறு பற்றி எழுதிய வண. எஸ். ஜி. பெரேரா (Perera, S. G, p. 57) போன்றவர்கள், யாழ்ப்பாண அரசில் செய்யப்பட்ட தீர்வினை ''நல்லூர் உடன்படிக்கை'' (Nallur Convention) எனவும், கோட்டையில் செய்யப்பட்ட ஒழுங்குபாட்டினை ''மல்வானை உடன்படிக்கை'' (Malwana Convention) எனவும் அழைத்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

இருபதாம் நூற்றாண்டில் இக்காலப் பகுதி பற்றி ஆய்வு நடத்திய ரிகிரி அபய சிங்க அவர்கள், ''மல்வானை உடன் படிக்கை என்ற புனைவு'' (Abeysinghe, T. '' The Myth of the Malwana Convention'' Thes Ceylon Journal of Historical and Social Studies, Vol. VII No, 1 1965 p. 67 - 72) என எழுதியுள்ள கட்டுரையில், தர்மபால மன்னன் இறந்ததும் போர்த்துக்கேயர் கொழும்பில் ஒரு சபையினைக் கூட்டினர். அதில் இராச்சியத்தின் பிரதானிகள், முதலிமார்கள் ஆகியோர் அழைக்கப்பட்டு போர்த்துக்கல் மன்னனின் கீழ் அம்மக்கள் ஆளப்படுவதால் போர்த்துக்கல் நாட்டின் சட்டப்படி ஆளப்படுவார்கள் எனவும் அதனை ஏற்று சத்தியப் பிரமாணம் செய்யும்படியும் கேட்டனர். ஆனால் அம்மக்கள் தாம் இரண்டு தினங்கள் ஆலோசனை செய்த பின்னர் தமது சட்டங்களும் வழக்கங்களும் பெறுமதி மிக்கதாகக் கருதுவதால், அதன்படியே தம்மை ஆளவேண்டும் எனக் கேட்டனர். இதனைப் பரிசீலித்த பின் வேறு வழியில்லாத காரணத்தால் அவர்களின் கருத்திற்கு உடன்பட்டுச் சத்தியப்பிரமாணம் செய்தான். அதன் பின் கோட்டையின் பிரமுகர்களும் போர்த்துக்கல் மன்னனுக்கு விசுவாசமாகச் சேவையாற்றுவதாகச் சத்தியப்பிரமாணம் செய்தனர். இது 27 மே 1597 இல் தர்மபாலன் இறந்த சில தினங்களுக்குள் செய்யப்பட்டது. கூட்டோவின் குறிப்பின்படி இவ்வுடன்பாடு கொழும்பிலேயே செய்யப்பட்டது. இதனையே பின்னர் வந்தவர்கள் பின் போர்த்துக்கேயரின் தலைநகராகத் தெரிவு செய்து நிர்வாகம் நடத்திய மல்வானையில் இடம்பெற்றதாகக் கருதினர். குவெய்ரோஸ் சுவாமிகளின் இறுதித் தொகுதிகளில் மல்வானை உடன்பாடு (Quez p. 1010) பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றிருந்தாலும், அது பிற்காலத்தில் 1630 களில் உருவாகிய ஒரு புனைவின் வெளிப்பாடென்பது, மேற்படி ஆசிரியரின் கருத்தாகும்.

எவ்வாறாயினும் கோட்டையில் இராச்சியத்தின் பிரதானிகளுக்கும் போர்த்துக்கேய ஆட்சியாளர்களுக்கும் இடையில் ஒரு உடன்பாடு இடம்பெற்றதை அவர் ஏற்றுள்ளார். கோட்டை இராச்சியத்தில் இடம்பெற்ற உடன்பாடு அங்கு போர்த்துக்கேயரின் நேரடி ஆட்சி இடம்பெறுவதைக் குறித்து நின்றது. ஆனால் யாழ்ப்பாண இராச்சியத்தில் இடம்பெற்ற உடன்பாடு நேரடி ஆட்சி இடம்பெறுவதற்கான முதற்படியாக அமைந்தது. △



படிப்பகம்

www.padippakam.com

உசாத்துணை நூல்கள்

## REFERENCES


1. Abeyasinghe, Tikiri 1965. 'The myth of Malwana Convention.' **The Ceylon Journal of Historical and Social Studies. VII (I): 67-72.**

2. ......... ....... 1966, **Portuguese rule in Ceylon, - 1594 - 1612.** Colombo: Lake House.

3. .................... 1986, **Jaffna under the Protuguese, Colombo: Lake House.**

4. Couto, 1909 as translated in J. Royal Asiatic Soc. Ceylon Branch XX. Colombo.

5. De Silva, C. R. 1972. **The Portuguese in Ceylon 1617 - 1638**, Colombo: H. W. Cave & Co.,

6. ......................... 1987, **Sri Lanka: A History**, New Delhi, Vikas Publishing House.

7. Perera, S G, A History of Ceylon I 1505 - 1796, Colombo, Lake House.

8. Queyroz, Fernao de, 1930, **The Temporal and Shiritual Conquest of Ceylon**: (Trans. by Fr. S. G. Perera), Colombo: Acting Government Printer.

9. Trinidade, Paulo, de (Friar) 1972. Chapters on Introduction of Christianity to Ceylon, taken from the **Conquista Spiritual de Oriente., Trano.** by Rev. Edmund Peiris and Friar Achilles Meersman.




படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி vi இதழ் iii - 1994

# இலங்கைப் பாடசாலைகளில் ஆரம்ப மட்ட விஞ்ஞான பாடமும் அதில் உயிரியல் தொடர்பான அம்சங்களும்

சுசீலா அருளானந்தம்

## அறிமுகம்:-

மனிதன் தான் வாழும் சூழலில் மிகப் பொருத்தப்பாட்டுடன் உச்சப்பயன் பெற்று வாழ்வதற்கும் அவனது தேவைக்கேற்ப சூழல் சக்திகளையும் அதன் அமைப்புக் களையும் மாற்றியமைக்கும் திறனைப் பெற்றுக் கொள்வதற்கும் விஞ்ஞானக் கல்வி இன்றியமையாததொன்றாகும். இக் கல்வி மூலம் இயற்கை வளமும் மனித வளமும் இணைக்கப்பட்டு அவர்களிடம் அமைந்துள்ள தனித் திறமைகள் வெளிப் படுத்தப்பட வேண்டும் எனவே பாட சாலைக் கலைத்திட்டத்தில் ஆரம்ப வகுப்பு முதல் இடைநிலை வகுப்பு வரையாவது விஞ்ஞான பாடம் இடம்பெறுவது அவசிய மாகின்றது. எமது முன்னோர் தமது ஆராய்வூக்கத்தினால் உந்தப்பட்டு தம்மைச் சூழவுள்ள உலகில் நிகழும் அனுபவங்களைப் பற்றிய உண்மைகளை அறிய முற்பட்டதன் விளைவாகவே இன்று விஞ்ஞான ஆராய்ச்சிகளும் விஞ்ஞான அறிவும், திறன்களும், படைப்புக்களும் உலகில் பல்கிப் பெருகின. இன்றைய பிள்ளைகளை நாம் கவனிப்பின் இத்தகைய ஆராய்வூக்கம் அவர்களிடம் மிகுந்துகாணப் படுவது தெரிகின்றது. இவர்கள் விஞ்ஞான முன்னேற்றம் கண்ட சமூகத்தில் வாழ் கின்றார்கள். அவர்களது விஞ்ஞான அறிவு, திறன், மனப்பாங்குகளை மேலும் விரிவு படுத்தும் வகையில் பாடசாலைக் கலைத் திட்டத்தில் விஞ்ஞான பாடமும் விஞ்ஞான அம்சங்களும் விரிவாக ஆழமாக இடம் பெற வேண்டும்.

விஞ்ஞானக் கல்வியின் நோக்கம் விஞ் ஞானம் சார் தொழிலாளர், தொழில் நுட்பவியலாளர், ஆய்வாளர் போன் றோரை எமது சமூகத்தில் வளர்த்தெடுப் பதாக அமையவேண்டும். விஞ்ஞானத்தில் பல்வேறு கூறுகள் காணப்படினும் அவை ஒன்றுட ஒன்று தொடர்பு கொண்டு (ஒன்றிணைந்து) காணப்படுகின்றன. விஞ் ஞானத்தின் பிரதான கூறுகளாக தாவர வியல், விலங்கியல், பௌதிகம், இரசாய னம், வானியல், புவியியல் போன்றன காணப்படுகின்றன. இங்கு பெறும் தூய விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தி விரிவு படுத்தியதாக விவசாயம், தொழில்நுட் பம், உயிர்நுட்பு, மருத்துவம் போன்ற பிரயோக விஞ்ஞானத் துறைகள் காணப் படுகின்றன. விஞ்ஞானமானது தனித்து நில்லாது விஞ்ஞான - தொழில்நுட்பம் என்ற வகையில் இணைந்து காணப்படு கின்ற போதே அந்த விஞ்ஞானத்தினால் பயன்கிட்டும். கல்வியும் அறிவைப் பெறு தல், பெற்ற அறிவைப் பயன்படுத்துதல் என்னும் இரு நிலைகளூடாக இணைந்து செயற்படும்போதே கற்ற அவ்வறிவால் அன்றாட வாழ்விற்குப் பயன்கிட்டுகின் றது. எனவே, விஞ்ஞான - தொழில்நுட்ப ரீதியிலான அறிவு, திறன் மனப்பாங்குகள் வளர்த்தெடுக்கப்படும் விதத்தில் பாட சாலைகளில் ஆரம்பக்கல்வி மட்டத்தி



படிப்பகம்

லிருந்தே விஞ்ஞான பாடம் அறிமுகம் செய்யப்பட வேண்டும். விஞ்ஞான முன்னேற்றமும் விஞ்ஞான பகுத்தறிவு ரீதியிலான நோக்கங்களின் வளர்ச்சியுமே எமது இலங்கை போன்ற வளர்முக நாடுகளை நவீனமயமாக்குவதற்கு வேண்டிய சூழலின் தன்மைகளாகும்.[1]

விஞ்ஞானத்தின் ஒரு பிரிவாகிய உயிரியலானது தாவரவியல், விலங்கியல் என்னும் இரு கூறுகளைக் கொண்ட ஓர் ஒன்றிணைந்த பாடத்துறையாகும். இதை உயிர்கள்தொடர்பான விஞ்ஞானம் அல்லது உயிர்கள் பற்றிய கற்கை எனவும் குறிப்பிடலாம். விலங்குகளின் அமைப்பு, வாழ்க்கை வரலாறு, நடத்தைகள், உடற் செயற்பாடுகள் போன்ற அம்சங்கள் தொடர்பான விஞ்ஞானம் விலங்கியல் எனப்படும். இது பரந்து பட்ச பாடமாகிய உயிரியலின் ஒரு பகுதி மட்டுமேயாகும்[2]. தாவரவியல் எனப்படுவது பல்வேறு தாவர உடலமைப்பு, உடற்றொழிலியல், மனித பொருளாதார அடிப்படையிலான அம்சங்கள் போன்ற இன்னோரன்ன விடயங்கள் தொடர்பான கற்கையாகும். உயிரின் தோற்றம், விலங்கு உற்பத்தி, மனித இனத் தோற்றம் மனித இனத்தின் நாகரீக வளர்ச்சி, கூர்ப்புக் கொள்கைகள் போன்ற அம்சங்களை விலங்கியல் கற்கை நெறி மூலம் அறிந்துகொள்ள முடியும். மனிதனது சமூகத் தொடர்புகளை உணரவைக்கும் ஒரு கற்கை நெறியாக விலங்கியல் காணப்படுவதால் உயிரியல் கற்பவர்களின் உள்ளத்தில் விலங்கியல் ஒரு முக்கிய இடம் பெறுகின்றது[3].

உயிரியல் விஞ்ஞானமானது உயிரிகள் பற்றியதும் இயற்கையுடன் ஒட்டியதுமான கற்கையாக உள்ளதால் இதனைக் கற்கும் மாணவர்க்கு உற்சாகமும் சந்தோசமும் அளிப்பதாக விளங்குகின்றது. தன்னையும் தன்னைச் சூழவுள்ளன பற்றியும் உற்று நோக்கி, கையாண்டு, அனுபவம் பெறுவதன் மூலம் இலகுவில் சிறந்த புலன் காட்சி பெற்று அறிவைத் திரட்டக் கூடியதாக உள்ளது. உயிரியல் விஞ்ஞானமானது ஏனைய விஞ்ஞானத் துறைகளிலிருந்து தனித்தும் பிரித்தும் பார்த்து விளங்கிக் கொள்ள முடியாதது. இது விஞ்ஞானத்தினதும், விஞ்ஞான முறைகளினதும் தன்மைகளைப்பற்றி விளங்கிக் கொள்வதற்கான வழிகளுள் ஒன்றாகக் காணப்படுகின்றது[4].

பாடசாலைக் கல்வியானது ஆரம்ப, இடைநிலை மட்டங்களூடாக மாணவர்க்கு வழங்கப்படுகின்றது. ஆரம்ப மட்டத்தில் இவர்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு, ஆற்றல், திறன், மனப்பாங்குகள் என்பன இடைநிலை மட்டத்தில்பெறவுள்ள கல்விக்குச் செழிப்பான உரமான அடித்தளத்தை இடும்போதுதான் தொடர்ந்து பெறும் கல்வி பயன்மிக்கதாக விளங்கும். இந்த வகையில் பாடசாலைக் கலைத் திட்டத்தில் உள்ள பாட ஏற்பாடுகளுள் ஒன்றான ஆரம்ப மட்ட விஞ்ஞான பாடம் எவ்வாறுள்ளது என நோக்கலாம் ஆரம்ப மட்ட விஞ்ஞானம் அறிமுகம் செய்யப்பட்ட விதம், அதன் நோக்கங்கள் - பொருளடக்கம், அதில் அடங்கியுள்ள உயிரியல் அம்சங்கள், ஆரம்ப மட்ட உயிரியல் அம்சங்களும் இடைநிலை மட்டத்துக்கான அதன் அடிப்படைகளும் என்பன போன்ற அம்சங்களை ஆராய்வதாக இங்கு இக் கட்டுரை அமைகின்றது

## ஆரம்ப மட்ட விஞ்ஞானபாட அறிமுகம்

எமது நாட்டை (இலங்கை) பொறுத்த வகையில் ஆரம்ப மட்டமெனத் தற்போது கருதப்படுவது ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரையிலான வகுப்புக்களை உள்ளடக்கிய வகுப்புத் தொகுதியையேயாகும்.

ஐந்து வயது தொடக்கம் பத்து வயது வரையுள்ள மாணவரே இம் மட்டத்தில் பெரிதும் காணப்படுவர். 1985 ஆம் ஆண்டு காலம் வரையும் எமது நாட்டில் ஆரம்ப மட்டத்தில் விஞ்ஞானம் என ஒரு பாடம் இடம்பெறவில்லை. கனிட்ட இடைநிலை மட்ட வகுப்புக்களிலிருந்தே ( ஆண்டு 7/ தரம் 6 ) இது கற்பிக்கப்பட்டு வந்தது. 1985 இலிருந்துதான் இது ஆண்டு 4 இல்

அறிமுகமாகித் தொடர்ந்து 1986 இல் ஆண்டு 5 இலும் 1987 இல் ஆண்டு 6 இலும் 1987 இல் ஆண்டு 6 இலும் இதனைக் கற்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன, இதன் படி இன்று ஆண்டு 4 இலிருந்து ஆண்டு 11 வரை தொடர்ச்சியாகப் பள்ளிவாழ் சகல மாணவரும் விஞ்ஞானம் கற்க வழி செய்யப்பட்டிருக்கின்றது.

விஞ்ஞான பாடம் கலைத்திட்டத்தின் ஒரு கட்டாய பாடமாக இன்று கல்வி நடைமுறையில் இடம் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதனால் 'எல்லோருக்கும் விஞ்ஞானம்' (Science for all) என்ற உலகளாவிய கோட்பாடு எமது நாட்டுக்கும் பொருந்துவதாக இடம்பெறுகின்றது. நாட்டின் ஒவ்வொரு பிரசையும் விஞ்ஞான உலகினைப் புரிந்துகொண்டு அதனைப் பயன்படுத்தி வாழ வழி ஏற்படுத்தப்படுகிறது எனலாம், எமது நாட்டில் 1972 இல் தரம் 6 ( ஆண்டு 7 ) இலிருந்து தரம் 9 வரை விஞ்ஞான பாடம் கற்பிக்கப்பட்டு வந்து, பின் 1985 இல் ஆண்டு 4 இலிருந்து கற்பிக்கப்பட்டு வந்த தன்மூலம் எல்லோருக்கும் விஞ்ஞானம் என்ற கோட்பாடு அர்த்தமுள்ள வகையில் மேலும் விரிவுபடுத்தப்பட்டது எனலாம்.

விஞ்ஞான பாடமானது ஆரம்ப மட்டக் கல்வியில் இடம்பெற்ற விதம் ஒழுங்கமைப்பு, கற்பிக்கும் நோக்கம், ஆரம்பிக்கும் வகுப்பு என்பன நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. எல்லா நாடுகளிலும் விஞ்ஞானம் / விஞ்ஞான அம்சங்கள் பாடசாலைக் கல்வியின் முதல் ஐந்து அல்லது ஆறு வருடங்களுக்கு சுற்றாடற் கல்வி, பொது விஞ்ஞானம், ஒன்றிணைந்த விஞ்ஞானம் என்பவற்றுள் ஏதாவது ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது[5]. சீனா, ஈரான், கொரியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் ஆரம்ப மட்டத்தின் தொடக்க வகுப்புக்களிலிருந்தே ஒன்றிணைந்த விஞ்ஞானம் எனவும் ஜப்பான், பாகிஸ்தான், பப்புவாநியூகினியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் பொது விஞ்ஞானமெனவும் கட்டாய பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது. இந்தோனேசியா, இலங்கை போன்ற நாடுகளில் தொடக்க மூன்று ஆண்டுகளிலும் கட்டாய பாடமான சுற்றாடற் கல்வியூடாக விஞ்ஞான அம்சங்கள் கற்பிக்கப்படுகின்றன. பின்னைய இரு ஆண்டுகளும் கட்டாய பாடமான விஞ்ஞான பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது[6]. ஒன்றிய விஞ்ஞானம், பொது விஞ்ஞானம், சுற்றாடற் கல்வி எனப் பெயர் வேறுபட்டிருந்த போதிலும் ஆண்டு 1 இலிருந்தே அனேக நாடுகள் விஞ்ஞான அம்சங்களைக் கலைத்திட்டத்தினுள் புகுத்தியுள்ளமை புலப்படுகிறது. ஆரம்ப மட்டத்தினரிடையே விஞ்ஞான அறிவினைப் பொருத்தமான முறையில் அடித்தளமிடுவது முக்கிய அம்சமாகும். எனவே, அதன் பாட அடக்கம், கற்பித்தல் முறை என்பன அவர்கட்குப் பொருத்தமான முறையில் அமையவேண்டும்.

## நோக்கங்களும் பொருளடக்கமும்:

ஆரம்ப மட்டத்தினுள் அடியெடுத்து வைக்கும் மாணவர் புதிய சூழலினை எதிர்கொள்கின்றனர். தாம் முன்னர் பெற்றுக்கொண்ட அனுபவங்களை இப்புதுச் சூழலுக்கு இசைவுபடுத்திக்கொண்டு அவற்றை ஆழமாகவும், பரவலாக்கவும் ஏற்ற முறையில் பயன்மிக்க கற்றல் அனுபவங்களை இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் இவர்களுக்கு வழங்கவேண்டும். இவற்றுக்கேற்ற வகையில் கலைத்திட்ட வடிவமைப்பு உருவாக்கப்படவேண்டும். ஆடல், பாடல், உற்று நோக்கல், பரிசோதனை செய்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் அவர்களது ஐம்புலன்களுக்கும் பயிற்சியளிப்பதுடன் தசை நார்கள், நரம்புகள் போன்றவற்றிற்கும் பயிற்சியளிக்கும் வகையில் பொருத்தமான எண்ணக்கருக்களை வளர்த்தெடுக்க வேண்டும், இவற்றின் வளர்ச்சிக்கு விஞ்ஞானமானது சிறந்த முறையில் உறுதியளிக்கிறதெனலாம். விஞ்ஞானம் பிள்ளைகளின் மனவெழுச்சி, ஆளுமை போன்றவற்றை மெருகூட்டி வளர்க்கின்றது.

ஆரம்ப மட்டத்தில் இவர்கள் கற்றுக்கொள்ளும் விஞ்ஞான எண்ணக் கருக்கள்

www.padippakam.com

கனிட்ட இடைநிலை மட்டத்தில் கற்றுக் கொள்ளவிருக்கும் விஞ்ஞானக் கல்விக்கு அடிப்படையாக அமையக்கூடிய விதத்தில் கலைத்திட்ட ஒழுங்கமைப்பு இடம்பெற வேண்டும். ஆரம்ப மட்ட விஞ்ஞான பாட உள்ளடக்கம் கனிட்ட இடைநிலை மட்ட விஞ்ஞானக் கல்வியுடன் தொடர்ச்சி கொண்டதாகவும் அங்கும் பெறவுள்ள விஞ்ஞானக் கல்வியைப் பயனுறக் கற்பதற்கு மாணவரைத் தயார்படுத்துவதாகவும் இருக்கவேண்டும்[7].

ஆரம்ப மட்ட விஞ்ஞானக் கல்வியின் பொது நோக்கங்களாகப் பின்வருவன முன்வைக்கப்பட்டுள்ளன[8]:-

அவதானம், பரிசோதனைகள் மூலம் பொருட்கள் அல்லது நிகழ்வுகளை விளங்கிக் கொள்ளும் திறனை வளர்த்தல்; சூழலிலுள்ள அமைப்புக்கள், நிகழ்வுகள் தொடர்பான எண்ணக் கருக்களையும் கோலங்களையும் இனங்காணல். விளங்கிக்கொள்ளல், அவற்றை மதித்தல் என்பவற்றுக்கு வாய்ப்பளித்தல்; தகவல்களைச் சேகரிக்கும்போது ஐம்புலன்களையும் பயன்படுத்தல், தேவையான உபகரணங்களைத் தேர்ந்தெடுத்தல், சேகரித்த தகவல்களைக் கொண்டு தர்க்க ரீதியாகச் சிந்தித்தல் என்பதற்கும் பழக்கப்படுதல்; மாணவரிடத்து இயற்கையாகவே காணப்படும் நுணுகி ஆராயும் திறனைப் பயன்படுத்தி விஞ்ஞான ரீதியான கற்றலுக்கு வழிப்படுத்தி அவர்களைச் சந்தோசமடையச் செய்தல்; மாணவர் சேகரித்த தகவல்களை வெவ்வேறு முறைகளில் வெளிப்படுத்தும் ஆற்றலை விருத்திசெய்தல்; *சூழலைப் பேணிப் பாதுகாத்தல் வேண்டும் என்ற மனப்பாங்கைப் பெறச்செய்தல் என்பன.

மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடையும் வகையில் கற்பித்தலை நெறிப்படுத்தும்போது இம்மாணவர் பின்வரும் திறன் சார் அடைவுகளையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.[9]

அவதானித்தல், தகவல் சேகரித்தல், எதிர்வு கூறல், சிறிய பரிசோதனைகள்/ஆய்வுகள் / செயல்கள் போன்றவற்றைத் திட்டமிட்டுச் செய்தல், பதிவுகளை மேற்கொள்ளுதல், அளத்தலை மேற்கொள்ளும்போது அதற்குப் பொருத்தமான கருவிகள் முறைகள் அலகுகள் என்பவற்றைத் தெரிந்தெடுத்தல் என்பன.

மேற்குறிப்பிட்ட நோக்கங்கள், திறன்கள் என்பவற்றை அடையும் வகையில் தொடக்க விஞ்ஞான பாடத்தில் பின்வரும் பாட அடக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன[10]:-

| | ஆண்டு - 4 | ஆண்டு - 5 |
|---|---|---|
| 1. | மண் | நிலம் |
| 2. | தாவரங்கள் | தாவரங்கள் |
| 3. | விலங்குகள் | விலங்குகள் |
| 4. | நீர் | அளத்தல் |
| 5. | வளி | நீர் |
| 6. | தகனம் | ஒலி |
| 7. | காந்தம் | வெப்பம் |
| 8. | மின்சாரம் | வேலையை எளிதாக்கல் |
| 9. | * கடலகவளம் | மின் |
| 10. | | * கடலகவளம் |


* ஆண்டு 9, 10, 11 வகுப்புக்களில் 'கடலகவளம்' என்னும் பாடம் தொழில் நுட்பப் பாடமாகக் கற்பிக்கத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதனால் ஆண்டு 9 இலிருந்து இப்பாடத்தைக் கற்கும் மாணவர்க்கு வேண்டிய முன்னறிவையும் பாடத்தில் ஈடுபாட்டையும் ஏற்படுத்தும் வகையில் தொடக்க விஞ்ஞான பாடத்தினூடாகவும் ஆண்டு 6 - 8 விஞ்ஞான பாடம், வரலாறும் சமூகக்கல்வியும் பாடம் என்பவற்றினூடாகவும் கடலகவளம் தொடர்பான அடிப்படை எண்ணக்கரு வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகையில்தான் தொடக்க விஞ்ஞான பாடத்தில் 'கடலகவளம்' என்னும் புதிய அலகு 1993 இலிருந்து யாழ் மாவட்டப் பாடசாலை மாணவர்க்குச் சேர்க்கப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

ஆண்டு – 4, 5 தொடக்க விஞ்ஞான பாட அலகுகளுக்கிடையிலான தொடர்பைப் பின்வரும் வரைபடம் காட்டுகிறது:




(சதுரம் ஆண்டு 4 பாட அலகுகளையும், புள்ளியிட்ட சதுரம் ஆண்டு 5 பாட அலகுகளையும், அம்புக்குறி வகுப்புகளுக்கிடையே பாட அலகுத் தொடர்ச்சியைக் காட்டும்.

ஆண்டு 4 இல் 9 பாட அலகுகளும், ஆண்டு 5 இல் 10 பாட அலகுகளும் உண்டு. இவற்றுள் 7 பாட அலகுகள் படத்தில் காட்டியபடி ஆண்டு 4, ஆண்டு 5 வகுப்புக்களிடையே தொடர்ச்சியைப் பேணும் வகையில் அமைந்துள்ளன. அதாவது நெடுக்குமுக ஒன்றிணைவு காணப்படுகின்றது. இவற்றுள் ஆண்டு 4 இன்



படிப்பகம்

மண், தாவரங்கள், விலங்குகள், கடலக வளம் என்னும் அலகுகள் முறையே ஆண்டு 5 இன் நிலம், தாவரங்கள், விலங்குகள், கடலகவளம் என்னும் அலகுகளுடன் தம் முன் தொடர்ச்சியைப் பேணும் வகையில் அமைந்துள்ள உயிரியல் அம்சங்களைக் கொண்டவையாகும்.

## ஆரம்பமட்ட விஞ்ஞானத்தில் உயிரியல் அம்சங்ககளுக்கான இடம்:

ஆண்டு 4, 5 வகுப்பு விஞ்ஞானக் கலைத் திட்டத்தில் தாவரங்கள், விலங்குகள் தொடர்பான அம்சங்கள் ( உயிரியல் அம்சங்கள் ) எவை, எந்தளவுக்குச் சேர்க்கப்பட்டுள்ளன என்பது தொடர்பாக இங்கு நோக்கப்படுகின்றது.

ஆண்டு 4: இவ்வகுப்பில் விஞ்ஞான பாட அலகு 4.1 மண் என்னும் தலைப்பைக் கொண்டு விளங்குகிறது. இதில் மண்ணின் கூறுகள் பற்றி ஆராயும்போது அதிலுள்ள உயிருள்ள தாவர / விலங்கு என்பவற்றுடன் இறந்த தாவர / விலங்குப் பகுதி களும் உள்ளன என்றும் இவ் இறந்த உடற் கூறுகள் மண்ணிற்குப் பசளையாகின்றன என்றும் மாணவர் அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கப்படுகின்றது.

அலகு 4.2 தாவரங்கள் என்னும் தலைப்பைக் கொண்டு விளங்குகின்றது. இத்தலைப்பினைக் கற்று முடிந்தபின் மாணவர் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது: சூழலில் உள்ள தாவரங்களின் பல்வேறு பகுதிகளை இனம் காணும் திறன், ஒரு தாவரத்தின் ஒரு பகுதி ( இலை, தண்டு, பூ ... ) வெவ்வேறு தாவரங்களில் வேறுபட்டுக் காணப்படும் என்பதை அறிந்து கொள்ளும் ஆற்றல். பெரும்பாலான தாவரத்தண்டு வைரமானது என்பதை அறியும் ஆற்றல், வைரத் தன்மையின் அடிப்படையில் தாவரங்களை வகைப்படுத்தி அறியும் ஆற்றல், தாவரப்பகுதிகளின் தொழிற்பாடுகள் தொடர்பாக - தாவரங்கள் தமக்குத் தேவையான நீரை வேர்களால் உள்ளெடுக்கின்றன என்பதையும் தண்டானது நீரையும் உணவையும் கொண்டு செல்கின்றது என்பதையும் அறியும் ஆற்றல், தாவரங்களை மண்ணுடன் உறுதியாகப் பற்றி வைத்திருப்பதற்கு வேர்களும் தாவர இனத்தைப் பெருக்குவதில் பூக்களும் கனிகளும் உதவுகின்றன என்பதையும் விளங்கிக் கொள்ளும் ஆற்றல், தாவர வளர்ச்சியில் தாக்கம் விளைவிக்கும் புறக் காரணிகள் தொடர்பாக - தாவர வளர்ச்சிக்கு ஒளி, நீர் என்பன அவசியம் என்றும், மண்ணின் தன்மை தாவர வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் விளங்கிக்கொள்ளல், என்பன.

அலகு 4, 3 விலங்குகள் என்னும் தலைப்பைக் கொண்டது. இதனைக் கற்று முடித்தபின் மாணவர் பின்வரும் தன்மைகளைப் பெற்றுக்கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. விலங்குகளை அவற்றின் வெளிப்புற இயல்புகளின் அடிப்படையில் வகைப்படுத்திக் கொள்ளக்கூடிய ஆற்றல். விலங்குகளின் புற உறுப்புக்களை உற்று நோக்கிப் பதிவு செய்யும் ஆற்றல், விலங்குகளின் சுவடு, உறுப்பு, எச்சம், வாழுமிடம் என்பவற்றைக்கொண்டு அவற்றை இனங்காணும் திறன், விலங்குகளின் உறுப்புக்கள் தொடர்பாக நோக்குகின்றபோது - இடப்பெயர்ச்சி உணவு உட்கொள்ளும் முறைகள் என்பவற்றுக்கேற்ப அவற்றின் உறுப்புக்கள் அமைந்துள்ளன என்பதை விளங்கிக்கொள்ளும் ஆற்றல், சூழலில் - ஏற்படக்கூடிய அபாயங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகப் பல்வேறு விலங்குகள் கொண்டுள்ள இயல்புகளைக்கூறும் ஆற்றல், விலங்குகளின் நடத்தை தொடர்பாக நோக்குகின்றபோது - விலங்குகளானவை உணவுத் தூண்டல், ஒளித்தூண்டல் ஒலித்தூண்டல் போன்றவற்றிற்கு வெளிக்காட்டும் நடத்தையை அறிதல், விலங்குகள் தமது இனத்துடனும் பிற இனத்துடனும் வெளிக்காட்டும் நடத்தைகளை அறிதல், விலங்குகள் மனிதனுடனான உறவு முறைகளை உற்று நோக்கி அறிதல், விலங்குகள் மீது

www.padippakam.com

அன்பு செலுத்தவும் அவற்றைத் துன்புறுத்தாமலும் நடப்பதற்கான மனப்பாங்கு பெறுதல் என்பன.

அலகு 4 9 கடலக வளம் என்னும் தலைப்பைக் கொண்டது. இதனைக் கற்றபின் மாணவர் பின்வரும் தகைமைகளைப் பெற்றுக்கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. அங்கிகள் காணப்படும் இடங்களில் ஒன்று கடல் எனவும் கடலில் பலவகையான தாவரங்கள். விலங்குகள் உண்டு என்றும் அறிந்துகொள்ளல், மீன்களின் புற உறுப்புக்களாக செட்டைகள் வால் என்பன உண்டு என்றும் இவை நீந்துவதற்கு உதவுகின்றன என்றும் அறிதல், கடலிலிருந்து மீன் உணவுப் பொருளாகப் பெறப்படுகின்றது எனவும் கடலக வளமாக மீன்கள், உப்பு, சிப்பி, இறால் பெறப்படுகின்றன என்றும் அறிந்துகொள்ளல், என்பன.

ஆண்டு - 4 இன் மொத்த விஞ்ஞான பாடப் பரப்பு சார்பாக உயிரியல் அம்சங்கள் எவ்வளவுக்கு உள்ளது என நோக்குகின்றபோது நூற்று வீத அமைப்பு பின்வருமாறு[11].

| | |
|---|---|
| ஒன்றிணைந்த விஞ்ஞானம் | 100% |
| விலங்கு உயிரியல் | 20% |
| தாவர உயிரியல் | 14% |
| * உயிரியல் | 34% |
| ஏனைய விஞ்ஞானச்கூறுகள் | 66% |
| ( பௌதீக - இரசாயணம் ) | |

பௌதீக இரசாயன அம்சங்களுக்கு அளிக்கப்பட்ட இடத்துடன் (66%) ஒப்பு நோக்கும்போது உயிரியல் அம்சங்களுக்கு அளிக்கப்பட்ட இடமானது (34%) ஏறத்தாழ அரைமடங்கினதாகவே காணப்படுகின்றது. அத்துடன் விலங்கியலுக்கு அளிக்கப்பட்ட இடத்திலும் பார்க்கத் தாவரவியலுக்கு அளிக்கப்பட்ட இடம் குறைவாக உள்ளமையும் புலப்படுகின்றது.

ஆண்டு - 5: இவ்வகுப்பில் விஞ்ஞான பாட அலகு 5.1 நிலம் என்னும் தலைப்பைக் கொண்டு விளங்குகின்றது. அலகு 4.1 இனது தொடர்ச்சியாக இத்தலைப்பு அமைந்திருக்கின்றது. இதனைக் கற்றபின் மாணவர் பின்வரும் தகைமைகளைப் பெற்றுக்கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது: தாவர வளர்ச்சி மண்ணின் தன்மையில் தங்கியுள்ளது என்பதைப் பரிசோதனை மூலம் காட்டும் திறன், தரப்பட்ட மண்மாதிரியொன்று தாவர வளர்ச்சிக்கு உகந்தது என்பதை எளிய செய்கைகள்மூலம் காட்டும் திறன், தாவர வளர்ச்சிக்கு உகந்த மண்ணின் மூன்று சிறப்பியல்புகளைக் கூறும் ஆற்றல் தமது சூழலில் மண்ணரிப்பு ஏற்படுவதைத் தடுக்கும் முயற்சிகளில் வேரின் அவசியத்தை உணரும் ஆற்றல் என்பன.

அலகு 5.2 தாவரங்கள் என்னும் தலைப்பைக் கொண்டது. அலகு 4.2 இன் தொடர்ச்சியாக உள்ள இதனைக் கற்றபின் மாணவர் பெற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படும் தகைமைகள் பின்வருமாறு: பூ ஒன்றின் வெவ்வேறு பகுதிகளை இனங்காணும் திறன், பூவின் முக்கிய பகுதிகளைப் பெயரிடும் ஆற்றல், வெவ்வேறு பூக்களிடையே ஒற்றுமை வேற்றுமை காணும் திறன், பூ ஒன்று பூவாக மலர்ந்தது தொடக்கம் கனியாகும் வரை நடைபெறும் மாற்றங்களை உற்று நோக்கிப் பதிவுசெய்யும் ஆற்றல், வெவ்வேறு வகைப்பட்ட கனிகளைச் சேகரித்து அவற்றிற்கிடையேயுள்ள வேறுபாட்டை உற்றுநோக்கி ஆராயும் திறன், தாய்த் தாவரத்திலிருந்து கனிகளும் வித்துக்களும் பரம்பல் அடைகின்றன என்னும் அறிவு, வித்து முளைத்தலுக்குத் தேவையான முக்கிய காரணிகளை அறிந்துகொள்ள எளிய செய்கைகளை ஒழுங்குபடுத்தும் திறன், பூக்களும் கனிகளும் வீணாக அழிந்து போவதைத் தடுக்கும் வழிமுறைகளைக் கைக்கொள்ளும் திறன் என்பன.

அலகு 5.3 விலங்குகள் என்னும் தலைப்பினைக் கொண்டதாகவும் அலகு 4.3 இன் தொடர்ச்சியாகவும் உள்ளது. இதனைக் கற்றபின் மாணவர் பெற்றுக்

www.padippakam.com

கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப் படுவன பின்வருமாறு: சூழலில் வெவ்வேறு விலங்குகள் உள்ளன என்பதை அறிதல், பெயர் தெரிந்த பல்வேறு பூச்சிகளிடையே ஒற்றுமை வேற்றுமைகளை உற்றுநோக்கிக் குறித்துக் கொள்ளும் ஆற்றல், தம்மைச் சூழவுள்ள பூச்சிகள் உணவு தேடும் முறைகளை விபரிக்கும் ஆற்றல், சில பூச்சிகளின் பழக்கவழக்கங்களை அறிவதற்கு எளிய செய்கைகளை மேற்கொள்ளும் திறன், பூச்சிகளின் வாழ்க்கை வட்டத்தை விளங்கிக் கொள்வதற்காக எளிய தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் திறன், பொழுது போக்கிற்காக விலங்குகளின் படம் கொண்ட முத்திரைகள், பறவைகளின் முட்டைக்கோதுகள் இறக்கைகள், பாவனையில்லாத விலங்குக் கூடுகள் போன்றவற்றைச் சேகரிக்கும் தன்மை பெறல் போன்றன.

அலகு 5 . 10 கடலகவளம் என்ற தலைப்பைக் கொண்டமைந்துள்ளது. இது அலகு 4 . 9 இல் கற்ற அம்சங்களின் தொடர்ச்சியாக அமைந்து காணப்படுகின்றது. இதனைக் கற்ற பின்னர் மாணவர் பின்வரும் தகைமைகளைப் பெற்றுக் கொள்வார்கள் என எதிர்நோக்கப்படுகின்றது: கடலூடாகக் கப்பற் போக்குவரத்துச் செய்யப்படுகின்றது என்றும் கடலில் மீன் பிடிப்பதற்குத் தூண்டில், வலை, வள்ளம் என்பன பயன்படுத்தப் படுகின்றன என்றும் அறிந்துகொள்ளல், கடலில் மீன் பிடிக்கச் செல்வோர் திசையறி கருவிமூலம் திசையை அறிகின்றனர் என்றும் மீன் பிடிப்பதற்கு உதவும் பாய் மரம் கட்டிய வள்ளம் காற்றினால் செலுத்தப்படுகின்றது என்றும் விளங்கிக் கொள்ளல், சூரிய வெப்பத்தினால் மீனிலிருந்து கருவாடும், கடல் நீரிலிருந்து கறியுப்பும் தயாரிக்கும் திறன் என்பன.

ஆண்டு - 5 இன் மொத்த விஞ்ஞானப் பாடப்பரப்பு சார்பாக உயிரியல் அம்சங்கள் எவ்வளவுக்கு உள்ளது என நோக்கியபோது அது தொடர்பான நூற்றுவித அமைப்பு பின்வருமாறு காணப்பட்டது: [12]

| | | |
|---|---|---|
| | ஒன்றிணைந்த விஞ்ஞானம் | 100% |
| | விலங்கு உயிரியல் | 17.1% |
| | தாவர உயிரியல் | 10.9% |
| * | உயிரியல் | 28.0% |
| | ஏனைய பௌதிக இரசாயனக் கூறுகள் | 72.0% |

இங்கு பௌதிக – இரசாயன அம்சங்களுக்கு அளிக்கப்பட்ட இடத்துடன் (72%) ஒப்புநோக்கும்போது உயிரியல் அம்சங்களுக்கு அளிக்கப்பட்ட இடம் (28%) ஏறத்தாழ 0.4 மடங்கினதாக காணப்படுகின்றது. அத்துடன் இங்கும் ஆண்டு - 4 இல் காணப்பட்டதைப்போல உயிரியல் அம்சங்களுள் விலங்கியலைவிடத் தாவரவியல் அம்சங்களுக்குக் குறைந்தளவு இடமே அளிக்கப்பட்டுள்ளமையும் புலப்படுகின்றது.

ஆரம்ப மட்டத்து உயிரியல் அம்சங்களும் இடைநிலை மட்டத்துக்கான அடிப்படைகளும்:

ஆரம்ப மட்டத்து விஞ்ஞான பாடப் பரப்பையும் கனிட்ட இடை நிலைமட்ட வகுப்புக்களின் விஞ்ஞான பாடப்பரப்பையும் நுணுகி ஆராய்ந்தபோது மொத்தப் பாடப்பரப்பு/பாடவேளை சார்பாக அங்கு உயிரியல் அம்சங்களுக்கு அளிக்கப்பட்ட இடம் தொடர்பான விபரம் பின்வருமாறு உள்ளது[13]: -



படிப்பகம்

www.padippakam.com

| வகுப்பு (ஆண்டு) | விஞ்ஞானம் (மொத்தம்) | | உயிரியல் | | நூற்று வீதம் |
|---|---|---|---|---|---|
| | | | ஒதுக்கப்பட்ட | | |
| | பாட அலகு | பாடவேலை | பாட அலகு | பாடவேலை | |
| 4 | 9 | 50 | 4 | 17 | 34 |
| 5 | 10 | 64 | 4 | 18 | 28 |
| 6 | 8 | 156 | 2 | 13 | 8.3 |
| 7 | 9 | 143 | 5 | 60 | 41.8 |
| 8 | 11 | 142 | 5 | 32 | 22.5 |
| 9 | 11 | 197 | 4 | 57 | 28.9 |
| 10 | 12 | 215 | 4 | 64 | 29.7 |
| 11 | 9 | 170 | 3 | 79 | 46.4 |

ஆண்டு – 4, 5 உடன் ஒப்பிடும்போது ஆண்டு - 6 இல் மிகவும் குறைந்தளவில் தான் (8. 3%) உயிரியல் அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. அத்துடன் ஏனைய வகுப்புக்களுடனும் ஒப்பிடும்போது இவ் வகுப்பில் இதன் இடம் குறைவாகவே உள்ளமை தெரிகின்றது. ஆண்டு 7 இலும் 11 இலும் ஏனைய வகுப்புக்களைவிட உயர்ந்தளவுக்கு (41. 8%, 46.4%) இது இடம்பெற்றுள்ளது. ஒட்டு மொத்தமாக நோக்குகின்றபோது இவ்விரு வகுப்புக் களையும்விட ஏனையவற்றில் உயிரியல் அம்சங்களுக்கு அளிக்கப்பட்ட இடம் குறை வாகவே (8.3% - 34%) உள்ளது.

ஆரம்ப மட்டத்து உயிரியல் அம்சங்கள் அதற்கு மேற்பட்ட வகுப்புக்களில் கற்க வுள்ள உயிரியல் அம்சங்களுக்குப் போதிய அடிப்படையை வழங்குவதாக அமைந் துள்ளமை இங்கு குறிப்பாகச் சுட்டிக் காட்டத்தக்கது. உயர் இடைநிலை வகுப் புக்களில் (க. பொ. த. உ/தர) உயிரியல் கற்கை நெறிக்கான உயிரியல் பாடப்பரப் பினைக் கற்க வழிசெய்யும் வகையில் கனிட்ட இடைநிலை மட்டத்து (ஆண்டு 6 - 11) உயிரியல் அம்சங்கள் சுமாராகத் தொடர்ச்சியைப் பேணுகின்றமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

ஆண்டு 4 - 11 வரையான வகுப்புக் களில் விஞ்ஞானபாட உயிரியல் அம்சங் களின் தொடர்ச்சி காணப்பட்டாலும், அந்தந்த வகுப் களில் மாணவர் அடைய வேண்டிய உயிரியல் அம்சங்கள் தொடர் பான இலக்குகளைப் ( அறிவு, திறன், மனப்பாங்கு ) பூரணமாக அடைந்தால் தான் உயர் வகுப்புகளில் அடையவேண்டிய உயிரியல்சார் அம்சங்களைச் சிரமமின்றிக் கற்றுக்கொள்ள முடியும். ஆரம்ப மட்டத்து உயிரியல் அம்சங்கள் கனிட்ட இடைநிலை மட்டத்தில் பெறவுள்ள உயிரியல் அம்சங் களும் முன்நிபந்தனையாகவும். ஆரம்ப - கனிட்ட இடைநிலை மட்டத்து உயிரியல் அம்சங்கள் உயர் இடைநிலை மட்ட வகுப்பு களில் கற்கவுள்ள உயிரியல் அம்சங்களுக்கு முன்நிபந்தனையாகவும் அமைந்து காணப் படுவதால் இவற்றில் அவ்வப்போது மாண வர் பாண்டித்தியம் பெற்று இருக்கவேண்டு மென்பது எதிர்பார்க்கப்படும் விடய மாகும் ஆரம்ப மட்ட, கனிட்ட இடை



படிப்பகம்

www.padippakam.com

நிலை மட்ட உயிரியல் அம்சங்களைப் பகுத்து நோக்கியபோது பெருமளவுக்கு அறிவு, அறிவாற்றல் போன்ற இலக்குகளை உள்ளடக்கிய அறிவுசார் ஆட்சியிலான அம்சங்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளமையும் ஆய்வு ஒன்றிலிருந்து அறியக்கூடியதாகவுள்ளது.[14] எழுச்சிசார், உள - இயக்கம்சார் அம்சங்களுக்குக் குறைந்தளவு இடமே ஒதுக்கப்பட்டிருப்பினும் அவற்றின் வளர்ச்சிப் படிகளுக்கு இடம் அளிக்கப்பட்டுள்ளமை நோக்கற்பாலது.

## முடிவுரை:

ஆரம்பமட்டம் தொடக்கம் இடைநிலை மட்டம் வரையான உயிரியல் அம்சங்களை மாணவன் தனது அன்றாட இயற்கைச் சூழலுடன் இணைந்தவகையில் கற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதனால் தனது சுற்றுப்புறச் சூழல் தொடர்பாகவும் அன்றாட வாழ்வு தொடர்பாகவும் உயிரியல்சார் நேர் மனப்பாங்குகளைப் பெற்றுக்கொள்ள முடியும். உயிரியல் தொடர்பான பணிவைப் பெற்றுக் கொள்ள முடியும். தாம் வாழும் சூழலில் தான் ஓர் அங்கம் என்றும் அதில் எவ்வாறு உச்சபயன் அடையும் விதத்தில் இசைவுடன் வாழமுடியும் என்பதையும் கற்றுக்கொள்ள முடியும். மூடநம்பிக்கைகளைக் களையும் மனப்பாங்கைப் பெற்று தமக்கு ஏற்படும் பிரச்சினைக்கு விஞ்ஞான முறைகளைப் பின்பற்றித் தீர்வுகாணும் ஆற்றலும் பெற முடியும்.

எனவே, உயிரியல் கற்பிக்கும் ஆசிரியர் உயிரியல் தொடர்பான தெளிவான அறிவினையும், விளக்கத்தையும் கொண்டிருந்து உயிரியல் சார் எண்ணக்கரு, அறிவு, திறன் மனப்பாங்கு போன்றவற்றைத் தெளிவாக மாணவர் பெற்றுக்கொள்ளும் வகையில் வகுப்பறைக் கற்பித்தலை நடைமுறைப்படுத்த வேண்டும். இயன்றவரையில் சூழலுடன் தொடர்புபடுத்தியதாகக் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும். □



படிப்பகம்

www.padippakam.com

## அடிக்குறிப்புகள்:


1. ச. முத்துலிங்கம், கல்வி, இலங்கைத் தேசியக் கல்விக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1964, ப. 19

2. A. J. Grove aud G. E. Newell, **Animal Biology** Fifth edition, University Tutorial Press Ltd. London, 1957, p. 1

3. P. S. Verma & E. . Jordan, **Invertebrate Zoology**, Chanand & Company (PVT) Ltd. Ramnagar, New Delhi, 1988, p. 3

4. James F. Case & Vernon E. Stiers, **Biology Observation and Concept**, The Macmillan Company, New york, 1971, p.3

5. Unesco, **Science for All, Report of Regional** meeting - Bangkok. September 1983, Apeid. Unesco Regional office for Education in Asia and the Pacific, 1983, pp. 7, 55.

6. Unesco, **Bulletin of the Unesco Regional Office for Education in Asia and the Pacific,** Number 25, June 1984, Bangkok. 1984, p. xiv.

7. சு. அருளானந்தம், யாழ்ப்பாண மாவட்டத்தில் கனிஷ்ட இடைநிலை மட்டத்து (ஆண்டு 7 - 9) விஞ்ஞான பாடத்தில் மாணவர் அடைவை மதிப்பிடுதல் பற்றிய ஓர் ஆய்வு. முதுகலைமாணி ஆய்வுக்கட்டுரை, வெளியிடப்படாதது, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை. 1990, ப. 59

8. தொடக்க விஞ்ஞானம் - ஆசிரியர் கைந்நூல் - ஆண்டு - 4 ஆரம்பக் கல்விப் பகுதி, யாழ். மாவட்டக் கல்வி வளர்ச்சிக் குழு, 1994, ப.1

9. மேற்படி

10. மேற்படி, பப. 1 - 7

11. மேற்படி பப. 8 - 18

12. தொடக்க விஞ்ஞானம் - வேலைத்திட்டம் ஆண்டு - 05 ஆரம்பக் கல்விப்பிரிவு, கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம். 1993.

13. (i) தொடக்க விஞ்ஞானம் - ஆசிரியர் கைந்நூல் - ஆண்டு 4 மு. சு. நூ.

    (ii) தொடக்க விஞ்ஞானம் - வேலைத்திட்டம் ஆண்டு - 5, மு. சு. நூ.

    (iii) வேலைத்திட்டம் - விஞ்ஞானம் - ஆண்டு 6 - 11 வரை, யாழ். மாவட்ட சேவைக் காலக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் (விஞ்ஞானம்), கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம். 1993.

14. சு. அருளானந்தம், மு. சு. நூ. ப. 79




படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி vi இதழ் iii - 1994

# அறிவும் உணர்வும் அரசியலும்: பௌத்தம் துரோகம் செய்தது?

## நூல் தடை விவகாரம் – ஒரு மீளாய்வு

என். சண்முகலிங்கன்

இலங்கையில் சமயம், அரசியல் வன்முறை தொடர்பான பேராசிரியர் ஸ்ரான்லி ஜே. தம்பையா அவர்களின், 'பௌத்தம் துரோகம் செய்தது' என்ற நூல் தடை விவகரரம், அரசியலிலும், அறிவுலகிலும் பரபரப்பூட்டிய விடயமாகும். உலகப் புகழ்பெற்ற மானுடவியல் அறிஞரான பேராசிரியர் தம்பையாவின் நூலை தடை செய்யக்கோரும் கண்டனங்கள், தடை நடவடிக்கைகள் தொடர்பானதொரு மீள்ஆய்வாக இக்கட்டுரை அமைகின்றது.

2. 1. அறிஞர்கள் மீது அல்லது புதிய ஆய்வு முடிவுகள் மீது சேறு வீசுவது, அல்லது அவர்களை தடை செய்வது என்பது உலகப் பொதுவான ஓர் அறிவுலக அனுபவமாக பதியப்படுவது. மரபும் அதிகாரமும் தொடர்பான இன்றைய முறையியல் அறிவு இதனை துல்லியமாக காட்டி நிற்கும். (Babbie, 1975). இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. குறிப்பாக முரண் அரசியல் கருத்துக்களை தணிக்கை செய்வது அல்லது தடைசெய்வது என்பது சாதாரணமானது. எனினும் விஞ்ஞான முறையியலின் வழியான ஆய்வு நூல் ஒன்றுக்கு தடை என்பது இலங்கையை பொறுத்தவரை முதல் அனுபவம். பேராசிரியர் தம்பையாவின் இந்நூல், பௌத்த தேசிய வாதக் கருத்துநிலையை, மானுடவியலின் முழுதளாவிய அணுகுமுறையின் வழி (Holistic approach) விமர்சிப்பது.

2.2. 'சிங்கள பௌத்தம்' என பேசப்படும் உணர்வு நிலையின் விளைவுகளை ஆராயும் இந்நூலை, பௌத்தத்துக்கு எதிரான ஒரு நூலாக காட்டுவதே எதிர்ப்பாளர்களின் அடிப்படையாக இருந்தது. பாராளுமன்றம், பத்திரிகை, ஊர்வலம் என இந்த விவகாரம் பல்வேறு ஊடகங்களின்வழி வெளிப்படுத்தப்பட்டது. அரசியல் வாதிகளிலிருந்து பல்கலைக்கழக அறிஞர்கள் எனப்படுபவர்கள் வரை இதில் சம்பந்தப்பட்டிருந்தனர். பல்கலைக்கழக மட்டத்தில் இதில் ஆதரவு தந்தவர்களில் குறித்த நூற்புலமான மானுடவியல் அறிவு சார் புலமையாளர் எவரும் இல்லையென்பதும் இங்கு கவனத்திற்குரியது.



படிப்பகம்

அதேவேளை பேராசிரியர் எஸ். ஜே. தம்பையாவுக்கு ஆதரவான குரல்களும் சூட்டோடு சூடாக இங்கு வெளிப்பட்டமையும் இங்கு சிறப்பாக குறிப்பிடப்பட வேண்டியது. இந்த ஆதரவு அணியில் பேராசிரியர் கணநாத் ஒபயசேகர உட்பட பல உலகப் புகழ்பெற்ற மானுடவியல் அறிஞர்கள், ஏனைய சமூக அறிவியலாளர்கள் இருந்தமையும் இங்கு கவனத்திற்குரியது.

2.3. பேராசிரியர் தம்பையாவின் இந்த நூல்தான் பௌத்தமதம் பற்றிய, அதன் அரசியல் வன்முறை நடைமுறைகளை விமர்சிக்கும் முதல் நூல் அல்ல. பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தனா, பேராசிரியர் கணநாத் ஒபயசேகர, பேராசிரியர் ரிச்சட் கொம்றிச், பேராசிரியர் புருஸ் காப்பர் போன்றோரின் மானுடவியல் ஆய்வுகள் பல, பௌத்தம் பற்றியும், பௌத்த குருமாரான பிக்குமாரின் வன்முறை ஈடுபாடு தொடர்பாகவும் நிறைய எழுதியிருக்கின்றன.

" நீண்ட பௌத்த வரலாற்றில், ஒரு நூலைத் தடை செய்ததோ, எரித்ததோ நிகழ்ந்ததில்லை. அண்மையில் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட துர்ரதிஷ்டவசமான சம்பவம்வரை வேறுபதிவு இல்லை. சிங்கள பௌத்தத்தை காக்க எனது நூல்களையும் எரியுங்களேன்" என பேராசிரியர் கணநாத் ஒபயசேகர (1993) தம்பையாவுக்கு ஆதரவாக வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டமை இங்கு எமது கவனத்துக்குரியதாகும். இத்தகைய பின்னணியில் பேராசிரியர் தம்பையாவின் நூலுக்கு மட்டும் ஏன் எதிர்குரல் என்பது இங்கு ஆர்வத்துக்குரிய கேள்வியாகும்.

2.4. பேராசிரியர் தம்பையா, இன்று நிலவும் மானுடவியல் அறிஞர் குழாமில் முதன்மையானவர்களில் ஒருவராக மதிக்கப்படுபவர். இப்பொழுது உலக புகழ்பெற்ற சமூக மானுடவியல்துறை வளர்ச்சி மையங்களில் ஒன்றான ஹாவாட் பல்கலைக்கழகத்தின் மானுடவியல் பேராசிரியர். பௌத்தமே, அவரின் சிறப்பான ஆய்வு ஆர்வமுமாகும். தென் ஆசிய, தென்கிழக்காசிய புலங்களில் தேரவாத பௌத்தத்திற்கும் அரசுகளுக்குமிடையிலான தொடர்பினை அவரது ஆய்வுகள் சிறப்பாக வெளிப்படுத்துவன. அறிவுலக அங்கீகாரத்தை பெறுவன.

அசோகன் கால தேரவாத பௌத்த மகிமையை விளக்கும் அவரது 'World Conquerer, World Renouncer' எனும் நூலை வியந்து, பேராதனைப் பல்கலைக் கழகம் D. Lit சிறப்பு கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்த சில காலத்திற்குள் இந்த சேறு பூசும் விவகாரம் நடந்தமையும் இங்கு சிறப்பான கவனத்துக்குரியன.

கௌரவத்துக்கு காலான நூல், பௌத்த அரசர்களை தர்மராசாக்களாகச் சித்திரிப்பது. ஆனால் தடை விவகாரத்துள் சிக்கிய புதிய நூல், இன்றைய கால பௌத்த பிக்குக்களின் அரசியல் ஈடுபாட்டினை விமர்சிப்பது. குறிப்பாக சிங்கள தேசிய வாதம், தமிழர்களுக்கு எதிரான வன்முறை என்பவற்றுடன் பௌத்தத்தை தொடர்புபடுத்தி, இலங்கையில் மட்டும் ஏன் இவ்வளவு தூரம் வன்முறை, உயிர்க் கொலை, மனித உரிமை மீறல். 'பௌத்தம் துரோகம் செய்தது?' என அவர் எழுப்பும் வினாவே, அவரை தடைசெய்யும் எதிர்ப்புகளின் அடிப்படையானது. கலாநிதி ஜெயதேவ உயங்கொட (1993) குறிப்பிடுவதுபோல, நூலின் தலைப்பில் வினாக்குறியுடன் 'பௌத்தம் துரோகம் செய்தது? என எழுப்பப்பட்ட வினாக்குறியை, கண்டனகாரர்கள், கண்டுகொண்டதாக இல்லை. கண்மூடித்தனமாக தம்பையாவை தாக்குவதே அவர்கள் நோக்கானது. தம்பையாவோடு சேர்ந்து இந்நூலுக்கு முன்னுரை வழங்கிய கலாநிதி லால் ஜெயவர்த்தனா எதிர்கொண்ட கண்டனமும் இவர்களின் உணர்வு நிலைப்பார்வையை துல்லியமாக்குவது. 'தமிழனான தம்பையாவின் நூலுக்கு முன்னுரை எழுதி சிங்கள தேசத்தைக் காட்டிக்கொடுத்த துரோகி' என்ற விதமாகவே லால் ஜெய

www.padippakam.com

வர்த்தனாவுக்கு பட்டம் சூட்டப்பட்டமையை காணலாம்.

3. தொகுத்து நோக்குகையில், இந் நூல்தடை விவகாரத்தின் பின்னணியாக பின்வருவனவற்றை இனங்காண முடியும்.

3. 1. கண்டனங்களுக்குள்ளான பேராசிரியர் தம்பையாவின் இனமூலம்

உலகப்புகழ், இலங்கைப் பல்கலைக் கழகங்களில் ஒன்றான பேராதனை பல் கலைகழக சிறப்பு கலாநிதி பட்டம், என் பவற்றுக்கு மேலாக அவர் ஒரு தமிழரர்க அதுவும் யாழ்ப்பாண தமிழராக போனமை இந்த விமர்சனங்களிடை தெற்றென புல னாகும். ஒரு தமிழன் நூலுக்கு முன்னுரை எழுதி சிங்கள இனத்தை காட்டி கொடுத் தாயே துரோகி' என லால் ஜெயவர்த் தனா வாங்கிய கண்டனத்துக்குள்ளேயே இதனை இலகுவாய் தெளியமுடியும்.

பௌத்தம் பற்றியும், பௌத்த பிக்கு மாரின் அரசியல் பற்றியும் விமர்சித்து ஏனைய ஆய்வாளர்களுக்கு நேராத கதி தம்பையாவுக்கு நேர்ந்ததிலும் இந்த விடயம் வெளிப்படும்.

3. 2. பேராசிரியர் தம்பையாவின் புலமைப் பலமும், உலகளாவிய அங்கீகாரமும்:

ஏற்கெனவே குறிப்பிட்டவாறு பேரா சிரியர் தம்பையா, உலக புகழ்பெற்ற ஹாவாட் பல்கலைக்கழக மானுடவியல் மையத்தின் தலைமைப் பேராசிரியர், இதனைவிடவும் ஆய்வுச்சிறப்பு மிக்க சிக்காகோ, கேம்பிரிஜ் பல்கலைக்கழகங்க ளுடன் தொடர்பு கொண்டவர். எல்லா வற்றுக்கும் மேலாக மிகநீண்ட காலமாக பௌத்தம் தொடர்பான ஆய்வுகளின் வழியே அறிவுலகில் தன்னை நிலைநாட் டிக்' கொண்டவர். இலங்கையின் பேரா தனைப் பல்கலைக்கழகம் அவரை, அவரது ஆய்வுப் புலமைக்கென்றே கௌரவித்து முள்ளது. இந்நிலையில் அவரது ஆய்வு முடிவுகளுக்கு உலக அரங்கில் உள்ள செல் வாக்கு உறுதியானது 'பௌத்தம் துரோ கம் செய்தது?' என அவர் எழுப்பும் கேள்வி நியாயமாகின்ற போது, பலரது உணர்வு நிலைகள், மதிப்புக்களும் கேள் விக்குள்ளாவது இயல்பானது. இத்தகை யோரின் ஒன்று கூடலாகவே இந்த கண்ட னங்களும் வெளிப்பட்டமையைக் காண லாம்.

3. 3. வளர்ச்சி காணும் புதிய அரசியல்சார் மானுடவியலின் (Political Anthropology) புதிய தரிசனங்கள் தொடர் பான அறியாமை அல்லது அவற்றினை உணரும், ஏற்கும் பக்குவமின்மை

கௌரவ கலாநிதி, அகௌரவப்படு வதற்கு அவரின் புதிய நூல் எழுப்பிய கேள்வி மட்டும் காரணமாக அமையாமல், அண்மைக்காலங்களில் அவரது உரைகளி லும் ஆய்வுகளிலும் வெளிப்படுத்தப்பட்ட அரசியல்சார் மானுடவியல் கருத்தியலும் அவரை தடைசெய்யும் புதிய சர்ச்சையில் முக்கிய இடம்பெறுவதை உணரமுடியும்.

பேராசிரியர் தம்பையா தொடர்பான சேறுபூசல்களுக்கெதிராக அவருக்கு ஆதர வாக ஓர் அறிஞர் குழாம் உடனடியாக குரல் தந்தமை குறிப்பிடத்தக்கதோர் நடவடிக்கையாக பதிவு பெறுவது. இந்த கண்டன வேளை அதிஷ்டவசமாக கொழும் பில் விடுமுறையில் தங்கியிருந்த பேரா சிரியர் கணநாத் ஒபயசேகர இந்த அணிக்கு தலைமைதாங்கியமையும், இந்த எதிர்க் குரலை பலமாக்கிய ஓர் அம்சமெனலாம். வழமையாக பிரச்சினைகளை கிளறிவிடும் 'தேசிய' பத்திரிகைகள், எதிர் கருத்துக் களுக்கு உரிய இடம் தருதல் மிகவும் அரிதானது. எனினும் இந்த விவகாரத்தில் நிலைமை மேம்பட்டே காணப்பட்டது. எனினும் இறுதியாக வெளியிட்ட தம்பையா ஆதரவு அறிஞர் அறிக்கை.

'பிரிவினைவாதத்திற்கு தம்பையா எதிரானவர்' (Sunday Island 2.1.94) என்ற மகுடத்துடனேயே பிரசுரமானமை இங்கு சிறப்பான கவனத்திற்குரியது.



படிப்பகம்

உறுதிப்படுத்துகின்றன. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியத்தின் நடுவண்ணாக தஞ்சாவூர் அமைந்திருந்தமையும்; நிலமானிய சமூக உற்பத்தியுறவுகளுடன் இணைந்த பொருண்மிய - சமூக மேற் கட்டுமானக் கோப்பினைப் பாதுகாப்பதற்கு ஏற்ற நிறுவனங்களை உருவாக்குவதற்கும் அது உதவியது எனலாம். இப்பின்னணியில் சமூக ஒன்றுகூடல் மையங்களான கோவில்கள், மன்றுகள், ஆதுலர் சாலைகள் (வைத்திய சாலைகள்), சரஷ்வதி பண்டாரங்கள் (நூலகங்கள்), கல்விச்சாலைகள் (பல்கலைக் கழகங்கள்) போன்றவற்றை உருவாக்கி, நிலமானிய அமைப்பு முறைக்கேற்ப சட்ட திட்டங்களையும், கல்விமுறையினையும், சேவைமுறையினையும் (Rule and Regulations Education Service) உருவகித்துக் கொடுக்கப்பட்டமையைக் காணமுடிகிறது. பின்னர் அச்சமூக நிறுவனங்களுடாகவே குறிப்பிட்ட வரையறைக்குட்பட்ட வகையில் பேரரச அரசியல் நிர்வாக முறைகளுடன் இணைத்து நடைமுறைப்படுத்தப் பட்ட முகாமையை நாம் சோழர் காலத்தில் காண்கின்றோம். அதுவே கோயிற் பொருளாதார முகாமைத்துவ ஒழுங்கின் சிறப்பியல்புகளாக மத்தியகாலத் தென்னிந்திய மக்கள் மத்தியில் நிலைத்து நின்று சமயத்தின் பெயரால் அதே மக்கள் மீதான ஆட்சியதிகாரத்துக்கான ஆணையை (Mandate) அரசுக்குப் பெற்றுக் கொடுத்திருந்தது. (சித்திரலேகா மௌனகுரு 1985 பக்கம் 37). இந்நிலமையானது தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில் சோழப் பேரரசர் காலத்திற்கு அப்பாலும் தொடர்ந்து செல்வாக்குச் செலுத்தியதோடு, தென்கிழக்காசிய நாடுகளிலும் அதே பொருளாதார அடித்தளத்தினைக் கொண்ட 'கோயிற் பண்பாடு' பரவுவதற்கும் காரணமாக அமைந்தது. விஜய நகரப் பேரரசு கால சமுத்திரப்பண்பாடு (Oceanic Culture) இதற்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாக அமையும்.

**நிலமானிய சமூக உறவுகளின் முகாமைக்குரிய நிறுவன வடிவங்கள்:-**

சோழப் பெரும் பேரரசர்களை முதலாம் இராஜராஜன் (985 - 1014 A.D.) முதலாம் இராஜேந்திரன் (1012 - 1044 A.D) வீரராசேந்திரன் (1063-1069 A.D.) முதலாம் குலோத்துங்கன் (1070 - 1110 A.D) ஆகியோரால் நன்கு திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட சமூக ஒன்றுகூடல் மையங்களுள் ஆட்டைவாரியம் (Supervising Commit ee), ஏரிவாரியம், பொன் வாரியம் என்பன மிகவும் தாழ்ந்த மட்டத்திலிருந்து மேல்நோக்கிய நிலைகளை நோக்கியவாறான முகாமைத்துவச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திய முறையைச் சாசனச்சான்றுகள் கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ள முடிகிறது. இவை மத்திய அரசினை நோக்கிய அல்லது பிரதான பண்டகசாலையின் பொருண்மிய மேம்பாட்டிற்கான வருமான அதிகரிப்பு முகாமையை சிறந்த பயிற்சியுடன் ஆற்றிமுடித்தன. தற்கால முகாமைத்துவ நெறியில் இம்முறை "Bottum up approach" என குறிப்பிடப் படுவதனைக் காண்கின்றோம் இவ்வணுகு முறையானது (ஏற்கனவே விதைந்துரைக் கப்பட்ட) விய வஸ்தையை (கோட்பாடுகளை) நடைமுறைப்படுத்துகின்ற முறையிலே சமூக உறவுகளை மேல்நோக்கிய வகையில் நிறுத்திய சமய நிறுவனங்களின் பூரண ஒத்துழைப்புடன் அவற்றைத் தயார் படுத்தி வைப்பதனை நோக்கமாகக் கொண்டதாகும். இங்கு சமய நிறுவனங்கள் மக்களது பூரண ஒத்துழைப்பினை மறைமுகமாக மத்திய அரசிற்குப் பெற்றுக் கொடுப்பதற்காக 'தமது சேவையினை' அகலப்படுத்தி - ஆற்றுப்படுத்தியிருந்தன. இதனாலேயே இந்துக் கோவில் என்ற தனித்தவொரு நிறுவனம் வங்கிகளாகவும் தொழில் வழங்கும் நிறுவனங்களாகவும் குத்தகைதாரர்களாகவும் செயற்பட்டு மக்களது தொடர்பகங்களாக பன்முனைப் படுத்தப்பட்ட நோக்கில் மக்கள் மத்தியில் மத்திய அரசின் ஆணைகளை நிலைநிறுத்துவதற்கும், அதன் அடிப்படையில் அரசின் நிலைப்பேறிற்கான அங்கீகாரத்தினை மக்களிடமிருந்து மறைமுகமாகப் பெற்றுக் கொள்வதற்குமாகச் செயற்படவாய்ப்பாயிற்று. இந்நிலையை 'Publ c Management Strategy' எனத் தற்கால முகாமைத்துவ நெறியில் குறிப்பிடப்படுவதனை நாம்

www.padippakam.com

காண்கின்றோம். சோழப்பேரரசர் கால அரச முறைமை இத்தகைய முகாமைத்துவ நெறியைத் தழுவியிருந்தமையைச் சாசனச் சான்றுகள் வாயிலாகக் காணமுடிகிறது.

நிலம், கோவில் சொத்துடமை:-

சோழர்காலத் தமிழகத்தில் சிறப்புப் பெற்றிருந்த பெரும்பாலான கோவில்கள் பல்வேறு வடிவங்களில் சொத்துக்களைத் தம்மகத்தே கொண்டு விளங்கின. தனியுரிமையுடைய பயிர்ச்செய் நிலங்களாகவும் குத்தகைப் பங்குரிமை கொண்ட நிவந்த நிலங்களாகவும், இறையுரிமை கொண்ட வருவாய் நிலங்களாகவும் ஆடு, மாடு போன்ற கால்நடைகளாகவும் பொன்னாகவும், பொற்காசுகளாகவும், பொன் அணிகலன்களாகவும் இன்னும் பல்வேறு நிவந்தங்களின் உரிமையாகவும் கோவில்களுக்குச் சொத்துடமை குவிந்து கிடந்தன (ராசுகுமார், மே. து., 1978, பக் 22).

பேரரசுக்குரிய ஆழ்புலம் அதிகரித்துச் செல்வதற்கேற்ப விகிதாசார அடிப்படையில் நன்செய் – புன்செய் நிலங்கள் பற்றிய வகையீடுகளும் நிலப்பரப்பும் அதிகரித்துச் சென்று அவை கோயிலுக்குரிய நிலமாக ஆக்கப்பட்டன. முதலாம் இராஜராஜன் காலத்து (985 A D – 1014 A.D) பேரரச ஆள்புலப் பரப்பினைவிட அவனது மகனான முதலாம் இராசேந்திரனது காலத்து (1012 A.D-1044 A.D) பேரரச ஆள்புலப் பரப்பு உள்நாட்டிலும் கடல்கடந்த நாடுகளிலும் அதிகரித்தமையை இம்மன்னர்களால் வெளியிடப்பட்டிருந்த மெய்க்கீர்த்திச் சாசனங்கள் வாயிலாகக் கண்டு கொள்ள முடிகிறது. பேரரசின் ஆள்புலப் படர்ச்சிக்கேற்ப மாகாண நிர்வாகப் பகுப்பும் அதிகரித்துச் சென்றது. பொதுவாக அவை மண்டலங்கள் என்றே அழைக்கப்பட்டன. மொத்தமாக ஒன்பது மண்டலங்கள் சோழப் பேரரசின் மாகாணக் கூறுகளாக இடம்பெற்றிருந்தன. ஈழமான மும்முடிச் சோழமண்டலம் என ஒன்பதாவது மண்டலமாக இலங்கை சோழப் பேரரசிற்குள் உள்ளடக்கப்பட்டிருந்தமையை மெய்க்கீர்த்திச் சாசனங்கள் உறுதிசெய்கின்றன. மன்னர்களது ஆட்சியாண்டு (Regnal years) அதிகரிக்க அதிகரிக்க புதிதாகக் கைப்பற்றிய நிலங்களின் பரப்பும் அதிகரித்துச் சென்றமையை மெய்க்கீர்த்திச் சாசனங்களின் பருப்பமும் நீட்சியும் எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வாறு ஆள்புல விஸ்தரிப்பிற்கே புதிதாகக் கைப்பற்றப்படும் நிலங்கள் நன்செய் நிலங்களாகவும் - புன்செய் நிலங்களாகவும் வகையீடு செய்யப்பட்டு, அளந்து அவற்றின் நிலப்பரப்பிற்கேற்ப இறைநிலங்களாகவும், இறையிலி நிலங்களாகவும் வருமானவரிப் பொத்தகத்தினால் பதிவேட்டில் (கோயிற் பதிவேட்டில்) பதிவுசெய்யப்பட்டன. இப்பதிவினைச் சரிபார்ப்பதற்காகவும் தேறிய வருமானத்தை இறைநிலங்களுடன் ஒப்பிட்டு ஐந்தொகைக் கணக்கினைப் பதிவு செய்வதற்காகவும் வேண்டிப் பேரரசிலுள்ள இறைநிலங்கள் திரும்பத்திரும்ப அளவீடு செய்யப்பட்டிருந்தன. இதற்கென அளவுகோல் முறையும் சோழப்பேரரசர் காலத்தில் நடைமுறையில் இருந்தமையை சாசனச்சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. (Tirumalai, R., 1987 , P 103 - 104 முதலாம் இராஜராஜன் காலத்தில் 'இராஜராஜன் அளவுகோல்' பேரரசிலுள்ள இறைநிலங்கள் இரண்டு தடவை திரும்பித்திரும்பி அளவீடு செய்யப்பட்டிருந்தது என்பதனையும் அறியமுடிகிறது. இவ் அளவைமுறை (Servey: Land Serv.ying) கோயிலின் முகாமையிலேயே கண்காணிக்கப்பட்டு நடத்துவிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. மொத்த தேசிய வருமானக் கணக்கீடு செய்யப்பட்டதன் பின்னர் மத்திய அரசிலுள்ள வரிப் பொத்தகத்தினால் (ஒருவகை) நிதி உத்தியோகத்தர் அல்லது Finance Minister) மத்திய அரசுற்குரிய வரவுப்பதிவேட்டில் பதியப்பட்டது. அதன் ஒரு பிரதி கோவில்களிலுள்ள வங்கிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. இவை பின்னர் கோயிற் சாசனங்களாக வலிமைப்படுத்தப்பட்டிருந்தன



படிப்பகம்

இதுவே வேளாண்மை உற்பத்தி முறையில் கோவில்கள் நேரடியாகப் பங்குகொள்ள வேண்டியிருந்த சூழ்நிலையாகும்.

உற்பத்திக்கு அடிப்படையான விளை நிலங்களைப் பெருமளவில் உரிமையாகக் கொண்டு, உற்பத்தியை உருவாக்குவதில் பெரும் பங்கு கொண்டிருந்த இடைக்காலக் கோவில்கள் நில உற்பத்திக்கு (வேளாண்மைக்கு) இன்றியமையாத தேவையான நீர்வளங்களை நிலைப்படுத்தி, நீர்ப்பாசன வாய்ப்புக்களை விரிவாக்கி வைத்திருந்தன. நீர்ப்பாசனத்துக்கான ஏரிகளும், குளங்களும், வாய்க்கால்களும் வேறுபல பாசன வழிமுறைகளும் பெரும்பாலும் கோயில்களுக்கே உரித்தாக இருந்திருக்கின்றன. (ராசுகுமார், மே. து, 1978, பக் 125). இச்சாதனங்களிலிருந்து பெறப்பட்ட வரி முறைகள் அவ்வரியின் அளவு முதலான வற்றைத் தீர்மானித்து மக்கள் மத்தியிலிருந்து அவற்றை வசூல் செய்வதற்கென ஒரு நிறுவனமாக 'ஏரிவாரியம்' தொழிற்பட்டிருந்தமையைக் காண்கின்றோம். இச்சமூக ஒன்றுகூடல் மையத்தினை அறுவர் கொண்ட அங்கத்தினர் குழு ஒன்று தேர்வு முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பெற்று '360 நாளும் நிரம்ப' ஊழியஞ்செய்வதற்கு நியமிக்கப்பட்ட செய்தியை 1 ம் பராந்தகச் சோழனது உத்தரமேரூர்க் கல்வெட்டினால் அறிகின்றோம். (Subramaniam, N. 1985) தற்காலத்தில் மாநகரப் பகுதிகளில் Water Tax முறை அறவீடு செய்வது போன்று பாய்ச்சப்படும் நீரின் அளவை ''போகம் அல்லது பயிர்ப்போகம்' அளவீடு செய்து, சோழர் காலத்தில் கோயில்களின் முகாமையில் 'ஏரிவாரியப் பெருமக்கள்' நீர்வரியைச் சேகரித்து கோவிலின் பெயரில் வரியிலிட்டார்கள். அத்தொகை பின்னர் மத்திய அரசு அக்கோவிலுக்கு வருடா வருடம் வழங்கிய மானியத் தொகையிலிருந்து மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டமையை சாசனப் பதிவுகள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு பேரரச நிர்வாக நடவடிக்கைகளுக்கும் சேவைத்துறை நடவடிக்கைகளுக்கும் வேண்டிய பொருளீட்டம் (Income from Water Resources) நீர்வளங்களிலிருந்தும் பெறப்பட்டமையைக் காண்கின்றோம்.

சோழப்பேரரசின் பண்பாட்டுமயமாக்கத்திற்குரிய (Cultural assimilation) மேற்கட்டுமானப் பணிகள் தீபகற்ப இந்தியாவிற்குள்ளும், கடல்கடந்த நாடுகளான இலங்கை, இந்தோனேசியநாடுகள், இந்தோசீனநாடுகள் மற்றும் மாலைதீவுகள் பழந்தீவு பன்னீராயிரம் (அந்தமான் - நிக்கோபார் தீவுக்கூட்டங்கள்) முதலானவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட செல்வங்களின் ஈட்டத்தைக்கொண்டே நிறைவேற்றப்பட்டன என்பதனைச் சாசனச்சான்றுகள் வாயிலாக உணரமுடிகிறது. ஈழத்திலிருந்து இலுப்பைப்பால் தஞ்சாவூருக்கு ஏற்றுமதியான செய்தியை தஞ்சைப்பெரிய கோயில் கல்வெட்டுக்களினால் அறிகின்றோம். இலுப்பைப்பால் என்பது இலுப்பெண்ணெய் ஆகும். அரண்மனைகளிலும் கோயில்களிலும் விடிய விடிய ஒளியேற்றப்படுவதற்குரிய எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டது இலுப்பெண்ணெயே ஆகும். மன்னாரிலுள்ள இலுப்பைக்கடவை ஊடாக மாந்தைத்துறைமுகத்தில் அமைக்கப்பட்ட பெருந்தொட்டிகளில் இலுப்பெண்ணெய் சேகரிக்கப்பட்டு, தஞ்சாவூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. கூடவே 'பூநகர்' என்றழைக்கப்பட்ட பூநகரியிலிருந்தும் பெருந்தொகையான மலர்கள் தஞ்சாவூருக்கு மாந்தைத்துறைமுகத்தினூடாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

சோழப்பேரரசர்கள் பின்பற்றியிருந்த கடல் வாணிப முகாமைமுறையானது பல்வேறு வணிக கணங்கள் (Trade Guilds) மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்டமையைச் சாசனங்கள் எடுத்துக்காட்டுகின்றன. தீபகற்ப இந்தியாவின் இரு கடற்கரையோர துறைமுக நகரங்கள் யாவும் சோழ வணிக கணங்களின் முகாமைத்துவத்தின் கீழ் நேரடியாகக் கொண்டுவரப்பட்டிருந்தன. இந்நிர்வாக முறைமூலம்

www.padippakam.com

அராபிய வியாபாரக் குழுக்களது வாணிப ஏகபோகமுறை (Monopoly of Trade) தற்காலிகமாக தென்னிந்திய துறைமுக நகரங்களிலிருந்தும், வங்காளவிரிகுடா (சோழவாபி) பரப்பிலிருந்தும் நீக்கப்பட்டிருந்தமையைக் காணமுடிந்தது. தென்னிலங்கையுட்பட இத்தீவின் துறைமுக நகரங்கள் யாவுமே சோழவணிக கணங்களின் ஏகபோகத்திற்குட்பட்டிருந்தமையை தொல்லியற்சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன (Spencer, W. George, *1983*, PP. *46 – 65*)

இலங்கைத்தீவில் வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வணிக கணங்கள் தம்மால் ஈட்டப்படும் 'அந்நியச் செலாவணி' வருமானத் தொகையின் பாதுகாப்புக் கருதியும் அவை சீராக மத்திய அரசினைச் சென்றடையும் பொருட்டுமாக தனித்துவமான படையணிகளையும் வாணிபக் கிடங்குகளையும் (Trade Granaries) உருவாக்கி வைத்திருந்தனர். (Spencer, W. George, *1983*, P. *24*) பொலன்னறுவையான ஜனநாத மங்களத்தில் கிடைத்த 'வேளைக்காரக்கல் வெட்டு' இச் செய்தியை எமக்கு உணர்த்தி நிற்கின்றது. கடல் வாணிபத்தில் ஈடுபடும்போது கடற்கொள்ளைகளிலிருந்தும், முஸ்லீம் வியாபார மரக்கலங்களின் அச்சுறுத்தல்களிலிருந்தும் தம்மைப்பாதுகாத்துக் கொள்ளவும் வாணிப முயற்சிகளின்போது வணிக கணங்கள் தனித்துவமான குட்டி அரச நிறுவனமாகச் செயற்பட்டுக் கொள்வதற்காகவுமே சிறுசிறு படையணிகளைத் தம்முடன் வைத்திருந்தனர். எவ்வாறெனினும் சோழர்கால வாணிபமுகாமையின் பின்னணியில் கடற்படைப்பலம் பிரயோகிக்கப்பட்டிருந்தது என்பதனைச் சாசனச் சான்றுகள் வெளிப்படுத்தியுள்ளன. மத்திய அரசாங்கத்தில் பேரரசன் ஆணை பிறப்பிப்பது போன்றே அவ்வவ்வணிக கணங்களின் தலைவர்களும் வாணிப உரிமை பூண்ட பிராந்தியங்களில் ஆணை பிறப்பித்து வாணிப முகாமைமூலம் பேரரசனுக்கும் தமக்குமிடையிலான இடைவிடாத தொடர்புகளை உறுதி செய்திருந்தமையைச் சாசனச் சான்றுகள் வாயிலாகக் கண்டுகொள்ள முடிகிறது. இம்முறையை 'முகாமையில் பன்முகப்படுத்தப்படல்' (Decentralization of Management) என்று தற்காலத்தில் குறிப்பிடுவர்.

அரச ஆணையும் முகாமையும்;-

சோழப் பேரரசர்களது ஆணைமுறையைப் பார்க்கும்போது நிலமானிய சமூக முறைமையின் இறுக்கத்தினையும் அவ்வாணையை நடைமுறையில் செயற்படுத்திய நிறுவனங்களின் அதிகார ஒழுங்குமுறையையும் அதிகார வரம்புகளையும் நன்கு கண்டுகொள்ள முடிகிறது. முதலாம் இராஜராஜனின் பெரியலெய்டன் செப்பேட்டிலுள்ள ஆணைப்பொறிப்பு இதற்குச் சிறந்தவோர் எடுத்துக்காட்டாகும். இச் செப்பேடு கி.பி. *1006*ஆம் ஆண்டில் நாகபட்டினத்தில் எடுப்பித்த (கட்டப்பட்ட) சூடாமணி பன்ம விகாரத்துக்கு வேண்டும் நிவந்தக் கொடையை அத்தாட்சிப்படுத்துவதற்காக குறிப்பிட்ட கிராமங்களிலுள்ள வருமானங்களையும், இறைநிலங்களையும் அவற்றின் அளவுகளையும் தேறிய தேசிய வருமானத் தொகையிலிருந்து (திரட்சியிலிருந்து) விடுவிக்கப்பட்ட பின்னர் 'பள்ளிச் சந்தமாக' (இறையிலியாக) விகாரைக்கே வழங்குமாறு பேரரசன் இராஜராஜன் விடுத்த ஆணையை அதிகார பூர்வமாக வெளிப்படுத்துவதன் பொருட்டு பொறிக்கப்பட்டதாகும். இப்பொறிப்பின் முதற்பகுதி பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.

இங்கு கொடுக்கப்பட்ட சாசனப் பாடப்பகுதியானது குறிப்பிட்ட அச்செப்பேட்டின் தொடக்கமாகும். சாசனம் பொறிக்கப்பட்டதன் நோக்கமும் விடய தானமும் இப்பாடப் பரப்பிலிருந்து தொடர்ந்து பொறிக்கப்பட்டுள்ளது. அவற்றினூடாக சோழப்பெரும் பேரரசில் நடைமுறைப்படுத்தப்பட்ட உயர் அதிகார முகாமையும் அவற்றின் இறங்குவரிசை ஒழுங்கினையும் இங்கு கொடுக்கப்பட்டுள்ள



படிப்பகம்

கூர்மையடைந்துள்ள இலங்கையின் தேசிய இனத்துவ நெருக்கடி தொடர்பாக அரசியல்வாதிகள் மத்தியில் மட்டுமன்றி அறிஞர்குழாத்திடையும்கூட தெளிவின்மை காணப்படுவதும், பல அறிஞர்கள் உணர்வுவழி அறிவிழந்து போவதும் கூட, பல போலி ஆய்வு அறிக்கைகளின் வழி (Psudo-research reports) வெளிப்படுவதை காண முடியும்.

இலங்கையின் இன்றைய நெருக்கடி தொடர்பான தம்பையாவின் கருத்தியல், 'இனத்துவம்' 'பண்பாடு' என்ற வரையறைகளைத் தாண்டி, அரசியல்சார் மானுடவியல் (Political Anthropology) என்ற கிளை விரிவூடு வளர்ச்சி காணும் மானுடவியலின் புதிய தரிசனங்களை வெளிப்படுத்துவது.

''பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளில் தேசிய அரசு உருவாக்கலில் மூன்று கட்டங்களை காணலாம். முதலாவது கட்டம், காலனித்துவத்தை நீக்கும் போக்கைக் கொண்டது. இந்தியா, அல்ஜீரியா, கென்யா போன்ற பல நாடுகளில் பலாத்கார அல்லது சமாதானப் போராட்டங்கள் தேசத்தின் தோற்றத்துக்கு முன்னோடியாக அமைந்தன.

இலங்கையிலும், பர்மாவிலும் அதிகார மாற்றம் ஒப்பீட்டளவில் சமாதானபூர்வமாக அமைந்திருந்தது. மக்கள் மனங்களில் தேசிய உணர்வை இவை ஊட்டின. இரண்டாவது கட்டம் தேசிய நிர்மாணமாகும். 50 களிலும் 60 களிலும் ''தேசிய இறைமை'', ''தேசிய கலாசாரம்'', ''தேசிய ஒருமைப்பாடு' ஆகியனவே சுலோகங்களாக அமைந்தன. இக்கட்டத்தில் அரசியல் கட்சிகள் தத்தமது தனியான நலன்களுக்கு அழுத்தம் தருவதற்குப் பதிலாக ஒத்துழைக்க விரும்பின. இலங்கையில் தமிழர்கள், முஸ்லிம்கள் உட்பட பல்வேறு குழுவினர் டி. எஸ். சேனநாயக்காவோடு ஐக்கிய கட்சி ஒன்றினையும் அரசாங்கத்தையும் ஸ்தாபிக்க ஒன்று சேர்ந்தனர். பொது சுபீட்சம், பொருளாதார முன்னேற்றம் ஆகிய கனவுகளால் அவர்கள் உந்தப்பட்டனர்.

மூன்றாவது கட்டத்தில் இந்த தேசிய நிர்மாணக்கட்டம் பெரும் கேள்விக்குறியாக்கப்பட்டது. 1960 களிலிருந்து இனமுரண்பாடுகள் தோற்றம் பெற்றன. பிரிவினைச் சக்திகள் மொழி, இனம், சமயம் பிராந்தியம் ஆகியவை முன்னுக்கு வந்தன. குழுக்கள், இனமுரண்பாடுகள், பன்மைச் சமுதாயம், அதிகாரப்பரவலாக்கம், பாரம்பரிய தாயகங்கள் ஆகியவை புதிய கோஷங்களாயின (தம்பையா, 1992)

'நெருக்கடியிலுள்ள தேசிய அரசும், இனத்தேசியவாத எழுச்சியும்' என்ற தலைப்பிலான பேராசிரியர் தம்பையாவின் கருத்துநிலை, உலகின் இனத்தேசியவாத நெருக்கடிகளை சமூக மானுடவியல் நோக்கில் தெளிவுபடுத்துவது; எமது நிலைமையை விளங்கவும் துணையாவது.

விஞ்ஞான முறையியலின் வழி பிரச்சினையை விளங்க முடியாத அல்லது விளங்க விரும்பாத போலி அறிவியலாரும், அரசியலாரும் சந்திக்கும் புள்ளி இதுதான். பௌத்த மதத்திற்கு எதிரானவராகத் தம்பையாவைக் குற்றம் சாட்டுவதன் மூலம், அரசியல் தொடர்பான அவர் அறிவியலுக்கு எதிரானோர் அணியைத் திரட்டுதலும் இலகுவாகலாம். இத்தகு

www.padippakam.com

சர்ச்சைகளின் மையங்களாக, மக்கள் தொடர்புசாதனங்கள் பெருமளவில் பயன் படுத்தப்படுவதும் இந்தப் பின்னணியில் தான்.

ஒட்டுமொத்தமாக நோக்குகையில் அறிவை உணர்வும் அரசியலும் விழுங்கப் புறப்பட்ட சம்பவமாக, தம்பையாவின் பௌத்தம் துரோகம் செய்தது? - நூல் தடை விவகாரம், சமூக ஆய்வு முறையி யல் மாணவர்களினதும் சிறப்பான கவனத் திற்குரியதாகின்றது.

□

## உசாத்துணை


Babbie, Earl R 1975 - **The Practice of Social Research,** *Wadsworth Publishing company, Enc., California.*

Obeyesekere, Gananath 1993 - **Sunday Island, Colombo,** 28-11-93

Tambiah, S. J 1992 - **Buddhism Betrayed? Religion, Polity and violence in Sri Lanka,** *Chicaco Univ Press*

Uyangoda, Jeyadeva 1993 - **Sunday Island,** *Colombo.* 12-12-93

தம்பையா, ஸ்டான்லி 1992 - 'இனத்தேசிய வாதம்...' தினகரன் வாரமஞ்சரி, கொழும்பு. 30-03-92




படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி vi இதழ் iii - 1994

# சோழர் காலத் தமிழகத்தில் சமூக ஒன்றுகூடல் மையங்களின் முகாமைத்துவம்

## சாசனச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

செல்லையா கிருஸ்ணராசா.

## முகாமையின் தோற்றம்

நதிக்கரை நாகரிகங்கள் தோற்றம் பெற்ற காலத்திலிருந்தே நீர்ப் பங்கீடு தொடர்பான முகாமையின் பாற்பட்ட அறிவுத்திரட்சியினை இயல்பாகப் பெறும் வாழ்வு உருவாக்கம் பெற்றது எனலாம். இயற்கை விடுத்த சவாலை எதிர்கொள்ள முனைந்த மனிதன் தனது அறைகூவலாக சில சாதனைகளைப் புரிய முற்பட்டான். அதன் விளைவு நதிகளின் போக்கிற்குக் குறுக்கே அணைக்கட்டுக்கள் உருவாகின; ஆற்றின் போக்கு இதனால் தடுத்து - கட்டுப்படுத்தப்பட்டது; கால்வாய்கள் மூலம் நீரைப் பங்கிட்டு விளை நிலங்களுக்கு நீர்பாய்ச்சப்படும் முகாமை முறைமை தோற்றுவிக்கப்பட்டது. வெள்ளப் பெருக்குக் காலங்களில் ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டிருந்த அணையின் நீர்ப்பூட்டுக்கள் திறந்துவிடப்பட்டு வெள்ளப் பெருக்கு தவிர்க்கப்பட்டது. சுட்ட செங்கட்டிகளின் உபயோகத்தின் மூலம் நீரினால் பாதிப்புக்குட்படாத வாழ்விடங்கள் மனைகள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு வாழ்வினூடே கண்டுகொள்ளப்பட்ட முகாமைபற்றிய அனுபவத் திரட்டுக்கள் பின்னர் வரிவடிவில் பொறிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுப்பின்னர் அவை ஒரு வகையான முகாமை முறையில் களஞ்சியப் படுத்தப்பட்டன.

இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முன்னரேயே குறிப்பிட்ட நதிப்பள்ளத்தாக்கின் செழிப்பான வண்டல்மண் படுக்கைகளில் மனிதன் இயற்கையை முகாமைத்துவம் புரியும் தனது வாழ்வினைத் தொடங்கி மேலாண்மையைத் தோற்றுவித்திருந்தான்.

வளமான வண்டல் மண் படுக்கைகளில் வாழ்வு முறை செழிப்படைந்தமையைத் தொடர்ந்து அவ்வாழ்க்கை முறையின் மையங்களாக நகரங்கள் பெரும் எண்ணிக்கையில் தோற்றுவிக்கப்பட்டிருந்தன. மானிட சமுதாயத்தின் முதலாவது நகர் மயமாக்கம் (Urbanization) நிகழ்ந்த இவ்வண்டற் சமவெளிகளே முகாமை முறையின் தோற்றமாகவும் விளங்கினவென்றால் மிகையாகாது. இந்நகர வாழ்வின் செழிப்பே மிகையுற்பத்தி (Surplus Producetion) முறையின் வளர்ச்சிக்கும் அதன்



படிப்பகம்

www.padippakam.com

ஊடங்களின் (Mass Media) தோற்ற வளர்ச்சிக்கும் அடிப்படையை இட்டுக் கொடுத்திருந்தது. அவையே பின்னர் மக்களின் ஒன்றுகூடல் மையங்களாகவும் ஆவணக் காப்பகங்களாகவும், ஆலயங்களாகவும், அரண்மனைகளாகவும் பரிணாமம் பெற்றன. இம்மையங்களில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன; தொழில்நுட்ப உத்திகள் விவாதிக்கப்பட்டன, சுகாதார முறைகள் பரிசீலிக்கப்பட்டன; புதிய அறிவியற் கண்டுபிடிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன பின்னர் அவை கண்டறியப்பட்ட வரிவடிவில் (Script) பதியப்பட்டு ஆவணங்களாகக் களஞ்சியப்படுத்தப்பட்டன. இறுதியில் இம் மையங்கள் பல தொழிற்பிரிவுகளாக (Division Labur) பிளவுபட்டிருந்த அந்நகர மக்களை ஒரணிப்படுத்துகின்ற முகாமைத்துவத்திற்குள்ளாக்கியதன் விளைவாக அரசு அரசன் - அரசாட்சி (State - Kingship - Reign) என்பன உருவாகின. அரசவம்சங்கள் தோற்றம் பெற்றமையைத் தொடர்ந்தே ஆதிக்க நுட்ப முகாமைத்துவம் வளர்ச்சி கண்டது. இவ்வாதிக்க நுட்ப முகாமைத்துவம் சமகாலத்தில் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த சமய முறைகளைத் தழுவிய வகையிலேயே புராதனகால-மத்தியகால சமுதாயங்களில் தாக்கத்தினை ஏற்படுத்தி நின்றமையைக் காணலாம். (சித்திரலேகா மௌனகுரு; 1985, பக் 49, பக் 57ல் அடிக்குறிப்பு 4ஐப் பார்க்கவும்).

தென்னிந்தியாவில் காணப்பட்ட மக்கள் ஒன்றுகூடல் மையங்கள் (Community Centers) ஆதிக்க நுட்ப முறையின் முகாமைத்துவம் வளர்ச்சி கண்டதன் பின்னணியில் மக்கள் பிரதிநிதிகளின் மையங்களாகத் தோற்றுவிக்கப்பட்டன. (Panjayath / Kuriyul) சோழப்பேரரசர்களது அரண்மனைகளை எடுத்துக்கொண்டாற்கூட அவை முதலில் கோயில்களாகவும் பின்னர் வங்கிகளாகவும், தொழிற்கூடங்களாகவும், ஆவணக்களஞ்சியங்களாகவும், ஆதுலர் சாலைகளாகவும் இறுதியில் நாடக மன்றுகளாகவும் தொழிற்பட்டிருந்தமையை சாசனச்சான்றுகள் வாயிலாகக் காணும்போது அங்கு சிறந்தவொரு முகாமைத்துவமுறை நடைமுறைப்படுத்தப்பட்டமையை உறுதிப்படுத்திக்கொள்ள முடிகிறது., (தென்னிந்தியக் கோயிற்சாசனங்கள், பக்கம் 11 பகுதி 11, 1953-1957). அவ்வகையில் கி. பி. 9ம் நூற்றாண்டிற்கும் கி. பி. 13ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத் தென்னிந்திய அரசியல் முகாமைத்துவப் பரப்பில் கடல்சார் பேரரச அமைப்புமுறை ஒன்று தோற்றம் பெற்றதோடல்லாது புவிசார் அரசியல் முறையிலும் பெருந் தாக்கம் ஏற்படக் காரணமாக இவ்வாதிக்க நுட்பமுறையின் முகாமைத்துவம் வழிசமைத்தது. இதற்குப் பேரரசச் சோழர்களது ஆதிக்க விஸ்தரிப்பு நடவடிக்கைகள் வடிகாலமைத்துக் கொடுத்திருந்தன. இவ்வறிமுகப்பரப்பின் பின்னணியில் பேரரசுச் சோழர்கால முகாமைத்துவத்தின் சிறப்பியல்புகளை இக்காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்திருக்கக்கூடிய சமூக ஒன்றுகூடல் மையங்களுடன் தொடர்புபடுத்தி ஆராய்வதாகவே இச்சிறு ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

சோழர்கால நிலமானிய அமைப்பு முறையும் முகாமையும்:

சோழர்காலப் பேரரச அமைப்பு முறையின் நடவடிக்கைக்களமாகத் தஞ்சாவூர் உருவாக்கப்பட்டிருந்தது. இக்களமானது தஞ்சைசமுத்திரையர் என்றநிலச்சுவாந்தரின் பெரும் செல்வாக்கிற்குள் அகப்பட்டிருந்த முறையில் சோழவம்சம் ஒரு மானியமுறைப் பொருளாதாரக் கட்டுமானத்தைத் தழுவி எழுச்சிபெறவும் வழிவகுத்திருந்தது. (நீலகண்ட சாஸ்திரி, கே, 1966, பக் 192) தஞ்சாவூரின் அமைவு நிலையமானது தரைவழி வந்த தென்னிந்திய வாணிபமார்க்கங்களையும், நாகபட்டினத்துறைமுகத்தைக் கொண்டு வங்காள விரிகுடாவில் அமைந்து காணப்பட்ட கடல்வழி வாணிபமார்க்கங்களையும் இணைக்கின்ற வகையில் அரச கட்டுமானப் பணிக்கு (State Craft) அடித்தளமிட்டுக் கொடுத்தமையைச் சான்றுகள்



படிப்பகம்

www.padippakam.com

சாசனப்பாடப் பகுதியிலிருந்து மிகவும் தெளிவாகக் கண்டுகொள்ள முடிகிறது. மத்திய அரசாங்க அலுவலகத்திலிருந்து பேரரசனுடைய ஆணையானது நிர்வாக அலகுகளில் ஒன்றாகவிளங்கும் நாடு என்ற பிரிவிற்கு வரும்போது அது எவ்வாறு எதிர் கொண்டு பெறப்பட்டது என்பதனை இப் பிரஸஸ்தியின் இறுதிவரிகள் (இங்கு கொடுக்கப்பட்டதின்படி) தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. எனவே அரச ஆணைக்கும் நிர்வாக இயந்திரத்தின் முகாமைக்குமிடையிலான இடைவிடாத தொடர்பு எந்தளவிற்கு இறுக்கமாகச் செயற்பட்டிருந்தது என்பதனை அதன் (மத்திய அரசின்) (Top down approach) மேலிருந்து கீழ் நோக்கிய நிர்வாக அணுகுமுறை மூலமும், அரச முகாமையில் அதிகாரிகளை அதிகார வரம்பின் அடிப்படையில் பங்குகொள்ள வைத்த முறைமூலமும் அறிந்துகொள்ள முடிகிறது. தென்னாசியா கண்ட முகாமைத்துவ முறையில் இதனை (Classical Theory of Organiszation) என்று முகாமையியலாளர்கள் குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது.

பணித்துறை ஒழுங்கமைப்பில் (Bureaucratic System) பிரதான நிர்வாக இயந்திரத்திற்கும் பிரதான சமூக ஒன்றுகூடல் மையங்களுக்குமிடையிலான அதிகாரவரம்பிற்குட்பட்ட வகையிலான தொடர்புகள் சோழர்கால ஆட்சிமுறையில் பின்பற்றப்பட்டிருந்தமைக்கான சான்றுகளை இச் சாசனப் பதிவிலிருந்து கண்டுகொள்ள முடிகிறது. '' மண்டபத்து நாம் இருக்க '' 'வரியிலிட்டுக் குடுக்கவென்று நாம் சொல்ல' 'பட்டனும் சொல்ல' ''பேர்த்தந்தோந் தாங்களும் இவர்களோடு நின்று'' ''அமுதன் தீர்த்தகரன் எழுதினாலும்'' ''மதுராந்தக மூவேத, வேளானும் ஒப்பினாலும்'' என்பன போன்ற வாசகங்கள் பேரரசனுடைய பேராணையின் வெளிப்பாடாக அவை எதிரேயுள்ள மண்டபத்திலிருக்கக்கூடிய உயர் உத்தியோகத்தர் குழுவின் முன்னிலையில் நிகழ்த்தப்பட்டமையை (நேரம் - இடம்-காலம்-சந்தர்ப்பம் போன்றவற்றை) உணர்த்துவதாக உள்ளது.

இங்கு அடுக்கமைவு நிலைக்குரிய அதிகாரங்களையுடைய அதிகாரிகளின் வரிசையிலேயே – முன்னிலையிலேயே அச்சம்பவம் நிகழ்த்தப்பட்டமையை இச்சாசனப் பொறிப்பு வாயிலாக தெரிந்துகொள்ள முடிகிறது. இவ்வுயர் அதிகாரிகள் யாபேரும் சம்பந்தப்பட்ட சமூக ஒன்றுகூடல் மையங்களுடன் தொடர்புபட்டவர்களாகவே இச் சாசனப்பட்டயந்தில் பதியப்பட்டுள்ளனர். அவர்கள் மண்டலம், நாடு, ஊர், சபா, பஞ்சாயத்து என்ற ஓர் ஒழுங்கில் அமைந்த மக்கள் தொடர்பகங்களுடன் - அலகுகளுடன் தொடர்புபடுத்தப்பட்டவர்களாகவே எடுத்துக்காட்டப்பட்டுள்ளனர். இம் முகாமையை Top Down approach என்று தற்காலவழக்கில் ஆய்வர்ளர் குறிப்பிடுவதனைக் காணலாம்.

மக்கள் தொடர்பகங்களுடன் - அல்லது நிர்வாக அலகுகளுடன் இணைந்த அவ்வுத்தியோகத்தர்களது பதவி, அந்தஸ்து (Scale) என்பனகூட அவ்வலகுகளின் இறங்குவரிசை ஒழுங்கில் தீர்மானிக்கப்பட்டு அரச ஆணைகள் எக்கட்டத்திலும் மீறப்படாதவகையில் நிர்வாக இயந்திரம் இயக்குவதற்குரிய வழிவகைகள் கையாளப்பட்டிருந்தன. 'கோவில்கள்' என்ற அமைப்பு (சமூக ஒன்றுகூடல் மையம்) அந்நோக்கத்துக்காக அரச அமைப்பினால் (State Body) நன்கு பயன்படுத்தப்பட்டதனைக் காண்கின்றோம். மத்திய அரசில் ஏற்படும் ஆட்சி மாற்றங்கள், வம்சமாற்றங்களால் சோழப்பேரரச - நிர்வாக - முகாமைத்துவ துறைசார்ந்த கட்டமைப்புக்களில் சீர்குலைவு ஏற்பட்டுவிடாத வகையில் நன்கு திட்டமிட்டு நிர்வாக உத்தியோகத்தர்களது நியமனம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறான முகாமைத்துவத் துறைசார் நடவடிக்கைகளை பெருங்கோவில்களின் நிர்வாக அதிகாரிகளின் கைகளில் அரச இயந்திரம் (State Machinery) ஒப்படைத்திருந்தது. இதற்குக் காரணங்களும் உண்டு. பெருங்கோவில்களின் இரட்டைத் தோற்றப்பாடே (Duel Phenomena) அதன் அடிப்படையாக



படிப்பகம்

www.padippakam.com

அமைந்தது. பக்தி என்ற வடிவம் மக்களுக்கு கொந்தளிப்பற்ற ஒரு நிலையைக் கொடுத்த மையினால் அரச அதிகாரங்களை அமைதியாக மக்கள் மத்தியில் பகிர்ந்துகொள்வதற்கு பெருங்கோவிலகள் உதவியிருந்தன தன என்பதில் ஐயம் எழவே முடியாது. இங்கு பெருங்கோவில்கள் என்று குறிப்பிடப்படுவது கோவிலடிமைகளைச் சொத்தாகக் கொண்டுள்ள நிறுவனங்களையே ஆகும். தஞ்சைப் பிருஹதீஸ்வரர் நிறுவனத்தில் 400 தேவதாசிகள் அடியார்களுக்கு ஊழியம் செய்தமைபற்றிச் சாசனச்சான்றுகள் குறிப்பிடுகின்றன.

'கோவில்கள் இவ்வாறு நிலவுடமை அமைப்பாக மக்களுடைய வாழ்வோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையால் பெரும்பாலும் எல்லாநாட்டு மன்னர்களும் படையெடுப்புக் காலங்களிற்கூட கோவில்களின் சொத்துக்களை மாற்றவோ எடுக்கவோ முன்வரவில்லை. மன்னர்களது நாடு - இனம் - சமயம் - நம்பிக்கைகள் யாவற்றையும் கடந்து – யாவற்றுக்கும் அப்பாற்பட்ட வலிமைவாய்ந்த நிலவுடமை நிறுவனங்களாகக் கோவில்கள் நின்று நிலவின.' (ராசுகுமார், மே. து. 1978, பக் 138.)

நிலவுடமை அமைப்பின் சார்பில் ஆட்சியில் இருந்த அரசன் நிலவுடமை நிறுவனமான கோயில்களின் செயற்பாடுகள், பணிகள், உற்பத்தி, உற்பத்திப்பங்கீடு என்று அனைத்தையும் முறைப்படுத்தி ஒழுங்குசெய்ய எடுத்த நடவடிக்கைகளும் செய்த மேற்பார்வைகளும், நடத்திய விசாரணைகளும், விதித்த கட்டுப்பாடுகளும், பிறப்பித்த ஆணைகளும் இயற்கையான செயல்களாகும். (ராசுகுமார், மே.து; 1985 பக் 143).

கல்வித்துறை முகாமையின் மையங்கள்: சரஷ்வதி பண்டாரம்.

சமூக வாழ்வின் உயரிய - சீரிய பண்புகளையும் சிந்தனைகளையும் ஒருமுகப் படுத்தி குறிப்பிட்ட சமூக நிறுவனங்களினூடாக சமூக வாழ்வினை நெறிப்படுத்துகின்ற பணிகளில் சோழர் காலத்தில் சரஷ்வதி பண்டாரங்கள் என்றழைக்கப்பட்ட ஆவணசாலைகள் அல்லது நூலகங்களும் அவற்றுடன் இணைந்து காணப்பட்டிருந்த பல்கலைக்கழகங்களும் தொழிற்பட்டிருந்தமைக்கான சாசனச்சான்றுகளையும் கண்டுகொள்ள முடிகிறது. நிலமானிய சமூக அமைப்பு முறையில் கல்வியறிவினையும் எழுத்தறிவினையும் பெற்றிருந்த மக்கள் நிச்சயமாக சமூகக்கட்டமைப்பில் மேற்றரத்தினைச் சார்ந்தவர்களாயிருப்பர். சோழர் காலத்தினைப் பொறுத்தவரையிலும் இக்கருத்து விதிவிலக்கானதல்ல. பிராமணீய செல்வாக்கு மிக்க கல்வித்துறைப் பாடவிதானங்கள் அமுல்படுத்தப்பட்டு சோழர்காலக் கல்விமுறையினால் பெற்ற பயன்பாடு அரச இயந்திரத்தின் முகாமையை வழிநடத்திச் சென்றவர்களுக்கே கிடைத்தது. சமூகத் தொடர்பு மையங்களிலும், நிர்வாக அலுவலகங்களிலும் முடிவுகளை மேற்கொள்ளும் தகுதியிருந்தவர்கள்தான் முகாமையின் மேல்மட்டத்திலும் இருப்பவர்களாகக் காணப்பட்டனர். பொதுவாக சோழர் காலத்தில் சமூக முடிவுகளை எடுத்தவர்கள் பிராமணக் குலத்தவர்களாகக் காணப்பட்டனர். எனவே சோழர் காலத்துக் கல்வி முறையிலும் அவர்களே பெரும் செல்வாக்குமிக்க அங்கத்தினர்களாக கல்வியைப் போதிப்பவர்களாக அதே கல்வியின் விளைவுகளை அனுபவிப்பவர்களாக அமைவதற்கு வாய்ப்பாயிற்று. பிராமணீய கல்வியாளர்களினால் - தலைவர்களினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களும் முடிவுகளும் பெருமளவுக்கு பிராமணீய சமூகத்திற்கு சாதகமானதாகவே மேற்கொள்ளப்பட்டது. (Self Security System) ஏனென்றால் தீர்மானங்



படிப்பகம்

களும் முடிவுகளும் வேளாள் சமூகத்தினரை நோக்கியே எடுக்கப்பட்டது என்பதே யதார்த்தம்.

தமக்குச் சொந்தமில்லாத மனைகளிலும், காணிகளிலும் இருந்து பயிர்ச் செய்கைத் தொழிலில் ஈடுபட்டவர்கள் இவ்வேளாளன் வர்க்கத்தினராவர். இவர்கள் தமது ஜீவியக் காலப்பகுதியை வரி செலுத்துவதற்காகவே வாழ்ந்து கழித்து, தமது வாழ்க்கையை முடித்துக்கொண்டவராவர். இப்பெருமக்கள் எவ்விதத்திலும் அரச இயந்திரத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகளில் பங்கு கொள்வதற்கு சட்டரீதியாகவோ – சம்பிரதாய ரீதியாகவோ சோழர்காலத்தில் இடமளிக்கப் பட்டிருக்கவில்லை. இறையிலி நிலங்களில் வாழ்ந்த பெருமக்களே (பிராமணர்) சொந்தமாக நிலம் வைத்திருப்பதற்கும் சொந்த மனையில் அகம் எடுத்திருப்பதற்கும் (மனைவியுடன் வாழ்வதற்கும்) சோழர் கால மானியச்சமூக அமைப்பு முறை இடங்கொடுத்திருந்தது. எனவே அவர்களே கல்வியறிவு பெற்ற வர்க்கத்தினராகவும் - தலைமைத்துவம் தேர்ந்த அங்கத்தினராகவும் விளங்கி சிறந்தவொரு கல்வி முகாமைமுறையூடாகப் பேரரச நிர்வாக - சமூக முகாமைகளில் பங்கு கொள்வதற்கும் வாய்ப்புக்களைத் தேடிக் கொண்டனர். இவ்வாய்ப்புக்களுக்கான (சோழர்காலச் சமூக அமைப்பில்) சட்ட ரீதியான அந்தஸ்தினை (வியவஸ்த்தையாக) மத்திய அரசினுடைய அங்கீகாரத்துடன் அச்சமூகம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்குச் சிறந்தவோர் எடுத்துக்காட்டாக விளங்குவது 1ம் பராந்தகச் சோழனது உத்தரமேரூக் கல்வெட்டுக்கள் ஆகும்.

முதலாம் பராந்தகச் சோழனது 12ஆம், 14ஆம், 15ஆம் ஆட்சியாண்டுக்குரிய உத்தரமேரூக் கல்வெட்டுக்கள் பிராமணீயக் கல்வி முறையின் தேவையை முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துகின்றன. அரச முகாமையில் பங்குகொள்ள விரும்பும் ஓர் அங்கத்தவர் கொண்டிருக்க வேண்டிய கல்வித்தகைமை, பொருளாதாரத் தகைமை, மற்றும் தனிப்பட்ட நடத்தைகள் பற்றிய சான்றிதல்கள் தொடர்பான சட்டவரைபுகளைப் பற்றியதாக இக்கல்வெட்டின் உள்ளடக்கம் காணப்படுகிறது. இயல்பாகவே பிராமண்ய சமூகத்தவர்கள் கொண்டிருககும் வேதகாலக் கல்வி பற்றிய பாடவிதானங்களே கல்வித் தகைமையாக இங்கே கொடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய பாடவிதானங்களை உள்ளடக்கிய வகையில் நூலகங்கள் பல உருவாக்கப்பட்டு, அவை கோவில்களை அண்டியோ அல்லது அரண்மனைகளைச் சார்ந்தோ அல்லது உள்ளூர் நிர்வாக மையங்களைத் தழுவிய வகையிலோ மக்கள் தொடர்பு மையங்களாக விளங்கி வந்திருக்கின்றன. இதே நூலகங்கள் ஆவணசாலைகளாகவும் செயற்பட்டு வந்தமைக்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. ''கல்லிலும் செப்பிலும் வெட்டிக் கொள்க'' என்ற மன்னனுடைய ஆணையின்படி பொறிக்கப்பட்ட வியவஸ்தைகள் (சட்டதிட்டங்கள்) மற்றும் மானியங்கள் சம்பந்தப்பட்ட பதிவுகளின் ஒவ்வொரு பிரிவும் இவ் ஆவணசாலைகளில் வைத்துப் பாதுகாக்கப்பட்ட செய்திகளும் எமக்குக் கிடைத்துள்ளன. இத்தகைய ஆவணசாலைகள் சோழர்காலத்தில் ''சரஷ்வதி பண்டாரங்கள்'' எனக் குறிக்கப்பட்டன. மனித சிந்தனைக்கும், செயற்திறனுக்கும் பயிற்சி கொடுத்த களங்களாக விளங்கிய சரஷ்வதி பண்டாரங்களின் முகாமைக்குரிய தலைமைப் பொறுப்பினை வகித்தவர்களும் பிராமணர்களே. தென்னாசியாவில் கோவில்கள் மக்களுடைய வாழ்வு முறையின் உயிர்நாடியாக விளங்கியமைபோன்று அவையே ஆவணக்காப்பகங்களாகவும், நூலகங்களாகவும் செயற்பட்டிருந்தமையினால் பிராமணக் குலத்தவர்களே அவற்றை நிர்வகிப்பதற்கும் வாய்ப்பாயிற்று.

சோழர் காலத்தில் தமிழகத்தில் ''சரஷ்வதி பண்டாரம்'' என்று அழைக்கப்பட்ட சமூகநிறுவனம் புத்தக - ஏட்டுச் செல்வங்களையும், தாமிர – கற்சாசனப்

பொறிப்புக்களின் பிரதிகளையும் ஒருங்கே கொண்டமைந்து விளங்கியதன் பின்னணியில் விகிதர்களையும் நூலகங்களையும் அவற்றை பாவனையாளர்களுக்கு கிடைப்பதற்கு உடன்உதவிய உதவியாளர்களையும் அங்கத்தினர்களாகக் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகம் எழ வாய்ப்பில்லை. 'சரஷ்வதி பண்டாரம்' என்ற சொற்பிரயோகம், சாசனக் குறிப்புகளின்படி நூலகர் என்ற அந்தஸ்தினை குறிப்பவருக்கே வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பது தெரியவருகின்றது. சமய நூல்கள் அல்லாமல், சிறப்புமிக்க இலக்கண இலக்கியங்களின் சுவடிகளும் கோயிலில் சரஷ்வதிபண்டாரங்களினால் போற்றிக் காக்கப்பட்டன. (கிருஷ்ணராசா, செ, 1988, பக் 4).

பொதுவாகவே இந்திய வாழ்க்கை முறையானது வருணாசிரம - தர்மமுறையினதும் குரு - சீட பரம்பரையினதும் தொடராக அமைந்தமைபோன்று ஆவணசாலை தொடர்பான முகாமைத்துவ நெறியும் பிராமண வர்க்கத்திடமே ஏக போகமாக அமைந்து காணப்பட்டது என்பதில் வியப்பில்லை. சோழர்காலத் தமிழக நூலக நடவடிக்கைகளும் இதற்கு விதிவிலக்கல்ல. கல்வி நிலையங்களை நிர்வகிப்பவர்களாக - நூலகங்களை பரிபாலிப்பவர்களாக, சமஸ்கிருத மொழியூடான கல்விப் பாடப் பரப்பினை போதிப்பவர்களாக முகாமைநெறிக்குரிய பயிற்சியினை அதிகாரிகளுக்கு வழங்குபவர்களாக பிராமணீயத் தலைமை காணப்பட்டதன் காரணத்தினால் சோழர்காலத் தமிழகத்தில் பிராமணவர்க்கத்தினர் பல சலுகைகளையும் அனுபவித்த குலத்தினராக வாழமுடிந்தது. நம்பியாண்டார் நம்பி ஒரு முகாமைத்துவ நிபுணர். ஆவர்.

சோழப் பேரரசில் முதலாம் இராஜராஜனது ஆட்சிக்காலத்தில் (கி.பி 985 - 1014) இதுவரைக்கும் சரஷ்வதி பண்டாரங்களால் வகைப்படுத்தப்படாது சேமித்து வைக்கப்பட்டிருந்த ஏட்டு இலக்கியங்கள் எல்லாவற்றையும் வகையீடு (Catalogue) செய்து, வாசகர்களின் (அடியார்களின்) பாவனைக்காக கிடைக்கச்செய்யும்பொறுப்பினை திருநாரையூரைச் சேர்ந்த நம்பியாண்டார் நம்பி என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இப்பணி மாமன்னன் இராஜராஜனாலேயே நேரிடையாக நம்பியாண்டார் நம்பியிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தமையை நோக்கும்போது இவர் இக்காலத்தில் நூலக முகாமையில் (Library Management) நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார் என்பது தெரியவருகிறது. இசை இலக்கியத்திலும் நன்கு ஆழ்ந்த புலமை கொண்டிருந்த நம்பியாண்டார் நம்பி தில்லையம்பலத்திலே பல்லவராட்சிக் காலம் தொடக்கம் சேமித்து வைக்கப்பட்டிருந்த தேவார - திருப்பதிகங்களைத் தாங்கிய ஏடுகளை நூலாசிரியர் பகுப்பு முறையின் அடிப்படையில் (Auther Catalogue) ஒழுங்குசெய்து அவற்றை வாசகர்களின் (அடியார்களின்?) பாவனைக்காக அக்கோவிலின் சரஷ்வதி பண்டாரத்திலும், அவற்றின் பிரதிகளை கல்விக்கூடங்களிலும், ஏனைய ஆவணசாலைகளிலும் பாதுகாத்து வைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தார் என அறிய முடிகின்றது. ஓலைச் சுவடிகளில் பதியப்பட்டிருந்த தேவார இலக்கியங்களை பன்னிரு திருமுறைகளாக வகுத்தது மட்டுமன்றி அவற்றை ஆசிரியர் பகுப்பு முறையின் அடிப்படையிலும் செய்யுள் வடிவ அமைப்பின் அடிப்படையிலும் பாகுபார்டு செய்து, வகைப்படுத்திக் கொடுத்த நிகழ்வு நூலகமுகாமைத்துவ வளர்ச்சி நிலையையே கோடிட்டுக் காட்டுகின்றது. ''இவ்வாறு பல ஆண்டுகட்கு முன்பே சைவமன ஆர்வ மாட்சிமையாக வளர்ந்த இலக்கியம் இராஜராஜன் காலத்தில் உயிர்த்துலக்கம் பெற்று வாழும் இலக்கியமாக வளர்கின்ற இலக்கிய உணர்வுக்கு இராஜராஜன் வழிகாட்டினான்'' என்று கூறப்படுவதும் சோழர்கால முகாமைத்துவத்துறை வளர்ச்சியின் விளைவே.

சோழர்காலக் கல்வெட்டுக்களில் நூலகங்கள், கல்விச்சாலைகள், ஆதுலர்சாலைகள் (வைத்தியசாலைகள்) பற்றிய குறிப்புக்கள்;-

www.padippakam.com

சோழப் பேரரசின் சேவைத்துறை முகாமைத்துவமுறையினுள் நூலகங்கள், கல்விமையங்கள் (பல்கலைக்கழகங்கள்) ஆதுலர்சாலைகள் (வைத்தியசாலைகள்) என்பன உட்பட்டிருந்தமையைத் சாசனச் சான்றிகள் வாயிலாகக் காண்கின்றோம்.

இக்காலப்பகுதியில் வெளியிடப்பட்டிருந்த பெருந்தொகையான மெய்க்கீர்த்திச் சாசனங்களிலிருந்தும், தமிழ் மொழியில் படைக்கப்பட்ட காவிய இலக்கியங்களிலிருந்தும் இலக்கண நூல்களிலிருந்தும் மக்களுக்கான சேவைத்துறை மையங்களைப்பற்றி அறிய முடிகிறது. சோழர் காலத்தில் வெளியிடப்பட்ட தாமிர சாசனங்களிலிருந்தும், வீரராசேந்திர சோழனது திருமுக்கூடல் கல்வெட்டிலிருந்தும் அங்கு பின்பற்றப்பட்டிருந்த கல்விமுறைகள், கல்விப்போதனை, பாடங்கள் சட்டர்கள் (ஆசிரியர்கள்) மாணிகள் (மாணவர்கள்) பற்றிய பல்வேறு தகவல்களை ஒன்றுதிரட்ட முடிகிறது காந்தளூர்ச்சாலை,(படையணிப் பகுப்புப்பற்றிய கல்விக்கூடம்) ஜனநாதன் மண்டபம், (பல்கலைக்கழகம்) காஞ்சி, (மதக்கல்விக்கூடம்) என்பன மத்திய அரசின் நேரடியான கண்காணிப்புக்குள் கொண்டு வரப்பட்ட சோழர்காலக் கல்விமையங்களாகும். இவற்றுடன் இணைந்தே பாரிய நூலகங்களும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது வெளிப்படை.

''ஜனநாதன் மண்டபத்தில் ரிக் வேதம் ஓதுவிப்பான் ஒருவனுக்கு நாள் ஒன்றுக்கு நெல் பதக்கும் யசுர் வேதம் ஓதுவிப்பான் ஒருவனுக்கு நாள் ஒன்றுக்கு நெல் பதக்கும் இவர்கள் இருவருக்கும் பேரார்காசு நாளாக்கா செட்டும் வியாகரணமும் ரூபாவதாரமும் வக்கணிக்கும் பாட்டன் ஒருவனுக்கு நாள் ஒன்றுக்கு நெல் தூணியும் காசு பத்தும் ரிக்க வேதம் ஓதும் பிராமணர் பதின்மரும் வியாகரணமும் ரூபாவ தாரமுங் கேட்கும் பிராமணரும் சாத்திரர் இருபதின்பரும்......''

(வீரராசேந்திர சோழனின் திருமுக்கூடல் கல்வெட்டு)

''இம்மண்டபத்துண்ணும் சாத்திரர்க்குங் கிடைகளுக்கும் பணி செய்யும் பெண்டுகள் இருவருக்கு பேரால் நெல்லு நானாழியாக நாள் ஒன்றுக்கு நெல் குறுணியும் பேரார்காசொன்றாகக் காசு இரண்டும் சாத்திரர்களுக்கும் கிடைகளுக்கும் ஆதுலர்க்கும் கிடக்கப்பாய் எழுபத்தைஞ்சுக்கு காசு இரண்டும் கிடைகளுக்கும் சாத்திரர்க்கும் தலைகாட்டச் சனி ஒன்றுக்கு எண்ணெய் இரு நாழியாக... ..''

(வீரராசேந்திர சோழனின் திருமுக்கூடல் கல்வெட்டு)

அ. ''அறுபது பிராயத்திற்கு உள் முப்பது பிராயத்திற்கு மேல் பட்டார் வேதத்திலும் சாஸ்திரத்திலும்காரியத்திலும் நிபுணர் எனப்பட்டிருப்பாரை .....''

ஆ. ''எழுபது பிராயத்தின் கீழ் முப்பத்தைந்து பிராயத்தின்மேற் படாதார் மந்திரப் பிராமணம் வல்லான் ஓதுவித்து அறிவானை குடவோலை இடுவதாகவும் அரைக்கானிலமேயுடையானாயினும் ஒரு வேதம் வல்லான் ஆய் நாலு பாஸ்யத்திலும் ஒரு பாஸ்யம் வக்கணித்து அறிவான்.....''

(முதலாம் பராந்தகச் சோழனது உருத்திரமேரூர் கல்வெட்டுக்கள்)

இவ்வாறாகச் சோழர்கால சமூக நிறுவனங்கள் பலவும் (தொழிற்பட்டிருந்த முறைமையின் அடிப்படையில்) பிராமணீய வாழ்வுமுறையின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்த சமூகசட்ட



படிப்பகம்

www.padippakam.com

ஒழுங்குவிதிகள் பேணப்பட்டு-காப்பாற்றப் படுவதற்குரிய நோக்கில் அவை சேவை யாற்றியிருந்தமையைக் காண்கின்றோம். 'தனியொரு அந்தணருக்கோ அல்லது பலருக்கோ இவ்வாறு பிரமதேய உரிமை வழங்கப்படுவது உண்டு. அவ்வூரின் வருவாய் முழுவதும் அவ்வந்தணர்களையே சாரும். நாற்பதினாயிரம் அந்தணர்களுக் குப் பிரமதேய உரிமை வழங்கப்பட்ட செய்தியொன்று வீரராஜேந்திர சோழன் காலத்து கல்வெட்டொன்றால் புலனாகி றது. தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்று வல்லவராய்த் திகழ்ந்த தமிழ் அறிஞர் களுக்கு இவ்வாறு பிரமதேய உரிமை வழங்கப்பட்டதாகக் கல்வெட்டாதாரம் எதுவுமில்லை. விரல்விட்டு எண்ணுகின்ற அளவில் ஒருசில தமிழ் அறிஞர்கள் தாம் இயற்றிய தலபுராணங்களுக்காக நிலம், வீட்டுமனை முதலானவற்றை மானியங்க ளாகப் பெற்ற செய்திகள் சிற்சில கல் வெட்டுக்களில் காணப்படுகின்றன. அந் தணர்க்கு கொடுக்கப்பட்ட பிரமதேய உரிமையோடு ஒப்பிட்டுப்பார்த்தால் இவை மிகச்சிறிய அளவினதாகும். எனவே, பல்லவர்காலம் முதல் விஜயநகரவேந்தர் காலம் வரையும் வேதம் வல்ல அந்தணர்கள் போற்றப்பட்டதைப்போல் தமிழறிஞர்கள் போற்றப்படவில்லை' (குப்புசாமி, சு. புலவர், 1976, பக் 24.) இதற்கான காரண-காரியத் தொடர்பானது வர்ணப்பாகு பாட்டின் கூரிய முகாமைத்துவக் கட் டமைப்பே ஆகும். புராதன இந்திய சமூகத் தினை அவ்வாறான ஓர் அடிப்படையில் வகுக்கப்பட்ட முறைகூட முகாமைத்துவ ரீதியான ஒரு செயற்பாடே. சோழப்பெரும் பேரரசின் கட்டமைப்பும் இதனையே தழுவி உருவாக்கப்பட்டிருந்தது. இத் தகைய முகாமைத்துவ முறையினால் பாதிக்கப்பட்ட வேளாண் சமூகத்தவர்கள் இறுதியில் அரசுக்கெதிரான வரிகொடா மறுப்பு இயக்கங்களில் ஈடுபட்டு தத்தமது அதிருப்தியை சோழர்காலப் பிற்பகுதிகளில் வெளிப்படுத்தியிருந்தமையினை ஏராள மான சாசனச்சான்றுகள் காட்டிநிற்கின் றன

பஞ்சாயத்து ஒன்றுகூடல்:-

சோழர்காலத்தில் மிகவும் தாழ்ந்த மட்டத்தில் – மிக இலகுவான முகாமைத் துவ அமைப்பாக விளங்கியிருந்த பஞ்சா யத்து முறை - அல்லது பஞ்சாயத்து ஒன்று கூடல்முறை உடனுக்குடன் கிராமியப் பொருளாதார அலகுகளுடன் இணைந்த சமூகப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதாக அமைந்தது. 'விருத்தர்கள்' என்று அழைக் கப்பட்ட வயதாலும் அனுபவத்தாலும் முதிர்ந்தவர்கள் ஐவரை - அங்கத்துவமாகக் கொண்டிருந்த 'பஞ்சாயத்து' ஊரின் நடுவே ஓர் ஆலமர விருட்சத்தின்கீழ் கூடி யிருந்து, அவ்வூர் மக்களால் முறையிடப் பட்ட பிரச்சினைகளைத் தீர ஆராய்ந்து முடிவுகளை எடுத்ததோடு அற்றை நடை முறைப்படுத்தியும் வந்தது. முதலாம் பராந்தகச் சோழனின் உத்திரமேரூர்க் கல்வெட்டில் அது 'பஞ்சவாரவாரியம்' எனக் குறிப்பிடப்பட்டது. 'குடவோலை' முறையில் அதற்குரிய அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையை அக்கல் வெட்டு எடுத்துக்காட்டுகின்றது. சிலர் இவ்வாரியத்தின் பணி 'பஞ்சம் நிலவிய காலங்களில் ஊர்மக்களுக்குப் பஞ்சப்படி யாக நெற்தானியம் வழங்குவதே' எனக் குறிப்பிடப்பட்டிருப்பினும், பஞ்சவரது (ஐவரது) முகாமைமுறையையே இந்நிறுவ னம் வெளிப்படுத்தி வந்துள்ளது என்பது தெளிவு.

## முடிவுரை:-

தொகுத்து நோக்கும்பொழுது சோழர் காலத்து நிலமானியமுறையின் வயப்பட்ட முகாமைத்துவ நிறுவனங்களான பெரிய கோயில்கள், சபா, ஊர், பஞ்சாயத்து மன்றுகள் மற்றும் ஆவணக்காப்பகங்கள், கல்விச்சாலைகள் என்பன யாவுமே சமூக ஒன்றுகூடல் நிகழ்வுகளுடன் தொடர்புபட்டு சமுதாய வளர்ச்சிக்கு பங்காற்றியிருந்த அதேவேளையில், வர்ணப்பாகுபாட்டின் இறுக்கமான நிலைப்பேற்றிற்கும் வளமூட்



படிப்பகம்

www.padippakam.com

டம் செய்திருந்தன. இதனால் முகாமைத் துவப் பயிற்சி அந்தணர்க்குரியதொன்றாக அக்குலத்தவர்களுக்குரிய 'ஏகபோகமாக' சோழர்காலத்தில் விளங்கியிருந்ததை சாசனச்சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. ஈழமான மும்முடிச் சோழமண்டலத்தைப் பொறுத்தவரையிலும் இவ்வாறான சமூக ஒன்றுகூடல் மையங்களும் ஆவணசாலைகளும் அமையப்பெற்றிருந்தமைக்கான சான்றுகள் தற்போது கிடைத்துவருகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் கண் உள்ள வடமராட்சிப் பரப்பில் 'பேட்டுத் தெரு' என்றழைக்கப்படும் ஒரு மையத்தில் மிகவும் முதிர்ந்த புளியமரம் ஒன்றின் அடிப்பகுதியில் சோழர்காலப்பகுதிக்குரிய நீதி விசாரனைமன்று இருந்தமைக்கான தொல்லியற் தடயங்கள் கிடைத்துள்ளன. [கோட்டாறான மும்முடிச்சோழபுரம் - கேரளத்து நாகர்கோயிற் பகுதி (சேரநாடும். செந்தமிழும் - பக் 120), 'குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள' (சிலப்பதிகாரம்)] இதேபோன்று யாழ்ப்பாணத்தில் நாயன் மார்கட்டுப் பகுதியில் 'சரஷ்வதி மஹால்' என்றழைக்கப்பட்ட ஒரு புராதன நூலகம் இருந்தமைக்கான சான்றுகளும் காணப்படுகின்றன இவற்றினூடாகப் பிராமணீய முகாமைத்துவ நடவடிக்கைகள் இங்கும் மேற்கொள்ளப்பட்டிருந்திருக்கக்கூடும். எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட இருக்கும் ஆய்வுகள் ஊடாக ஈழத்தில் சோழரது முகாமைமுறையின் இயல்புகளைக் கண்டறியலாம். □

## பின்னிணைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ கோனேரின்மை கொண்டான்

க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு பட்டணக்கூற்றத்து நாட்டார்க்கும் ப்பிரஹமதேயக் கிழவர்க்கும் தேவதானம் பள்ளிச் சந்தக்கனி முற்றூட்டு வெட்டப் பேற்றூர் களிலாக்கும் நகற்களிலார்க்கும்.

நமக்கு யாண்டு இருபத்தொன்றாவது நாள் தொண்ணூற்றிரண்டினால் தஞ்சாவூர்ப் புறம்பாடி மாளிகை ராஜாஸ்ரயநில் தெற்கில்

மண்டபத்து நாம் இருக்க

கிடாரத்தரையன் சூளாமணிபன்மன்

ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டணக் கூற்றத்து நாகபட்டணத்நு எடுப்பிக்கின்ற சூடாமணி பன்ம விஹாரத்துப்பள்ளிக்கு வேண்டும் நிவந்தத்துக்கு.

சஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டணக்கூற்றத்து ஆனை மங்கலம் பள்ளிச்சந்தம் இறங்கலுள்பட அளந்தபடி

நீங்கல் நீக்கி நிலந் தொண்ணூற்றேழேயிரண்டுமா முக்காணி முந்திரிகைக்கீழ் மூன்றுமா முக்காணி முந்திரிகைக்கீழ் அரையேயிரண்டு மாவினால்.

இறைகட்டின காணிக்கடன் நெல்லு எண்ணாயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து முக்காலே இருதூணிக்குறுணி ஒரு நாழியும்.

கடாத்தரையன் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டனக்கூற்றத்து நாகபட்டனத் தெடுப்பிக்கின்ற சூளாமணி பன்மவிஹாரத்து பள்ளிக்கு இறுப்பதாக.



படிப்பகம்

www.padippakam.com

யாண்டு இருபத்தொன்றாவது முதல் பள்ளிச்சந்த இறையிலியாக வரியிடப்பட்டுக் குடுக்கவென்று நாம் சொல்ல

நம் ஓலை எழுதும் விநோதவளநாட்டு ஆலூர்க்கூற்றத்து விளத்தூர்க் கிழவன் அமுதன் தீர்த்தங்கரன்

நம் ஓலை நாயகன் உய்யக் கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுக் கேரளாந் தகச் சதுர்வேதி மங்கலத்து கிருஷ்னன் இராமனான மும்முடிச் சோழப்பா ஹ்மாஹ்ராராயனும்.

நித்த விநோத வளநாட்டுப் பாம்புணிக்கூற்றத்து அரை சூருடையான் ஈராயிரவன் மும்முடிச்சோழ போசனும்

அருமொழித்தேவ வளநாட்டு நென்மலிநாட்டுப் பருத்திக்குடையான் வேளாளனுத்தம சோழனான மதுராந்தக மூவேந்த வேளாளனும் ஒப்பினாலும் புக்க.

நந்திட்டின்படியே வரியிலிட்டுக் கொள்ள வென்று நம் கருமமாராயும் ஆரூரன் அரவணையானான பராக்கிரம சோழமூவேந்த வேளாளனும் தத்தன் சேந்தனான செம்பியன் மூவேந்த வேளாளனுப்

அருள்குன்றமுடையான் மாப்பேரன் பொற்காரியும். நடுவிருக்கும் புள்ளமங்கலத்துப் பரமேச்வரப்பட்ட சர்வகரதிளாஜியும். கடலங்குடிதாமோதரப்பட்டனும். நம்கருமமா ராயும் க்ஷத்திரியசிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டுக்குடையான் பிசங்கன் ஆரூரன் மீனவன் மூவேந்த வேளானும்

அருமொழிதேவ வளநாட்டுப் புரங்கரம்பை நாட்டு வங்க நகருடையன் சங்கர நாராயணனனவரங்கனும்.

நடுவிருக்கும் வெண்ணெய் நல்லூர்த் தம் மடிப்பட்டனும் பசலைத் தியம்பக பட்டனும் சொல்ல

புரவுவரிக் கிளிநல்லூர் கிழவன் கொற்றன் பொற்காரியும் கழுமலமுடையான் கொற்றன் தேவடியும்

பழுவூருடையான் தேவ சாத்தனும்

கள்ளி குடையான் அனையன் தனிக்குறவனும் வரிப் பொத்தகம் சாத்தனூர்ருடையான் குமரனரங்கனும்.

பருத்தியூர்க் கிழவன் சிங்கன் வெண்காடனும் இருந்த யாண்டு இருபத்தொன்றாவது நாள் தொண்ணூற்றாறினால் பள்ளிச் சந்தம் இறையிலியாக வரி (யி) லிட்டுக் குடுக்க சிங்களநாட்டுப் பட்டணக் கூற்றத்து ஆனைமங்கலம் அளந்தபடி.

நீங்கல் நீக்கி நிலன் தொண்ணூற்றேழேயிரண்டு மாக்காணியரைக்காணி முந்திரிகைக் கீழ் மூன்றுமா முக்காணி முந்திரிகைக்கீழ் அரையேயிரண்டுமாவும்.

பிடிசூழ்ந்து பிடாகை நடப்பி (ப்) பதாகக் கங்காணி நடுவிருக்கும் வெண்ணெய் நல்லூரத் தம்மடிப்பட்டனையும்.



படிப்பகம்

www.padippakam.com

பட்டன் க்ஷத்திரிய சிகாமனி வளநாட்டுத் திருநரையூர் நாட்டு ஸ்ரீசங்க மங்கலமான

அபிமான பூஷணச் சதுர்வேதி மங்கலத்துத் தூற்பில் ஸ்ரீதரப்பட்டனையும். இன்னாட்டு வேளாநாட்டுத் திருநல்லூர் பார்க்குலத்து பற்பநாபபட்டனையும் இவ்வூர் பேரேம புறத்து வெண்ணெப்பட்டனையும் ராசேந்திர சிம்ஹவளநாட்டு கார்நாட்டு தனியூர் ஸ்ரீ வீரநாராயணச் சதுர்வேதி மங்கலத்து வேதை கோமரத்து நந்தீஸ்வரப் பட்டனையும்.

புரவரி கள்ளிக் குடையான் ஆனையன் தனிக்குறவனையும் பேர்த் தந்தோந் தாங் களும் இவர்களோடு நின்று.

எல்லை தெரிந்து பிடிசூழ்ந்து பிடாகை நடந்து கல்லுங்கள்ளியும் நாட்டி அறவோலை செய்து போத்தக வென்னும் வாசகத்தால் மந்திரவோலை விளத்தூர் கிழவன் அமுதன் தீர்த்தகரன் எழுத்தினாலும்.
மந்திரவோலை நாயகன் கிருஷ்ணன இராமனான மும்முடிச் சோழப்ரஹமப்பிர ஹமராயனும் அரை சூருடையானீராயிரவன் பல்லவராயனான மும்மடிசோழபோசனும் பருத்திக்குடையான் வேளானுத்தம சோழனான மதுராந்தக மூவேந்த வேளானும் ஒப்பினாலும்.

திருமகள்போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கேயுரிமை பூண்(ட)மை மனங் கொளக்
காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி
வேங்கை நாடுங் கங்கை பாடியுங்
குடமலைநாடுங் கொல்லமும் கலிங்கமும்
எண்டிசை புகழ்தர ஈழமண்டலமுந்
திண்டறல் வென்றித் தண்டாற் கொண்டு
தன்னெழில் வளர் ஊழியுனெல்லாயாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டேய்
செழியரைத் தேசு கொள்
ஸ்ரீகோவிராஜராஜ கேசரிவர்மரான ஸ்ரீராஜராஜதேவற்கு
யாண்டு இருபத்தொன்றாவது.
நாட்டோமுக்குத்திருமுகம்வர
நாட்டோமுக்குத் திருமுகம் கண்டு எதிரெழுந்து சென்று தொட்டு வணங்கித்
தலைமேல்வைத்து ......''



படிப்பகம்

www.padippakam.com

## உசாத்துணை


1. Subramaniam, T . N (Ed) 1953 - 1957, **South Indian Temple Inscriptions**, *Vols I - III*, *Government of Oriental Manuscripts Library, Governmen; of Tamilnad*

2. நீலகண்டசாஸ்திரி, கே . ஏ . 1966 தென் இந்திய வரலாறு பதிப்பு : தமிழ் மொழிபெயர்ப்பு, இலங்கை அரச கருமமொழி வெளியீட்டுத்திணைக்களம், கொழும்பு.

3. குப்புசாமி. சு, 1976 வரலாற்று வடிவங்கள், சேகர் பதிப்பகம், சென்னை.

4. ராசுகுமார், 1978, தமிழ் ஆராய்ச்சியில் புதிய எல்லைகள் மக்கள் பதிப்பகம், சென்னை.

5. செல்வராஜா, N (Ed) 1979 நூலகவியல் காலாண்டுச் சஞ்சிகை, மலர் 1 இதழ் 1, சோழர்கால நூலக நடவடிக்கைகள், கிருஷ்ணராசா, செ,பக் 1 அயோத்தி நூலக வெளியீடு, ஆனைக்கோட்டை

6. Spencer, W. George, 1983 **The Politics of Expansion**: *The Chola Conquest of Sri Lanka and Sri Vijaya, Madras.*

7. சித்திரலேகா, மௌனகுரு (Ed) 1985 இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும், இலங்கை சமூக விஞ்ஞானிகள் சங்க வெளியீடு தமிழ்ப்பதிப்பு: யாழ்ப்பாணம்.

8. Subramaniam. N. & Venkatraman, R. 1980 **Tamil Epigraphy** : *a Survey, Madurai*

9. Shanmugam, P. 1987 **The Revenue system of the Cholas**, *(850 - 1279 A . D .) Madras.*




படிப்பகம்

www.padippakam.com

சிந்தனை
தொகுதி vi இதழ் iii – 1994

# சூழல்பேண் புதுப்பொருளாதார ஒழுங்கும் இயற்கை வேளாண்மையும்

இரா. சிவசந்திரன்

சூழலைப் பேணுவதற்குரிய புதுப் பொருளாதார ஒழுங்கினை உலகளாவிய ரீதியில் கடைப்பிடிக்க வேண்டுமென்பது அண்மைக்காலத்தில் சூழலியலாளர்கள் வலியுறுத்தும் சிந்தனையாக உள்ளது. இச்சிந்தனைக்கான அடிப்படைக் காரணிகளையும், புதுப் பொருளாதார ஒழுங்கமைப்பில் விவசாயத்துறையிலே இயற்கை வேளாண்மை முறையைப் பின்பற்றக்கூடிய சாத்தியப் பாட்டையும் எமது பிரதேச சூழலில் இதனைப் பின்பற்றும் ஏதுநிலை பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

உலக சூழல் பிரச்சினைகள் எனும் போது பொதுவாக சுற்றுப்புறம் பற்றியும் சுற்றுப்புறச் சுகாதாரம் பற்றியும் பலர் பேசுவதுண்டு. ஆனால் சூழல் பிரச்சினைகளை புவிக்கோளம் சார்ந்த ரீதியில் உலகளாவிய ரீதியில் அணுகுதல்வேண்டும். இவற்றைத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு புவிக்கோளம் சார்ந்த சூழல் அம்சங்கள் பற்றிய விளக்கங்கள் முதற்கண் அவசியம்.

## 2. 0. சூழற்பாகுபாடும் பிரச்சினைகளும்

2.1. புவிச்சூழலைக் கற்கும் வசதி கருதி நான்கு பெரும் பிரிவாக வகைப் படுத்தலாம். நில மண்டலம் (Lithosphere), நீர் மண்டலம் (Hydrosphere), வளி மண்டலம் (Atmosphere), உயிரியல் மண்டலம் (Biosphere) என்பன அவையாகும். இவை ஒவ்வொன்றும் சில துணைப் பிரிவுகளையும் கொண்டுள்ளன. நிலமண்டலத்தினுள் புவிச்சரிதம்(Geology) தரைத்தோற்றம் (Relief), மண் (Soil), ஆகியனவும், நீர்மண்டலத்தில் மேற்பரப்பு நீர் (Surface water), தரைக்கீழ் நீர் (Underground water), சமுத்திரங்கள் (Oceans) ஆகியனவு அடங்கும். வளிமண்டமெனும்போது அதனுள் வானிலைக் காரணிகளும் (Weather), காலநிலைக் காரணிகளும் (Climate) அடங்கும். உயிரியல் மண்டலத்தினுள் இயற்கைத் தாவரம், (Vegetation), விலங்கினங்கள், பறவையினங்களின் வாழ்க்கை (Animals life) ஆகியனவும் மனிதனின் வாழ்வும் அடங்கும்.

2.2. உயிரினப் பாரம்பரியத்தின் பரிணாமத்தில் இன்றைய நிலையில் உள்ள மனிதன் தோற்றம்பெற்று மனித வாழ்வை ஆரம்பித்ததிலிருந்து புவித்தொகுதியின் சகல கூறுகளின் மேலும் அவன் தன் ஆதிக்கத்தைச் செலுத்தினான். மனித வாழ்வின் வரலாற்றுப்



படிப்பகம்

www.padippakam.com

போக்கில் ஒவ்வொரு காலகட்டத்திலும் அவன் வெவ்வேறுபட்ட தொழில் நுட்பத்தைப்பயன்படுத்தியே புவித்தொகுதிக் கூறுகளை தன் தேவைக்குரிய வளங்களாக மாற்றிப் பயன்படுத்தி வந்தமையை அறியமுடிகின்றது. புவித்தொகுதியும் மனித தேவைக்குரிய வளங்களை நீண்ட நெடுங்காலமாக அவனது வாழ்வுக்காக எப்பிரச்சினையுமின்றி வழங்கி வந்தது. மனித குலத்தின் இயற்கைக்கு மாறான அதிகரிப்பும் அவனது பேராசைக்குரிய தொழில்நுட்ப வளர்ச்சியும் புவித்தொகுதி வளங்களைப் பெருமளவு சுரண்டின - வீண் விரயமாக்கின. இதனால் வளங்கள் அழிந்தன. தேவைக்கு அதிகமாக வளங்கள் பயன்படுத்தப்பட்டதால் வளப்பற்றாக்குறைஏற்பட்டது. முறையற்ற வளப்பாவனையும் விண்விரயமும் புவித்தொகுதிகளின் சகல கூறுகளையும் சிறிது சிறிதாகப் பாதித்து புவித்தொகுதிச் சூழல் மாசடையும் நிலையைத் தோற்றுவித்தது. இம்மாசடையும் நிலை கி. பி. 1700 முதல் கி, பி. 1900 வரை மேற்குலகில் ஏற்பட்டகைத்தொழில் புரட்சிக்காலத்தே துரிதகதியில் அதிகரித்தது. நவீன யுகத்தின் ஆரம்பமெனப் பலராலும் கூறப்படும் கைத்தொழில் புரட்சிக் காலத்திலேதான் சூழல் மாசடைதல் மனித வரலாற்றில் என்றுமில்லாத வகையில் துரிதப்பட்ட தென்பதிலிருந்து நவீனயுகத் தொழில்நுட்பத்தின் பல்வேறு கூறுகள் சூழலின் எதிரி என்பது தெளிவாகும். இதனால் அண்மைய சூழலியல்வாதிகள் சூழலுக்கு ஊறுவிளைவிக்காத சூழல் நட்பார்ந்த தொழில்நுட்பமே எதிர்கால உலகிற்கு அவசியம் என வலியுறுத்தி வருகின்றார்கள். குறிப்பாக மனித வாழ்வை மாத்திரமல்ல, உயிரின வாழ்வையே நிலைநிறுத்துவதற்கான 21 ஆம் நூற்றாண்டிற்கான தொழில்நுட்பம் சூழலைப் பேணுகின்ற அதனைப் பெருமளவு பாதிக்காத தொழில்நுட்பமாக விளங்கவேண்டுமென உலக சமூகத்திடம் விண்ணப்பித்து வருகின்றார்கள். இக்கோரிக்கைகள் உலக சூழல் மகாநாடுகள் ஊடாக முன்வைக்கப்பட்டு வருகின்றன.

## 3. 0. புவிஉச்சி மாநாடு

3.1. சூழல்பற்றிய பன்முகப்பார்வையை ஐ. நா. வின் கிளை நிறுவனங்கள் பல உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தி வருகின்றன. இந்த வகையில் அண்மையில் இடம்பெற்ற புவி உச்சிமாநாடு முக்கியத்துவம் பெறுகின்றது. இம்மாநாடு 1992 ஆம் ஆண்டு ஜுன் மாதம் பிறேசில் நாட்டின் றியோடி ஜெனிரோ நகரில் இடம்பெற்றது. இவ் உச்சி மாநாட்டிற்கு முன்னோடியாக சுவீடன் தலைநகரான ஸ்ரொக்காமில் 1972 இல் ஒரு மாநாடு இடம்பெற்றது. இதிலே 113 நாடுகள் பங்குகொண்டன. 1992 இல் இடம்பெற்ற றியோ மாநாட்டில் 160 உலக நாடுகள் பங்குகொண்டன. 18,000 திற்கு மேற்பட்டோர் பங்குபற்றுனர்களாகக் கலந்துகொண்ட இம்மாநாட்டில் ஏறத்தாழ 400,000 பேர் பல்வேறு நவீன தொலைத்தொடர்பு ஊடகங்கள் வழியாக பார்வையாளர்களாகப் பங்குகொண்டனர். 8000இற்கு மேற்பட்ட பத்திரிகைகள் இம்மாநாடு பற்றி எழுதின. இம்மாநாட்டின் இறுதியில் செயற்றிட்டம் 21 (Agenda 21) எனும் நிகழ்ச்சித் திட்டம் முன்வைக்கப்பட்டது.

21 ஆம் நூற்றாண்டில் உலக சூழலைப் பேணுவதற்கு உலக நாடுகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றி இது விரிவாகக் குறிப்பிடுகின்றது. மேற்படி மாநாடு வலியுறுத்திய பல்வேறு விடயங்களைச் சுருக்கமாகத் தொகுத்து நான்கு தலைப்புகளின் கீழ் தரலாம்.

1. உயிரியல் பன்முகத்தன்மையைப் பேணுதல்.
2. உயிரினங்களுக்கு ஆதாரமான காடுகளைப் பேணுதல்.
3. பச்சைவீட்டுத் தாக்கமுள்ள வாயுக்களின் வெளியேற்றத்தைத் தடுப்பதற்கான சர்வதேச சட்டங்களை இயற்றுதலும் அவற்றை நடைமுறைப்படுத்துதலும்.
4. உலகில் புதிய பொருளாதார ஒழுங்கை உருவாக்குதல்.



படிப்பகம்

www.padippakam.com

3.2. உயிரியல் பன்முகத் தன்மையைப் பேணுதல் எனும்போது விரைவாக அழிவடைந்துவரும் புவியிலுள்ள விலங்குகளை தாவர ஜீவராசிகளை அழியவிடாது பேணிப் பாதுகாப்பதை வலியுறுத்துவதாக அமைகின்றது. உலகில் ஏறத்தாழ 50-100 இலட்சம் வரையிலான உயிரின வகைகள் உள்ளனவெனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய விஞ்ஞான யுகத்தில் இவற்றுள் 10 வீதமான உயிரின வகைகளே ஆய்வுக் குட்பட்டுள்ளன. இவற்றுள் 1 வீதமானவையே நுண்ணாய்வுக்குட்பட்டவை. ஏனையவை மறைவளங்களாக (Latent Resources) உள்ளன. எதிர்கால சந்ததியினர் இவற்றை முறையாக ஆராய்ந்து பல்வேறு பயன்பாட்டிற்கு உட்படுத்த முடியும். ஆய்வுக்குட்படாமலேயே இவை அழிவடைந்துவிடின் எதிர்கால மனித குலத்திற்கு இன்றைய மனிதன் துரோகமிழைத்தவனாவான். மேலும் உயிரினங்களின் பாரம்பரிய மரபுக்கூறுகளைப் பிரித்தெடுத்து தேவையான வகையில் வளர்க்கும் மரபுக் கூற்றுப் பொறியியல் அண்மைக் காலத்தில் துரிதமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. உலகம் எதிர்நோக்கும் உணவு நெருக்கடிக்கு இத்துறை வளர்ச்சி தீர்வாக அமையுமென விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள். உயிரினப் பன்முகத் தன்மையை இன்றைய மனிதகுலம் பேணிக்காத்திடல் இன்றியமையாத் தேவை எனலாம்.

புவி உச்சி மாநாடு வலியுறுத்திய இரண்டாவது அம்சம் உலகின் காடுகளைப் பேணுவதாகும். உலகைப் பசுமையாக வைத்திருப்பது; மழையை வருவிப்பதற்கும் வெப்பத்தை மட்டுப்படுத்தி புவியை பாலைவனமாகாது பாதுகாப்பதற்கும் உயிர் மண்டலத்தைப் பேணுவதற்கும் அவசியமாகும். மண் - தாவரம் - ஏனைய உயிரின வாழ்வு என சூழலியல் முறைமை செயற்படுகின்றது. உலகில் காடுகள் இயற்கையாகவும், செயற்கையாகவும் தினம் தினம் பெருமளவு அழிவடைந்து வருகின்றன. மேலும் உலக நிலப்பரப்பில் இன்று 6வித பரப்பளவில் பரந்துள்ள அயனக் காடுகளில் உலகின் மொத்த உயிரின வகைகளில் 60 வீதமானவை காணப்படுகின்றன. இத்தரவுகள் காடுகளைப் பேணவேண்டிய தன் அவசியத்தை உணர்த்தப் போதுமானவை.

3.4. பச்சைவீட்டுத் தாக்கமுள்ள வாயுக்களின் வெளியேற்றம், கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து அதிகரித்துவந்து இன்று புவியை ஒரு ஆபத்தான கட்டத்திற்கு இட்டுச் சென்றுள்ளது. புவியின் வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. எடுத்துக்காட்டாக குளோரோ புளோரோ காபன் எனும் வாயு வெளியேற்றத்தால் வளிமண்டலத்தில் 15 - 30 மைல் உயரத்திலுள்ள ஓசோன் வாயுப்படையில் துவாரங்கள் உருவாகியுள்ளன. புவியில் தீங்கு விளைவிக்குமென கருதப்படுகின்ற புற ஊதாக்கதிர்வீச்சுத் தாக்கத்தை ஓசோன் படையே பாதுகாக்கின்றது. புவியில் தற்போது புற ஊதாக்கதிர்த்தாக்கம் அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனால்தான் சரும நோய்கள், புற்று நோய்கள் என்பனவும் இனம்காண முடியாத வேறு நோய்களும் அதிகளவில் காணப்படுகின்றன என மருத்துவவியலாளர்கள் எச்சரிக்கை செய்கின்றார்கள். பச்சைவீட்டு தாக்கமுள்ள - நச்சுத்தன்மை வாய்ந்த 85 வித வாயுக்களை கைத்தொழில் நாடுகளே வளியில் பரவவிடுகின்றன. உலகின் 30 வீத குடித்தொகையைக் கொண்ட இந்நாடுகளின் வர்த்தக நோக்கம் கொண்ட அபரிமிதமான தொழில் உற்பத்திகளின் விளைவாக புவியின் வளிமண்டலம் முழுவதும் நச்சுப்புகையால் கனத்து வருகின்றதெனலாம்.

3.5. விவசாயம், கைத்தொழில், சேவைகள் எனும் பொருளாதார உற்பத்தித்துறைகளில் சூழல் நட்பார்ந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எதிர்கால அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டுமென்பதே சுருக்கமாகப் புதுப் பொருளாதார ஒழுங்கின் அடிப்படை எனலாம். இவை பொதுவாக நிலைத்து நிற்கக்கூடிய அல்லது பேண்தகு அபிவிருத்தியாக



படிப்பகம்

www.padippakam.com

(Sustainable Development) விளங்கவேண்டுமென்பதே சூழலியலாளர்களின் எதிர்பார்ப்பாகும். இவர்கள் கைத்தொழில் துறையின் எரிசக்தியாக; சூழலைப் பேணுவதும் நிலைத்து நிற்கக்கூடியதுமான ஞாயிற்றுச் சக்தி, காற்றுச் சக்தி, அலைச் சக்தி போன்றவற்றைப் பயன்படுத்துவதை விரும்புகின்றார்கள். விவசாயத்துறையைப் பொறுத்தவரையில் இரசாயன உள்ளீடுகளைத் தவிர்த்து நிலைத்து நிற்கும் வேளாண்மை அபிவிருத்தியை அல்லது இயற்கை வேளாண்மை அபிவிருத்தியை வேண்டிநிற்கின்றார்கள்.

## 4.0 இயற்கை வேளாண்மை

4.1. பசுமைப் புரட்சியால் விவசாயத் துறையில் துரித எழுச்சி ஏற்பட்டுக்கொண்டிருக்க அதன் எதிர் விளைவாக உயிர் சூழல் மண்டலம் நஞ்சாகிக்கொண்டிருந்தது. பசி பட்டினியால் உலகில் சிவப்புப் புரட்சி ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் நிலவியபோது மூன்றாம் உலகின் உணவு உற்பத்தியை அதிகரிக்க மேற்குலகத்தால் பசுமைப்புரட்சி அவசரமாகப் புகுத்தப்பட்டதெனவும் விமர்சிப்பர். றொக்பெல்லர், போட் ஆகிய பல்தேசிய நிறுவனங்கள் பசுமைப்புரட்சி என்ற நடவடிக்கைகளுக்கு உதவிவந்தமை இவ் ஐயுறவை வலியுறுத்தும். இவ் ஆய்வின் பெறுபேறான பசுமைப்புரட்சியின் வித்தான புதிய இன விதைகளைக் கண்டுபிடித்தமைக்காக 1970 ஆம் ஆண்டில் நோர்மன் போர்லாங் அவர்களுக்கு நோபல் பரிசு கிடைத்தது.

பசுமைப் புரட்சி நடவடிக்கைகள் விவசாயத்துறையில் இரசாயனத் தொழில்நுட்ப மாற்றங்களையும் பொறிமுறைத் தொழில்நுட்ப மாற்றங்களையும் புகுத்தின. இவை மூன்றாம் உலக நாடுகளுக்குப் புதியன என்பதோடு இந்நாடுகளின் பாரம்பரிய விவசாயத்துறையை மேற்கு நாடுகளின் நவீன உற்பத்திகளின்றி வெற்றிகரமாக மேற்கொள்ளமுடியாத நிலைமைகளையும் தோற்றுவித்தன. இரசாயன உரப்பாவனை, களைகொல்லிப் பாவனை, கிருமிநாசினிப் பாவனை என்பன மண், நீர்நிலைகள், தாவரம் என்பன வற்றையும் நஞ்சாக்கிற்று. இதனால் எழுபதுகளில் உச்சம்பெற்றிருந்த பசுமைப் புரட்சி நடவடிக்கைகள் எண்பதுகளில் விமர்சனத்தை எதிர்நோக்கி தொண்ணூறுகளில் மாற்றத்தை வலியுறுத்தும் கடும் விமர்சனத்திற்குள்ளாகி இரண்டாயிரத்தில் நடைமுறை மாற்றத்தை வலியுறுத்தி நிற்கின்றன. இதனாலேயே இன்று உலகம் மீண்டும் இயற்கை வேளாண்மை பற்றி சிந்திக்கத் தலைப்பட்டுள்ளது.

4.2. இயற்கை வேளாண்மையை நிலைத்து நிற்கக் கூடிய வேளாண்மை, நிலையான வேளாண்மை, பேண்தகு வேளாண்மை என்று பலவாறு வழங்குவர். இயற்கைவேளாண்மை பழமைக்குத் திரும்புதல் எனப் பொதுவாகக் கூறப்பட்டாலும், இன்றைய உலக நிலவரங்களை; அதாவது குடித்தொகை அதிகரிப்பு, உணவுப்பற்றாக்குறை, சூழல் நெருக்கடி என்பனவற்றை மனங்கொண்டு புதுப்பொருளாதார ஒழுங்கின் அடியாகச் சிந்தித்ததன் விளைவெனலாம். இயற்கை வேளாண்மையின் தந்தையென ஜப்பானியக் காந்தி மாசானபு ஃபுகாகோ (Masanobu Fukuoka) வைத்தரிசிக்கலாம். இவர் இயற்கை வேளாண்மையை வலியுறுத்தி எழுதிய ''ஒற்றை வைக்கோல் புரட்சி'' (One Straw Revolution (1975) ) என்ற நூலும் ''இயற்கைக்கான வழி'' (The Road to nature (1977) ) என்ற நூலும் மிகவும் பிரபலமானவை. இந்நூல்கள் பலமான ஆதரவையும் கடும் விமர்சனத்தையும் எதிர்கொண்டவை. இவர் வழியில் இன்று பலர் சிந்தித்து வருகின்ற போதிலும் பில் மோலீசன் ( Bill Mollision ) டேவிட் ஹம்ரன் ( David Homton ) ஜே.ஐ. றோடேல் (J.I Rodale) அவரது மகன் ஜோன் றோடேல் (John Rodale) என்பவர்களும் மூன்றாம் உலகைச் சேர்ந்த இன்னும் சிலரும் முக்கியமானவர்களாகக் கருதப்படுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

மாசானபு ஃபுகா்கோ இயற்கை வேளாண்மை பற்றி வெறும் போதனை செய்யவில்லை, அதன் சிறப்பை செயல் முறையூடாகக் காட்டுகின்றார். ஜப்பானில் ஹிகோகுதீவின் மலைச்சாரலில் இவரது 15 ஏக்கரளவான விவசாயப் பண்ணை அமைந்துள்ளது. இது முற்றுமுழுதான இயற்கை விவசாயப் பண்ணையாக விளங்குகின்றது. நுண் உயிரியலாளராகவும் விவசாய சுங்க அதிகாரியாகவும் பணியாற்றிய இவர், 25 வயதில் அவற்றைத் துறந்து இயற்கைவழி விவசாயத்தில் நாட்டம் கொண்டார். இவர் ஒரு பௌத்தமதத்தினராக விளங்கியமையும் இயற்கையில் அதிக நாட்டங்கொள்ள வைத்ததெனலாம். அவரது இயற்கை நேசிப்பினை அவரது நூலில் விரவிவரும் பின்வரும் கூற்றுக்களால் உணர்ந்துகொள்ள முடியும்.

> ''மனிதர்களால் எதையும் அறிந்துகொள்ள முடியாது என்பதையும் இயற்கையைப் புரிதல் மனித அறிவுக்கு அப்பாற்பட்ட விடயம் என்பதையும் இறுதியில் அறிவதற்காகவே நாம் கடினமாகக் கற்கவேண்டியுள்ளது,
>
> வாழ்க்கை என்பது இயற்கையிலிருந்து விலகிய ஒன்றாக இருக்கக்கூடாது. வேளாண்மையின் இறுதி இலட்சியம் பயிர்களை வளர்ப்பதல்ல. மனித இனத்தை வளர்த்து முழுமையடையச் செய்வதே....
>
> மனிதன் தன் சொந்த விருப்பத்தைவிட்டு இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தால் இயற்கை அவனுக்குச் சகலதையும் அளிக்கும் மக்கள் இயற்கை உணவை விட்டு எப்போது செயற்கை உணவைத் தேர்ந்தெடுத்தார்களோ அன்றே அவர்கள் தம் அழிவுக்கான தேதியைக் குறித்துவிட்டார்கள் ''
>
> Masanobu Fukuoka, (1975) one straw Revolution.

இயற்கை வேளாண்மையை 'ஒன்றும் செய்யாமல் ஒரு வேளாண்மை' என்று குறிப்பிடும் மாசானபு ஃபுகாகோ தான் தன் வயலில் வேலை செய்யும்போது 'இதனையும், செய்யாமல் இருந்தால் என்ன?' என்ற கேள்வியைத் தன் மனத்தில் கேட்டுக்கொண்டே செய்வதால் இயற்கை வழியில் அனைத்தையும் விட்டுவிட முடிகின்றது என்கிறார். தன் பண்ணையில் உலாவரும்போது இயற்கையாக வளர்ந்த நெற்கதிர் ஒன்று நவீனமுறையில் பயிராகும் நெல்லைவிட மிக்க ஆரோக்கியமாகவும் அதிக கதிர்களைக் கொண்டதாகவும் விளங்கியதைக் கண்டே தான் இயற்கை வழி விவசாயத்தைதின்பால் அக்கறை கொண்டதாகக் கூறும்இவர், புவியிலிருந்து வரும் அனைத்தும் புவிக்கே திரும்பிவிட வேண்டும். நெற்கதிர்களை எடுத்துக் கொண்டு ஏனையவற்றை அப்படியே விட்டுவிட வேண்டும் எனக் கூறுகின்றார். அவர் முன்வைக்கும் இயற்கை வேளாண் முறையில் நான்கு அம்சங்கள் முக்கியமானவை.

மண்வளம் பேணுதல் பற்றிக் கூறும்போது பயிர்வளர்ச்சிக்கு பண்ணையை உழவேண்டியதில்லை. தாவரங்களின் வேர்களும், மண்புழுக்கள், முயல் ஏனைய சிறு விலங்கினங்கள் என்பன இயற்கையாகவே மண்ணை உழுகின்றன. உக்கவைக்கும் நுண்ணங்கிகளின் பெருக்கம் மண்வளத்தையும் பெருக்கும் என்கின்றார்.

பயிர்வளர்ச்சிக்குரிய உரம் பற்றிக் குறிப்பிடும்போது நிலத்தை அதன் போக்கில் விடுவோமாயின் இயற்கையாகவே அது மண்ணில் உரச்சத்தை நிர்வகித்துக் கொள்ளும். பண்ணையில் வளரும் மிருகங்களும், பறவையினங்களும் இயற்கையாக உரத்தை வழங்கும். வைக்கோலை வெளியேற்றாதுவிட்டால் அது உக்கி உரத்தை வழங்கும் எனக்கூறும் அவர், காட்டில் செழித்து வளரும் மரங்களுக்கு நாம் உரமிடுகின்றோமா? என்ற கேள்வியையும் எழுப்புகின்றார்.

களைகளின் வளர்ச்சி இயற்கை சமச்சீர்த்தன்மையைப் பேணும் ஒரு நடவடிக்



படிப்பகம்

www.padippakam.com

கையே அதனை உழுது அழிக்க எண்ணி னால் அது பெருகுமேயன்றிக் குறைபாது. பருவப் பயிர்களுக்கு இடையே ஊடுபயிர் களை வளர்ப்பது, வைக்கோலால் நீண்ட காலம் வயல் பரப்பை மூடிவைத்துக்கொள் வது போன்ற நடவடிக்கைகள் களையைக் கட்டுப்படுத்தும் என்கின்றார்.

பூச்சிக்கட்டுப்பாடு பற்றிக் குறிப்பிடும் மசானபு ஃபுகாகோ இயற்கையான சுற்றும் சூழலில் வளரும் பயிர்கள் ஆரோக் கியமானவையே. இயற்கையில் பூச்சிகளுக்கு எதிர்ப்பூச்சிகள் உண்டு. நாம் கிருமிநாசினி தெளிப்பதால் அனைத்துப் பூச்சிகளும் அழிந்து இயற்கைச் சமநிலை அற்றுப்போ கின்றது. சிலந்தி வலை பின்னி என் பண்ணை முழுவதையும் பாதுகாப்பதை நீங்கள் நேரில்வந்தால் பார்க்கமுடியும். எனது பண்ணை சிலந்திவலைப் பரவலால் மின்னிச் கொண்டிருப்பதைப் பார்ப்பீர்கள். மயிர்கொட்டிகளை செம்பகம் அழிக்கும், எலிகளை ஆந்தைகள் அழிக்கும், தவளை, தேரை என்பனவும் பூச்சிகளிலிருந்து பயிர் களைக்காக்கும். இயற்கையின் விந்தைகளை எம்மால் பூரணமாக விளக்க முடியாது என்று வலியுறுத்துகின்றார்.

மசானபு ஃபுகாகோவின் பண் ணையின் பெரும்பரப்பு பல்வகைப் பழ மரங்களைக் கொண்டதே. இவை ஒன்று டன் ஒன்று இயற்கையாக இணைந்து அற் புதமாக வளர்ந்துள்ளன. இங்கு உற்பத்தி யாகும் பழங்கள் இயற்கையாக ஒழுங்கற்ற வடிவங்களில் காணப்படும், சில சுருக்கம் விழுந்தும் சில வாடியும் இருக்கும். இவ் இயற்கை பழங்களுக்கு நவீனமுறையில் உற்பத்தியாகும்பழங்களை விட ஜப்பானில் நல்ல சந்தை வாய்ப்புகள் உண்டு. நவீன முறையில் உற்பத்தியாகும் பழங்கள் கவர்ச் சியாக இருப்பதற்காக மெழுகு கூடப் பூசு கின்றார்கள், வாடாது இருக்க இரசாயனக் கலவைகளைத் தெளிக்கின்றார்கள். இவை எல்லாம் மக்களின் உணவை நஞ்சாக்கும் நடத்தைகள் என மசானபு ஃபுகாகோ சாடுகிறார்.

இவரது பொருளாதார சிந்தனைகள் நவீன பொருளியலாளரது சிந்தனையி லிருந்து மாறுபட்டவை. விவசாய நடவ வடிக்கைகளில் குறைந்தளவு மக்கள் இருப் பது ஒரு அபிவிருத்திக் குறிகாட்டியென நவீன பொருளியலாளர் கூற, இவர் 80-90 வீத மக்கள் விவசாயத்தில் ஈடுபட வேண்டுமெனக் கூறுகின்றார். பொருளா தார வளர்ச்சி வீத அதிகரிப்பைப்பற்றி அலட்சியப்படுத்தும் இவர், வளர்ச்சி வீதம் 0 ஆக இருப்பதே நிலையான பொருளா தார வளர்ச்சி என வாதிடுகிறார். மசா னபு ஃபுகாகோ நவீன உலகில் பழைமையைப் பேணுவதன் மூலம் புதுப் பொருளாதார ஒழுங்கை உருவாக்கமுடியு மென்று சொல்லாலல்ல செயல்மூலம் நிரூபித்து வருகின்றார்,

4.3 சூழலுக்கு ஊறு விளைவிக்காத நிலைக்கும் வேளாண்மை பற்றிய கருத்து களை உலகிற்கு பரப்பிவரும் இன்னொரு முக்கியமானவர் பில் மோலீசன் (Bill Mollision) ஆவார். இவரும் டேவிட் ஹோம்ரன் (David Homton) என்பவரும் இணைந்து 'ஃபேமா கல்சர்' (Permi Culture) என்ற நூலை 1978இல் வெளி யிட்டனர். இதன் அர்த்தம் நிலைத்து நிற்கும் பயிர்ச்செய்கை (Permanent Culture) என்பதாகும். இவர்கள் இந்நூலில் மசானபு ஃபுகாகோவின் சிந்தனைகளி னால் கவரப்பட்டுள்ளமை நன்கு வெளிப் படுகின்றது. ஆஸ்திரேலியாவில் நியூசவுத் வேல்ஸ் மாகாணத்தில் டயால்கம் (Taylgum) என்ற இடத்தில் நிலைக்கும் பயிர்ச்செய்கை நிறுவனம் (Perma Culture Institute) என்ற அமைப்பினை நிறுவி அதனூடாக மேற்படி வேளாண் முறை களை உலகிற்குப் பரப்பி வருகின்றார்கள். உலகில் இவர்களுக்கு 54 நாடுகளில் கிளை நிறுவனங்கள் உண்டு. இந்நிறுவனங்களின் மூலம் நிலைக்கும் வேளாண்மையை மேம் படுத்துவதற்கான பயிற்சிகள் விவசாயி களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. முறை யான பாடத்திட்டம் மூலம் வழங்கப்படும் இப்பயிற்சியில் விவசாயச் செய்முறை அத்துடன் இணைந்த தோட்டக்கலை,



படிப்பகம்

www.padippakam.com

கட்டிடக்கலை, போக்குவரத்து, நிதி, சமூக அபிவிருத்தித்திட்டங்கள். விரயமற்ற உற்பத்தி, சுற்றுவட்டமுறையில் வளங் களைப் பயன்படுத்துதல், உள்ளூர் பாரம் பரிய தாவர வித்துக்களை மீண்டும் அறிமுகப்படுத்துதல், தரிசான நிலங்களை வேளாண்மைச் செய்கை மூலம் சீர்செய்தல் என்பன அடங்கும். இவற்றை ஒழுக்க நெறியுள்ள திட்டமிட்ட விஞ்ஞானமாகக் கொண்டே பயிற்றுவிக்கின்றார்கள்.

நிலைக்கும் பண்பு புவியின் பாதுகாப் புக் குறித்த ஒழுக்க நெறி மாத்திரமன்றி மனித பாதுகாப்புக் குறித்த ஒழுக்க நெறி யுமாகும். இவர்களது போதனையில் நுகர்வது போக எஞ்சிய அனைத்தும் மறு முதலீடாக புவிக்கே திரும்பிவிட வேண் டும். புவியைப் பேணும் ஒழுக்க நெறி மனித தார்மீக நெறியாகவும் கல்விநெறி யாகவும் போற்றப்பட வேண்டுமென்பது இவர்களது வேண்டுகோளாகும். எந்த ஒரு அரசுக்கும் அல்லது அரசியல் அமைப் புக்கும் அழிந்துவரும் புவிபற்றி அக் கறையே இல்லை நிலம் என்றால் அதில் எந்தளவு பணம் பெறலாமென்றே திட்ட மிடுகின்றார்கள் என இவர்கள் சாடுகின் றார்கள்.

பில் மோலிசன் நவீன விவசாயத்தை இறந்துகொண்டிருக்கும் விவசாய முறை யெனச் சாடுவதோடு நவீன விவசாயம் வர்த்தக நோக்கத்தைக்கொண்ட, அழி வுக்கு வழிகோலும் முறைகளை உள்ளடக் கிய, எரிபொருளை வீணடிக்கின்ற விவசா யம் என்கின்றார். மேலும் அவர் நவீன விவசாயம் முட்டாள்தனமான நோக்கங் களுக்காக தேவையற்ற பயிர்களை வளர்க் கின்றது. சோயா பயிர் உற்பத்தி கால் நடைக்கு உணவாகின்றது. மீனைப் பொடி செய்து பன்றிகளை வளர்க்கின்றார்கள். மாட்டிறைச்சி வர்த்தகத்தால் உலகின் புல் நிலங்கள் அழிந்து பாலைநிலம் பரவிவரு கின்றது. என்கிறார். மேலும் நவீன விவசாயச் செய்கை விவசாயத் தொழிற் சாலை உற்பத்திக்கான மூலப்பொருளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டதே தவிர மக்களுக்கு உணவு வழங்குவதை யல்ல, புவியின் மொத்த நிலப்பரப்பில் 4 வீத பரப்பளவில் உணவு உற்பத்தி முறையாகச் செய்யப்பட்டாலே உலகில் உணவுப் பஞ்சம் ஏற்படமாட்டாது என உறுதிபடக் கூறுகின்றார்.

நவீன முறையில் விவசாயம் செய்தவர் கள் இம்மாற்று முறைக்கு வரும்போது ஆரம்பத்தில் உற்பத்தி குறையுமென்றாலும் பின்னர் உற்பத்தி படிப்படியாக அதிகரிக் கும். நவீன முறையில் இரசாயனப் பொருட் களை அதிகளவில் பயன்படுத்தி வந்ததின் காரணமாக 5 ஆண்டுகள் நிலைமாறும் நிலை நிலவும். ஆறாவது ஆண்டிலிருந்து உற்பத்தி இருமடங்காக உயரும். வேளாண்மையுடன் காடு வளர்ப்பும் இணைந்துள்ளதால் நைட்ரசன் சத்து நிலங்களுக்கு ஊட்டத்தை வழங்கும். தானி யங்கள், பழங்கள், காய்கறிகள் கூடவே மரப்பயிர்கள் இணைந்த வேளாண் பண்ணை முறைகளையே பில் மோலிசன் குழுவினர் வலியுறுத்துகின்றனர். இவர் களது பண்ணை சுயநிறைவு கொண்டது. உரத்தின் தேவையோ களை, பூச்சி நாசினி களின் தேவையோ எழுவதில்லை. இவர் களது பயிர்ச்செய்கை முறை பரந்துபட்டு பயிர்ச்செய்கை முறை (Extensive Agricul- ture) ஆகும். எவ்வளவு மோசமான தரிசு நிலமென்றாலும் அந்நிலத்தைப் பசுமை யாக்க முடியுமெனக் கூறும் இவர்கள், பாறைநிலம், அதிக ஈரம்கொண்ட நிலம், உவர்நிலம், வரண்ட பாலைநிலம் என்பன வற்றில் வேளாண் பண்ணைகளை உரு வாக்கி வெற்றிகண்டுள்ளனர். ஐ. நாவின் உணவு விவசாய நிறுவனத்தின் (F.A.O) பயிற்சியாளர் தொகையைவிட தங்கள் நிறுவனத்தின் பயிற்சியாளர் தொகை அதிகமென பெருமைப்படும் பில் மோலிசன் இந்தியாவில் மட்டும் ஏறத்தாழ 1000 கிரா மங்களில் ஃபேமா கல்சர் பயிற்சியாளர்கள் பணியாற்றி வருகின்றார்கள் என்கின்றார். ஏறத்தாழ ஒரு இலட்சம் இந்திய விவசா யிகள் பில் மோலிசனின் பண்ணைத் திட்ட



படிப்பகம்

முறைகளைப் பின்பற்றிப் பயனடைந்து வருகின்றார்கள். மூன்றாம் உலக நாடுகளுக்கு இவரது வேளாண் முறைகள் பொருத்தமானவை எனக் கருதப்படுகின்றது. நிலைத்து நிற்கக்கூடிய இவ்வகை வேளாண்முறைகள் மீது நிஜமான அக்கறை செலுத்தும் காலம் வருமெனக்கூறும் இவர், 2000 ஆம் ஆண்டின்பின் நவீன விவசாய முறை மெல்ல மெல்ல இறந்து நிலைத்து நிற்கும் விவசாயமே நிலைபெறும் என கூளுரைக்கின்றார்.

4.4 அமெரிக்காவிலிருந்தும் ஒரு குரல் இயற்கை வேளாண்மையில் அக்கறை கொண்டு ஒலிப்பது ஆச்சரியத்தை அளிப்பதே. அக்குரல் 'றோடேல் நிறுவனத்தின்' குரலாகும். ஜே.ஐ. றோடேல் (J.I. Rodale) அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நிறுவனத்தை அவரது மகன் ஜோன் றோடேல் (John Rodale) தற்போது நடத்தி வருகின்றார். 'அமெரிக்காவில் பென்சில்வேனியா மாநிலத்தில் எம்மாமவுஸ் என்ற இடத்தில் இத்தொண்டு நிறுவனம் அமைந்துள்ளது. இயற்கை வேளாண்மையின் சிறப்பை உலகிற்குப் பரப்புவது மாத்திரமன்றி மூன்றாம் உலக வசதிகுறைந்த ஏழைமக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான சமூகநலத் திட்டங்களையும் இந்நிறுவனம் நடைமுறைப் படுத்தி வருகின்றது.

சூழலுக்கு ஊறு விளைவிக்காத வேளாண் செய்கையை அடிப்படையாகக் கொண்ட சுய நிறைவு பெறத்தக்க அபிவிருத்தித் திட்டங்களுக்குஇந் நிறுவனம் உதவி வழங்கி வருகின்றது. மூன்றாம் உலக நாடுகளிலுள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்துவரும் மக்கள் பயன் பெறும் பொருட்டே பெரும்பாலும் இவ் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

றோடேல் நிறுவனத்தினர் உலகில் பரப்பிவரும் வேளாண்முறைக்கு 'புனர் ஜென்ம வேளாண்மை'( Rebirth Agriculture) என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இவர்களது நிறுவனமே மாசனபு ஃபுகாகோவின் ஒரு வைக்கோல் புரட்சி (one Straw Revolution) என்ற நூலையும் இயற்கைக்கான வழி (The Road to nature) என்ற நூலையும் ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டதன் மூலம், நூலாசிரியரை அனைத்துலகத்திற்கும் அறிமுகமாக்கியது.

றோடேல் நிறுவனம் நிலைத்து நிற்கும் வேளாண்மை பண்புகளை உலகத்தவர் அறிதல் பெருட்டு' உயிர்ப்பு வேளாண்மை' ( Organic Farming )என்ற சஞ்சிகையினையும்'புதிய பண்ணை' New Farm) என்ற செய்திப் பத்திகையையும் வெளியிட்டு வருகின்றது. மேலும் இயற்கை வேளாண்மையை மேம்படுத்தத்தக்க பல்வேறு நூல்களையும் இந் நிறுவனம் காலத்திற்குக் காலம் வெளியிட்டு வருவதோடு சர்வதேச கருத்தரங்குகளையும் ஒழுங்கு செய்து வருகின்றது.

4.5 இயற்கை வேளாண்மை பற்றி முதலாம் உலக நாட்டைச் சேர்ந்தவர்களை விட மூன்றாம் உலகநாட்டினரே கூடிய அக்கறை கொள்ள வேண்டும். யதார்த்தநிலை கவலை தருவதாக உள்ளது. அரசாங்க மட்டத்தில் திட்டமிடுவோரும் இதுபற்றி அலட்சியமாகவே இருக்கின்றார்கள். இங்குள்ள அரசசார்பற்ற நிறுவனங்களும் நிதி நெடுக்கடியாலும் நிபுணத்துவக் குறைபாட்டாலும் இவ்விடயம் தொடர்பாக அதிகளவில் அக்கறை செலுத்த முடியாதுள்ளது இருப்பினும் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் நிலைத்து நிற்கும் வேளாண்மைபால் சில நிறுவனங்கள் கவனம் கொள்கின்றன.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் அகமதாபாத் நகரில் கலாநிதி அனில் குப்தாவின் நிறுவனம் குறிப்பிடத்தக்க பணியாற்றி வருகின்றது. இவர்கள் ' நம்வழி வேளாண்மை' என்ற மகுடவாசகத்தை முன்வைத்து சூழல்பேண் வேளாண் அபிவிருத்தியை முன்னெடுத்து வருகின்றார்கள். இந்நிறுவனத்தின் கிளைகள் தமிழ் நாட்டில் மதுரை, ஒரிஸ்ஸாவில் புவனேஸ்வர்,

www.padippakam.com

கேரளாவில் கோட்டயம், பூட்டானில் திம்பு, உத்தரப்பிரதேசத்தில் சஹாரன்பூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இவர்கள் காந்திய நிறுவனங்களுடனும் இணைந்தும் பணியாற்றி வருகின்றார்கள் அனில் குப்தாவின் நிறுவனத்தினர் 'நம்வழி வேளாண்மை' பற்றி பிரசாரம் செய்யுமளவிற்கு மாதிரிப்பண்ணைகளை அமைத்து செயல்முறையில் காட்டும் தன்மை குறைவாகவேயுள்ளது.

தமிழ்நாட்டில் மனீந்தர்பால் என்பவர் பாண்டிச்சேரியில் அரவிந்தர் ஆசிரமத்தின் துணையுடன் நடத்தும் 100ஏக்கர் பரப்பளவுள்ள குளோரியாப் பண்ணை, புதுமையில் அமைந்துள்ள ஏ.எஸ் சாட்டார்ஜியின் இயற்கைப் பண்ணை கீரானூரில் நர்ம்மாழ்வார் நடத்தும் லெய்சா (Leisa) பண்ணை, உடுமலைப்பேட்டையில் சி.ஆர். ராமநாதனின் விவசாய காட்டியல் (Agro forestry) பண்ணை, எம்.எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தினர் நடத்தும் சில பண்ணைகள், வீரனூர் சுற்றுச்சூழல் சங்கப் பண்ணை என்பன இந்தியாவில் இயற்கை வேளாண் முறைகளை முன்னெடுப்போருக்கு வழிகாட்டும் பண்ணைகளாக விளங்குகின்றன.

இலங்கையில் கலாநிதி ஆரியரத்தினாவின் சர்வோதய இயக்கம் நடத்தும் சில விவசாயப் பண்ணைகளும் மன்னாரிலுள்ள 'ஸ்கந்தபாம்' எனும் பண்ணையும் இயற்கை வேளாண்வழியை பின்பற்றத் தூண்டுதலளிக்கும் எம்மவரின் முயற்சியெனக் குறிப்பிடலாம்.

## 5.0 முடிவுரை:

எமது பிரதேசத்தில் கடந்த ஒரு தசாப்தமாக நிலவிவரும் யுத்த நெருக்கடியால் நாம் பல இன்னல்களை எதிர்நோக்கினாலும் சில நன்மைகளும் விளைந்துள்ளன. எரிபொருள். உரம், களை நாசினி, கிருமி நாசினித் தட்டுப்பாட்டால் எமது விவசாய நிலங்கள் நஞ்சாகாது பேணப்பட்டு வந்துள்ளமை குறித்துரைக்கத்தக்க நல்விளைவாகும். இந்நிலங்கள் நிலைத்துநிற்கும் பண்பு கொண்ட இயற்கை வேளாண்மைக்குரிய அடிப்படைகளைக் கொண்டுள்ளன. வலிகாமத்தில் வடபகுதிச் செம்மண் வலயம் தீவுப்பகுதி பிரதேசம் என்பன ஆறு ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் புலம்பெயர்ந்ததால் பலவழிகளில் இயற்கைவழி மாற்றத்திற்குள்ளாகி சீர்பெற்றுள்ளன. இவ்விடங்களில் புனர்வாழ்வு புனர் நிர்மாண பணிகள் மேற்கொள்ளும் அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் 21 ஆம் நூற்றாண்டுக்குரிய சூழல்பேண் இயற்கை வேளாண் வழிமுறைகளை மேற்குறித்த பகுதிகளில் அறிமுகப்படுத்துதல் அறிவுடைமையாகும்.

வலிகாமம் வாழ் விவசாய மக்கள் மீளக்குடியேற்றத்தின்பின் உரம், நாசினிப் பாவனையின்றி அதிகளவு விவசாய உற்பத்திகளைப் பெற்றுவருவது கவனத்திற்குரியது. தீவுப்பகுதியைப் பொறுத்தவரையில் மீள்குடியமர்ந்தோர் குறைவு. ஆனால் விவசாய நிலங்கள் அதிகம் உள. இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி சூழல்பேண் இயற்கை வேளாண் பண்ணைகளையும், விலங்கு வளர்ப்புப் பண்ணைகளையும் அங்கு உருவாக்குதல் சாத்தியமே. நகரச் சந்தையில் உடன்விற்பனை செய்யக்கூடிய காய்கறி உற்பத்தி, விலங்கு வேளாண் உற்பத்தி, மீன்பிடி உற்பத்தி என்பன வற்றை அங்கு மேற்கொள்ள உதவி வழங்குவதன் மூலம் தீவுப்பகுதியை அபிவிருத்தி செய்வதோடு யாழ்ப்பாண நகர மக்களின் ஒரு பகுதி உணவுத்தேவையினையும் பூர்த்திசெய்ய முடியும். பொதுவாக வடகீழ் மாகாண புனர்வாழ்வு புனர்நிர்மாணம் என்பனவற்றிற்காகத் திட்டமிடுவோரும் ஆலோசனை வழங்குவோரும் இப்பிரதேசங்களில் நிலைத்துநிற்கும் பண்பு கொண்ட 21 ஆம் நூற்றாண்டிற்குரிய சூழல் பேண் வேளாண் அபிவிருத்தியை முன்னெடுத்தல் பயன்தருமா என்பதுபற்றியும் எவ்வெவ் இடங்களில் எந்தெந்த வழிகளில் இதனை அமுல்நடத்த முடியுமென்பது பற்றியும் ஆய்வுகளை மேற்கொண்டு தெளிந்த நல்லறிவைப் பெறுதல் வேண்டும். □



படிப்பகம்

www.padippakam.com

உசாத்துணை


1. Alexandratos, N(ed) (1995). **World agriculture: Towards 2010: An FAO Study**. Chichester and Rome: John wiley & sons Ltd and FAO.
2. Anil Agarwal and Sunita Narain. **Towards a Green World.** New Delhi: Centre for Science and Environment.
3. Fukuoka, M. (1985). **One straw revolution: An Introdution to natural farming.** India: Friends Rural centre.
4. FAO, (1996). **Food for all**. Rome, Italy: United Nations.
5. Myrdal, Gunnar. (1970) **The challange of world Poverty**, London: oxtord press
6. National academy of Scienoe, (1991). **One earth one future.** New Delhi: East west press.
7. Swaminathan, M.S and Jana, S. (1992). **Bio diversity implication for Global food security**. New Delhi: Indian council of agricultural research.
8. Tandon, H.L.S. (Ed) (1992) **Eertilizers, organic manures, Recycleable wastes and Bio Fertilizers: components of Intergrated plant Nutritions**, New Delhi: Fertilizer development and consultations organisation.
9. UNCED, (1997) **Earth** SUMMIT: **Press Summary of Agenda 21** Rio de Janeiro, Brazil: UNCED.
10. ..... (1997). **The Global partnership for Environment and Development: a Guide to Agenda 21**. Geneva: UNCED.
11. UNEP. (1995). **Global Biodiversity** Assessment. Cambridge, uk: Cambridge University Press.




படிப்பகம்

www.padippakam.com

கட்டுரைகளில் தெரிவிக்கப்படும் கருத்துகளுக்கு கட்டுரை ஆசிரியர் களே பொறுப்பாவர், அவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தினதோ அல்லது சிந்தனை ஆசிரியர் குழுவினதோ கருத்தாக அமையாது.

படிப்பகம்

www.padippakam.com

CINTANAI The Journal of the Faculty of Arts, University of Jaffna.

## CONTENTS

01. Children and Movement Education
**Saba. Jeyarasa**

02. Identifying, Classifying and Evaluating the role of Political Parties in political development
**A. V. Manivasakar**

03. Some Aspects of the Language of the Dialogues in Sengai Aaliyan's novels
**M. Ragunathan**

04. Contemporary Indian Philosophy - a review
**K. Sivananthamoorthy**

05. An Introduction to the Dalit Approach to Art and Literature
**N. Subramanian**

06. The Jaffna Kingdom and the Nallur Convention of 1591
**Somesasundari Krishnakumar**

07. The Teaching of science subjects (especially Biology) at the primary level in Sri Lankan schools
**Susiladevi Arulanantham**

08. Knowledge, Emotion and Politics: A Review of the issues raised by the banning of the book 'Buddhism Betrayed?'
**N. Shanmugalingan**

09. The Management of focal points in society in Thamilakam during the Chola period: A study based on epigraphical sources
**Selliah Krishnarajah**

10. New Economic order for Environmental conservation and natural Agriculture
**Ra. Sivachandran**

Vol: VI November, 1994 No. III
(Published in November, 1997)

படிப்பகம்